# புதிய பத்துப் பாட்டு



தாமரைத்தீவான்

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (புதிய) பத்துப்பாட்டு

ஆசிரியர்

கவிஞர். தாமரைத்தீவான்

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 65**

ISBN : 978-624-5849-32-1

● நூல் - (புதிய) பத்துப்பாட்டு ● ஆசிரியர் - கவிஞர். தாமரைத்தீவான் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - ஐப்பசி 2022 ● பக்கங்கள் - 268 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு - அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 1500.00

● Book - Puthiya Paththupaattu ● Author - Thamaraitheevan ● © Author ● First Edition - October, 2022 ● Size - 1/8 ● Pages - 268 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Book & Cover Design T. Shankar ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 1500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மரபுகளின் செல்வாக்கை வெளிப்படுத்தும் முன்னோடித் தொகுப்பு

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றினைக் கொண்டது. தமிழிலக்கிய மரபு. இவற்றுள் சங்க இலக்கிய மரபு, சங்க மருவிய கால இலக்கிய மரபு ஆகிய மரபுகளின் செல்வாக்கினை வெளிப்படுத்துகின்ற தொகுப்பாக கவிஞர் தாமரைத்தீவானின் புதிய பத்துப்பாட்டு என்ற இத்தொகுப்பு நூல் திகழ்கின்றது. இவ்விதத்தில் ஈழத்தின் - தமிழின் - முன்னோடித் தொகுப்பு நூலாகவும் விளங்குகின்றது.

சங்க இலக்கியமரபு ஈழத்தில் கவிஞர்கள் எழுத்தாளர்கள் மத்தியில் வெவ்வேறு விதங்களில் நீண்டகாலமாகச் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இதற்கான முதற்கோலமிட்ட வரலாற்றுச் சிறப்பும் திருகோணமலை மண்ணுக்கேயுண்டு. நாற்பதுகளின் இறுதியில் திருகோணமலை பிரதேசத்தில் "டீ.ஆர்.ஓ" வாக இருந்தவர். ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளிளொருவரான 'இலங்கையர் கோன்' அப்போதுதான் எழுத்துத்துறையில் பிரவேசித்த 'வ.அ.இ' அவர்கள் இலங்கையர்கோனைச் சந்தித்தபோது 'எழுத்தாளராக வரவிரும்பினால் சங்க இலக்கியங்களைப் படிக்க வேண்டும்' என்று அவரை ஆற்றுப்படுத்தினார் இலங்கையர்கோன். பின்நாளில் 'வ.அ.இ' திணைக்கதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டாரென்பது இலக்கிய ஆர்வலர்கள் அறிந்த விடயமே.

நவீன கவிதைத் துறையிலே ஈழத்தில் சங்க இலக்கிய மரபின் செல்வாக்கு பெருமளவு காணப்படுகின்றது. வெவ்வேறு நோக்கிலும் போக்கிலும் கவிஞர்கள் ஈழத்துப் பூராடனார், சு.வில்வரத்தினம், வ.ஐ.ச ஜெயபாலன், சி.சிவசேகரம், துவாரகன், சுதர்சன் முதலானோர் அவற்றைக் கையாண்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பின்புலத்தில் வ.ஐ.ச. ஜெயபாலன் 'நெடுந்தொகை' 'குறுந்தொகை' என்ற தமது கவிதைகள் கொண்ட இரு கவிதை நூல்களைத் தந்திருக்கின்றார். இவ்வரிசையில் ஏற்கனவே நமது கவிஞர் தாமரைத்தீவானும் 'எட்டுத் தொகை' வெளியிட்டிருக்கின்றார்! இப்போது 'புதிய பத்துப்பாட்டு' என்ற இத் தொகுப்பு நூலை வெளியிடுகின்றார்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள்கள் 'எட்டுத்தொகை' 'பத்துப்பாட்டு' என்று இருபெருந்தொகுப்புகளாக அமைந்துள்ளன! 'எட்டுத்தொகையில் வெவ்வேறு காலங்களில் பாடிய தனித்தனிச் செய்யுள்கள் கொண்ட எட்டுநூல்களுள்ளன. பத்துப்பாட்டில் வெவ்வேறு நீண்டசெய்யுள்கொண்ட பத்துநூல்களுள்ளன. இவற்றையே பத்துப்பாட்டு என்கின்றோம். இவ்விதத்தில் தாமரைத்தீவானின் இத்தொகுப்பின் பெயரும் 'பத்துப்பாட்டு' என்று அமைந்திருப்பது கவனத்திற்குரியது!

இத்தொகுப்பிலே பெயருக்கேற்ப, 'கீறல்கள்' தொடக்கம் 'வீழ்ச்சிக்கும்மி' வரை தாமரைத்தீவான் ஏற்கனவே இயற்றி (பெருமளவு) நூலுருப்பெற்ற பத்து நூல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் 'கீறல்கள்' தொடக்கம் 'அன்பழைப்பு' வரையான எட்டுநூல்களும் இலக்கிய மரபுகளுக்கு முதன்மை அளிப்பனவாகவுள்ளன.

சங்க இலக்கிய மரபுகளின் செல்வாக்கு பல்வேறு விதங்களில் இடம்பெற்றிருக்கும் அதேவேளையில் சங்கமருவிய காலச் செல்வாக்கும் இத்தொகுப்பில் வெளிப்பட்டுள்ளது. சங்கமருவிய காலத்தில் 'இன்னா நாற்பது' என்றொரு தொகுப்பு நூல் வெளிவந்திருக்கின்றது. அவ்வழியில் நமது கவிஞரும் 'போர் நாற்பது' என்ற தொகுப்பு நூலைத் தந்துள்ளார்.! அவ்வாறே, 'திணைமாலை நூற்றைம்பது' என்ற நூற்தலைப்பினை நினைவுகூர்வது போன்று, 'ஐம்பாலைம்பது' என்ற தலைப்புக் காணப்படுகின்றது!

மேற்குறிப்பிட்டவாறு தொகுப்பு முறைமை சார்ந்த அடிப்படையில் தனித்துவம் பெற்றுள்ள 'பத்துப்பாட்டு', பேசுபொருள் அடிப்படையில் வெவ்வேறு சுவைகொண்ட பெருவிருந்து ஒன்றினை இலக்கிய ஆர்வலர்களுக்கு வழங்குகின்றது. இனவுணர்ச்சி, மொழியுணர்ச்சி போர்க்காலப் பேரவலங்கள், சமூகப்பிரச்சினைகள், மண்வாசனை, நீத்தார் பெருமைகள், மனித உறவுகள் என்றவாறு அவை வெளிப்பட்டு இலக்கிய ஆர்வலர்களுக்கு சத்துமிக்க விருந்தினை வழங்கியிருப்பது களிபேருவகையை ஏற்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை.

- வாழ்த்துகளுடனும் பாராட்டுக்களுடனும்,

**பேராசிரியர் செ. யோகராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் தாமரைத்தீவான் - ஒரு பார்வை

திருகோணமலை மாவட்டத்திலுள்ள இயற்கை அழகு பொங்கும் கிராமங்களில் ஒன்று தாமரைவில். இது ஆலங்கேணியை அண்டிய கிராமம் இந்த வில்லில் இருந்து புறப்பட்டவர்தான் கோலேந்தி, எறிகோலன், சுதந்திரன், அகதிக்கவிராயர், சாப்பாட்டுக்கவிராயர், விண்ணாங்கன், அலைஞ்சான்புலவர், மனாப்புலவர், பொடிப்புலவன், இரா இப்படிப்பல நாமங்களைக் கொண்ட கவிஞர் தாமரைத்தீவான். சிறந்த மரபுக் கவிஞன். 1952 இல் எழுதத் தொடங்கினார். 1956 இல் தான் இவரின் கவிதை முதல் 'வெள்ளைப்பூனை' சுதந்திரன் பத்திரிகையில் வெளியாகியது. தொடர்ந்து தினகரன், வீரகேசரி, சுடர், புதிய உலகம், காந்தீயம், சந்திரதீபம், சிந்தாமணி, முரசொலி, சஞ்சீவி, நம்தேசம், தினமுரசு, தினக்கதிர், செங்கதிர், தமிழ் உலகம், சர்வதேச தமிழர் மலையகம், மழலை என்செல்வம், வெண்ணிலா, சூடாமணி, சுடர்ஒளி, சந்நிதி, வாழ்க்கை, ஆகிய பத்திரிகைகளில் வெளியாகியன. வெரித்தாஸ், பிபிஸி, வானொலிகளிலும் ஒலிபரப்பப்பட்டன. அது தவிர உள்ளூரில் கேணிச்சுடர், ஈச்சம்பழம், புதுமைநெஞ்சங்கள், தென்றல், தாகம், மகுடம், கோணைத்தென்றல், வசந்தம், சிவநெறி போன்ற கையெழுத்து, தட்டச்சு மற்றும் அச்சுச் சஞ்சிகைகளிலும் வெளியாகின.

ஆசிரியர், அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள தாமரைத்தீவான் 24.07.1932 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் இராசேந்திரம். தந்தையாரின் பெயர் சோமநாதர். தாமரைவில்லில் பிறந்தாலும், ஈச்சம் தீவுக் கிராமமே இவரை வளர்த்தது. தான் பிறந்த ஊர், தன்னை வளர்த்த ஊர் இரண்டையும், இணைத்து "தாமரைத்தீவான்" என்ற புனைப்பெயரைச் சூட்டிக் கொண்டார். இவரின் புனைப்பெயரில் ஒட்டிக்கொண்ட தாமரைவில் கிராமம் இன்று எங்கோ தொலைந்து விட்டது. தாமரைவில் ரோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வி, பின்னர் மூதூர் அர்ச். அந்தோனியார் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் மேற்படிப்பு, எஸ்.எஸ்.சி வகுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைந்தார். பின்னர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் சேர்ந்துகொண்டார்.

1992 இவரின் முதல்நூல் "கீறல்கள்"என்ற கவிதை நூல் தாகம் கலை இலக்கிய வட்டத்தால் வெளியிடப்பட்டது. தொடர்ந்து "பிள்ளைமொழி", "கட்டுரைப்பத்து", "போரும் பெயர்வும்"," ஐம்பாலைம்பது" என்ற நூல்களும் வெளிவந்தன. இவரின் நூல்களுள் "கீறல்கள்" 1992ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. இவற்றைத் தவிர, முப்பத்திரண்டு இணைப்பு என்பாநூறு, சிறுவிருந்து, மும்மறை, பத்துப்பத்து, வள்ளுவர் அந்தாதி, பேர் நாற்பது என்பன குறிப்பிடத்தக்கவை.

பழந்தமிழ் இலக்கியங்களை ஊன்றிக் கற்றவர் இவர். திருக்குறளை ஒப்புவிப்பதில் ஒப்பற்றவராகத் திகழ்கின்றார். சிரிக்க, சிரிக்க சிந்தனையைத் தூண்டும்படி பேசுவார். இவர் எவரையும் மனம் புண்படப் பேசியதில்லை. அவரது எழுத்துக்கள் யதார்த்தமானவை. தாமும், மக்களும் அடைந்த அவலங்களை இவரின் எழுத்துக்கள் துல்லியமாக வெளிக்கொணர்ந்துள்ளன. கவிதையை மூச்சாகக் கொண்டவர். இவர் ஏறாத கவியரங்கமே இல்லை எனலாம். இவர் கவிதை சொல்லும் பாங்கே தனி. ஒலி வாங்கியை இவர் பிடித்துக்கொண்டு கவிதை சொல்லத் தொடங்கினால் அரங்கம் சுறுசுறுப்பாகிவிடும்.

தாகம் கலை இலக்கிய வட்டம் 1991 இல் இவரைக் கௌரவித்து விருது வழங்கியது. "திருகோணமலை குறள் திலகம்" என்று 1996 இல் "குறளமுதத்தினால்" பட்டம் சூடப்பட்டார். 1996இல் முத்தமிழ் வளர்கலை மன்றம், 1999இல் திருகோணமலை இந்து இளைஞர் பேரவையின் ஆண்டு விழா ஆகியவற்றின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். வன்செயல்களின் போது இவர் தனது பொக்கிஷங்களாகக் கருதிய அகனூறு, புறனூறு, மலைப்பா, உண்மை அம்பாள் காவியம், கீறல்கள் II, விநாயக மாலை, 700 நூல்கள், 27 கவிதைத் தொகுப்புக்கள், 13 மேடைக்கவி ஏடுகள், அச்சுநறுக்குகள் அழிந்து போயின. இதனை நினைக்கும் போது தாமரைத்தீவானின் மனம் ஆறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கொழும்பு தமிழ் சங்கத்தில் வவுனியா இரா. உதயணன் இலக்கிய விருது விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளமையிட்டு கவிஞர் தாமரைத்தீவானும் அவரது குடும்பத்தினரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும் கவிஞர் தாமரைத்தீவானின் "எட்டுத்தொகை" கவிதைத் தொகுதி அண்மையில் வெளியிடப்பட்டு கிழக்கு மாகாண சாகித்திய மண்டல பரிசு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று அவரது (புதிய) பத்துப்பாட்டு கவிதைத் தொகுதி வெளிவருகிறது. அகில உலக தமிழ் சங்க பேரவை அண்மையில் அவரைப் பராட்டி கௌரவித்துள்ளது.

இப்பேர்ப்பட்ட பேரிழப்புக்களை தாங்கிக்கொண்டு நம்மத்தியில் வாழ்ந்து வரும் தமிழ் அறிஞன், கவிஞன் தாமரைத்தீவானை கிழக்கு மாகாண அரச, தமிழ் இலக்கிய விழாவில் அவரால் 28.07.2016 இல் மகுடம் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட "பொன்னகம் மீட்போம்" எனும் 25வது கவிதைத் தொகுதிக்கு சிறந்த தமிழிலக்கிய நூலுக்கான விருது வழங்கி மாகாணக் கல்வி பண்பாட்டு திணைக்களம் கௌரவித்துள்ளது. கடந்த 01.09.2017 இல் தாமரைத்தடாகத்தில் இடம்பெற்ற தேசிய கலை இலக்கிய விழாவில் தெரிவு செய்யப்பட்ட முதன் மூன்று நூல்களில் **"பொன்னகம் மீட்போம்"** நூலும் தெரிவு செய்யப்பட்டமை மற்றும் கொழும்பு தமிழ்ச்சங்கம் 29.09.2017 இல் இவரை பாராட்டி தமிழ் நிதி விருது வழங்கியமை குறித்து தமிழ் கவிதா உலகம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது. வாழும்போது கலைஞனை வாழ்த்துவதே மேலான பண்பாகும். அன்பழகன், அண்ணாத்துரை, நெடுஞ்செழியன், சிற்றரசு, தமிழரசி ஆகியோரின் தந்தையாகவும், தவமணியின் துணைவராகவும் கொண்டு தனது 90வது பிறந்தநாளைக் கடந்து வாழும் தாமரைத்தீவான் பல்லாண்டு வாழ்ந்து திருகோணமலைத் தமிழ் மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும்.

**– இரா. நெடுஞ்செழியன்**
பணிப்பாளர்- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு.
இல.44/18 .கிஸ்ணபுரம். கண்டிவீதி
திருகோணமலை. 01-03-2022
071-4735160



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (புதிய) பத்துப் பாட்டு (என் உரை) 28.03.2022
## (ஒன்றில் பத்து)

*(அன்பு மைக்கல் எனது பா நூல்களை ஒன்றாக்கி வெளியிடக் கேட்டதாய் அறிந்தேன் மகிழ்ச்சி)*

*பாநூல் மொத்தம் 24. (அச்சேறாதவை 28) அவற்றில் 10ஐ தெரிந்தெடுத்தேன். கரணியம் யாதெனில் = கழகநூல்கள் 8 தொகை 10 பாட்டு எனப் 18 நூல்களும் படிப்பாரற்றுக் கிடக்கின்றன. அவற்றில் 8 தொகையின் பெயரால் (8 நூல் கொண்ட) நூலை வெளியிட்டேன். (05.10.2022) இந்நூலைப் 10 பாட்டைக்கொண்ட பழைய நூலின் நினைவாக வெளியிட விருப்பம். அதற்காகவே 10ஐ மட்டும் தெரிந்தெடுத்தேன். நீங்களும் இத்தெரிவை விரும்பலாம்.*

*பழைய 10 பாட்டு நூல்களாவன 1. திருமுரு காற்றுப்படை (நக்கீரர்/517 அடி) 2. பொருநராற்றுப்படை (முடத்தாமக்கண்ணியார்/ 248அடி) 3. சிறுபாணாற்றுப்படை (நத்தத்தானார்/ 269அடி) 4. பெரும்பாணாற்றுப்படை (கடியலூர் உருத்திரங்கண்ணனார்/500அடி) 5. முல்லைப்பாட்டு (நப்பூதனார்/ 103அடி) 6. மதுரைக்காஞ்சி (மாங்குடி மருதனார்/782அடி) 7. நெடுநல்வாடை (நக்கீரனார்/188அடி) 8. குறிஞ்சிப்பாட்டு (கபிலர்/ 261அடி) 9. பட்டினப்பாலை (கடியலூர் உருத்திரங்கண்ணனார்/ 301அடி) 10. மலைபடுகடாம் (பெருங்கௌசிகனார்/ 523அடி) என்பனவாம். எனது (புதிய) பத்துப்பாட்டுகளாவன. 1. கீறல்கள் (24.09.92) 2. போரும் பெயர்வும் (5.9.99) 3. ஐம்பாலைம்பது (11.05.01) 4. சிறுவிருந்து (10.02.04) 5. ஐந்தொகை (15.08.02) 6. போர்நாற்பது (6.04.06) 7. நீத்தார்பெருமை (25.12.08) 8. அன்பழைப்பு (2.11.09) 9. வில்லுப்பாட்டு 16.06.10) 10. த.இ.வீழ்ச்சிக்கும்பி (23.07.10) என்பனவாம். இவை அச்சானவை எனினும் ஒன்றாக்கிப் புதுப்பிக்கலாம். அதிகம் பெரிதாகா சிக்கல் இல்லை.*

*இப் புதிய பத்துப்பாட்டு வெளிவர உதவிய எனது மகன் இரா. நெடுஞ்செழியன் மகுடம் வி. மைக்கல்கொலின் அணிந்துரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிய பேரா. செ. யோகராசா மற்றும் இந்நூல் வெளிவர நிதிஉதவி அளித்தோரில் ஒருவரான அருமைத்தம்பி சோமநாதர் ஒப்பிலா மணியின் மகன், சந்திரகலா, இராதா கிருஷ்ணன் (லண்டன்) அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**நூலாசிரியர்**

**- சோ. இராஜேந்திரம் ( தாமரைத்தீவான்)**

**குடும்பத்தினர், திருகோணமலை**

10 பாட்டுப்பழம் பா:-

'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக்காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலைகடாத்தொடும் பத்து.'

## ஆரியர் வருகையால் ஏற்பட்ட இலக்கிய இலக்கண மாற்றமும் கேடும் 17.07.2022

சமற்கிருதத்திலும் வேத மொழியிலும் சில சிறு தெய்வ வழுத்துத்தவிர வேறொன்றுமில்லாதிருந்தபோது பல்வேறுகலையும் நூலும் பற்றிப் பல்லாயிரம் ஏட்டுச் சுவடிகளையும், பொத்தகங்களையும் கொண்டிருந்த தமிழ் ஆரியரழிப்பினாலும் தமிழர் புறக்கணிப்பினாலும் படிப்படியாகத் தாழ்ந்தது. இன்று திராவிட மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையில் உள்ளது. ஆரிய மொழிபெயர்ப்பு நூலெல்லாம் மூலமாகவும் தமிழ் முத நூலெல்லாம் படியாகவும் தோன்றுகின்றன.

முதற்கண் அகத்தியத்திற்கு முந்திய ஆயிரக் கணக்கான தனித்தமிழ் நூல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டன. அதன் பின் கிறிஸ்துவிற்கு முந்தின இடைக்கால நூல்களும் தொல்காப்பியமும் திருக்குறளுந்தவிர ஏனையவையெல்லாம் ஒழிக்கப்பட்டுவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமுழுக்கால் உலக வழக்குச் சொற்களும் இலக்கிய அழிவால் செய்யுள் வழக்குச் சொற்களும் ஆயிரக்கணக்கானவை அழிந்தொழிந்தன. பிறநாடுகளிலில்லாத புறப்பகையும் அகப்பகையும் ஒன்று சேர்ந்ததினால் தமிழரே தமிழைப் பழிக்கும் நிலைமையேற்பட்டு சமற்கிருதம் வளரத் தமிழ்தளர்ந்து விட்டது.

புலவரைப்புரப்பாரும் போற்றுவாரும் நூல்களைக் கற்பாரும் காப்பாருமின்றி சிதலரித்தும், அடுப்பிலெரிந்தும் குப்பையில் மக்கியும் பதினெட்டாம் பெருக்கில் எறியுண்டும் கணக்கற்ற ஏட்டு நூல்கள் மீளா நிலையையடைந்த பின் எஞ்சிய தொல்காப்பியமும் பதினெண்மேற்கணக்கும் கழகமருவிய வனப்புக்களும் இருந்தவிடந்தெரியாமற் கரந்து கிடந்தன. வாரணன் தமிழரின் கடல்தெய்வம் வருணன் ஆரியரின் மழைத் தெய்வம். வாரணன் என்பது இறந்து பட்டுள்ளது. பாட்டு - உரைநூல் - வாய்மொழி (மந்திரம்) பிசி (விடுகதை) அங்கதம் (எதிர்நூல்) முதுசொல் (பழமொழி) என்று செய்யுளை ஏழு வகையாகப் பகுப்பதும், அவற்றுட்பாட்டை எண் வனப்பாக வகுப்பதும் பண்டைத் தமிழ்முறை. (த.இ. வரலாறு / 231ம் பக்/ மொ.ஞா.தேவ நேயப்பாவணர்)

பொது நிலைக் கருத்தரங்கில் பங்கேற்று "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்னுந்தலைப்பில் கல்லாக்களி மக்கள் சிலரின் கூச்சலுக்கிடையில் உரையாற்றினார். அவிழ்ப்பதமன்றி தமிழ்ப்பதமறியாச்சிலர் பேச்சை முடிக்குமாறு கையொலியெழுப்பிக் குறிப்புக்காட்டினர். வாய் விட்டும் சொல்லினர். பாவாணர் அருந்தமிழ்ப் பொழிவு 'அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்/ அல்லார்முன் கோட்டி கொளல் (720)' என்னும் பொய்யாமொழிக்கே எடுத்துக் காட்டாயிற்று 'நிறுத்துகிறேன் - நிறுத்தத்தான் போகிறேன்' என்று சொல்லியவாறு முடித்தார் பாவாணர் (15.01.1981) பாவாணர் 75ம் பக்/புல இறைக்குருவனார் (பாவா = 07.02.1902 - 15.01.1981)

**- சோ. இராசேந்திரம்,**

*[தாமரைத்தீவான்] ஈச்சந்தீவு - கிண்ணியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| 1. கீறல்கள் | 1 - 50 |
| 2. போரும் பெயர்வும் | 51 - 75 |
| 3. ஐம்பாலைம்பது | 76 - 109 |
| 4. சிறுவிருந்து | 110 - 138 |
| 5. ஐந்தொகை | 139 - 151 |
| 6. போர் நாற்பது | 152 - 160 |
| 7. நீத்தார் பெருமை | 161 - 192 |
| 8. அன்பழைப்பு | 193 - 224 |
| 9. வில்லுப்பாட்டு | 225 - 236 |
| 10. வீழ்ச்சிக்கும்மி | 237 - 252 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15.06.1992ல் வெளிவந்த கவிஞரின் முதல் கவிதைத்தொகுப்பு)

01

**கீறல்கள்**

## 1. அஞ்செழுத்து!

அஞ்செழுத் ததுவே வேண்டும்!
ஆம் 'சமாதானம்' வேண்டும்!
அஞ்சிநாம் வாழொணாது!
அஞ்சாமை நிலவவேண்டும்!
துஞ்சிநாம் விழிக்க வேண்டும்!
சொல்லல்ல - செயலே வேண்டும:!
பஞ்சாகித் துயர மெல்லாம்
பறந்துமே போக வேண்டும்!

மொழி மதஇன நோக்கல்ல!
மொத்தத்தில் மனிதநோக்கே!
கழிவுகள் எதிலு முண்டேல்
காற்றிலே பறந்தே தீரும்!
அழிவுகள் இனியும் வேண்டாம்!
ஆக்கமே யார்க்கும் வேண்டும்!
ஒழியவே வேண்டும் பூசல்!
உடனடி அமைதி வேண்டும்!

அலி, பண்டா, நாகன், பாய்வா
அனைவரும் மனிதக் கூட்டம்!
கிலியாலே ஐயங் கொண்டு
கிளப்பிடும் பொய்யில் மூழ்கி
வலியப் போய் முட்டுப் பட்டு
வருத்தத்தைத் தேடித் தம்மைப்
பலியிட்டால் உலகம் கூடப்
பார்த்ததும் ஊமையாகும்!

வலிவுள்ளான் வலிவில்லானின்
வாழ்வினைச் சுரண்டும் போதே
மெலிவுள்ளான் தாங்கொணாமல்
மெதுவாக அசையும் போதே
மலிந்திடும் உண்மைச்சிக்கல்!
மறைந்திடும் சுரண்டல் நின்றால்!
பொலிந்திடும் தொடருமானால்
பொது - தனிப்போராய் மாறும்!

*13 - 04 - 89*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. எதனை?

*எழுது நீ கவிதை என்றீர்?*
*எதனையிங் கெழுது வேன் நான்?*
*அழுதிடும் தாயைப்பார்த்தா?*
*அஞ்சிடும் மகளைப் பார்த்தா?*
*பழுதுள தந்தைக்காகப்*
*பணி செய்யும் மகனைப் பார்த்தா?*
*விழுதுக்குள் மறைந்திடப் போய்*
*விழுந்தவன் நிலையைப் பார்த்தா?*

*நாடுகாத்திடப் போராடும்*
*நமதரும் இளைஞர் பார்த்தா?*
*பாடுகள் எதுவும் இன்றிப்*
*பயன்பெறுவோரைப் பார்த்தா?*
*காடுகள் தாண்டிச் சென்றே*
*கடுந்தொழில் செய்வோர் பார்த்தா?*
*தேடுதல் என்றே ஊர்க்குள்*
*திரிந்திடுவோரைப் பார்த்தா?*

*கருகிடும் சவத்தைப் பார்த்தா?*
*கனலிடும் கையைப் பார்த்தா?*
*உருகிடும் 'டயரை'ப் பார்த்தா?*
*ஓடிடும் செந்நீர் பார்த்தா?*
*பெருகிடும் அகதி பார்த்தா?*
*பிதற்றிடும் சிலரைப் பார்த்தா?*
*அருகிடும் இனத்தைப் பார்த்தா?*
*அசைந்திடாச் சடலம் பார்த்தா?*

*கப்பலில் பறப்போர் பார்த்தா?*
*காசினில் மிதப்போர் பார்த்தா?*
*கப்பலாய் மெலிந்தோர் பார்த்தா?*
*சோறிலா வறியோர் பார்த்தா?*
*குப்புற விழுந்தோர் பார்த்தா?*
*கொள்கையை மறந்தோர் பார்த்தா?*
*எப்படி எழுதுவேன் நான்?*
*எதனையிங்கெழுதுவேனே!*

*16 - 08 - 86*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஊழா?

*ஓடியே காலம் போச்சு!*
*ஒளிப்பதே வேலையாச்சு!*
*தேடியே பிள்ளை பார்த்துத்*
*திரிந்ததில் களைப்புமாச்சு!*
*பாடியே வானம் பாடிப்*
*பறவையாய்த் திரிந்த நாள்போய்*
*வாடியே வதங்கும் நாளும்*
*வந்ததேன் விதியா ஊழா?*

*தேடுதல் வேட்டை என்று*
*செய்திகள் கேட்டதுண்டு!*
*வீடுகள் சாய்ந்த பின்பே*
*வேடிக்கை கண்டதுண்டு!*
*பாடுகள் பட்டதுண்டு!*
*பயங்களும் போனதுண்டு!*
*நாடுதான் என்னு முன்பே*
*நடப்பதேன் விதியா ஊழா?*

*தோண்டியே கிடங்கில் எல்லாம்*
*சொரிந்ததில் காலம் போச்சு!*
*தாண்டியே காடு பற்றை*
*தவழ்ந்ததில் பொழுது போச்சு!*
*வேண்டியே சாமிகோயில்*
*வீழ்ந்ததில் ஆயுள் போச்சு!*
*தூண்டியே பிறர்க்கும் யாவும்*
*சொல்வதேன் விதியா ஊழா?*

*சமைத்ததை உண்டதில்லை!*
*சரிசாமவேளையுங்கண்*
*இமைத்ததே இல்லை! சாமான்*
*எடுத்ததே இல்லை! எல்லாம்*
*அமைந்ததைக் கூட நன்றாய்*
*அனுபவித்தறிந்ததில்லை!*
*நமைப்பிறர் பார்த்தும் கேட்டும்*
*நகைப்பதேன் விதியா ஊழா?*

*07 - 11 - 85*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சவம்

ஒரு சவம் வீழ்ந்ததென்றால்
ஊரெலாம் திரண்டேபோகும்!
பெருமொலி கேட்கும் வீட்டில்!
பெண்களோ கத்திச்சாவார்!
அருமையாய்க் கழுவிப்பூசி
அழகிய பெட்டிக்குள்ளே
பெருமையோடிட்டுத் தூக்கிப்
பேரிகை முழக்கிச் செல்வார்!

வெட்டிய குழியில் மண்போய்
வீழ்ந்திடா வாறு வைத்துத்
தொட்டுமே மண்ணை அள்ளித்
தூர்த்த பின் வீடு வந்தே
எட்டுகள், முப்பத்தொன்று,
இறுதியாண்டைதையும் தப்ப
விட்டிடா வண்ணம் சும்மா
வீண் செலவெனினும் செய்வார்!

எத்தனை சவங்கள் தீயில்
எரிகிறதின்று நாட்டில்!
செத்ததோடுயிரு மன்றோ
சேர்ந்தெரிகின்ற தின்று!
பத்திரமான பெட்டி
பாடைகள் ஏதுமுண்டா?
கத்திட ஆள்தானுண்டா?
கண்ணினால் காண்பதுண்டா?

மானமாய் மதிப்பாய் மண்ணுள்
மறைந்திடும் சவங்கள் இன்று
ஈனமாய் இழிவாய் நாட்டில்
எங்கெலாம் கிடந்தெவ்வாறு
போனதென் றெண்ணிப் பார்த்தால்
புதுமையாய்த் தோன்றக்கூடும்?
நானுமென்றெங் கெங்வாறோ?
நடப்பனசொல்வார் யாரோ?

09 - 03 - 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. இணைவோம்

கட்டினேன் உன்னை ஆனால்
கட்டி நான் தழுவினேனா?
தொட்டனன் அன்று! பின்னர்
தொட்டதே உண்டா உன்னை?
கிட்டநான் வந்தேன்! பின்னர்
கிட்டவே வந்தேனா நான்?
முட்டினேன் ஓர்நாள்! பின்னர்
முட்டவே இல்லையே நான்?

மணந்தனன் உன்னை! ஆனால்
மணக்கவே இல்லையே நான்?
கணந்தனில் விட்டே உன்னைக்
கடுகதிப் பயணமானேன்!
வனந்தனில் துயில்வார் போன்று
வந்து நான்கிடக்கின்றேனே!
மனந்தனில் என்ன எண்ணி
மனையினில் கிடக்கின்றாயோ?

பகலெமக்கிரவாய் ஆனால்
பாழிராப் பகலென்செய்யும்?
அகமிகத்துயரங் கொள்ள
அகலுமென் நிலை நீங்காதா?
சுகமென எண்ணியன்றோ
துயரினைத் தேடிக்கொண்டோம்?
சகலரும் இதுபோல் தானா?
தமிழினவாழ்விஃ தாமா?

இங்கு நான் அங்குநீயா?
இருவரும் இணைதல் வேண்டும்!
அங்குநான் வந்தேனானால்
ஆளுவோர் படைகள் தேடும்!
எங்குநாம் செல்லலாகும்
ஈழநாடிதனை விட்டே?
பொங்குதே உள்ளம்! வா நாம்
போராடி இணைவோமிங்கே!

30 - 05 - 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ៩. வாடி

ஆமியாம் பசளைப் பையில்
    ஆறேழைக் கொண்டுவாடி!
மாமியைக் கூட்டி வாடி!
    மச்சாளும் வரட்டும், எங்கள்
சாமியே முருகா இந்தச்
    சாமானைக் காப்பாற்றப்பா!
நாமிதைக் கட்டிக்காவி
    நடந்திடா நாள் வராதோ?

சுருட்டடி பாயைக் கட்டுச்
    சுருட்டையும் எடுத்துக்கொள்ளு!
உருட்டடி இடித்துச்சப்பும்
    உரலையும் மறந்திடாதே!
வெருட்டுவார் இடையில் கண்டால்
    விரித்தெலாம் காட்டவேண்டும்!
இருட்டிலும் நடக்க வேண்டும்!
    எடுத்தெலாம் கட்டித்தூக்கு!

ஆக்கிய சோற்றைத்தின்ன
    அவகாசமிலலையென்றால்
தூக்கடி கறியும் கொஞ்சம்
    சொதியையும் விட்டத்தூக்கு!
நாக்கெலாம் காஞ்சும் போச்சு!
    நடநட ஆமிவந்தால்
போக்குவான்! அதற்குமுன்னர்
    போகலாம் காணாக்காடு!

இல்லையாம் ஆமி வாடி!
    இறக்கடி சோற்றைப்போடு!
சொல்லியே பொய்யை நம்மைச்
    சோதித்தும் பார்க்கிறார்கள்!
தொல்லைதான் இனிமேல் மூட்டை
    தூக்குதல் வேண்டாம்! வந்தால்
கொல்லட்டும்! கைலாயம் போய்க்
    குடியமர்ந்திருந்து பார்ப்போம்!

10 - 10 - 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. மகிழலாமே

தரைப்படை வந்தும் போயும்
தரையெலாம் காடாயிற்று!
அரைப்படை கூட்டிக் காட்டி
ஆளிலா வீடாயிற்று!
நடைப்படைக் குரங்கால் மாக்கள்
நலிந்துமே நரம்பாயிற்று!
கரைப்படைப் பன்றி கிண்டிக்
கனநிலம் கிடங்காயிற்றே!

ஆளில்லா வீடெல்லாம் வந்
தாடவர் துயிலுகின்றார்!
நாளெல்லாம் வேலை செய்தே
நல்வள வாக்குகின்றார்!
பாழெனக்கிடந்த தெல்லாம்
பக்குவப்பட்டு மக்கள்
வாழுமோர் ஊராய் மாறி
வருவதால் மகிழலாமே!

காடுகள் வெட்டுவோரும்
கஞ்சல்கள் அள்ளுவோரும்
வீடுகள் திருத்துவோரும்
வேலிகள் கட்டுவோரும்
மாடுகள் தேடுவோரும்
மந்திகள் துரத்துவோரும்
பாடுகள் படுவார் இங்கே
பார்ப்பவர் மகிழுமாறே!

ஈச்சந்தீ வாலங்கேணி
இனிப்பழம் ஊராய் மாறும்!
போச்சுது ஆமிக்காலம்!
புறப்படலானார் மக்கள்!
பேச்சினிக் குறையும்! மாந்தர்
பெருந்தொழில் புரிவார்! போகும்
மூச்சுளவரையும் நின்றோர்
முதலில் ஊர்பேணியோரே!

*09 - 08 - 87*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. கனவிலே....?

தூக்கடா சாமான்சட்டை!
    தூரத்தில் வெடிச்சத்தங்கள்
கேட்குதாம்! செவிடன் போலே
    கிடக்கிறாய்! எழும்பு - தூக்கு!
பார்க்காதே மடிச்சுக்கட்டு!
    பார்எலாம் போகிறார்கள்!
தாக்குவார் - சுடுவார் - எல்லாம்
    தகர்த்தெறிவாரே வந்தால்....!

வழியினைப் பார்த்துப்போபோ!
    வந்தொளித்திருக்கக் கூடும்?
அழிந்துபோய் விடலாம்? ஆனால்
    அவதிகள் படஏலாதே!
குழிகளில் விழுந்திடாதே!
    கும்பலாய்ப் போக வேண்டாம்
முழுவதும் நமக்குத்தானா?
    முருகரே - பிள்ளையாரே!

எத்தனை நாளைக்குத்தான்
    இப்படிஅலைதல்? பிள்ளை
பெற்றதும் போதும், பட்ட
    பெருந்துய ரெல்லாம் போதும்!
சத்தமும் கேட்கக் காணோம்!
    சரியானவெயிலுமாச்சு!
மற்றவர் எங்கே? நாங்கள்
    மட்டுமேன் திரும்பு - போவோம்!

கனவிலே கண்டதைதத் தான்
    கதைத்திருக்கின்றான்! நாங்கள்
நனவிலே யாக்கு மென்றே
    நடந்திருக்கின்றோம் போதும்!
தினமுமிவ்வாறு போனால்
    செத்து நாம் தொலைவோம்! உன்னால்
எனக்கு நெஞ்சிடிதான்! கந்தா,
    இதற்கொரு முடிவெப்போதோ?

*14 - 08 - 87*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. சரியாம்

ஒப்பந்தம் சரியாம் மச்சாள்,
ஓடிவாவீடு போவோம்!
இப்போ தான் நெஞ்சிடிப்பு
எழுபத்திரண்டாயிற்று!
எப்போதோ புதைத்தசாமான்
இருக்குதோ தெரியவில்லை!
தப்பினார் அவரும் நாளை
சாப்பிட வருவார் போவோம்!

ஒரு பெட்டி அப்பா வீட்டில்!
ஒரு சாக்கு ஐயா வீட்டில்
தருவாரோ கேட்டுப் பார்ப்போம்!
சண்டைதான் வருமோ? சாமான்
சரியாய்த்தான் இருக்குமோ? போய்த்
தரம்பிரித்தெண்ணிப் பார்ப்போம்!
பரிதாபம் நாயும் போச்சாம்!
பாழ்தானோ வளவும் வீடும்?

இடமெலாம் கூட்டவேண்டும்!
எங்குமே அனுமார் கூட்டம்
படமெலாம் கொழுவ வேண்டும்!
படிப்பவன் வருகின்றானோ?
குடம் முதல் வேண்டும், தண்ணீர்
குறைந்ததோ, கிணறுமுண்டோ?
நடநட 'வஸ்ஸைப்' பார்ப்போம்!
நடுவழி இறங்கல் உண்டோ?

எத்தனை மாதம் மச்சாள்
எங்கெலாம் கிடந்துள்ளோம் நாம்?
சொத்துக்கள் இருந்தும் இல்லை!
சுகம்இனி வருமோ? எல்லாம்
பத்திரப்படுத்திப் பார்ப்போம்!
பஞ்சமா பாதகர்கள்
நித்திரை கொள்ள விட்டரா?
நிம்மதி இனி வாராதோ?

*15 - 08 - 87*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஏலாது

*வீட்டினுட் படுக்கேலாது!*
*வெறுந்தரை பழகிப்போச்சு*
*காட்டிலே உள்ளதொன்றும்*
*கவனித்தால் வீட்டில் இல்லை!*
*போட்டினிக்கட்டில் மெத்தை*
*புதியதாய்ப் பழகும் போக்கைக்*
*காட்டிலும் காடே நன்றாம்!*
*கவலையும் குறையும் தானே!*

*வானமே கூரை! சின்ன*
*வரம்புதான் தலையின் மெத்தை*
*கானகம் பெட்டி இன்றிக்*
*காட்டிடும் தொலைக்கண்காட்சி!*
*கானமோ முழுநாளுந்தான்!*
*காதெலாம் இசைத்தேன்மாரி!*
*ஞானமோ குரு இல்லாமல்*
*நடந்திடும் இயற்கைப் பாடம்!*

*படபடப் பரவம் இல்லை!*
*பயந்திடும் நிலையும் இல்லை!*
*தடதடப் போட்டம் இல்லை!*
*சரிசாமம் விழித்தல் இல்லை!*
*கடப்பில்லை - வேலி யில்லை!*
*கட்டிடம் சாமான் இல்லை!*
*இடம் காட்டிக் கொடுப்பார் இல்லை!*
*இருப்பதோர் கைக்கம்பேதான்!*

*படிப்படியாகத் தானே*
*பழகிடவேண்டும்! வீடு*
*திடீரென மாறும் போதும்*
*தெரிபடும் தொல்லை போலே!*
*வடிவாகக் காட்டில் தூங்கி*
*வந்தவர் வீடுற்றாலும்*
*முடிவினில் காடே தஞ்சம்!*
*முழுப்பேரும் முடிவில்காடே!*

*16 - 08 - 87*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. சாதி

சாகப்பிறந்திட்ட சாதி - தமிழ்ச்
சாதியைப் போலொரு சாதியுண்டாமோ?
போகத்துணிந்திட்டசாதி - நிலப்
போராடி வானகம் போகின்றசாதி!

எதிர்நாளை எண்ணாத சாதி - என்றும்
ஏமாறிக் கொண்டே இருக்கின்றசாதி!
புதிதாக வருவோரைக் கண்டால் - வைத்துப்
பூசனைசெய்தே புகழ்கின்றசாதி!

பறித்திட விடுகின்றசாதி - எல்லாம்
பறிபோன பின்பே பதைக்கின்ற சாதி!
மறித்திட நினையாத சாதி - எதிர்
மாற்றானை உறவாக மதிக்கின்றசாதி!

பழமையில் மூழ்கிடும் சாதி - இந்தப்
பாரிலே யாவர்க்கும் முன்வந்த சாதி!
பிழையான வழிபோனசாதி - பழம்
பெருமையை மட்டுமே பேசிடும் சாதி!

சாதிகள் ஆக்கிய சாதி - சைவச்
சடங்கிலே நேரத்தைச் செலவிட்ட சாதி!
பாதியில் வந்ததை எல்லாம் - முன்னைப்
பழயவை என்றே நினைத்திட்ட சாதி!

கற்பவை கற்காத சாதி - கல்வி
கசடறக்கற்றே அதன் படிவாழ்வில்
நிற்கவே எண்ணாத சாதி - பழம்
நீதியைமட்டும் நினைத்திடும் சாதி!

முன்னேற விரும்பாத சாதி - நல்ல
முற்போக்கு எண்ணங்கள் கொள்ளாத சாதி!
தன்னாலே திருந்தாத சாதி - தமிழ்ச்
சான்றோரின் மொழிகளும் கேளாத சாதி!

அடிமையை மோகிக்கும் சாதி - தனி
ஆட்சிக்கனவுகள் காணத சாதி
முடிவேதும் தேடாதசாதி - தமிழ்
மொழியையும் தனியாக மொழியாதசாதி!

08 - 10 - 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. ஆகேன்

மனிதனைச் சுடுதற்கென்ற
    மனிதனால் செய்யப்பட்டே
இனமினமாக்கப் பட்ட
    எத்தனை சுடுகலன்கள்?
மனமுளோன் மனிதன் என்றார்!
    மனதினுள் உள்ளதேதோ?
தனதுதான் தரமென்பானா?
    தரமிலை பிறவென்பானா?

மனிதனுக்கொருநோயென்றால்
    மருந்துகள் தயாரிக்கின்றான்!
மனிதனின் வாழ்வுக்கென்றே
    மலையெனப் பொருட்கள் செய்வான்!
புனிதமாம் கோயில் தெய்வப்
    பூசனை புரிந்து கொண்டே
மனமிலா மனிதன் ஆகி
    மனிதனைச் சுடவும் செய்வான்!

மனிதனைப் பற்றிக் கொஞ்சம்
    மனதிலே எண்ணிப் பார்த்தால்
மனிதன் ஓர் மலையின் உச்சி
    மனிதன் ஓர் இருளின் பள்ளம்!
மனிதன் ஓர் அறிவுச் செல்வம்!
    மனிதன் ஓர் வெறுமைப்பாண்டம்!
மனிதன் ஓர் ஆக்கும் ஆற்றல்!
    மனிதன் ஓர் அழிக்கும் பேயே!

மனிதனை அறிந்து கொண்டோர்
    மனிதனாய்ப் பிறக்க மாட்டார்!
இனி ஒரு பிறவி உண்டேல்
    இங்கு நான் மனிதன் ஆகேன்!
புனிதமில்லாத நாற்றப்
    பொய்யுடல் - புழுவின் கூடு!
நனிஉயர் பறவை யானால்
    நாள்வெளி திரியலாமே!

*24 - 02 - 88*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. தாங்கினீரா?

ஐயிருதிங்கள் ஆக
    அங்கங்கள் நொந்து பெற்றீர்!
பையலென்கின்ற போதில்
    பரிந்துமே எடுத்ததோடு
செய்யகைப் புறத்திலேந்தித்
    திருமுலைப்பாலும் தந்தீர்!
ஐயகோ அவனின் றெங்கே?
    அன்னையீர் தாங்கினீரா?

முந்தியே தவங்கிடந்தீர்!
    முந்நூறு நாட்சுமந்தீர்!
அந்தியே பகலாய்த் தெய்வம்
    ஆதரித்திடவும் செய்தீர்!
தொந்தியே சரியத் தானாய்ச்
    சுமந்துமே பெற்றீர்! ஐயோ
அந்தநாள் மகனின்றெங்கே?
    அன்னையீர் தாங்கினீரா?

வட்டிலில் தொட்டிலில் முன்
    மார்பிலே தோளின் மேலே
கட்டிலில் வைத்துமேதான்
    காதலித் தழகு முத்தம்
இட்டுமே வளர வைத்து
    எடுத்தளித்திட்ட வீரன்
விட்டுமே சென்றதெங்கே?
    விளைவினைத் தாங்கினீரா?

எத்தனை பாசம் - பற்று?
    என்னென்ன கனவுக்காட்சி?
முத்தமிழ் மழலை கேட்டும்
    மோகனச் சிரிப்பைக் கண்டும்
வித்தகன் ஆவான் என்றே
    விரும்பினீர் ஒரு காலத்தில்!
அத்தனையும் பொய்யாச்சோ?
    அன்னையீர் தாங்கினீரா?

*17 - 04 - 88*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. சாப்

பாரதி தாசனாரின்
பாவினைப் பயின்றோர் வாரீர்!
போரிடும் உலகைச் சாய்த்துப்
புதியதோர் உலகம் செய்வோம்!
வேரொடு வீழ்த்தினாலும்
வித்துவேர் ஊன்றக்கூடும்?
சேரவே கூடாதெந்தத்
தீங்குமே செய்வோம் வாரீர்!

சாதிப்போர், நிலப்போர் நாளும்
சமயப்போர், மொழிப்போர், சட்ட
நீதிப்போர், அறப்போர், தெய்வ
நெறியின்போர், நியாயத்தின்போர்,
பாதிப்போர், முழுமைப்போர்கள்,
பலவாழ்க்கைக் காதற்போர்கள்,
ஆதிப்போர், புதுப்போர், ஆட்சி
அதிகாரப் பிடிவாதப் போர் !

போன்ற போர்வகைகள் இல்லாப்
புதியதோர் உலகுசெய்யத்
தோன்றினால் புறப்படுங்கள்!
சொல்லிலை செயலினாலே
சான்றுகள் கடந்தகாலச்
சரிதங்கள் என்பவற்றை
ஊன்று கோலாகக் கொண்டே
உருவாக்க முனைவோம்வாரீர்!

நல்லதோர் அமைதியான,
நாவினாலடக்கமான,
சொல்லிலே மினக்கெடாத,
சோர்விலாதுழைப்பதான
வெல்லுதற்கரியதான,
வீண்பொழுதோட்டிடாத,
கொல்லுவோர் குடியேறாத
கோளொன்று செய்வோம் வாரீர்! 03 - 05 - 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. ஆகா....!

*பட்டதைப் பாடிச்சென்ற*
*பாரதிப்புலவன் சொன்னான்*
*விட்டுமே அடிமை தன்னை*
*விடுதலையாகி அந்தச்*
*சிட்டினைப் போலே எங்கும்*
*திரிந்துவா என்றே அன்று!*
*பட்டதென் மனதில் அந்தப்*
*பாடலே! ஆனால் அந்தோ...!*

*கட்டினைத் தகர்ப்ப தெப்போ?*
*களிவெறிகொள்வதெப்போ?*
*மட்டிலா மகிழ்ச்சி இன்பம்*
*மாந்தியே கிடப்பதெப்போ?*
*சிட்டெனத் திரிவதெப்போ?*
*திசையினை அளப்பதெப்போ?*
*விட்டு நான் பெற்று விட்டால்*
*விடுதலை, அடடாடாடா...?*

*கண்ணினால் எல்லாம் கண்டு,*
*காதினால் எல்லாம் கேட்டு,*
*பண்ணினால் எல்லாம் பாடிப்*
*பயமெலாம் தூக்கி வீசி*
*விண்ணிலே புள்ளாய் மாறி,*
*வெளியெலாம் துருவி ஆய்ந்து*
*மண்ணையும் துளைத்தே சென்று*
*மனம் போல வாழ்ந்து பார்த்தால்?*

*மூக்குக்கும் விழிக்கும் நாடும்*
*மூளைக்கும் செவிக்கும் ஆகும்*
*நாக்குக்கும் கைகால் மார்பு*
*நரம்புக்கும் இதயச் செந்நீர்ப்*
*போக்குக்கும் வரவுகட்கும்*
*போட்டுள்ள கட்டுப்பாட்டை*
*நீக்கத்தான் இந்தப்பாடு?*
*நீங்கும் நாள் வந்தால் ஆகா....?*

*05 - 05 - 88*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. என்ன?

கற்றென்ன, கவியாத்தென்ன?
கனபட்டம் பதவி சொத்தைப்
பெற்றென்ன? பெருந்தொண்டாலே
பேர் - புகழ்வாங்கியென்ன?
ஒற்றுமை இன்மையாலே
ஒவ்வொன்றும் வெவ்வேறான
புற்று நோய்ச்சாதி செத்தே
போகுமோ வளருமாமோ?

பேச்சுடன் எழுதியென்ன?
பெரியநூல் ஆய்ந்துமென்ன?
மூச்செனும் தமிழைத்தேடி
முதல்இடை கடைகண்டென்ன?
காச்சதோர் நெல்லியாகக்
கண்டதால் ஒற்றுமைப்பேர்,
போச்சுதே? சாதிசெத்துப்
போகுமோ வளருமாமோ?

வென்றென்ன, வேண்டியென்ன?
வெளிநாடு வெளிநாடென்று
சென்றென்ன, தேடியென்ன?
திரும்பியே வந்துமென்ன?
ஒன்றுபட்டோடிடாத
ஒற்றுமைக்குறைவினாலே
பொன்றியசாதி செத்தே
போகுமோ வளருமாமோ?

ஆயிரம் கோயில் சாமி
அழகுதேர் விழாக்கள் என்று
போயெது பாடியென்ன?
புனலினில் ஆடியென்ன?
நாயினம் போல வாழ்ந்து
நாப்பதம் பார்க்குமிந்தப்
பேயினச்சாதி மீண்டும்
பெருகுமோ தேயுமாமோ?

*12 - 06 - 88*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. மக்கள்!

ஆண்டவன் ஒருபால் காக்க,
அரசினர் ஒருபால் காக்க,
வேண்டிய மாந்தர் காக்க,
விலங்குகள் புட்கள் காக்க,
கூண்டொடு காத்தும் மக்கள்
குறைகிறார் என்றால் யார்தான்
தீண்டுகின்றாரோ? ஒன்றும்
தெரிபடுமாப்போல் இல்லை!

மக்களுக்காக என்பார்!
மக்களால் தானே என்பார்!
மக்கள் மாசக்தி என்பார்!
மக்களே மூலம் என்பார்!
மக்களை மறவோம் என்பார்!
மக்களே நாடு என்பார்
மக்கள் எம் ஆவி என்பார்!
மக்களின் நிலை கண்டீரோ!

மக்களைக் கைப்பந்தாக்கி
மாறியே தட்டிக்கொள்வார்
மக்களோ அங்குமிங்கும்
மத்தளமாகி நிற்பார்!
மக்களைப் பொம்மையாக்கி
மண்டையைக் கழியால் மூடி
மக்களுக் கச்ச மூட்டி
மயக்கியே மடக்கி வைப்பார்

முன்னாலே சுழல் துப்பாக்கி!
முடிவிலாக் குண்டுப் பாய்ச்சல்!
பின்னாலே படையார் ஊர்தி!
பிளந்தெறி கண்ணிச்சத்தம்!
என்னாலும் உன்னாலுந்தான்
இயலுமோ? எண்ணிப்பார்த்தால்
தன்னாலே சீவன் போகும்!
சந்திரத்தரை யாகும்மே!

*07 - 11 - 88*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. மௌனம்!

பேசாமலே கிடதம்பி! - ஏதும்
    பேசினால் வில்லங்கமாமடா தம்பி
வீசாதடாதம்பி சொல்லை! வீசி
    வில்லங்கத்தில் அகப்பட்டுவிடாதே!

மூடடா வாயை நீ மூடு! - தம்பி
    மூடிக்கொண்டேயிரு முட்டாளைப்போல!
ஓடடாபேசுவோர் வந்தால்! - சற்று
    ஓடிமறைந்தே ஒளித்திடு தம்பி!

நாகாக்க வள்ளுவர் போலே! - தம்பி
    நாடுமுடிவொன்று காணும் வரைக்கும்
நீ காக்கவே வேண்டும் நாவை! - இன்றேல்
    நீடுழி வாழ்வது சாத்தியமில்லை!

கருத்தினுக்கிடமற்ற காலம்! - இந்தக்
    காலத்திலே நம் கருத்தினைச் சொன்னால்!
வருத்தங்கள் வந்திடும் தம்பி! - வந்தால்
    வன்செயலொன்றே வழியாய்த் தெரியும்!

ஏறென்றால் எருதுக்குக்கோபம்! - தம்பி
    இறங்கென்று சொன்னால் முடவற்குக் கோபம்!
கூறுவதெவ்வாறுநீதி? - தம்பி
    கூறாதிருந்தாலும் ஓர் முடிவில்லை!

வானொலி நாளிதழ் எல்லாம் - வெறும்
    வாயோசையல்லாமல் நெஞ்சோட்டமில்லை!
ஏனொலிக்கின்றன சும்மா - தம்பி
    இதயத்துடிப்பே மருத்துவத்தேவை!

என்னவோகேட்டது தம்பி - இப்போ
    என்னவெல்லாமோ கிடைக்குதே தம்பி!
சொன்னது தான் பிழையாச்சோ? சும்மா
    சொல்லாமலே சில செய்வது மேலோ?

இப்போது மவுனமே தேவை! - தம்பி
    என்றோ ஒருநாளில் நன்னிலை ஆகும்!
அப்போது சொல்லுவாய் தம்பி - உந்தன்
    ஆழ்ந்தகருத்தினைக் காதேறுமாறே!

12 - 06- 88


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. கேளாதே!

பூவுலகை விட்டே புறப்பட்டுப் போவோமா?
வாவுந்தன் யாக்கைக்கு வயதேறு முன்பேயே!
எங்கென்று கேளாதே! என்னோடு வந்துவிடு!
திங்களோ செவ்வாயோ, தீய்க்கும் புதன்தானோ?

வெள்ளியோ நற்சனியோ, வியாழப்பெருங்கோளோ?
கொள்ளித்தணலை விடக் கொதிக்கின்றஞாயிறதோ?
எங்கேனும் சென்றிவோம்! எதிலேனும் சென்றிடுவோம்
அங்கேநாம் எப்படியும் ஆடிடலாம் பாடிடலாம்!

ஓடித்திரிந்திடலாம்! உலாவிப்பறந்திடலாம்!
கூடிக்கிடந்திடலாம்! குலாவிமகிழ்ந்திடலாம்
இங்கேதும் செய்திடவோ இயலாதே! செய்வதெனில்
அங்குலத்தில் மில்லியிலே அல்லவோ நிற்குமது!

அடங்கிக்கிடந்ததிலே ஆமையென நத்தையென
ஒடுங்கிக்கிடந்ததிலே ஓடியதே ஆயிரங்கள்?
போதுமடிபோதும் நீ புறப்பட்டே வந்துவிடு!
ஏதுமொரு வேறுலகம் இப்போதே செலவேண்டும்!

போதுமடிபோதும் இப்போராடும் பூவுலகம்!
ஏதும் ஒரு அமைதி இப்போது வேண்டுமடி!
அன்றேல் அழித்திதனை ஆக்கு புதிதொன்று!
இன்றேல் நீ வாராய் இதோ!

*16 - 06 - 89*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. அச்சம்!

ஆளைஆள் பார்த்தால் அச்சம்!
அங்கிங்கு போனால் அச்சம்!
தோளிலே தொட்டால் அச்சம்!
சொல்லிலே சொன்னால் அச்சம்!
காளையாய் இருந்தால் அச்சம்!
காசெலாம் சேர்த்தால் அச்சம்!
ஆளுவோர் ஆனால் அச்சம்!
ஆம் எலாம் அச்சந்தானே!

சாப்பிடப் போனால் அச்சம்!
சாமத்தே படுத்தால் அச்சம்!
கூப்பிடும் போதில் அச்சம்!
குறைநிறை ஆய்ந்தால் அச்சம்!
கோப்புக்கள் இருந்தால் அச்சம்!
கூட்டமாய் நின்றால் அச்சம்!
காப்புக்கள் போட்டால் அச்சம்!
கனவெலாம் அச்சந்தானே?

அச்சங்கள் தருவதெல்லாம்
ஆவிதான்! ஆவிபோனால்
மிச்சமிங்கெதுவு மில்லை!
மீண்டுமோர் வாழ்வுமில்லை!
அச்சத்தை விடுவதானால்
ஆவியைப் பெரிதாக்காமல்
துச்சமாய்க் கருதவேண்டும்!
தூசுபோல் எண்ணவேண்டும்!

அஞ்சியே அஞ்சி அஞ்சி
அணுவணு வெனவே சாகும்
நெஞ்சமே, எந்தக் காலம்
நிம்மதி பெறுவாய் சொல்லு?
கொஞ்சமா போன தெல்லாம்?
குறையுமா இனியும்! ஆலைப்
பஞ்சுபோல் தொடர்ந்தும் பாடே
படுவையோ அஞ்சும் நெஞ்சே?

06 - 12- 89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. யார்?

அறுபத்து நான் காடல்கள்
ஆடிய இறைவா, இன்று
அறுபத்து ஐந்தாம் ஆடல்
ஆடவோ புறப்பட்டுள்ளாய்?
பெறுமதி யான தெல்லாம்
பேசிடாதில்லா தாக்கி
வறுமையாய் அகதிப்போக்கில்
வந்திடச் செய்தவன் யார்?

நீயிலா தணு வாடாது!
நின் அசைவேதானெல்லாம்!
வாயிலா தவர்களைப் போல்
வந்துமே கிடக்கின்றோமே?
நாயிலும் மோசமாகி
நடக்குதே நமது வாழ்க்கை?
தாயினும் மேலாம் எங்கள்
தலைவனே போதும் ஆடல்!

மீண்டும் எம் வாழ்வைத் தாராய்!
வீட்டுக்கே வழியைக் காட்டு!
மூண்டிடும் இப்போர் மீண்டும்
மூளாத முடிவொன்றைத்தா!
ஆண்டிடமை நாமே ஈழத்
தமைதியாய் வாழ்ந்திடச் செய்
வேண்டுவோம் உன்னையேதான்
விடுதலை தந்தாள்வாயே!

அண்டத்தை ஆட்டுவோன் நீ!
ஆதலால் உனக்கோர் தூசு
கொண்டுபோய் எம்மை மீண்டும்
குடியமர்த்திடுவாய் ஊரில்!
உண்டுடுத் துறங்கி வாழ்ந்து
உன்னிடம் வருவோம் நம்பு!
விண்டுரை செய்ய வேண்டாம்
விரைவிலோர் முடிவுசெய்வாய்! 05 - 10- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. அனுபவம்!

அகதியைக் கண்ட துண்டு!
அகதியாய் வந்ததில்லை!
அகதியாய் வந்தபின்பே!
அனுபவம் புரியுதின்று!
சகலரும் அகதி ஆகிச்
சமத்துவம் பெற்றதாலே
பகலிரா எதுவும் தோன்றாப்
பார்வையாம் பெற்றுள்ளோமே!

மூட்டையும் முடிச்சுமாக
முன்பவர் போகும்போதெம்
பாட்டிலே தெருவில் நின்று
பார்த்தநாம் வெறுங்கையோடு
காட்டையும் விட்டு நிங்கிக்
கால்நடைப்பயணஞ் செய்து
நாட்டிலோர் மூலை தன்னில்
நம்பியே கிடக்கின்றோமே!

ஒன்றுமில்லாது வந்தோர்க்
குதவினோம் - ஒத்துழைத்தோம்!
அன்றுநாம் செய்த வாறு
ஆருளார் செய்வதற்கே?
இன்று யார் அகதியின்றி
இருப்பவர் எவருமில்லை!
நன்றுதான் இல்லையென்றால்
நாம் எதிர் பார்த்திருப்போம்!

தலைவலி காய்ச்ச லெல்லாம்
தனக்குமே வந்தபோதே
நிலைமைகள் புரியும்! இன்றேல்
நிகழ்த்தலாம் மேடைப்பேச்சே!
இலை இனி இழப்பதற் கிங்
கெதுவுமே! இவ்வுடற்குள்
அலைந்திடு முயிருங் கூட
அகலுமோ யார் கண்டார்கள்?

14 - 10- 90


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. செத்தால்...?

சிற்பிகள் செத்தால் கல்லின்
சிற்பங்கள் சாகும்! தூணின்
அற்புத வரைவோன் செத்தால்
அருமையாம் படங்கள் சாகும்!
பொற்புடை மாதர் செத்தால்
புதிய பேர் இன்பம் சாகும்!
கற்பனைக் கவி செத்தாலோ
காசினி யாவும் சாகும்!

அனைத்தையும் படைப்போன் தானே
அற்புதக் கவிஞன்? செத்தால்
அனைத்துமே செத்தே போகும்
ஐயமே இல்லை! நன்றே
நினைப்பவன் நினைத்தவாறே
நிரந்தரத்தமிழின் யாப்பில்
புனைப் பெயருடனே ஆக்கம்
புனைபவன் செத்தானானால்....?

நான்முகன் படைப்புக் கூட
நாற்கவி போல் வாழாது!
ஊன் உருக்காது! உள்ளும்
உள்ளத்தை உயர்த்திடாது!
தேன் சுவை தந்திடாது!
சிறந்த வாழ்வீந்திடாது!
வான்புகழ் வந்திடாதே!
வண்டமிழ்க் கவிஞன் செத்தால்...?

கவிஞர்கள் வாழவேண்டும்!
கவித்துவம் வளரவேண்டும்!
கவிதைகள் பெருக வேண்டும்!
கவித்தமிழ் பரவ வேண்டும்!
கவிதையில் உலகந்தன்னைக்
கண்டுமே களிக்க வேண்டும்!
கவிதையின் சுவையால் நாளைக்
கழித்திடின் கவி சாகானே!

15 - 10- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. கோஸ்...?

வீடினி விழுதுக் கண்டல்!
வேலிகள் கிளுவங்கம்பு!
நாடினி நமது கையில்?
நாமினும் சாகக் கூடும்?
கேடினும் வந்தே தீரும்?
கிடைக்கவே செய்யும் வாழ்வு?
ஏடினி வேண்டா மென்றால்
எழுது கோல் விட்டால் தானே?

படுப்பது பிளவுச் சாக்கு!
பார்ப்பது செத்தார் பேரே!
உடுப்பது பீற்றல் துண்டு!
உண்பது குறுணல் கஞ்சி!
கொடுப்பதற் கினிமேல் இல்லை!
குடிப்பது சிரட்டைத் தேநீர்
எடுப்பதை விடுவோமென்றால்
எழுதுகோல் விட்டால் தானே?

பயிர்செடி நடுதல் இல்லை!
பாழ்நீரை விடுதல் இல்லை!
உயிர் எனும் ஒன்று இந்த
உடலினில் தங்குமட்டும்
வயிறெனும் ஒன்றுக்கேதும்
வார்த்து வந்தாலே போதும்!
முயற்சியை விடுவோமென்றால்
மோதுதே தாளிற்கோலே!

சொத்துக்கள் சேர்ப்பதில்லை!
சுகம் இனித்துயரமேதான்!
இத்தமிழ் ஈழநாடு
எமக்குரித்தாகு மட்டும்
சத்திரவாழ்வு வாழ்வோம்!
தாக்கினால் தாங்கிநிற்போம்!
இத்தமிழ் விடுவோமென்றால்
எழுது கோல் விட்டால்தானே?

16 - 10- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. நூலறை!

நாலறை கட்டினாரேல்
நாலுபேர் இருக்க ஒன்று,
மூலமாம் சாமிக்கொன்று,
மும்முறைச் சமையற்கொன்று,
மேலெழும் பொருளுக் கொன்று
மிகுமனமாகச் செய்வார்!
நூலறை கட்டுவோர்கள்
நூற்றுக்கு ஒன்று மில்லை!

புத்தலு மாரி வாங்கிப்
புத்தகம் அடுக்கலானேன்!
பத்திரமாகப் பல்லோர்
படித்திடக் கொடுத்து வந்தேன்!
பத்திரிகை களுக்கோ
பஞ்சமே இருந்ததில்லை!
அத்தனை நூலுமெங்கே?
அறை - அலுமாரி எங்கே?

உடற்பசி எங்கு முண்டு!
உளப்பசி சிலர்க்கேயுண்டு!
விடமுடியாத தாலே
வேண்டினேன் - கற்றேன் - வைத்தேன்!
படமுடியாத இன்னல்
படுகிறேன் இன்று! சும்மா
நடமாடுகின்றேன் ஆனால்
நான் வெறும் உருவந்தானே?

தனித் தமிழ் ஆய்வா? முன்னைச்
சரித்திரக் கதையா? நெஞ்சின்
இனித்த முற்போக்கா? தேனாம்
இலக்கியச் சுவையா? பண்டைக்
கனித்தமிழ்ப் பிழிவா? முப்பாற்
கருத்துறை ஏடா? எல்லாம்
இனிப்பெறல் எங்கே? மூடர்
எரித்தவாறெரிந்திடாரோ?

*16 - 10- 90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. குணம்!

காலையில் ஓர் குணத்தைக்
    காட்டுவான் - கதையுரைப்பான்!
மாலையில் மறுகுணத்தை
    மாற்றுவான் - மாறுரைப்பான்!
வேலையில் உள்ளபோதில்
    வேறொரு குணமெடுப்பான்!
சாலையில் உலவும் போதோர்
    தனிக்குணம் மனிதனுக்கே!

மூளையில் இயல் பிதாமா?
    முழுவதும் போலியாமா!
காளையர் காலந் தன்னிற்
    காட்டிடும் கூத்ததாமா?
ஆளை ஆள் வெல்லுதற்காய்
    ஆடிடும் ஆட்டமாமா?
நாளையும் தொடருமானால்
    நம்பிக்கை என்னவாமோ?

ஆறறிவானதால் தான்
    அடிக்கடி மாற்றமாமோ
வேறறி வின்னு மானால்
    விளைவுகள் என்னவாகும்?
மாறுபாடற் றிருந்தால்
    மனமகிழ் வில்லை யாமோ?
தேறிநாம் தெளி வதற்கோர்
    சிந்தனை மனிதன் உண்டோ?

அடிக்கடி மாறி நிற்கும்
    அற்புத மனிதன் நூலைப்
படிக்கவும் செய்வா னானால்
    பலமடங்காகும் மாற்றம்!
நடிக்கவே செய்யும் பொல்லா
    நரனது சரிதம் சொல்லி
முடிக்கு முன் எமது நாட்கள்
    முடிந்துபோய் விடவுங்கூடும்?

04 - 11- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. தீவாள்!

தாமரை வில்லாள் போனாள்!
    தண்டமிழ் ஈச்சந்தீவான்,
ஆமவளும் கை விட்டாள்!
    அடைக்கலம் 'கிளப்பன்பேக்' காள்!
போமளவுக்கும் தந்தால்
    போனதும் பழந்தீவாளாய்
நாமவளைக் காண்போமோ?
    நமையவள் வரவேற்பாளோ?

உடலது மெலிந் திட்டாளோ?
    உண்டாளோ உறங்கினாளோ?
விட மனம் வந்த தாமோ?
    வேண்டு மென்றே விட்டாளோ?
தடவி நாம் அவளைக் கண்டே
    தாங்கொணாக் கவலை போக
படமுடியாத தெல்லாம்
    பட்டவை சொல்லலாமோ?

பொட்டிழந்திருப்பாள்! சூடும்
    பூவிழந்திருப்பாள்! கூந்தற்
கட்டிழந்திருப்பாள்! நீரைக்
    கண்களால் வடித்திருப்பாள்!
மட்டுமா? அணி இழந்தே
    மாமை போய்ப் பசலை யாகி
விட்டுமே மானம், பண்பு
    விடாதாளை விட்டமே நாம்?

கண்ணகி யாளை மீண்டும்
    கண்டகோ வலனைப் போல
பெண்ணவளை நாம் கண்டே
    பெருமகிழ் வுறச்செய்வோமா?
மண்ணெனும் மங்கையாளை
    மறப்பவன் மனிதனாமோ?
எண்ணினேன் - எழுதலானேன்!
    இனியுமோர் பிரிவுண்டாமோ?

*28 - 11- 90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. லேசா?

காசையா காசு காசே!
காசாலே சா வென்றார்கள்!
காசென்றால் குற்றம் என்றும்
கருத்துண்டாம்! இந்தவையம்
மாசுற்றததனால் தானோ?
மனிதனேன் காசைச் செய்தான்?
காசிங்கு வந்தபின் தான்
காசினிக் கிந்தக் கேடோ?

காசின் மேல் ஏதும் இல்லை!
காசின்றி ஏதும் இல்லை!
காசிப்போ கடவுளாச்சு!
கடவுட்கும் தெரியலாச்சு!
காசிங்கே சாகச் செய்யும்
கனபேரை வாழச் செய்யும்!
காசுள்ளார் உள்ளாரே தான்!
காசில்லார் இல்லார் தானே?

கல்விக்கும் காசே மூலம்!
களவிற்கும் காசே காலாம்!
வெல்விக்கும் தோற்க வைக்கும்!
வெளிநாடும் போக வைக்கும்!
எல்லோர்க்கும் காசே! ஆசை
இல்லாதார் எவரும் இல்லை
பல்வேறு வடிவங் கொள்ளும்
பணமென்னும் காசேகாசே!

தாளையா தாளே தாளே!
தாளின்றேல் ஆளே பாழே!
தாளெல்லாம் கற்றே கட்டித்
தலை மாட்டில் வைத்தென்? காசுத்
தாளுக்கே நிகரோ? கல்வித்
தாள் வாங்கும் தாளே இஃதாம்!
ஆளுக்காள் பேதங் காட்டும்
அற்புதப் பணத்தாள் வாழ்க!

30 - 11- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. குரல்!

*நற்குறள் நூலைக் கற்றேன்*
*நான் எலா நூலுங்கற்றேன்!*
*பற்பல நூலுங்கற்றேன்,*
*பாற்குறள் நூலேகற்றேன்!*
*அற்புதக் குறளே கற்றேன்,*
*அனைத்து நன்னூலுங்கற்றேன்!*
*கற்பனவெல்லாங் கற்றேன்?*
*கசடறக் குறள் கற்றேனே!*

*நூற்று முப்பத்து மூன்று*
*நூல்களை ஒன்றாய்ச் சேர்த்துத்*
*தோற்றுவித்தான் முப்பாலாய்த்*
*தொற்றமிழ் வள்ளுவன் தான்!*
*கூற்றவை வாழ்வின் கூறே!*
*கூற்றவன் வாழாதார்க்கே!*
*காற்றினில் விடு நூலல்ல!*
*கற்றபின் நிற்கும் வேதம்!*

*கதையளந்திடு நூலல்ல!*
*கற்பனைப் பேரேடல்ல!*
*எதை எவர் எடுத்தாய்ந்தாலும்*
*எமது வாழ்வங்கே காண்பார்!*
*அதையெலாம் ஆராய்ந்தேற்று*
*அதன்படி வாழ்வோமாயின்*
*பதைபதைத் திடவும் மாட்டோம்!*
*பண்பிழந்திடவும் மாட்டோம்!*

*கருக்குறள்! தமிழர் தங்கள்*
*கருவிலே பெறுதல் வேண்டும்!*
*திருக்குறள் வள்ளுவர் தம்*
*திருக்குரல் ஆதல் வேண்டும்!*
*சுருக்குதல் வேண்டும் வாழ்வின்*
*சுமைகளை! குறட்செல்வத்தைப்*
*பெருக்குதல் வேண்டும்! இன்பம்*
*பெருகிடநாம் வாழ்வோமே!*

*09 - 12- 90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. போதும்!

பொய்பேசத் தெரிந்தால் போதும்
புகழ் பூத்த பெரிய மேதை!
பைதூக்கத் தெரிந்தால் போதும்
பணச்சாமி - சமயத்தொண்டன்!
மைபார்க்கத் தெரிந்தால் போதும்
மலையாள மாந்திரீகன்!
நையாண்டி தெரிந்தால் போதும்
நகையாளும் சொல்லின் செல்வன்!

துப்பாக்கி சுமந்தால் போதும்
சுடுவீரப் பெரும் போராளி!
அப்பாவி கொன்றால் போதும்
அதிகாரப் பரவல் மன்னன்!
தப்பாமல் நடந்தால் போதும்
தழைகீழாம் ஓட்டக்காரன்!
எப்போதும் படித்தால் போதும்
இணையில்லா அறிவுச் செம்மல்!

ஊசிகள் போட்டாற் போதும்
உண்மையாம் மருத்துவர்தான்!
தேசம் போய் வந்தால் போதும்
தெரிவான பெரு விஞ்ஞானி!
காசுத்தாள் கண்டால் போதும்
கரைகாணாச் செல்வாக்காளன்!
ஏசினால் இழிவாய்ப் போதும்
இணையில்லாச் சண்டைக்காரி!

ஆங்கிலத் தொப்பம் போதும்
அவர் தமிழ் வாத்தியாரே!
பாங்கு நீறிட்டால் போதும்
பக்தரில் பெரிய பக்தர்!
வாங்கினால் அயலில் போதும்
வடிவான குடும்பக்காரர்!
தீங்கையே செய்தால் போதும்
திறமான மனிதன் தானே!

*19 - 12- 90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. மனம்!

ஆளுக்காள் வேறு பாடாம்,
    அவரவர் மனத்தைப் போகலாம்!
வேளைக்கு வேளை மாற்றம்,
    விருப்பம் போல் மூளையோட்டம்!
நாளுக்கு நாள் வளர்ச்சி!
    நல்லதோ தீயதாமோ?
ஏழெண்ணம் எட்டில் இல்லை!
    இன்றிதே மனிதப் போக்காம்!

வாழுவோர் வாழப் போனால்
    வாழ்ந்திடார் வதைக்கப் பார்ப்பார்!
வீழுவோர் எழும்பப் போனால்
    வீழ்ந்துளார் விழுத்தப் பார்ப்பார்!
ஆளுவோர் புதினம் பார்ப்பார்,
    அவதியார் அகதி வாழ்வை!
நாளுமே மனிதப் போக்கின்
    நடைமுறை இங்கிதாமே!

ஒரு மனம் ஒன்றை எண்ணும்!
    உரைத்திடும் உதடுவேறு!
ஒரு மனம் மறுத்து நிற்கும்,
    உளத்திலே உளது சொல்லும்
பெருமனம் யாவும் ஏற்கும்,
    பேசிடும் பொதுவில் ஒன்று?
கருமனம் ஊமை யாகும்,
    கருவறுத்திடவே பார்க்கும்!

வேற்றுமை ஒற்றுமைக்கே!
    விரல்களாற் பிடிப்பதொன்றே!
சாற்றுதல் நன்மை கட்கே!
    சரி தவறனு பவந்தான்!
ஆற்றுதல் மனித ருக்கே!
    அனைவரும் ஒரு பிறப்பே!
ஏற்றத்தாழ் விருந்த போதும்
    எல்லோரும் வாழவேண்டும்

20 - 12- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. தாக்கம்!

கவிதை ஓர் உணர்ச்சிப் பொங்கல்!
கற்பனைப்படையற் குப்பை!
கவிதை நற்சொல்லின் ஆட்சி!
கருத்தெனும் பொருளின்பேழை!
கவி உவ மானக் கோட்டம்!
காட்டணிக் காட்சிக்கூடு!
கவி தமிழ்ச் சுவையாம் தேறல்!
கலைச் சிறு வடிவந்தானே!

புவிச்சமுதாயத் தாக்கம்
புலமையைப் பொங்கவைத்தால்
கவி வரும் அருவி நீர்போல்!
கற்பனை சிறகைத் தட்டும்!
தவித்திடும் கலையின் நெஞ்சம்!
தமிழ் பெருந்துணையாய் நிற்கும்!
குவித்திடும் தாளைக் கண்டால்
கோலது கவிதைக்கோலே!

இயற்கையின் அழகுக் காட்சி
இதயத்தை ஈர்க்கும் போதில்
வயப்படும் மூழ்கும் நெஞ்சம்!
வந்திடும் கவிதைப்பிள்ளை!
நயந்தரத் தமிழ்த்தாய் உள்ளாள்!
நடமிடும் செவிப்பண்ணோசை!
மயம் கவி மயமே யாகும்
மறந்திடும் வாழ்வுத் துன்பம்!

கவிதைகள் வடிக்கும் சிற்பி
கவிஞனே - புலமையோனே!
கவிப்படம் தீட்டுவோனும்
கவிஞனே - தமிழாள்வோனே!
கவிதையில் எவைதானில்லை!
காசினி எல்லா முண்டாம்!
கவிதையிற் பிறந்திடாத
கவிப்பொருள் கிடையாதன்றோ?

*21 - 12- 90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. தாழ்வு!

பறவையும் விலங்கும் நட்பாய்
பாசமாய் வாழும் வாழ்வின்
உறவை நாம் எண்ணும் போதில்
உண்மையாய் வெட்கம் பிய்க்கும்
கறவைமேல் கொக்கமர்ந்தால்
காளை மேல் காக்கை குந்தும்!
பறந்து போய் மீண்டும் வந்தே
பரிவுடன் "உணி" பிடுங்கும்!

கிளியுடன் பருந்தும் கூட்டில்
கிடந்திட ஆட்சி செய்தான்
நளன் எனப்புலவர் சொன்னார்!
நாம் அதைப் பொய் என்போமா?
புழுவுணும் 'புலுனி'ப் பக்கம்
போய்வரும் காய்விலக்கிப்
பழமுணும் அணில்கள் யாவும்
பார்த்துளோம் கேட்டுமுன்னோம்!

பகுத்தறிகின்ற நாம் தான்
பாரினில் வெட்கங் கெட்டு
பகுத்ததெலாம் பிரித்துக்காட்டி
பல மதம், மொழி, பண்பாடாய்ப்
புகுத்தியே வேறுபட்டும்
புன்மை சேர்சட்டதிட்டம்
வகுத்துமே தேய்ந்து காய்ந்து
வாழ்வென வீழுகின்றோம்!

கற்றெலாம் புத்தி கூடி
காட்டியே இல்லத்தாக்கி
ஒற்றுமை பேணி டாமல்
உலகிலோர் அமைதியின்றி
பற்றெனச் சொல்லி நெஞ்சில்
பாசமோ பரிவோ குன்றிச்
சற்றுமே சிந்திக்காமல்
தாழ்கிறோம் மாள்கிறோமே!

22 - 12- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. மச்சி!

உச்சிமலை மேல் நின்றே
ஒவ்வோர் கொழுந்தாய் ஆயும்
மச்சி வருவாளடா! - இனிநீ
மறைந்திட வேண்டுமடா!

காலை புறப்பட்டவள்
கடிய உழைப்பின் பின்னே
மாலை வருவாளடா! எனக்கே
மகிழ்ச்சி தருவாளடா!

என்றும் அவளை நம்பி
இருப்பவன் என்பதனை
அன்றும் அறிவாயடா! - அதனால்
ஆவனசெய்வாயடா!

வெள்ளைப் பனிப் புகைக்குள்
விரியும் கொழுந்தெடுக்க
அள்ளி விழுந் தோடினாள்! - அவளே
அன்பின் வடி வாகினாள்!

அல்லும் பகலும் அவள்!
அனைத்துப் பொருளும் அவள்!
கல்லும் கனிவாகுமாம், - அவளின்
காலடி கண்டாலுமே!

ஆடும் மயிலாய் அவள்
அசைந்து நடக்கையிலே
பாடும் குயிலாகுவேன்! அதை நீ
பார்த்துமிருப்பாயடா!

எந்தன் உடலில் உயிர்
இருக்கின்ற தென்று சொன்னால்
அந்த மயிலாலடா! - இலையேல்
ஆவி இருக்காதடா!

பச்சைக் கொழுந்துடனே
பழகும் அவளுடைய
பிச்சை அருள் தனையே - அடியேன்
பெறுநாள் பெருநாளடா!

01 - 05- 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. நோன்பு!

அரிசிக்குறுணலைக் காணோம்! - அம்மா
அடுக்கிய பானையேன் உருண்டுகிடக்கு?
(தா) சரிசரிபூனையோ நாயோ - வந்து
சரிசாமம் தட்டியே சாப்பிட்டுப் போச்சோ?

இன்றையச் சாப்பாட்டிற் கேதும் - அம்மா
இருக்கிறதா தம்பி கத்துவான் வந்தே?
(தா) அன்றும் 'நிவாரணம்' இல்லை! - வாசல்
அடைத்தே கதவினைப், பூட்டிவிட்டாரே!

பஞ்சம் பசி தெரியாத - படு
பாவிகள் உலகத்தில் நாம் வாழலாமா?
(தா) கொஞ்சம் பொறுமகளே நீ - இந்தக்
கொள்ளையரை யெல்லாம் கோதாரி அள்ளும்!

ஆண்டவனும் தாளின் பக்கம் - சென்றே
அமர்ந்து விட்டான்போல் தெரியுதுதாயே
(தா) நீண்டநாள் இங்கிது நில்லா! - ஒரு
நிம்மதி வாழ்வு கிடைக்கவே செய்யும்!

பிச்சைக்குப் போகலாம், வாழ்த்தோ - ஏதும்
பேச்சுக்கள் ஏச்சுக்கள் பாட்டுக்கள் தானோ?
(தா) இச்சைப்படுவது வேண்டா! - பிறர்
இடுவதைப் பெறுவதும் இழிவுமகளே!

எங்கும் நிலமுண்டு தாயே! - எம்மை
ஏதேனும் செய்திட விடுகிறார் இல்லை!
(தா) தங்கம் விளைந்திடும் பூமி - தன்னில்
சாப்பிடவழியின்றித் தவித்தல் தீராதோ?

கஞ்சியைப் பானையிற் காய்ச்சித் - தேங்
காயின் சிரட்டையில் ஊதிக்குடித்தோம்!
(தா) அஞ்சிடும் இந்நிலைமாறி - மீண்டும்
அந்நிலை வந்திடின் போதும் மகளே!

வானத்தைப் பார் வானம்பாடி! - அது
வருகுது போகுது பாடுது தாயே!
(தா) மானத்தமிழரும் வாழ்வார்! - இதை
மனத்திலே வைத்துமே நோன்பிருப்போமே!

24 - 07- 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. ஆசை!

தனியனாய் வந்தேன் - வாழ்ந்தேன்!
சஞ்சலம் பெரிதாய் இல்லை!
இனி இரண்டாவோம் என்றே
எண்ணினேன் - மணந்தேன்! சாமி,
அநியாய மாச்சே வாழ்க்கை?
அல்லல் மேல் அல்லலாச்சே!
குனிந்த தான் நிமிர்ந்ததில்லை!
கொஞ்சமும் அதையில்லை!

பெற்றனன் பிள்ளை பத்தே!
பிழையின்மேற் பிழையாயிற்றே!
கற்றனன் பாடம், ஆனால்
கடந்த நாள் திரும்புமாமோ?
விற்றிடும் பண்ட மாமோ?
வீட்டினுள் அடைப்பதாமோ?
சற்று நான் குந்தலாமோ
சாமி நான் என்ன செய்வேன்?

பிள்ளையும் மணக்க லாச்சே?
பேரரும் பிறக்கே லாச்சே?
அள்ளிநான் வீச லாமோ?
ஆரையும் ஏச லாமோ?
தள்ளிநான் போக லாமோ?
சாமி போல் ஆக லாமோ?
கொள்ளியேன் - குடமுடைப்பேன்?
கோடியேன்? அமைதி வேண்டும்!

ஆசைதான் மூலம் என்றார்!
ஆசையால் மோசமானேன்!
ஆசையும் வேண்டும், சாமி
அளவுகள் வேண்டுமையா!
காசிருந்தாலும் கொஞ்சம்
கவலைகள் குறையும், மூப்பால்
பேசிடமுடியாதுள்ளேன்!
பிந்தியோர் வாழ்ந்து பாரீர்!

21 - 12- 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. காணலாமா?

ஆடுவளருது தம்பி - சில
    அறுபட்ட போதிலும் குழையுண்டு தின்ன!
மாடு வளருது தம்பி - சில
    மரவண்டி இழுப்பினும் தவிடுண்டு தின்ன!

கோழி வளருது தம்பி - சில
    கொலை செய்யப்பட்டாலும் கூடுண்டு தூங்க!
வாழுமே வாத்துக்கள் தம்பி - அவை
    வடிவாக நீரிலே வருபூச்சி உண்ணும்!

நாய் வளரும் மனைதம்பி - அது
    நன்கு துயிலவும் தாழ்வாரம் உண்டாம்!
தாய்ப்பூனை குட்டிகளோடும் - தம்பி
    சாப்பாட்டறைக்குள் தனித்துவம் பேணும்!

நாகணவாய் கிளியோடும் - தம்பி
    நல்லபுறா, மயில் எல்லாம் வளரும்!
வேகமுயல், கவி, கீரி - என்றும்
    விலங்குகள் கூட நலங்கண்டிருக்கும்!

மனிதன் வளர்ந்திடக் காணோம்! - தம்பி
    மனிதனை மனிதனே சாப்பிடுகின்றான்!
மனிதனை யார் வளர்ப்பார்கள்? - தம்பி
    மாபெருமிறை வனுங்கைவிட்டு விட்டான்!

மனிதன் விலங்கில் இருந்தே - தம்பி
    வந்தவனாமென டாவினார் சொன்னார்!
மனிதன் விலங்காகி விட்டான்! - மீண்டும்
    வருவானோ கலியுகம் உள்ளவரைக்கும்?

மனிதனுக்கறிவொன்று கூடி - அவன்
    மனதினிற் பலதையும் சிந்திக்கலானான்!
தனித்தனி மொழி, மதம், நாடு - எனத்
    தானே பலகூறு ஆக்கினான் தன்னை!

உலகப் பொரு மொழி ஒன்றாய் - இந்த
    உலகம் முழுவதும் ஓர்நாடு, ஊராய்
உலகின் மனிதஇனமாய் - தம்பி
    ஒன்றாக வாழ்வதை நாம் காணலாமா?    *30 - 07- 91*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. பேசும்!

வாழ்க்கை யென்றாலது என்ன? - தம்பி
வாழ்கிறோமா நாங்கள் மாள்கிறோம் தானா?
ஊழ்வினை என்பதும் உண்டோ? - தம்பி
உண்மைகள் நீதிகள் புதையுண்டு போச்சோ?

என்னப்பா நாம் செய்த தீமை? - இந்த
இன்னல்களுக்குகெல்லாம் காரணம் யாதோ?
முன்னைப் பிறப்பினால் வந்தே - இங்கு
மூண்டெமை ஆட்டி அலைக்குது தானோ?

வீடுபொருள் நிலம் எல்லாம் - தம்பி
விட்டுவெளியேறி வெறுங்கையினோடும்
காடுமேடெங்குந் திரிந்து - ஒரு
கதியற்ற அகதிமுகாம் வந்து சேர்ந்தும்,

எத்தனை நாள் மாதம் ஆண்டாய் - தம்பி
இருக்கிறோம் கிடக்கிறோம் இதை விட்டுப்போனால்
அத்தனையும் காசுதம்பி - ஐயோ
ஆர்தருவார் நகர் வாடகை வீடு?

நகரத்து வாழ்க்கையோ சொர்க்கம்! - காசு
நம்மிடமில்லை யேல் நரகத்து வாழ்வே!
பகரவே முடியாது வாயால் - தம்பி
பணமடாயாவும் பணங்காசுத்தாளே!

காசுக்கு வெளியிலார் போவார்? - மரம்
காய்க்குமென்றாலேறி ஆயலாம் தம்பி?
பேசுமடா பிணம் பேசும்! - பணப்
பேய்பிடித்திட்டாலோ மந்திரம் ஏறா!

இவ்வளவேனடா வீட்டில் - எம்மை
இருக்கவே விட்டாலே போதும் நமக்கு!
அவ்வள வாத்திரமேனோ? - தம்பி
ஆண்டவனுங்கையை விட்டாற்கதியார்?

வாழ் எம்மை வாழ விடென்றால் - தம்பி
"வாழ்வாழ்' என்றே கத்தி வதைத்திடலாமோ?
கூழ்போதும் உயிர் வாழக்கூட்டில் - அதைக்
குடித்தாலும் விடுதலை ஒளிவேண்டும் தம்பி!

*06 - 08- 91*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. செழித்திடுமே!

என்னைப் படைத்தவன் தான்
　　எனக்காக இவ்வுலகில்
உன்னைப் படைத்தனனோ
　　உரைத்திடுவாய் மைத்துனியே?
(பெ) என்னவோ சொல்லிடுவீர்?
　　எதையெதையோ பேசிடுவீர்!
சின்னஞ்சிறுமி ஒன்றும்
　　தெரிந்திலதே மைத்துனரே!

பார்த்தால் நீ பார்ப்பதில்லை?
　　பாராட்டால் பார்ப்பதுமேன்?
சேர்த்தால் மனமிரண்டும்
　　செழித்திடுமே மைத்துனியே?
(பெ) பார்க்கவரும் ஆசைதன்னைப்
　　பறித்திடுதே நாணமிங்கு?
ஆர்க்குந் தெரிந்திடுமோ,
　　அஞ்சுகிறேன் மைத்துனரே?

நீங்கச் சுடுவதுமேன்,
　　நெருங்கிவரக் குளிர்வதுமேன்?
தாங்கா நெருப்பை யெங்கே
　　தானேடுத்தாய் மைத்துனியே?
(பெ) நீங்காமல் நெஞ்சினுள்ளே
　　நிதமும் நீர் உள்ளதனால்
தீங்குதரும் சூட்டுணவே
　　தின்பதில்லை மைத்துனரே?

கண்டால் மகிழ்வதுமேன்,
　　கருதுகையில் இனிப்பதுமேன்?
உண்டாலே கள் இனிக்கும்,
　　உரைத்திடுவாய் மைத்துனியே?
(பெ) கண்ணுள் நீர் உள்ளதனால்
　　கண் இமையும் மூடேன் நான்!
கண்ணுக்கும் மை எழுதேன்
　　கண்டறிவீர் மைத்துனரே!

08 - 08- 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. சீதனம்!

கலியாணம் செய்யிறண்டி,
காசு தருவாயாடி?
நலியாமல் வாழலாண்டி,
நாங்கள் இரண்டுபேரும்!
(பெ) காசுக்கதையை விடும்,
கலியாணம் செய்துகொள்ளும்!
மாசுபடுத்திடாதீர்,
மதிப்பான வாழ்வுதன்னை!

சீதனம் இல்லை யென்றால்
திருமணமும் நடந்திடுமோ?
வேதனை ஆகிவிட்டால்
வீணாகும் வாழ்க்கையடி?
(பெ) காதல் பெரிதிலையோ,
காசோ பெரிதுமக்கே?
மோதல் கடும் பிணக்கு
முழுவதற்கும் கால்காசே!

வீடு வளவுளதோ,
விலையாகும் நகையுளதோ?
மாடு வயல் உளதோ?
மறவாமல் சொல்லிடடி?
(பெ) வீடும் வளவுமே நான்?
விலை மதியாத் தங்கமும் நான்!
மாடும் வயலுமே நான்,
மணமுடிப்பீர் அன்பிருந்தால்!

ஒன்றுமே இல்லை யென்றால்
உன்னை எவனெடுப்பான்
என்றுந் தனிமையிலே
இருந்தே துயர்ப்படுவாய்!
(பெ) ஊருக்குழைத்திடுவேன்,
உயர்ந்திடுவேன் மேகலையாய்!
சீருக்கு வாழ்பவரே,
தேடிடுவீர் சீதனத்தை!

09 - 08- 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. தேன்!

நெஞ்சந்திறந்தபடி நித்திரையுமில்லாமல்
கொஞ்சமும் வாய்திறக்கக் கூடாமல் - நஞ்சுகளை
எண்ணிக்கிடந்திட்டேன், இரவும் விடியாமல்
மண்ணிற்கிடந்தேன் மனை!

விடிந்ததெனச் சென்று வேலை பல செய்தே
முடிந்ததென வந்தார் முழுவதும் பொய்! - விடிந்ததாய்த்
தெரிபடவே இல்லையே, செந்தமிழின் வார்த்தைக்குப்
புரிபடவே இல்லை பொருள்!

ஏதேதோ செய்தார்கள் எதுவும் தெளிவில்லை!
காதோடு காதாய்க் கதைத்தாலும் - தீதைதான்!
சுவரும் செவிகேட்டுச் சொல்லும் பிறர்க்கென்றால்
எவர்தான் உரைப்பார் எதை?

ஊமைகளை நாட்டில் உற்பத்தி செய்தவனார்
தீமையோ நன்மை சிறந்திடுமோ? - ஆமைகளின்
அடக்கம் பெரிதென்றால் அனைத்தும் துறவறமே!
ஒடுக்கமே கலப்புக்குரம்!

தேன்சேர்க்கும் தேனீக்கள், தேனெடுப்பார் மற்றோர்கள்!
ஏன்என்று கேட்க எவையுண்டு? - தேன்ஈயைச்
சுட்டுப்பொசுக்குங்கால் துயரத்தை யாரளந்தார்?
விட்டுநில் இனியேன் விடு!

சுந்தோதனர்க்கொருவன் தோன்றினானாங்கவனைச்
சித்தார்த்தனென்றன்னார் செப்பினார்! புத்தரெனப்
புனித நெறிகள் பல போதித்தார்! சாதனையில்
அநியாயயம் அந்தோ அவம்!

வாயை இருதயத்தில் வைத்தே இருதயத்தை
வாயினிலே பிரமன் வைத்திருந்தால் - தூயசெயல்
ஏதேனும் ஒன்றிரண்டு இருக்கலாம், வாய்ச்சொல்லில்
தீதேதுமில்லையே தேன்!

மனிதன் வருமுன்னர் மாவிலங்குவரை யாவும்
புனிதமடைந்திருந்த திப்புவியில்! - அநியாயம்,
வந்தானே ஆறறிவன் வதையே - உயிர்வதையே
சந்தேகம் சகலர்க்கும் தான்!

*18 - 08- 91*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42. சாத்திரம்!

*சாத்திரியைப் பார்க்க வேணும்,*
*சாதகத்தைக்காட்ட வேணும்!*
*காத்திரமாய்க் கொண்டு வாடி,*
*கலியாணம் கட்டுறண்டி!*
*(பெ) காதல் இருக்குமெண்டால்,*
*கலியாணம் கண்டுறண்டால்,*
*சாதகத்தைக் கேட்பதுமேன்?*
*சாத்திரியைப் பார்ப்பதுமேன்?*

*பஞ்சாங்கம் தேடவேணும்!*
*பலனெல்லாம் பார்க்கவேணும்!*
*அஞ்சாமல் உந்தனது*
*அதிட்ட எண்ணைச் சொல்லிடடி!*
*(பெ) உள்ளத்தில் அன்பிருந்தால்,*
*உண்மையிலே பற்றிருந்தால்,*
*பள்ளியறை செல்வதற்கும்*
*பஞ்சாங்கம் வேண்டியதோ?*

*ஐயர் பிடிக்கவேணும்,*
*அருந்ததியும் பார்க்கவேணும்!*
*பொய்யா உன்தாரகையைப்*
*புகன்றிடுவாய் எந்தனுக்கே!*
*(பெ) கையோடு கைபிடிக்கக்*
*கனகிரியை - வேள்விகளேன்?*
*மெய்யான திருமனமே,*
*மீதியெல்லாம் போலிகளே!*

*ஆதிமுறைகளெல்லாம்*
*அணுவளவும் பிசகாமல்*
*சாதிக்க வேணுமடி,*
*சாத்திரமே மூலமடி!*
*(பெ) பாதியிலே வந்ததெல்லாம்*
*படித்தறிந்து தெளிந்தவள் நான்!*
*சோதனைகள் தேவையில்லை,*
*தூயமனம் போதியதாம்!*

*03 - 09- 91*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. வைத்தேன்!

எலும்பினால், தசையால், தோலால்,
இரத்தத்தால், நரம்பினாலே
பலங் கொண்ட உடலைத்தந்தேன்!
பக்குவக் காற்றுப்பையை,
நலமான குருதிப்பையை,
நல்லீரல், நீரகங்கள்,
மலக்குடல், இரைப்பை யெல்லாம்
மறந்திடாதுள்ளே வைத்தேன்!

கண்டிடக் கண்ணை வைத்தேன்!
காதினைக் கேட்கவைத்தேன!
உண்டிடநா - வாய் வைத்து
உரைத்திடவும் செய் திட்டேன்!
கொண்டு போவதற்குக் காலும்
கொடுத்திடக்கையும் வைத்தேன்!
மண்டு காற்றிழுத்து - வாசம்
மணந்திட மூக்கைவைத்தேன்!

அற்புத மூளைதன்னை
அழகிய தலையுள் வைத்தேன்!
பற்பல எண்ணங்கட்கும்,
பாரிலே வாழ்வதற்கும்,
நற்பலனளிக்கு மென்றே
நம்பினேன்! ஆனால் பல்லோர்
கற்பனை தவிர்த்துடம்பைக்
காத்துமே வாழ்ந்தாரில்லை!

மூளையை வைத்திராட்டால்
முண்டமாய்க்கிடந்திருப்பார்!
மூளையை வைத்த பின்னும்
முண்டமாய்த் திரிகிறாரே?
ஆளைஆள் தின்கிறாரே,
அழிந்துமே தொலைகிறாரே?
நாளைநான் இறைவன் என்றால்
நம்மையும் என் செய்வாரோ?

09 - 08- 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. பிழை!

நீரினால் அழித்தாய் நாட்டை!
    நெருப்பினால் அழித்தாய் ஏட்டை!
ஆரியக் கலாச்சாரத்தால்
    அழித்தனை தமிழ்ப் பண்பாட்டை!
போரிலின்றழிக்கின்றாய், எப்
    போதில் உன் ஆடல் நிற்கும்?
வேரற வீழ்த்தும் நோக்கோ?
    விழித்தெழச் செய்யும் போக்கோ?

ஐயனே நீ இல்லாமல்
    அணுவசையாதே, ஆடல்
மெய்யனே போதாதாமோ?
    மேலுமிங்குண்டோ ஆடல்?
கையறு நிலையில் நின்றே
    கலங்கினும் கலங்கிடாமல்
வையக மழிக்கின்றாயே,
    வளம் பெறப் படைத்தற்காமோ?

"நான் எலாம் படைத்த பின்னர்
    நரன் உனைப் படைத்த நோக்கம்.
ஏன் எனில் எளிமை யாக்கி
    என்பணி செய்வாய் என்றே!
வான், கடல், மலை, கான், யாறு?
    மண்ணகம் எல்லாம் மண்டிக்
கோன் - குடியாட்சிப் பேரில்
    கொலை களவெல்லாம் செய்வாய்!

மொழியினால், மதத்தால் நாட்டால்
    மூண்டிடும் போரால் நீயே
அழிகிறாய் என்றால், நானேன்
    ஆட்டு விக்கின்றேன்? என்னில்
பழிசுமத்தாதே! நீயே
    பார் உனை! அழகாய் வாழும்
வழிபிறந்திருக்கும், மூளை
    வைத்ததென் பிழையாயிற்றோ?

*24- 10- 91*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. கனவு!

மனதிலே பலவும் பத்தும்
மண்டிபோல் உறைவதாலே
கனமதே! வெளியிற் சும்மா
கதைப்பதே, சிரிப்பதேதான்!
இனமுளார் வீட்டிற் போயோர்
இருக்கையில் இருந்தவாறே
நனவிலோர் கனவு கண்டேன்,
நாளதோர் திங்கள் மாலை!

எடுத்தனோ இல்லையாமோ
எனக்கொரு பரிசும் வந்தே
கிடைத்ததாம் ஐந்து லட்சம்!
கேட்டதும் தந்தார் காசை!
கடத்தியே காவி வந்தோர்
காணியை வாங்கலானேன்!
இடம் உவர் - மலைதான், வீடும்
இருக்கு தங்கெல்லா முண்டாம்!

நடக்குதாம் புதிய வாழ்க்கை!
நாங்களோர் நாலைந்தாறே!
படுக்கைகள், வெளிச்சம், காற்று
பலசெடி, கொடிகள், வாழை
அடுக்களை - பலசாப்பாடு,
அருகினிற் கிணறு - கூடம்
கடற்கரைக் காட்சி - மற்றும்
கதைப்பவர், வருவோர், போவோர்!

அரைமணி நேரம் போய் ஓர்
ஆழ்பெரு மூச்சை வீட்டே,
கரையிலாக் கவலை கூடிக்
கால்நடை தளர வந்தேன்!
நரைதிரை மூப்பு மாகி
நாலாவதாகுங் காலம்!
விரைவினிற் போவோமா எம்
வீடிலாக் காணிக்கேனும்?

*12- 11- 91*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. துறவி!

கடந்த காலத்தை எண்ணிக்
    கலங்கினேன் - கலங்குகின்றேன்!
கிடந்தவை எல்லாம் போக்கிக்
    கிடக்கிறேன் தனிமையாக!
இடந்தரவில்லை நெஞ்சம்
    எந்த ஆசைக்கு மிப்போ!
நடந்ததை எண்ணி எண்ணி
    நான் ஒரு துறவியானேன்!

வீட்டினைத் துறந்தேன்! வேலி
    விளைபொருள் துறந்தேன்! சுற்றும்
ஏட்டினைத் துறந்தேன்! இல்லத்
    திருந்தவை துறந்தேன்! தீட்டும்
பாட்டினைத் துறந்தேன்! எல்லாப்
    படைப்பையும் துறந்தேன்! வாழும்
நாட்டினைத் துறந்திடாமல்
    நான் ஒரு துறவியானேன்!

படுக்கையைத் துறந்தேன்! காத்த
    பயிர்களைத் துறந்தேன்! போடா
உடுக்கையைத் துறந்தேன்! உண்ணும்
    உணவினைத் துறந்தேன்! பாடல்
அடுக்கினைத் துறந்தேன்! போட்டோ
    அழகையும் துறந்தேன்! பாடல்
மடுப்பதைத் துறந்தேன்! நானோர்
    மானிடத்து துறவியானேன்!

மீண்டுமோர் வீடா, அன்பின்
    மேன்மைகள் அறியா நாட்டில்?
ஆண்டவை எல்லாம் வீணாய்
    அழிபடும் நாட்டில் வாழ்வா?
கூண்டினிற் கிளிக்கே ஊட்டும்
    கொவ்வையின் கனியா? ஐயோ,
வேண்டவே வேண்டாம், பொல்லா
    வேதனைத் துறவி நானே!

*23- 11- 91*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. உண்மை!

மனிதன் இன்னும் மனிதனாக
வில்லை ஏன்டி? - அவன்
புனிதமான பிறவி என்று
புகலல் ஏனடி?
(ப) மனிதன் முன்பு மனிதனாக
வாழ்ந்த துண்மையே! - அந்தப்
புனிதமான பிறவி மாறிப்
போனதுண்மையே!

மதத்திலேறி வெறியிலாடி
மாய்ப்பதேனடி? - வெறும்
பதத்தை மாற்றிச் செயலில் வேறு
பார்ப்பதேனடி?
(ப) மதம் பிடித்த யானை காட்டை
மாய்த்தல் விந்தையோ? எந்த
விதமும் தீமை விளைத்திடாமல்
வீரம் பேசுமோ?

தன்னைப் போலும் பிறரைநேசித்
தால் இந்நாட்டிலே - அடி
நன்மையன்றித் தீமை ஏதும்
நடந்திருக்குமோ?
(ப) முன்னை அந்த மூத்தவர்கள்
மூட்டி விட்டதீ! - அது
இன்னும் பற்றி எரியுதே நாம்
என்ன செய்வமே?

இந்தநாடு எங்களுக்கே
சொந்தமென்பதோ? - அடி
வந்தபோதில் வாழ்ந்தவர்கள்
மாய்ந்து போவதோ?
(ப) எந்தத் தீமை, நன்மையேனும்
எவரும் தருவதோ? - பழம்
இந்த உண்மை நமக்கு இன்னும்
ஏறவில்லையே?

24 - 11- 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48. காட்சி!

நீலக்கருங் கடலோ? - அதிலே
நீள்வது வெண்ணலையோ?
கோலம் இடுகிறதோ? - 'பதிகம்'
கூடியிசைக்கிறதோ?

முப்புறமுங் கடலோ? - அதுவே
மும்முனைக் காப்பரணோ?
குப்புற வீழ்கிறதோ? - அலைதான்
கும்பிடப் பார்க்கிறதோ?

வங்கக் குடாவிதுவோ? - இதனால்
வாடை குளிர்கிறதோ?
எங்கும் நிலாப்பரப்போ? - இதுதான்
இந்துப் பெருங்கடலோ?

குங்குமச் செங்கதிரோன் - கிழக்கே
குளித்தெழுந்து விடின்
எங்கும் ஒளிமயமோ? - பனிபோல்
இருள் பறந்திடுமோ?

மேற்கிரா மேஸ் வரமோ? இடையில்
மெல்லிய நீரிணையோ?
பார்த்து மனப் 'பதிகம்' பிள்ளையார்
பாடித்துதித்தனரோ?

கோணமலைப் பெருமான் - தப்பாமற்
கும்பிடச் செய்யானோ?
காணவருவோர்க்கே - எப்போதும்
'காட்சி' தருவானோ?

ஏதும் தடைகளெனில் - மற்றுமோர்
இராவணன் வந்திடலாம்?
பாதுகாப்பில்லையெனில் - வெட்டியோர்
பாகம் பிரித்திடலாம்?

மாவலியாள் கடலில் - கலந்தே
மாயும் முறையினிலே
தாவி வருவதெலாம் முடிவில்
சங்கமம் ஆகிடலாம்?

*21- 11- 91*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. தாகம்

தாகமோ தணிந்திடாது!
தணிந்திட வழியே இல்லை!
வேகமோ கூடும்! எந்த
விதத்திலும் குறைந்திடாது!
பாகமோ கிடைத்திடாது!
பறித்துமே கொள்ளவேண்டும்
ஆகவே சுருங்கச் சொன்னால்
அமைதிக்கு இடமே இல்லை!

ஈரலில் வரட்சி ஆனால்
இயற்கையில் தாகம் ஆகும்!
ஈரலை வளமாய் வைத்தே
இருந்திடின் தாகம் தோன்றா!
ஈரலை வளமாய் வைக்க
இடையிடை நீரே தேவை!
ஈரலுக்கின்றேல் தண்ணீர்
எப்படி தாகம் போகும்?

ஒவ்வொரு மனிதருக்கும்
ஒவ்வொரு தாகம் உண்டு!
எவ்வித தாகத்திற்கும்
ஏற்றதைக் கொடுத்து வந்தால்
அவ்வித தாகம் ஒன்றும்
அவரவர்க் கேற்படாது!
இவ்வித தாகத் தீர்ப்பு
இருந்திடின் எல்லாம் சீரே!

தாகங்கள் தீர்ந்து போனால்
சப்பென்றே இருக்கும் வாழ்வு
ஆகவே தாகம் வாழ்வில்
அடிக்கடி வரத்தான் வேண்டும்!
தாகங்கள் இருந்தால் தானே
தண்ணீர்க்கும் மதிப்புண்டாகும்!
தாகத்தின் பெருக்கத்தாலே
சாகப் போவோரும் உண்டே!

15 - 04 - 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50. கீறல்கள்!

வான்கீறல் ஒளியாம் மின்னல்!
வளைவான வில்லின் காட்சி
ஊன்கீறல் பலவாம் நோய்கள்!
உடலேறும் முதுமைக்கோலம்!
கோன்கீறல் நாட்டின் யாப்பு!
குறைவில்லா ஆட்சிக்கோப்பு!
நான்கொள்ளும் கோலின் கீறல்
நன்நான்கு கோணப் பார்வை!

கைக்கீறல் சித்திரங்கள்!
கற்கீறல் சிற்பத்தோற்றம்!
பைக்கீறல் பீற்றல் கண்கள்!
பழக்கீறல் சுவைக்கும் பண்டம்!
மெய்க்கீறல் அறுவைத் தீர்வு!
மென்கீறல் சிறுவன் காயம்!
தைக்கீறல் ஆண்டின் திட்டம்
தனிக்கீறல் நம்கோற் போக்கே!

ஏர்க்கீறல் பயிருக் கேற்றம்!
இசைக்கீறல் செவியின் தேனே!
கார்க்கீறல் மழையின் வீழ்ச்சி!
கவிக்கீறல் கருத்தின்கூட்டு!
வேர்க்கீறல் மரத்தின் மூப்பு!
விறற்கீறல் நீறும் பொட்டும்!
ஊர்க்கீறல் வன்செயல்கள்!
உளக்கீறல் இது தானாமோ?

முன்கீறல் கழிசெம் போலை?
முறையான கல்லின் பள்ளம்!
பின்கீறல் கோலும் தாளும்!
பெரும்பாலும் அச்சின்கோப்பே!
என்கீறல் இவைதான்! மேலும்
இருக்கின்றதிவை போற்கீறல்!
பொன்கீறல் இலையென்றாலும்
புளிக்கீறல் இலையேற் போதும்!

25 - 12 - 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரும் பெயர்வும்

02

## யாய் வாழ்த்து

'அன்று நீ வந்தாய் அம்மா
ஆயிரம் தடைகள் தாண்டி
வென்றுமே வாழ்ந்தாய் அன்பே
வெளியாரும் புகழ்ந்தே போற்ற
இன்றுமே இருக்கின் றாயே
இளையாளே பழமையாளே
என்றுமே வாழ்வாய் நீயே
எனக்குமே அருள்வாய் தாயே!"

## 1. அழிவுப் பத்து

இயற்கையின் செய்கை எல்லாம் வியப்பே!
ஆக்கும், காக்கும், அழிக்கவும் செய்யும்!
அண்டப்படலம் அதிர்ந்து வெடித்தே
துண்டுகளாகத் தோன்றின சுடர்கள்! 1

பெரியவை ஈர்ப்பால் பெரியதல்லாதவை
சுழலச் செய்தன, சுற்றியும் வந்தன!
அவற்றிலே ஒன்றாய் அம்புவி ஆகிக்
காலம் போகக் கனல் வெளி ஆற 2

ஆவி பறக்க அடாமழை பெய்யப்
பள்ளம் கடலாய் பலதிடல் மலையாய்ப்
புல்லும் செடியும் பூமரக் காடும்
தோன்ற நுண்ணுயிரும் தோன்றிவளர்ந்தே 3

ஊர்ந்தும் பாய்ந்தும் உயரப் பறந்தும்
நாற்கால் என்றும் நடந்த விலங்கு
காலப்போக்கில் கனகூர்ப்படைந்து
இருகால் எனவே எம் மூதாதைத் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திராவிடத் தமிழன் திரு இடம் வந்தான்*
*அத் திரு இடமே ஆழ்கடல் உண்ட*
*பஃறுளியாற்றுப் பன்மலை அடுக்கின்*
*குளிர், சூடுள்ள குமரிக் கண்டம்!* 5

*ஏழேழ் நாடுள இத்தொல் பதியின்*
*எம்முனோர் மொழிந்த இப்புவி முன்மொழி*
*தமிழே என்பார் சான்றாய்வாளார்!*
*அமுதாய் இன்றும் அஃதினிக்கிறதே!* 6

*உவர்நீர்க்கடலே உள்ளத் தெரிவால்*
*அழித்தது நாட்டை, அழிந்தன நூல்கள்!*
*கொற்கை, பூம்புகார், குமரிப் பழநிலம்*
*ஒன்றுமே இல்லை, உவர்க்கடல் வாழ்க!* 7

*ஈழம் பிரிந்து இடை கடல் ஆனது!*
*பாளம் பாளமாய்ப் பாறைகள் தெரியும்*
*கோணமாமலையின் குன்றுகள் சான்று!*
*இன்னும் பிரியுமோ ஈழநன்னாடு?* 8

*இந்தின் மணியாய் இலங்குமிவ்வீழம்*
*எழில் வழங்கொண்ட இனியதோர்தீவு!*
*ஆயினும் செங்கோல் அமைதியானதினால்*
*சிதையும் நிலையால் சிந்தை நோகிறதே!* 9

*நாடு பிரியுமுன் நாமிங்குள்ளோம்!*
*நாகர், இயக்கர் நாமே எல்லாம்!*
*வந்தோர் அல்லர், வரலாறுண்டு!*
*உண்மையை உலகம் உணருநாளென்றோ?* 10

## 2. வருகைப்பத்து

*புல்லேந்தி மார்பினிலே பூநூல்தனையேந்திச்*
*சொல்லேந்தி ஓதும் தொழிலேந்தி - நல்லாவின்*
*துணையோடும் ஆரியர்கள் தொடரும் பயணத்தால்*
*இணைந்தார் வடபுலத்தே!* 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்புலத்தே வாழ்ந்த திருவிடத்தார் வானோரை
நன்கு விருந்தோம்ப, நாளாக - இன்னாரென்
றறியுமுனம் செய்த ஆயாச் செயலாலே
பறிபோயிற் றெல்லாமே பாழ்! 12

கலந்தார் தமது மொழி! கதைகள் புனைந்திட்டார்!
நலந்தானெனக்கற்றார் நம்மவர்கள்! - குல, தெய்வம்
ஒன்று பலவாச்சு! உலகும் பதினான்கு
என்றே பிடித்தார் இடம்! 13

வங்காள நாடிருந்து வந்த வட விசயன்
இங்குற்றான், தோழர் எழு நூறாம்! - சிங்கமகன்
இயக்கர் தலைவி எழிலார் குவேனியவள்
மயக்கில் புரிந்தான் மணம்! 14

பாண்டி மகளாரில் பலரை வரவைத்தே
ஈண்டு மணந்தார் எழுநூற்றார்! - நீண்ட மர(பு)
அன்றே பெரிதாகி ஆண்டாண்டுமே எம்மை
இன்றே எதிர்ப்பதேன் ஏன்? 15

தந்தையுடன் மகனார், தமையனுடன் தம்பி
இந்த விதம் சண்டை இட்டிட்டே - வந்தாண்ட
சிங்கள மாமன்னரது செங்கோல் முறைபற்றி
இங்கேடியம்புதா மே! 16

ஈழ வரலாறு எத்தனையோ உண்டெனினும்
பாழும் அவற்றின் பதம் மாற்றி - நாளிப்போ
பொய்கள் புனைந்து புதிதாய் அளித்தாலம்
மெய் என்றும் மேலாகுமே! 17

அமர்செய் துறவி அசோகப்பெருமன்னர்
தமதன்பு மக்களையே தாமனுப்ப - எமதீழ
நாட்டிலே அன்னாரும் ' நல்லரசு" தன்னோடு
நாட்டினார் பவுத்தம் நலம்! 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தீஸ்வர நாட்டில் எங்கும் விகாரைகளே!
வந்தோர் பிடித்தே வளர்ந்தார்கள்!- முந்தியோர்
தேய்ந்தே குறைந்தே சிதைத்த வரலாறே
ஆய்ந்தால் உலகாம் அறி! 19

சிற்பக்கலையதுவும் சிறப்பான ஓவியமும்
அற்புதமாய் எங்கும் அழகாகித் - தற்போதும்
திருவிடத்தார் நுட்பத்தின் சீரை விளக்கியே
வருகின்ற நிலையோர் வரம்! 20

### 3. போர்ப் பத்து

சிங்கள மன்னர் ஈழத் தென்திசை ஆண்டநாளில்
எங்களின் வட ஈழத்தில் எழிற்றமிழ் மன்னராட்சி
பொங்கிடும் வீரத்தோடும் புனித மண்பற்றினோடும்
பங்கமில்லாமல் ஆண்டு பல நடை பெற்றதன்றோ? 21

பற்றெலாம் வெறியாய் மாற்றிப் பவுத்தமே ஈழத்தீவு
முற்றிலும் பரப்ப எண்ணி முயற்சிகள் தலைமேற்கொண்டு
சற்றுமே பொது நோக்கின்றிச் சதியிலும் ஈடுபட்டார்!
கற்றவரிடத்தில் கூடக் காணுதல் அரிதாம் நீதி? 22

பிறரையும் தன்போல் பார்க்கப் பெருமானார் இயேசு சொன்னார்!
அறமெனல் மனத்தில் மாசை அகற்றுதல் என்றார்தேவர்!
உறவினை உதட்டில் காட்டி உள்ளத்தில் பகையைத் தேக்கி
மறம் தழுவாத போரால் மாய்த்தனர் தமிழர்வேந்தை! 23

தமிழகச்சோழவேந்தர் தம்பெரும் படைகளோடும்
எமதிராவணர் முன் ஆண்ட இவ் வீழநாடுவந்து
தமதரும் வலிமை காட்டிச் சனநாதபுரத்தில் ஆட்சி
அமைத்ததும் கோயில் கட்டி ஆண்டதும் வரலாறன்றோ? 24

தலைநகர் மாற்றிமாற்றித் தம்மையும் பாதுகாத்து
நிலையிலா ஆட்சி நாட்டில் நீடிக்க வழியாராய்ந்து
அலைகடல்போல் ஓயாமல் ஆள் அணிபடைகள் கூட்டி
மலையகச்செழுமை நாட்டு மன்னவர் பார்த்திருந்தார்! 25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வாங்கிவருதல் வந்தே பெரும்பலம் பெறுதல், பெற்றே
முன்னேறிச் செல்லல் சென்றே முறியடித்திடுதல் என்றே
தென்னகம் முன்கால் வைக்கத் திருப்பிடும் வடக்ககந்தான்
இன்னவாறிருபாலாரும் இறங்குவார் வெல்வார், தோற்பார்! 26

நோக்கெலாம் தமிழர் ஆட்சி நூர்த்துமே நாடொன்றாக்கல்!
போக்கெலாம் அதுவே, ஆனால் போய்விடாதருமை மண்ணைக்
காக்கவே தமிழ் மன்னர்கள் கருதினார், வேறொன்றில்லை!
தூக்கத்தில் கனவில் கூடச் சொல்லுவார் போர் போர் என்றே! 27

கண்டியின் கடைசி மன்னன் கையொப்பம் தமிழில் இட்டான்!
உண்டுமோ கலையகத்தில், ஒன்றுமே இல்லையாமோ?
பண்டிருந்தாட்சி செய்த பழந்தமிழ் மன்னர் பல்லோர்
திண்டாடும் படிநாமெல்லாம் சிங்களப் பெயரோடுள்ளார்! 28

இரவோடும் இரவாய் நூல்கள் எழுதியே புதிதாய்ப் பண்டை
வரலாற்றை மறைக்கின்றார்கள்! வரைபடம் தன்னில் கூடத்
தரும் தமிழ்ப்பெயரையெல்லாம் தலைகீழாய் மாற்றுகின்றார்
வரவரத் தேய்ப்பதல்லால் வளர்த்திடும் நிலையே இல்லை! 29

எண்ணத்தை மாற்றினாலும் எப்படித்திருத்தினாலும்
முன்னைய மகாவம்சத்தை முற்றிலும் மறைக்கலாமோ?
சின்னவர் செய்கைபோலச் செப்பமில்லாதோர் தீட்டும்
உன்னத நூல்களெல்லாம் உண்மையில் பொய்யேயாகும்! 30

## 4. பிடிப்புப்பத்து

நாங்கள் பெரியவர் சின்னவர் என்றுமே
நாட்டினைப் பற்றி நினைக்காமல்
தீங்கு விளைத்துமே ஆளையாள் தின்றதால்
தேசமும் வீழ்ந்ததே நாசத்திலே! 31

போர்த்துக்கல் நாட்டினர் புறப்பட்டார்களே
பொன்போலும் ஈழம் பிடித்திடவே
பார்த்திருந்தோமலால் அவர்கள் நாட்டுக்கே
பயணம் செய்திட வைத்தோமா? 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்து நாட்டினர் புறப்பட்டார்களே
பொன்போலும் ஈழம் பிடித்திடவே
எல்லோரும் பேசாமல் இருந்ததன்றியே
என்னதான் செய்து கிழித்து விட்டோம்? 33

பீரங்கி காட்டியே பேசாதிருத்தினர்
பிச்சைப்பதவிகள் சேர்ந்தவர்க்கே
ஊரெங்கும் பற்பல கோயில் இடித்துமே
உயர்ந்த கோட்டைகள் கட்டினரே! 34

இங்கிலாந்துக்காரர் எட்டிப்பிடித்துமே
இலங்கை நாட்டினை ஆண்டனரே
எங்கும் பரந்தனர் கண்டியும், வன்னியும்
எல்லாம் அவர்க்குச் சரிசமமே! 35

கோப்பியும், தேயிலை, றப்பரும் மட்டுமா
கொண்டு செல்லும் வீதி, பாலங்களும்
சாப்பிடத் தீன்களும் தந்தனராயினும்
சட்டங்கள் எம்மை அடக்கினவே! 36

மொழி சிதைந்தது, மதம் பரந்தது
முன்னைய வாழ்க்கையும் மாறியதே
அழிவில் சிற்சில ஆக்கமிருந்தது
ஆங்கிலம் கற்றோர் மதிப்படைந்தார்! 37

வந்ததுலகின் முதலாம் போர் எங்கள்
வாழ்க்கையிலே பெரும் மாற்றமில்லை
நொந்தனவே சில நாடுகள் எங்களின்
நோக்கம் விடுதலை ஆகியதே! 38

வந்ததுலகின் இரண்டாம் போர் எங்கள்
வாழ்க்கையோ தாமரை வில்லிலடா!
அந்த நாளே ஈச்சந்தீவினை நாடியாம்
அகதியாகியே வந்தமடா! 39


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை வில்லோ கடலோரம், இன்று
தங்கிடும் தீவிதோ ஆற்றோரம்
ஆமிதுவுமிப்போ அழகிழந்துமே
அல்லற்படுவதைச் சொல்லுவதார்? 40

## 5. ஒடுக்குப் பத்து

வெள்ளையர்கள் போனார்கள் நாட்டை விட்டே!
விடுதலையோ ஒரு பக்கம் ஒதுங்கலாச்சு!
நள்ளிரவில் இந்தியா நாற்பத்தேழில்!
நம்நாடு நாலிரண்டு நாற்பத்தெட்டில்!
கொள்ளையாய் இன்புற்றார், சுதந்திரத்தைக்
கொண்டாடிமகிழ்வுற்றார், குதுகலித்தார்!
உள்ளத்தில் உள்ளதை நம்மனோரில்
ஒருசிலரே உணர்ந்தார் நாட்போகப்போக! 41

ஆட்டினார் வெள்ளையர்கள் ஆண்டபோதில்
ஆடினோம் நாமெல்லாம் அஃதோர்காலம்!
ஆட்டினார் சிங்களவர் ஆட்சிபெற்றே
ஆள்மாறி ஆள் வந்தார் ஆட்சி அஃதே!
மூட்டினார் இனபேத மதபேதங்கள்
மூழ்கியே பலவெறியர் ஆகினார்கள்!
கேட்டார்கள் ஏதேதோ நம்மவர்கள்
கிடைத்ததோ யாதொன்றும் இல்லையில்லை! 42

தமிழர்க்குச் சில பதவி தந்தன்னாரைத்
தம்மோடு ஒத்துழைக்கப் பண்ணினார்கள்!
தமது சுயநலத்திற்காய் மானமற்றே
தரங்கெட்ட தமிழர்களும் ஒத்துழைத்தார்!
எமதினத்தில் இதுதானே இன்றுங்கூட
இருந்து வருகின்ற பழம் நோயாயிற்றே!
நமது சிலர் செயலாலே நாட்டிலுள்ள
நமதினமோ நலிவுற்றே போகலாச்சு! 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்போடும் வாழ்வாரே வாழ்வார்! மண்ணில்
விழிப்பின்றி வாழ்வோர்கள் வீழ்ந்தேபோவார்!
அழிப்பாரும் இருப்பார்கள் என்ற எண்ணம்
அடிமனதில் எப்போதும் வைத்து, காக்கை
விழிப்போடு வாழுவது போன்று, சாதி
வெறிகொண்டு நம்மோடும் வாழுவோரைக்
கழிக்காமல் ஒன்றாக வாழ்ந்திருந்தால்
கன நன்மை யன்றோநாம் கண்டிருப்போம்? 44

பேச்செல்லாம் பல்லக்கில் சவாரி செய்யப்
பெரியசெயல் கால் நடையில் போனதேபோல்
மூச்சான மொழிபோச்சு, நிலங்கள் போச்சு!
முன்னேற்றக்கலை போச்சு, கல்வி போச்சு!
வீச்சான நெறி போச்சு, மானம் போச்சு!
வீரத்தில் விளைந்திட்ட காதல் போச்சு!
போச்சுதங்கெல்லாமே போனபோதும்
போகின்றார் பதவி பெறப் புதுமையிஃதே! 45

ஈராட்சிமாறிவரும், இரண்டு மஃதே!
எம்மவரும் ஒருசிலபேர் இருந்தேர்வார்!
நேராட்சி அவற்றினிலோ ஒன்றுமில்லை!
நிலைமோசமாகத்தான் தொடர்ந்துபோகும்!
பேராட்சி இரண்டும் போய், இடதுசாரிப்
பெயர்பூண்ட கட்டெறும்பு கழுதையாகி
ஓராட்சி அமைத்தாலும் இலங்கைத்தீவில்
ஓர்தீர்வா வந்துவிடும்? உண்மையாக! 46

ஒரு சிலரோ நன்றாகப் பேசினார்கள்!
உயர்பதவி பெற்றதுமே மாறினார்கள்!
'இருமொழியா ஒரு நாடா? இல்லையாயின்
இருநாடா ஒருமொழியா?" என்று கூறி
பெருமனமாய்ச் சிந்தித்த பேர்கள் கூட,
பெரும்பான்மை இனத்திற்குள் இருந்தும்கூட
வருபதவி சிந்தனையை மழுங்கடித்து
வாயடைக்கவைத்ததுவும் வரலாறாமே? 47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கென்ன கிழக்கென்ன தமிழைப்பேசி
வாழ்வோரைச் சிறுபான்மை என்று கூறி
அடக்குமுறையாலேயே ஆட்சியாளர்
அன்றிருந்து ஆண்டார்கள் -ஆள்கிறார்கள்!
ஒடுக்குகிறார், உதைபந்து கிளம்பல் போலே
உயருவது கண்டாலும் ஒடுக்கலாலே!
மடக்கிடலாம் என்றெண்ணிப் பூசுகின்ற
மருந்திடுவார், புரைநோயோ மாறிடாதே! 48

உள்ளொன்று புறமொன்று என்றாற்போல
உள்நாட்டில் ஒரு போக்கு வெளியோர்போக்காய்
உள்ளத்தில் நஞ்சாக உதட்டில் தேனாய்
உரையாடி உறவாடி அரித்தரித்தே
மெள்ளத்ததான் கம்பெல்லாம் உழுக்க வைக்கும்
மிதவாதக் கறையான்போல் இங்கும், அங்கே
அள்ளித்தான் வழங்குமொரு வள்ளல் போலும்
அடையாளம் காட்டினரே ஆட்சியாளர்! 49

என்னதான் இரு தோற்றம் கொண்டபோதும்,
எங்கெல்லாம் எதையெல்லாம் சொன்னபோதும்,
முன் உண்மை வரலாற்றை முறையாய்க்கற்ற
மூதறிஞர் அறிவார்கள் முழுநோய்கட்கும்
பின் உள்ள ஆட்சிக்கோல் செங்கோலல்ல-
பிழையான சரிவான கொடுங்கோல் என்றே!
தன்னாலும் திருந்தாது, உரைகொள்ளாது
சர்வாதிகாரத்தின் தன்மையஃதே! 50

## 6. மீட்புப் பத்து

தன்துயரம் தாங்குவதும், பிற உயிரைத்தாக்காத
தகுதியோடும்
என் தமிழர் அறப்போரில் ஈடுபட்டார், தோல்வி
எல்லாம் தோல்வி!
முன்புத்தர் வள்ளுவனார் முறை ஏசுநபிகாந்தி
முதலானோரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றிப் பார்த்தார்கள், பெருந்தாக்கம் கண்டார்கள்
பேசலாமோ? 51

நாயகத்திற்குள்ளேயே நமையெல்லாம் பாதித்தே
நலிவுண்டாக்கும்
தீயமாசட்டங்கள் மறுத்தும் போர் செய்தார்கள்,
செய்ததெல்லாம்
மாயமாய்ப்போனாலும், மறைபட்டுப்போனாலும்,
மறந்திட்டாலும்
தூயநல் மலர்மாலை மகிமைகள் குரங்கிற்கோ
தோற்றிடாதே! 52

ஒரு சொட்டுக் குருதியுமே ஒழுகாமல் வந்திட்ட
உயர் நாட்டாட்சி
'அருகில் வாழ் அயலார்க்கும் அளித்திட்டால் அவர் நம்மை
அழித்திடாரா?
பெரு மோசம்" என்றெண்ணிப்பேராசை கொண்டெல்லாம்
பிடித்துக் கொண்டே
தருகின்றார் தமிழர்க்குச் சருவாதிகாரத்தின்
சட்டம் தானே? 53

உள்நாட்டுச்சிக்கலெனில் ஒரு போதும் வெளிநாடு
உதவிடாதாம்!
அள்ளி எமைப்பூண்டோடு ஆழியிலே வீசிடினும்
அவை பேசாவோ?
உள்ளத்து மாசில்லா இதயத்தார் வாழ்நாட்டில்
உதட்டைத்தள்ளு!
எள்ளளவும் மாசில்லா இதயத்தார் வாழ்நாட்டில்
எல்லாம் நன்றே! 54

எத்தனையோபேச்சுக்கள், எண்ணில்லா வார்த்தைகள்
இரண்டோடும் செய்
சொத்தான ஒப்பந்தம், தோதான கோட்பாடு
தூண்டும் போக்கால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் அழிபட்டு அதிகாரவெறிமிஞ்சி
ஆட்சி செய்தால்
ஒத்து யார் வாழ்வார்கள்? உயர்நீதிக்கிடமேது?
உண்மை ஏது? 55

எல்லாமே கற்றார்கள் எமதிளைஞர் வரலாறு,
எண்ணிப்பார்த்தார்!
சொல்லாமற் செய்கின்ற தூண்டலுக்கே ஆளானார்
'துயர் என்றாலும்
வெல்லுவோம், இல்லையெனில் வீரச்சாவெய்திடுவோம்,
விடுவோமல்லோம்!
கொல்லுவோம் பகையெல்லாம், கொலையாளர் யாமல்ல,
குறிக்கோள் நாடே! 56

கருவியினைக் கைக்கொண்டார், கால்தூக்கி வைத்ததார்கள்,
கண்கொட்டார்கள்.
இரவெல்லாம் பகலாக இருபத்து நான்குந்தான்
இயங்கினார்கள்
பொருமியழப் பெற்றோர்கள் போனார்கள் சேர்ந்தார்கள்
போர் செய்தார்கள்
எருமைத்தோல் போர்த்தியவர் இருத்தார்கள் அரசியலில்
எதையோ நாடி! 57

ஒன்றாகி பலவாகி ஒரு மரத்துக்கிளையாகி
ஒன்றை ஒன்று
தின்றுவிடும் அளவுக்கும் செயல்பட்டதால் வையம்
சிரித்திட்டாலும்
வென்றார்கள் சில போரில் வெல்லாதும் தோற்றார்கள்
வெவ்வேறாகி
நின்றாரேல் பகைவெல்லும் நெடுநாளும் தமிழர்களின்
நிலைத்த போக்கே! 58

பாரதநாடுதவி செயப் பறந்தடித்து வந்ததுவும்
படைகளோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாய்ச் சொல்லாமல் நினைவினிலே வைத்ததுவும்
நிறுத்தித் தேர்தல்
ஊரறியக் காட்டியதும் - உலகுணரச் செய்ததுவும்
ஒப்பந்தத்தின்
வீரமதும் நாடகமே வீண்செலவும் சாவுமலால்
வேறொன்றில்லை! 59

எல்லாம் போய்த் தனி நாடே இறப்பெங்கள் மண்ணுக்கே
எனப்போர் செய்ய
வல்லதுவோ சாகிறது வன் செயலும் நேர்கிறது
வந்தே மீதி
பொல்லாத நீரோட்டப் போக்குடனே போகிறது
போற்றலெஃதை?
நல்லதெது தீயதெது நாமறியோம் காலந்தான்
நவில வேண்டும்! 60

## 7. பெயர்வுப்பத்து

கோல் நிமிர்ந்த பாடில்லை குறை தீர்ந்த பாடில்லை
ஆல்போல் தழைத்தே அறுகாகி - நால் முனையும்
பற்றிப் பிடித்துப் படர்ந்தே உரிமைப்போர்
சற்றுந் தணியாத தன்மைபெற - மற்றிதனைச் 61

சாட்டாகக் கொண்டே தமிழர்களை எங்கெங்கும்
வாட்டி வதைக்கின்ற வன்செயலைக் - கூட்டாகச்
செய்தார் பெருமினத்தைச் சேர்ந்த சில வெறியர்
கொய்தார் தலைகளையும் கொக்கரித்தே - பொய்தானே 62

எங்கும் கலவரத்தை ஏற்படுத்திக் காட்டியது
அங்கங்கிருந்த அரசபடை - தங்களது
இருபார்வைப்போக்கோ டினை ஒழிப்பிலீடுபடப்
பெருங்கலகமாகிப் பிளவாகி - வருங்காலம் 63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்குறியாகிக் கிடையாமல் யாதொன்றும்
ஆள் அழிவாய்ப்பொருள் அழிவாய் அகமும் போய் - நாள் ஆக
வாழ்வும் வெறுத்து வதைப்பட்டுச் சிதைவாகித்
தாழ்வில் கிடந்த தமிழ் மக்கள்- ஊழ்வினையென்(று) 64

ஊர்விட்ட கதியென உலகெங்கு மோடோடிச்
சேர்ந்தார் சிலர் அங்கு சேராதோர் - சேர்ந்திங்கே
விதியோ விதியென்று வேறுவழியில்லாமல்
கதியாய் அகதி முகாம் கண்டார் - புதிதாக 65

அகதி முகாம்கள் அமைத்தே அரசெங்கும்
அகதிகளை வைத்தே அளவுணவைப் - பகுத்தீயப்
பெற்றே புசித்தாலும் பெருமூச்சே விட்டிருப்பார்
விற்றே சிலர் பெற்றார் வேறு பொருள் - சுற்றாமல் 66

கூண்டுப் பறவையெனக் குந்திக் கிடந்தாலும்
தீண்டிப் பொறுக்கிச் சிறை வைக்கத் - தூண்டு படை
வெளி நாட்டுதவிகளை வேண்டி விருப்பம் போல்
பழிவாங்கும் மக்கள் படும்பாடோ - ஒழியாது 67

படையோ பெருகிவரும் பாதுகாப்பெனும் பேரில்
தடை போட்டே எங்கும்தடவி வரும் - இடையிடையே
காட்டிக் கொடுப்பதுவும், கழுத்து நோய்முகமூடி
ஆட்டிப்பிடித்தே அடைப்பதுவும் - போட்டங்கே 68

வதைகள் புரிந்து வருவதுமே அல்லாமல்
இதைவிட்டடிப்படைகள் என்னென்ன? - அதையன்றோ
ஆராய்ந்து நீக்கி அமைதிக்கு வழிகாண
நோராயிறங்கியோர் நிம்மதியைத் -தாராமல் 69

ஏதும் நலஞ்செய்ய எண்ணவிலை! உலகினது
காதும் செவிடாகிக் கண்குருடாய்த் - தீதுசெயப்
பார்த்துச் சிரிக்குமெனில் பரிதாபம், யார்வந்து
தீர்த்துத் தருவார் திறம்? 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. சேனைப் பந்து

ஊர்விட்டு யாம்போன தொருபோது மில்லை!
        உடல்விட்டு உயிர்போன போக்காகுமஃதே!
பேர்பெற்ற எமதீச் சந்தீவு வெண் தீவே!
        பிழையற்று வாழ்ந்தோரும் பேறுபெற்றோரே!
ஓர் ஆளும் இல்லாமல் ஓடியதனாலே
        ஊரோடு மொத்தோடு என்றமொழியாலே
நீர்வாருந்துணையோடும், இருமக்களோடும்
        நிலம்பார்த்த வண்ணமே நீள்பயணமானேன்! 71

பனையார்கள் வேலியில் பார்த்து நின்றார்கள்
        பார்த்து வருமே பூனை, பாய்ந்து வரும் நாய்தான்
மனையோடு முள்ள பொருள் மறதியானாலும்
        மறவாது நூலோடு கையேடுமன்றோ?
எனையான் இழந்ததேபோல் ஏகினேனே!
        என்றென்று மென் வாழ்வி லிதுகாணவில்லை!
முனைஊழென்றெண்ணவோ, முடிவென்று சொலவோ?
        மூண்டதே தீ நெஞ்சில் மூட்டியவர் யாரோ? 72

பலர் கொண்டு சென்றார்கள் பலபொருள் - வண்டி!
        பார்த்துநின்றோம் கையில் பளுவேதுமில்லை!
சிலவேனும் கைதூக்கிச் சென்றிருந்தாலும்
        சேர்ந்திருக்கும் நெஞ்சில் சிற்றமைதியேனும்?
நலமின்றி கைவீசி நான் நடந்தேனே!
        நல்லமிதிவண்டி வா னொலி கொணர்ந்தாரே!
கலகலப்போசை போம் கால் தூக்குமுன்பே!
        கைவெறுங்கையான காலமோர்காலம்! 73

கால் பயணமானாலும் கனி நெஞ்சம் இங்கே!
        கட்டையாறெமைக்காணும் காணாதவாறே!
வால்பிடித்தோடி வரும்வடிவான செந்நாய்!
        வளைந்தே தலைசாய்க்கும் வழியோரக்கண்ணா
மேல்துண்டு மட்டுமே, மீதி ஒரு சாரம்!
        மெதுவாக நடை போகும் மெத்தை மணலாலே!
பால்நிலம் மீது கால் பட்டும் படாமல்
        பயணமது செய்திடும், மனமிங்கிருக்கும்! 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை வில் தாண்டி, கண்டலடி ஊற்றின்
தரைதாண்டி, உப்பாற்றுத் துறையதும் தாண்டி,
ஆமதன்பின் காரை வெட்டுவான் தாண்டி,
அடைந்திட்டமேமயில் அப்பனின் சேனை!
தாமுணர்ந் தங்கு வாழ் இசுவாமியர்கள்
தம்வீடு தந்தார்கள் நம்மவர்கள் தங்க!
போமளவும் அச்சமுடன் அங்கிருந்தோமே,
பொழுதொன்றில் ஒருபானைக் கஞ்சி அடுப்பேற! 75

எமது மொழியாரில் ஒரு பகுதியினரான
இசுலாமியர்கள் தம் சேனைதனைவிட்டு
தமதினத்தார் வாழும் பூவரசந்தீவில்
தங்கவே சென்றார்கள் வள்ளங்களோடும்!
நமது நிலை கண்டே நடந்து கொண்டார்க்கு
நன்றி சொல் வோமென்றும் நமது நெஞ்சாலே!
அமருவோம், துயிலுவோம் ஆனாலும் நெஞ்சில்
அமைதி இல்லாமலும் அல்லலுற்றோமே! 76

ஊர்த்தீவு, பொன்னா வரங்குடா, மற்றும்
உயர்வான மணலாறு, வயிரா வெளியாம்
ஆர்த்தோடி எங்குமே அங்கிங் கெனாமல்
அகதிமயமே கண்டங் காட்டுவெளியெல்லாம்!
ஈர்த்தெடுத்திட்டதோ இவ்வூர் வனப்பு,
இல்லையோ வேறுவழி எம்மக்களுக்கே?
சேர்த்திழுத்திட்டதே சேராரை யெல்லாம்,
திறமான வாழ்க்கையோ தீராதநோயோ? 77

இளமட்டத்தாரிங் கிருக்க வொண்ணாமல்
ஏறுநடை போட்டார்கள் வடதிசையை நோக்கி!
அளவற்ற தொல்லையும், தூரமும்தாண்டி
அலுப்போடு சென்றார்கள், சிலர் மீண்டு வந்தார்!
வளமாக வாழ்கின்ற வயதுள்ளவர்க்கே
வந்ததேன் இந்த நிலை, வாழ்வென்னசாவோ?
களவு, பொய், ஏமாற்றுக் கனவினிலு முண்டோ?
கடவுளும் புவிதன்னைக் கடந்து சென்றாரோ? 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் வேளை ஒருவாறு திரிவார்கள், சேய்மைப்
பார்வையொடும், நெஞ்சப்பதட்டத்தினோடும்!
அகலுவார்மனை விட்டிரவாகி விட்டால்
ஆடவர்கள் கண்டல் கணன்புட்டி என்றே!
நகர்ந்தே குழைக்கின்ற நண்டார்கள் ஓர் பால்!
நல்லிசை பரப்பிடும் நுளம்பார்கள் ஓர்பால்!
தகவான மெத்தையாய்ச் சாக்கதை நினைத்தே
தலைகால் விளங்காமல் மூடிக்கிடப்பார்! 79

விடிந்தாலும் இருள் ஓடி விலகமாட்டாதே!
வேறுவழி ஏதும் விளக்க மாகாதே!
முடிந்துமே போவார்கள் வயது முதிர்வானோர்!
முடிவற்ற ஓசையிடும் சிறுபிள்ளை நோயால்!
வடிவற்ற சாப்பாட்டை வாய் சுவைக்காது!
வயிற்றுக்குள் இரையுமே வார்க்கின்ற கஞ்சி!
கடிதிலே ஓடாது காலம் சுணங்கும்!
காதிலே வீழ்ந்திடும் கண்ணிவெடியோசை! 80

## 9. கேணிப் பத்து

ஆலும் கேணியும் அன்றிருந்ததனால்
ஆலங்கேணியாய் அழகிய தமிழாய்
வெண்மணலூராய் விளங்கிய பதியின்
பிள்ளையார்பள்ளியைப் பெருமுகாமாக்கிய 81

அரசபடையினர் அழைப்பை விடுத்தார்!
'காட்டுப்புறங்கள் கப்பல் பறக்கும்!
வேட்டுக்கள் தீர்க்கும் விரைந்தேவருவீர்
வருவோர்இங்கே வதைபடமாட்டீர்! 82

நிவாரணம் உண்டு! நின்றால் வீணாய்
மடியவும் நேரும், மறந்திட வேண்டாம்!"
என்னும் சேதி இரு செவிக்கேற்ப
புறப்படலானார் பொதுவாய்ப்பலரும்! 83


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடையோடும், கடுஞ்சுமையோடும்,
குத்திப்பாஞ்சான், குள ஊர்த்தீவு,
வெல்லந்தாங்கி எல்லாந் தாண்டிக்
கொய்யாம்புளியாய்க் கூறுந்துறையை 84

வள்ளத்துணையால் வாழ்ந்திக்கடந்து
பொழுதும் போகப் பூவரசந்தீ
வதனிற் கிடந்து அடுத்த நாட்காலை
மீண்டும் முருங்கை வேதாளமாகி 85

ஆலங்கேணிப் பள்ளியடைந்தோம்!
படங்கின் கீழே படுத்தோம் மணலில்!
தாவாரத்திலும் தனித்துக்கிடந்தோம்!
பாயும், பானையும் பழசாய்த் தரினும் 86

நிவாரணமாய்க்கை நீட்டியே பெற்றோம்!
அன்பின் நண்பர் அருளுடன் கூடி
மக்கள் தொண்டே மகேசன் தொண்டாய்ச்
செய்வனசெய்தே சிந்தைமகிழ்ந்தோம்! 87

இரவில் வெரித்தாஸ், இலண்டன் வானொலி,
பகலில் கனவு, பழம் பெருமூச்சாய்க்
கழியும் பொழுது- கவலையோ கூடும்!
கண்ணின் முன்னால் களவுகள் நிகழும்! 88

அரைப்படை காட்டத் தரைப்படை கொண்ட
அத்தனைபேரும் செத்தேபோனார்!
இருபத்தைவரில் எவருமின்றில்லை!
இதயங்கொண்டோர் இதையா மறப்பார்? 89

முகாமிலுங்கூட முழுக்காப்பில்லை!
வீடுசென்றிடவும் விடுவதாயில்லை!
திரிசங்குவாக- தேய்கட்டெறும்பாய்
அஞ்சியே சாவை அணுகிநின்றோமே! 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. குடாப் பத்து

இரவிரவாக 'ட்ரக் ஏற்றியே நமைக்கொணர்ந்து
அரவமில்லாமல் விட்டார், அற்புதக் 'கிளப்பன்பேக்" கில்!
வரும்பொழுதெடுத்துக் கொண்டே வந்தஈர் அட்டை, காசு
அருமகன்காட்டப்பட்டே அத்துறையடியில்போச்சு! 91

எவரெவர்சாமான்சட்டோ இறக்கினார் வாயிலோரம்!
அவரவர் பொருளுக்கான ஆட்களங்கில்லை யாலே!
இவர்களின் பொருளைத்தூக்க எம்மையேபடையார்கொண்டார்!
சவமெனக் காவினோம் நாம், தலைவிதி இதுதானாமோ! 92

வெள்ளையர் காலப்போர்க்கு வேண்டியபொருள் பண்டங்கள்
அள்ளிவந்தடுக்கிவைத்த அறைபதினொன்றைப் பற்றி
உள்ளெலாம் வெளியேபோக்கி ஒரு சிறுதுண்டுள் எம்மைத்
தள்ளியே கிடந்தோம் எல்லாம் தாங்கியே கிடந்தோமம்மா! 93

இருபுறமலையுங்காடு ! எங்குமேவடிநீர்க் கான்கள்!
ஒரு பெருங்கல்லின் கூவம்! உயர்புயல் அழிக்கா இல்லம்!
சரித்திடாக்கம்பில் சீலை தன்னையே சுவராய் வைத்துச்
சரிந்துமேகிடப்பார், வீரச் சண்டைவாய் வீச்சுந்தானே! 94

தூங்குவார் சிலபேர், பிள்ளை தூக்குவார்சிலபேர், நோய்கள்
தாங்குவார்கள் சிலபேர், போக்கில் தடக்ககுவார் சிலபேர், யோசித்
தேங்குவார் சிலபேர், ஏழ்மைக் கிரங்குவார் சில பேர், விட்டே
நீங்குவார் வெளியே சில்லோர், நீடிக்கும் தொண்ணூறாங்கே! 95

பலநோக்கு வண்டிவந்தால் பறிபடும் நிவாரணங்கள்!
நலமுளார் கடுப்பில்லாமல் நாள் அரை வாயில் நின்று
சிலபொருள் கொணர்வார், தின்று சீவிப்பார் இருவாரங்கள்!
குலம் ஒன்றாய்த் தேவன் ஒன்றாய்குடும்பம் வாழ்கிளப்பன்பேக்கே! 96

பிள்ளைகள் கல்விச்செல்வம் பெறாமையைச்சிலபேர் கண்டார்!
பள்ளியொன்றமைத்தார் ஆங்கோர் மண்டபம் பார்த்தெடுத்தே!
அள்ளியே விழுங்கினார்கள், அருந்தமிழ் அமுதை நன்றாய்!
தெள்ளியர் ஆதல்வேறு! திருவினர் ஆதல் வேறாம்! 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கவோர் கடவுள் இல்லை! கடமைச்செங்கோலர் இல்லை!
தாக்கவோ பல பேர் உண்டு! தமிழுரை- மொழியை- நாட்டைக்
காக்குமெம் படையார்க்காளைக் காட்டுவோர் இருப்பதாலே
பேக்கிலும் பிடிபட்டார்கள், பெருஞ்சிறைக் கொழும்பானாரே! 98

காட்டிலே விடுபட்டோரைக் கடிதங்களோடுசென்றே
கூட்டி வந்தார்கள் பெற்றோர், கூடியார் அவரும் ' பேக்" கில்!
மாட்டினார் அவருமிங்கே, மனம் போன்று திரியொணாதே!
போட்டிழுத்தார்கள் காலம் போனதோ, நின்றதாமோ! 99

பொழுது போக்கதிகமில்லை! போகலாம் மலையின் பக்கம்!
அழுதாலும் வெறித்தாஸ்- லண்டன் அவைகேட்க மறப்பதில்லை!
பழுதுதான் பலர்க்கு மூளை! பார்க்க நூல் இருந்துமென்ன?
எழுதியேவந்து மென்ன? இதயத்திற்குரிமை வேண்டும்! 100

## 11. மலைப் பத்து

மீனுக்கு வால்காட்டி மேலாக வாழ்ந்தோர்
மெதுவாகப் பாம்புக்குத் தலைகாட்டினார்கள்!
தீனுக்கு வால்பற்றிக் கால் பற்றி நின்று
சேர்ந்தேநிவாரணக் கொள்ளையிட்டார்கள்!
ஊனுக்கு வலுவூட்ட உணவில்லையென்றால்
உத்தியோகத்தர்கள் ஏதிலிகள் ஆகார்!
ஏணிக்குறைபாட்டை இங்கெடுத்தாரோ?
எவருமே நிபுணர்கள் - எல்லாமே சட்டம்! 101

கிளம்பினார் பலபேர் கிளப்பினார்'பேக்" கை
கிடைத்திடப் பெற்றார்கள் மலைவீட்டுவாழ்க்கை!
வளமுள்ளபேர்களும், வாய்ப்புள்ளபேரும்
வந்தே நிலம் வாங்கி வீடமைத்தார்கள்!
தளம்பினார் பலபேர்கள் தாம்போகொணாமல்
சாவுலகுதன்னையே சார்ந்தோருமுண்டு!
உளநோயினால் உடல் நொய்த்தோருமுண்டு!
உயிர்வாழுகின்றமோ, உலவுகின்றோமோ? 102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வந்து அகதிகளும் வந்து அதனாலே
பொருள் வந்து சேர்ந்ததே நகரார் சிலர்க்கே
தீர்வொன்றுமில்லா திருத்து வந்தாலும்
சிலபேர்க்குநயமுண்டு சிறப்பான தீவில்!
ஆர்இந்தப்போரை விடாமலுள்ளாரோ
அவர்களையுமுள்ளத்தில் வாழ்த்துவாருண்டு!
பேர்பெற்றபலர்செத்த பேரிழப் பெனினும்
பிழைப்புக்கும் வழிகாட்டும் போராகுமன்றோ? 103

வீடென்று சொன்னால் முதற்பணம் கேட்பார்!
விடுமட்டும் மாதாந்த வாடகைகேட்பார்!
ஆடென்று சொன்னதற் காடவும் வேண்டும்!
ஆளதிகம் இல்லாதிருக்கவும் வேண்டும்!
ஓடென்று சொன்னால் உசாராக வேண்டும்!
ஒருசிலருமுள்ளார்கள் விதிவிலக்கானோர்!
நாடெங்கும் சத்திரம் கட்டி உணவீய்ந்த
நல்லநாள் மலையேறி நகர்புதியதாச்சே! 104

நாமுமிங்கே மலை நகர்வந்து சேர்ந்தோம்!
நல்லபணமின்மையால் நலிவானவீடே!
ஆமிந்தவாறு ஓர் ஐயாண்டு காலம்
ஐவீடுமாறினோம் அவர்கட்கு நன்றி!
தீமையோ நன்மையோ செய்தவர்கள் யாரோ?
சிறியோர் பிழைகள் யாம் பெரிதாய்ப் பொறுத்தோம்!
ஊமையாய் வாழுவதும் உதவாது வாழ்வில்!
உளறுவாய்ஆவதுவும் உதவாது கண்டீர்! 105

ஓய்வூதியம்போதும் என்றுயார் சொல்வார்?
உழைப்பதற்கெல்லோர்க்கும் உடலாற்றலுண்டோ?
காய்க்குமோ எங்கேனும் காசு மரம் மீதில்?
கடமையின் போதிலே கைசேர்த்ததுண்டோ?
வாய்ப்பொன்றுமில்லையேல் வாங்கவும் நேரும்!
வந்தவுடன் மீண்டும் கொடுக்கவும் நேரும்!
காய்ச்சலே எப்போதும் கனம் வந்ததில்லை!
கவிதையின் கருவுக்கும் குறைவந்ததில்லை! 106


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லசில வாய்ப்புக்கள் நமக்கிருந்தாலும்
நகர்வாழ்வு சிற்றூரின் நலவாழ்வுதானோ?
அல்லல் சுமந் திங்குநாம் அவதியுற்றாலும்
அறிவுள்ள பலபேரின் அறிமுகம் பெற்றோம்!
இல்லாத நிலையிலும் ஏடு வெளியிட்டோர்
என்றுமெம் நன்றிக்குரியர் ஆவாரே!
சொல்லோடு நிற்பார் உளர் என்ற போதும்
சொல்போன்று செய்கின்ற தூயோரு முண்டாம்! 107

அங்கோர் மகன் குடும்பம் வாழ்ந்ததாலே
அன்பான துணைவி -மகள் அருமையாழ் சென்றார்!
இங்கோர் மகன்குடும் பம்மட்டு மண்ணில்!
இளையமகன் ஊரில் இருந்து சிறைபட்டான்!
எங்குயான் போவேனோ இயலாத நோயேன்?
என் நிலைமை கண்டோர் இரங்கவே செய்வார்!
தங்குபவள் நெஞ்சில் தமிழன்னை தானே!
தாய் என்பதால் எந்தன் தலைதாழ்த்துவேனே! 108

தனிவாழ்வு இனிதென்று தமிழாச்சி சொன்னாள்!
தனித்தே, பசித்து, விழி எனவள்ளல் சொன்னார்!
இனிதல்ல தனிமைக்குத் துணைஇல்லை யாயின்!
இல்லறம் இல்லையெனில் நல்லறமும் இல்லை!
புனித வாழ்வெனில் நபிநாயகம் ஆவாய்!
பொதுத்தொண்டெனில் தனிநாயகம் ஆவாய்!
எனவே குறட்போட்டி நடுவர் பணிசெய்தோம்,
இதற்கீடுவேறொன்றும் இலையென்பதாலே! 109

கலைதனில் சமையலைப்போல் ஏதும் இல்லை!
கட்டாயம் எல்லோரும் கற்பதுவும் நன்றே!
தலையல்ல முக்கியம் சாண்வயிறு தானே!
சாண் நிரம்பாவிடில் தலைவேலை செய்யா!
மலைவாழ்வில் சமையல் மதிப்பிழந்தாலும்,
மறவாது நெஞ்சம் அடுப்பூது நாளை!
இலை மரக்கறியோ டெடுக்கும் பொதிக்கே
என்றும் சிறப்பூட்டுமே 'ரசம்" தானே! 110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. அடை பத்து

போன பழவாழ்வு புதிதென்று வந்ததினால்
ஊனதுபோய்த்தேடி உயிரடைதல் - ஆனதுவே!
அடக்கியே வைத்திருந்த ஆசையும் ஆவல்களும்
கிடக்குமா இன்னும் கிடை? 111

மீண்டும் பழமூர்க்கு மீள்வருகை ஆதலினால்
தாண்டவே வேண்டும் தடையாவும்! - பூண்டோடு
கரந்துபொருள் கொண்டோர் களிக்க, தறியாத
மரமெல்லாம் வேதாள மா? 112

அறமில்லா நாடிதிலே அருளேது? பொருளேது?
விறலின்பம் தானேது? வீடேது? - உறவேது?
காடும் செடிகொடியும், கனசருகு புல்லோடு
மூடும் தான் இப்போ பொருள்! 113

எல்லை இதுதானா? எம்வீடிது வாமா?
கொல்லை -உயர் கோழிக் கூடெங்கே? - கல்லெங்கே?
என்றெல்லாம் தேடி இளைத்தார், துயரத்தே
நின்றார் பழந்தாய் நிலம்! 114

நிறுவனத்தாரீய்ந்த நெடுங்கத்தி, அலவாங்கு,
மறுகுப்பைவாரியொடு, மண்வெட்டி - பெறுவாரே
பெற்றார் பெரும் பேறு! பிறகோகடனாற்றக்
கற்றார் வளவே கதி! 115

திண்ணைக் கிடவென்றே சில ' தகரம்" தந்தார்கள்!
மண்ணேற்றிப் போயிருந்தால் மாகடலே! -புண்ணாய
நெஞ்சோடும் வெள்ளை நிலத்திற் கிடந்தோமேல்
பஞ்சாய்ப் பறக்கும் பசி! 116

பலருக்கு உண்டெனினும் பாழாம் உலர் உணவு
சிலருக்குமே வந்து சேராதே! - சலமில்லா
நலமாகச் சென்றாரே நம்மவரும் தீவுக்கு!
விலகிடினும் துயரோ விடா! 117



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுந்துயர்க்காதை இருக்கத்தான் செய்கிறது!
ஒன்றுங்கிடையாதுயர் தீர்வு! - வென்றாரார்?
சொல்ல முடியாதே, தொடரட்டும் ஓர் முடிவு
நல்லாய் வரட்டுமோர் நாள்! 118

காட்டிக்கொடுப்போரும், கால்கை பிடித்து வெளி
நாட்டிற்கிடப்போரும், நல் வீடு - போட்டிங்கு
வாழமுயல்வோரும், வன்போருமாய்த் தமிழ்
ஈழத்திலெங்கெங் குமே! 119

'பூசா" ச்சிறையென்று போனோரும், வந்தோரும்,
காசால் சில செய்து காட்டியே -பேசாமல்
வீட்டோடிருப்போரும், வெடிபட்டிறந்தோரும்
நாட்டிலோ தீதில் நலம்! 120

## 13. நகர்ப் பத்து

என்ன பொருட்கள் இழந்தோமோ அதற்
கில்லை இழப்பீடிது வரையில்?
இன்னுமோர் வாழ்வை எவர் வாழ்வார், தமிழ்
ஈழவிடுதலை இல்லையெனில்? 121

வீடுபொருள் நிலம் வீதி வண்டியிலும்
வேண்டியதெல்லாம் விடுதலையே!
நாடுசிறப்பது நல்லமைதி தனில்
நல்லுளம் கேட்பது நிம்மதியே! 122

எங்கள் இதயம் திருமலையே, அதை
இருள் வளைத்து வருகிறதே?
எங்கும் சுரண்டல் இருக்கிறதே, அது
எண்ணத்தில் ஓடிக் கலக்கிறதே? 123

இலிங்க மண்ணினைக் காத்திடவே சிலர்
எழுந்து வந்து குடியிருந்தோம்!
நலம் குறையாமல் நம் அயலில் அருள்
நன்றிருந்தார், துயர் வென்றிருந்தார்! 124



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காப்புப்படையினர் கண்டுவிட்டார் பயிர்,*
*கட்டிடங்கள் வந்த பிற்பாடே!*
*கூப்பிட்டெழும்பிடக் கூறிவிட்டார், சிலர்*
*குடியெழும்பிட வேலியிட்டார்.* 125

*மன்றில் வழக்குமே போட்டுவிட்டார் நில*
*மாசபை யாள்பவர் மக்களுக்கே!*
*இன்றுவரையும் தவணைகளே, இது*
*என்றுமுடியுமோ, எப்படியோ?* 126

*கொஞ்சும் இயற்கை அழகுகளே, இதில்*
*குடிசை இட்டோர் கொடுத்து வைத்தோர்!*
*தஞ்சம் குழாயினில் தண்ணீர் வராவிடில்*
*தந்தனத்தான தனதானம்!* 127

*பல்லூர் அகதியும் பரந்து வாழ்கிறார்,*
*பஞ்சத்திலே அடிபட்டுமுள்ளார்!*
*நல்லூரராயாக்கிட நடந்து வந்திதை*
*நாடினரே வேறு நாதியின்றி!* 128

*யாதுமே ஊரென யாவருங்கேளிராய்*
*யாங்கணுமே பழங்காடழித்து*
*தீதுமோ நன்றுமோ செய்யார் பிறர் எனச்*
*சேர்ந்துமே இந்நகர் வாழ்ந்திடுவார்!* 129

*இவ்விடம் எங்களுக் குறுதியாயிடின்*
*இந்நிலம் காத்த புகழ்க்குரியோம்!*
*அவ்விதம் இல்லையேல் வாரிச் சுருட்டியே*
*அகதிக்கொட்டில் அடைந்திடுவோம்* 130

*அலை அடித்திடும் கடலில் என்றுமே*
*அமைதி வந்திடப் போவதில்லை*
*தொலைவில் உள்ள சுதந்திரம் வந்ததுமே*
*தூயவராகவும் போவதில்லை!* 131



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாடிச் சிலர் தர நாங்கள் பெறுவது*
*நாட்டுச் சுதந்திரம் ஆகாதே!*
*ஆடிப்பெறுவதே அவ்வுரிமை, ஆனால்*
*அழிவும் நிச்சயம் நிச்சயமே!* 132

*உள்ள வழிஇன்று ஒற்றுமையே, வேறு*
*ஒருவழியுங் கிடையாதே!*
*உள்ளத்தில் கொண்டே இயங்கிடுவோம், இன்றேல்*
*ஒதுங்கிக்கொள்வதும் நன்மையதே!* 133

1. கூழுங்குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு.(554)
2. ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம் ஒருவந்தம் கைத்துடையார். (593)
3. அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும். (611)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

### I. ஊர்மணம்

## 01. ஈச்சந்தீவு

*(1967)*

*முற்புறமும் சிற்றாறு! முடியாநெடுங்கரைச்சை!*
*உப்பாற்றுப் பல் ஓடை! உயர்விழுதுக் கண்ணாக்கள்!*
*வெள்ளைக் கணன்திட்டி! வெண்கால் குழைநண்டு!*
*வெள்ளை முளைக்கண்ணா! விரிமட்டைச் சிற்றீச்சை!*
*ஏறிஇறங்கும் நீர்! இசைக்கின்ற சில் வண்டு!*
*மாறும்பெருமந்தி! மறையும் சிறுவக்கா!*
*பாலூரி - பூச்சூரி பாய்குதிரைப் பாஞ்சான்கள்!*
*ஆலா - மழைக்கண்ணி! அருங்கலவாய் - மீன்கொத்தி!*
*நீந்தும் கருங்காக்கை! நிற்கின்ற வெண்கொக்கு!*
*நீந்தும் கவறைக்கொய்! நெடுவிழுதுக் கண்ணாக்காய்!*
*நண்டுப் பெரும்பாழி! நல்ல கருவண்டன்!*
*மண்டும் செவிடாக்கும் ஆட்காட்டி - நரிப்பாட்டு!*
*குடாக்கள்- களப்புக்கள்! கொள்ளி - பெரும்பாளை*
*விடாச்சூள் எரிப்புக்கள்! விரைந்தோடும் சிறுகுல்லா!*
*மணலை - பெரியமுரல்! மண்திருக்கை -கல்வெட்டி!*
*குணமான வெண்திரளி! கொடுங்கெழுத்தி - செங்கிழக்கன்!*
*எல்லாமே வீடுவரும்! ஏதும்புயல் மழையேல்*
*இல்லாமலும் வரலாம்! இடைவிட்டிதுதொடரும்!*
*தரையெல்லாம் வெள்ளைமணல்! தமிழரொடு முஸ்லீம்கள்!*
*கரையெல்லாம் தென்னைமரம், கனவாழை - மாக்கள் - பலா!*
*நல்லபுளி - பெருவேம்பு! நாவல் - பனை - விண்ணாங்கு!*
*புல்லெல்லாம் -பெருமூலி! புகழ்நொச்சி - ஆமணக்கு!*
*முல்லை - அவல்முருங்கை! முசுட்டையொடு கானாந்தி!*
*வல்லாரை- முட்காரை, வளர்தும்பை - கொடிப்பாலை,*
*அல்லை - கவலையொடு அத்தனையும் சாப்பாடே!*
*பொல்லாத கோடையெனில் போவார்கள் மாவலிக்கே!*
*பள்ளியுண்டு - கோயிலுண்டு! படிக்கும் அகம் உண்டு!*
*வெள்ளி நிலவினிலும் வியைாடும் இடமுண்டு!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையுண்டு - நோயென்றால் கையில் மருந்துண்டு!
தடையில்லைப் போவார்க்கே தக்க சுடுகாடுண்டு!
வேலியெல்லாம் பூஞ்சோலை! வீடெல்லாம் கல் - ஓலை!
பாலென்னும் நீர்க்கிணறு பணிக்கும் துலாவுண்டு!
என்னதான் இங்கில்லை? இவ்வீச் சந்தீவினிலே
என்னதான் இன்றுண்டு? ஈரிரண்டும் ஓரறிவும்
உள்ள விலங்குகளால் ஊரழிந்து போச்சுதடா!
கள்ளப்பொய்க்காலிகளே, காலந்தான் உங்களுக்கே!

## 02. தாமரைவில் *(1967)*

செந்தாமரைவில்லாம்! சிறந்த தமிழூராம்!
வந்தாரை வரவேற்கும் வளமார்ந்த சிற்றூராம்!
கிழக்கில் குடாக்கடலாம் கிளம்பிவிழும் பேரலையாம்!
உழக்கும் புதைமணலாம்! உயர்மீசை பூவடம்பாம்!
கண்டலடி - உப்பாறாய்க் கடல் நீண்டு போயிடுமாம்!
வண்டலொடு கொள்ளியெலாம் வாடை குவித்திடுமாம்!
எங்கும் வலை இழுப்பாம், ஏராளம் மீன்பிடிப்பாம்!
கங்குல் படகுகளால் கடலெங்கும் மின்மினியாம்!
ஓடும் சிறுநண்டும், உயர்வானச் செம்பருத்தும்,
பாடும் பறவைகளும், பலதூரக் கப்பல்களும்,
காலை எழுங்கதிரும், காணும் புறாமலையும்,
மாலைக் குளிர்காற்றும் மனமகிழும் காட்சிகளாம்!
நீளக்கிடக்கின்ற நெய்தல் நிலத்தருகே
வாழும் பெருங்காடாம், வரண்ட கொதி முல்லை நிலம்!
காலை குளிர்நீராய்க் கடிய பகல் செந்தழலாய்-
மாலையிலே வெந்நீராய் - மணலாய்க் கிடந்திடுமாம்!
நெத்து விராலிகளும், நீண்ட காய்வாகைகளும்,
கொத்துப் பூக்காயானும், கொடியாம் தவிட்டைகளும்,
பாலை - சொரி நாவல் - பழவீரை - சிநுதுவரை -
ஆலையொடு விண்ணாங்கும் - அரும்புன்னை புங்கைகளும்
மண்டிக்கிடந்திடுமாம்! மணலோடு வண்டிகளாம்!
உண்டாம் நரி, பூனை, ஓடும் முயல் பலவும்!
தங்கும் பறவைகளோ தாங்காமரமெல்லாம்!
எங்குந்திரிந்திடுமாம் இரவெல்லாம் வவ்வால்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியனார்வெம்; பென்னும் வடிவான முல்லையதன்
பின்னால் மருதநிலம் பேரழகைத் தந்திடுமாம்!
வில்லாய் வளைந்தகுளம்! விளங்குநீர் உள்ள குளம்!
பாசிபடர்ந்த குளம்! பன்புல் அடர்ந்த குளம்!
வீசிப்பனையானும் விராலும் பிடித்த குளம்!
வம்மிமரம் பூத்தே வாசனைகள் வீசுகுளம்!
சும்மா வரும் மீன்கள் தூண்டிலினைக் கண்டகுளம்!
செந்தாமரைபூத்தே சிறப்பை அளித்த குளம்!
வந்தார் திரும்பவுமே வந்துவந்து பார்த்தகுளம்!
வாணை இறால்கூட்டில் வாரி எடுத்தகுளம்!
காணாதகொட்டுள் மீன் கண்டெடுக்கச் செய்த குளம்!
வயலிலே நெற்பயிர்கள் வளர உதவுகுளம்!
அயலிலே தென்னைகளில் அருங்காய் அளித்தகுளம்!
ஆடிவிழும் மட்டைகளை அரியகிடுகாக்கு குளம்!
கோடைதிராய்க்கீரை குப்பைபாய்க் காட்டுகுளம்!
இத்தகைய நற்குளமும் எழிற்தென்னந்தோப்புகளும்
சொத்தாம் பனைமரமும் தூங்குகின்ற முந்திரியும்
நாவலும் வேம்புகளும் நல்ல பலா, மாவும்
ஆவல் இலந்தைகளும், அரியபனிச்சை புளி
எல்லாமே இன்றெங்கே? இரண்டாம் உலகப்போர்
இல்லாமல் ஆக்கியதே! இன்றுள்ளூர்ப்போராலே
ஈச்சையம்பதி கூட இல்லாம லாகியதே!
போச்செல்லாம், போகட்டும் பொய்க்கள்ளர் வாழட்டும்

## 03. கட்டையாறு *(1965)*

01. காலெலாம் இடறும் கட்டை! கரையெலாம் தென்னம்மட்டை!
மேலெலாம் முளைக் கண்ணாக்கள்! விழுதிடும்கண்டற் கண்ணா!
பாலெனும் தெளிந்த தண்ணீர்! பள்ளங்கள் கணனாம்திட்டி!
கோலங்கள் காட்டும் யப்பான் குறளியின் கட்டையாறு!

02. மாரியில் வெள்ளம் முட்டும்! மணற்கிடங்கெல்லாம் மூடும்!
ஊரிகள் கோலம் போடும்! ஓடிடும் நண்டுக் குஞ்சு!
பேரிறால் துள்ளிப்பாயும் பெருமுரல் மூக்கை நீட்டும்!
வாரிடத்தந்து நிற்கும் வளமுடைக்கட்டையாறு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மரமெலாம் மந்திக்கூட்டம்! வழியெலாம் வெள்ளைக் கொக்கு!
அரவத்திற்கொழிவே இல்லை ஆற்றுநீர் பெருகும் வற்றும்!
பரவிடும் குதிரைப் பாஞ்சான்! பருந்தெலாம் வட்டம் போடும்!
இரவெலாம் நரிப்பாட்டுளை இசைத்திடும் கட்டையாறு!

04. மட்டைகள் இழுப்போர் ஓசை! மாடுகள் கலைப்போர் ஓசை!
கட்டு இறால் பிடிப்போர் ஓசை! கண்வலை எறிவொர் ஓசை!
வெட்டிநார் உரிப்போர் ஓசை! வெளிவண்டில் விடுவார் ஓசை!
விட்டிடா ஒசை காதில் விளைத்திடும் கட்டையாறு!

05. இரவினில் சூளைக்கொண்டு இறாலொடும் மீனும் நண்டும்
பரவலாய்க் கொண்டு வந்து பார்த்தறிந்தலசி நெய்யில்
பொரியலாய் மாற்றிச் சோற்றைப் புசித்துமே படுத்துறங்கிப்
பெருவெள்ளிக்கெழவே செய்யும் பெருமைகொள் கட்டையாறு!

06. பையொடு கம்பிகொண்டு பாழியில் உள்ள நண்டைக்
கையொடு கம்பிவிட்டே கடித்திழுத்தெடுத்துக்கட்டிப்
பையினில் கொண்டுவந்து பதமுடன் குழம்பு வைத்துக்
கைதரும் சதைக்கால் சின்னி கடித்துண்ணும் கட்டையாறு!

07. ஒருபுறம் வெண்பாற்கொக்கு, ஒருபுறம் நீந்தும் காக்கை
பெருவிருந்துண்டு நீந்திப்பேசிடா தமைதிகாத்து
அருகெதும் ஓசைகேட்டு அவையெலாம் பறந்தே விண்ணில்
இருநிறக்காட்சி காட்டும் எமதருங் கட்டையாறு!

08. வில் கிழக்கெல்லை மேற்கின் வேலிநம் தீவாய்க் கொண்ட
நல்ல நம் கட்டையாறு நமது நாடதனில் இன்றி
வெல்லுமேல் நாட்டிலாயின் வெற்றிபெற்றிருக்கும், அவ்வா
றில்லையே..... அகதி போன்றே இருந்திடும் கட்டையாறே!

## 04. கண்டற்காடு *(1965)*

01. உப்புநீர் ஓடை, அந்த ஓடையின் இருமருங்கில்
எப்புறம் திரும்பினாலும் எழிற்கண்டற் கண்ணாச்சோலை!
அப்புறம் போகப்போக ஆறுகள் - களப்புத்தீவு
தப்பாத வயல்கள் சூழ்ந்த தனிஇடம் கண்டற்காடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. ஈச்சந்தீவார்கள் காலை ஏறினால் குல்லாக் கட்டில்
பாச்சலில் சவள்களாலே வலித்துமே பறந்தால் கொப்பாய்க்
காச்சநற் கண்ணாவின்கீழ் களப்பினில் நண்டும் பார்த்தால்
மேச்சலில் மாட்டைக் காணும் மேன்மைகொள் கண்டற்காடு!

03. இப்பக்கம் கழிவீழ்ஓடை! இடையினில் சிறயால் ஓடை!
அப்பக்கம் கிழவி ஓடை! அதற்கப்பால் சாவாற்றோடை!
எப்பக்கம் எவர்போனாலும் எங்கும் நீர் ஓடும் ஓடை!
தப்பாமல் தனதாய்க்கொண்ட தனிப்பெருங்கண்டற்காடு!

04. புளிக்கொய்யா வெல்லந்தாக்கி, பொன்குடா, பதினாலேக்கர்,
வழிச்சோலை வெட்டுவான், நீர் வளைகுத்திப்பாய் கிடங்கு
வெளிவண்ணான், ஊர்க்குளம், நல் வெளிஆலை, கோணல் பொட்டல்
அழியாத வயல்கள் கொண்ட அரும்பெருங் கண்டற்காடு!

05. வழியெலாம் சுடுவான் கட்டை! வரம்பெலாம் அறுகம்புல்லு!
குழியெலாம் பனையான் மீன்கள்! கொடியெலாம் தும்பங்காய்கள்!
புளியெலாம் சுரைக்காய் மேளம்! புதரெலாம் முயலின் குட்டி!
விழியெலாம் இரவில் விண்மீன்! வேடிக்கைக் கண்டற்காடு!

06. மாடுகள் கலைக்கும் ஓசை! மடைப்புனல் பாயும் ஓசை!
சூடுகள் அடிக்கும் ஓசை! சுளைப்புளி உலுப்பும் ஓசை!
கூடுவாழ் குருவி ஓசை! கொள்ளுவோர் கொடுப்போர் ஓசை!
நாடுமிவ்வோசை நாளும் நன்குடை கண்டற்காடு!

07. வாடையும் வயலும் நீரும், வரம்பொடு பயிரும் காயும்
கோடையும் ஆற்றுநீரைக் கொண்டு செய்பயிரும் பஞ்சப்
பீடையைப்போக்கி வாழ்வில் பெருஞ்செல்வமெல்லாம் சேர
ஓடையிற் குல்லா நாளும் ஓட்டிடும் கண்டற்காடு!

08. கிண்டிடும் கிழங்கும், ஆயக் கிடைத்திடும் பயறுழுந்தும்,
மண்டிடும் கச்சான், சோளன், மாவட்டப் பூசனிக்குள்
கண்டிடும் வெண்டி, பாகல், கத்தரி, கொச்சி எல்லாப்
பண்டமும் காணச் செய்யும் பண்டையக் கண்டற்காடே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. இயற்கை

*(1991)*

*01.* காடோ நிறைந்திருக்கம், கனசருகோ வீழ்ந்திருக்கும்!
மாடோ படுத்திருக்கும், மந்திகளோ பாய்ந்துவரும் தோழி - அது
மனதை விட்டே நீங்கிடுமோபோடி!

*02.* கூவுங் குயிலிருக்கும், குருவிகளும் சேர்ந்திருக்கும்,
காவுங் கலகலக்கும், காலிசை கேட்டிருக்கும் தோழி - அதை
கண்டிடவே போய் வருமோமாடி!

*03.* ஓசை சலசலக்கும், ஓடிவரும் மீனினங்கள்!
வாடை குளிர்ந்தடிக்கும் வாடிநிற்கும் கொக்குகளும் தோழி - அந்த
வடிவழகைப் பார்த்திடுவோம்வாடி!

*04.* தென்னை பனையிருக்கும் ,தேமாவும் சேர்ந்திருக்கும்
புன்னை பலாவிருக்கும், பூமரமும் பூத்திருக்கும் தோழி - அந்தப்
பூப்பறிக்கப் போய் வருவோமாடி!

*05.* வெள்ளை மணலிருக்கும், விளையாடும் நிழலிருக்கும்!
பள்ளம் திடல் இருக்கும், பல கூச்சல் கேட்டிருக்கும் தோழி - அதைப்
பார்ப்பதுவும் ஓர் அழகு தான்'டி

*06.* எங்கும் வயல் இருக்கும், இடையிடையே குடில் இருக்கும்
தங்கும் உழவர்களின் சரிசாமரக்குரலிருக்கம் தோழி- அது
தந்திடுமோர் தனியழகு தான்'டி!

*07.* ஆறும் நிறைந்திருக்கும், அருகினிலே கடல் இருக்கும்!
ஏறிவரும் தோணிகளும் இறங்கும் களப்பிருக்கும் தோழி - அதை
என்னவென்றே கூறிடலாம் தோழி!

*08.* அல்லையிலே தும்பையடி, அதன் மேலே கார்த்திகைப்பூ!
எல்லாமே சொல்லிவர எவராலே ஆகுமடி தோழி - இந்த
இயற்கை தரும் ஊரழகோகோடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. ஆட்டப்பா

*(1968)*

*01.* மோதகப்பெட்டியை மூத்தவன் கண்டதும்
மூலைக்குச் சென்றானாம்
பாதகம் செய்வதைப் பார்த்த கிழவியோ
பாய்ந்து விழுந்தாளாம்

*02.* தாமரை வில்லிலே தட்டுப்படுவது
தங்கப் பனம்பழமாம்
நாமது கண்டிடப் போவதெனில் பகல்
நள்ளிரவாகணுமாம்

*03.* நண்டு பிடித்திடும் கண்டலடிக்கடல்
நல்லகுருமணலாம்
வண்டலும் கொள்ளியும் வாடை அலைகளில்
வந்து பறிபடுமாம்

*04.* மூக்கைத் துளைத்திடும் முந்திரியம்பழம்
முட்டிவிழுந்திடுமாம்
சாக்கு கணக்கினில் தங்க நிறத்தொடு
தந்திடும் உப்பாறாம்

*05.* வம்மிமரத்திலே சின்னக்குரங்குகள்
வந்து நிறைந்தனவாம்
கும்மியடித்திடப் பாம்பினைக் கண்டதும்
கூட்டம் கலைந்ததுவாம்

*06.* ஈச்சைமரமொன்று பட்டப் பகலிலும்
இருட்டைக் காட்டியதாம்
காச்சுக் குலுங்கியே கண்களிற் பட்டவை
கன்னங்கரும்பழமாம்

*07.* சந்திர மண்டலம் கண்டிடச் சென்றவன்
சாத்திரம் பார்த்தானாம்
வந்த விழுந்ததும் நிம்மதி தேடியே
வானத்தைப் பார்த்தானாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. கன்னங்கருப்பனும் செக்கச் சிவப்பியும்
காட்டினில் நின்றாராம்
கன்னங்கருப்பனைச் செக்கச்சிவந்தவள்
காணக் கறுத்தாளாம்

09. சிங்கிலிக் கொப்பினில் தூக்கணங்கூடுகள்
சீருடன் தொங்கிடுமாம்
எங்குமே தும்பைகள் ஏறிப் படர்ந்திடும்
எங்களின் ஊர்க்குளமாம்

10. பொட்டக் குளத்திற்கு நெல்லு விதைத்திடப்
போனவன் வந்தானாம்
பட்டப்பகலிலே நெட்டை மரத்தினில்
பஞ்சமி ஆடியதாம்

11. சீனக்குடாவுக்கு வேலைக்குப்போனவன்
வீடு திருப்பலையாம்
ஆனைக்குழுவினைக் கண்டதினாலவன்
அஞ்சி மறைத்தானாம்

12. நம்பி நடப்பவர் நம்ப நடப்பதை
நாடவே மாட்டாராம்
தம்பலகாமத் திருவிழா என்றதும்
சாமி இழுப்பாராம்

13. வேலைக்குப் போனவர் வெய்யில் சுடச்சுட
வீதியில் வந்தாராம்
ஆலமரத்தடிக் கேணிக் கரையினில்
ஆறுதல் பெற்றாராம்?

14. நல்ல களப்பினில் நண்டு பிடித்திட
நாலு பேர் போனாராம்?
வெல்லையின் சூழினை விட்டதினாலவர்
வீட்டுக்கு வந்தாராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பள்ளிக்குப் போனவன் வெள்ளித் திரைப்படப்
பாட்டைப் படித்தானாம்?
புள்ளியைக் கண்டதும் பள்ளித்தெருவினில்
போவதை விட்டானாம்

16. பாசம் மிகுந்தவன் போல நடித்தவன்
பாடல் இசைத்தானாம்?
ஓசைப் படாமலே காசைப் பறித்ததும்
ஓடி மறைத்தானாம்?

## 07. மழையகம் *(1971)*

01. மலையகம் மழையகந்தான்! மழையினால் விளைந்த நற்றே
யிலையகம்! பலரும் நாளும் எதிர்பார்த்துக் காத்திருக்கும்
விலையகம்! வந்தீழத்தில் வெளிநாட்டார் காணத்தக்க
தலையகம்! உள்ளதெலாம் தன்னகத்துடையதாமே!

02. மண்ணல்ல, தங்கப்பாளம்! மரமல்ல, வானத்தூண்கள்!
விண்ணல்ல, வெண்பஞ்சாட்டம்! விளைவல்ல, கொடையின் சான்று!
பெண்ணல்ல, பேசும் சிற்பம்! பேச்சல்ல, இசைத்தேனோசை!
கண்ணல்ல! வேல்வாள் அம்பு! கண்கொள்ளாக் காட்சியாமே!

03. உள்ளமோ வெண்மை! ஆய்ந்தே உதவுதல் பசுமை! பார்க்கும்
கொள்ளையோ கருமை! காணக் கொதிப்பதே செம்மை! யாரும்
வள்ளல்கள் பொன்மையாவர்! வாழ்வு மந்தாரமேதான்!
எள்ளளவொளி வீழ்ந்தாலும், இரவி நாள் முழுதும் இல்லை!

04. உச்சியில் உயர்ந்தோருள்ளார்! உழைப்பவர் சரிவிலுள்ளார்!
அச்சமும் அடிமைப்போக்கும் அகன்றிடும் நாளைக்காணோம்
பிச்சையன் உச்சமேறிப் பெரியவன் சரிந்த போதில்
கச்சிதமான வாழ்வின் கலையகம் காணலாமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. அழகாம் (1971)

01. பச்சைமலையைவிட, பாயும் நதியைவிட,
கச்சுமலை அழகாம் - அதிலே காணும் முடி அழகாம்!

02. கொட்டும் பனியைவிட, குளிரும் கொழுந்தைவிட,
பட்டவிரல் அழகாம் - அதுபோய்ப் பறிக்கும் முறை அழகாம்!

03. கூசும் கதிரைவிட, குறையும் புகையை விட,
வீசும் விழி அழகாம் - அதுதான் வெட்டும் விதம் அழகாம்!

04. கருமைக்குயிலைவிட, கன்னல் சுவையைவிட,
அருமைக்குரல் அழகாம் - அதிலே அடங்கும் தமிழ் அழகாம்!

05. படரும் கொடியைவிட, பசுமைச் செடியைவிட,
இடையின் வடிவழகாம் - அதிலே இருக்கும் நெளிவழகாம்!

06. கொத்து மலரைவிட, குலையும் இதழைவிட,
முத்துச் சிரிப்பழகாம் - அதனை மூடும் இதழ் அழகாம்!

07. தேயும் பிறையை விட, சிவந்த பொழுதைவிட,
தோயும் முகம் அழகாம் - அதிலே தோன்றும் நுதல் அழகாம்!

08. வீழும் முகிலைவிட, வீழ்ச்சித் துமியைவிட,
தாழும் குழல் அழகாம் - அதுபோய்த் தடவும் இடம் அழகாம்!

## 09. கொய்கிறாள் (1971)

01. கொய்கிறாள் கொழுந்து நீலக் கொய்யகச் சேலைப் பெண்ணாள்
ஐயகோ உயிரையும் சேர்த் ததனுடன் கொய்கிறாளே?
வையகத்திணையிலாத வடிவுடன் நின்று கொய்யும்
தையலாள் வரும் வரைக்கும் தவமிருக்கின்றேனிங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. மலைகளைச் சுமந்து கொண்டே மலையின் மேல் ஏறுகின்றாள்
இலையெனிற் கூடை பின்னால் இருமலை சாய்த்திருக்கும்!
தலைதனைத் திருப்பிடாமல் தாளையும் அசைத்திடாமல்
நிலையினில் நின்று கொண்டே நெடுங்கொழுந்தாய்கிறாளே!

03. புல் என மாறினாலும் பொடிபடும்! போகும் பாதைக்
கல் என மாறினாலும் கால்படும்! கடுமையோடும்
'கொல்' எனச் சொல்வதற்கும் கொடியவள் கொடியளல்லள்!
'நில்' எனச் சொலவும் கூடை நிறைந்தவள் வந்தாள் தானே?

04. தேயிலைச் செடியே நீதான் செய்தவம் எதுவோ சொல்லு
தேயினும் கைகள் பட்டுச் செழித்துமே வளர்கிறாயே
நோயது கணக்கு மீறி நொடிகளை ஆண்டாய்ப் போக்கும்
நாயினும் கடையேன் எந்த நாளதோ உய்யும் நாளே?

(சிந்தாமணி)

## 10. வாடி (1972)

01. பச்சைக் கொழுந்தே வாடி, பனியின் துளியே வாடி,
மச்சி உறவே வாடி - உனது, மாமன் மகன் தான் வாடி!

02. அருவித்தெளிவே வாடி, ஆற்றுப் பெருக்கே வாடி,
தெரிவுச் சிலையே வாடி - எனது, செல்லப் பொருளே வாடி!

03. கோப்பிக் குலையே வாடி, கொக்கோ விதையே வாடி,
பாப்பாப் பழமே வாடி - எனது, பாசப்பிணைப்பே வாடி!

04. வரிக்கன் சுளையே வாடி, வாழைப்பழமே வாடி,
உரிக்கின்ற தேமா வாடி - எனது, உரிமைத்துணையே வாடி!

05. பீற்றூட் கிழங்கே வாடி, விரும்பும் கரொட்டே வாடி,
போற்றும் கோவாவே வாடி - படரும், போஞ்சியின் காயே வாடி!

06. மிளகுப் பழமே வாடி, வெற்றிலைக் காயே வாடி,
அழகுப் பியர்ஸ்ஸே வாடி - அறுத்த அன்னாசித்துண்டே வாடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கொறுக்காப் பழமே வாடி, குண்டு மங்குஸ்தான் வாடி,
பொறுக்கு சாதிக்காய் வாடி - 'வட்டர் புறுட்டு'ப் பழமே வாடி!

08. ஏலம் கராம்பே வாடி, இனிப்பு றம்புட்டான் வாடி,
மூலக்கறுவா வாடி - அடியே, முழுவதும் நீயே வாடி!

## II. ஏதிலிக்கூடு

### 01. என்ன? (03.09.1990)

01. கதியில்லா அகதியானோம்! கன இடம் கடந்து வந்தோம்!
பதிபொருள் வீடிழந்தோம்! பல உறவினர் இழந்தோம்!
வதிகிறோம் 'கிளப்பன்பேக்'கில்! வார்க்கிறோம் கண்ணால் நீரை!
அதிகமேன், உடலும் தேய்ந்து ஆவியும் கலங்குதையோ!

02. என்ன நாம் செய்த பாவம்? எவருக்குத் தீங்கு செய்தோம்?
அன்னையா - தந்தையாரா? அண்ணரா - தம்பியாரா?
முன்னையோர் செய்ததுண்டா? மூண்டதேன் நெஞ்சில் இத்தீ?
இன்னுமுண்டாமோ இன்னல்? இருப்பதெம் ஆவி தானே?

03. உண்டிடத்தந்துமென்ன? உடுத்திடத் தந்துமென்ன?
கண்டிடத் தந்ததுமென்ன? காட்டிடத்தந்துமென்ன?
விண்டிடும் நிலமையுண்டா? விரும்பிடும் வாழ்க்கையுண்டா?
கொண்டிடும் மகிழ்ச்சியுண்டா? குறையெலாம் தீர்ந்ததுண்டா?

04. மீண்டுமூர்போகலாமா? வீடுகள் காணலாமா?
வேண்டியே சேர்க்கலாமா? வீதியில் திரியலாமா?
மூண்டதீ அணையுமாமா மூடர்கள் திருந்துவாரா?
மாண்டவர் மீளுவாரா? மனிதராய் வாழலாமா?

### 02. அழிப்பு (04-09-1990)

01. எழுதினேன் கொஞ்சமல்ல இருபத்திஏழைத்தாண்டும்!
பழுதிலாதிருந்திருந்தால் பாவேந்த ராயிருப்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் அழித்தார் போட்டே! மூட்டினார் தீயைத்தீயர்!
அழுகிறேன், கவிதைமட்டோ? அனைத்துமே தமிழ்த்தேனாறே!

02. பாதுகாப்பென்ற பேரில் படிப்பறிவில்லார் செய்கை
போதுமே போதுமப்பா! போதிமா தவனார் வாழ்க!
சாதியோ விலங்குச்சாதி! சமயமோ கொலைக்கஞ்சாது!
நீதியோ இனத்திற்கொன்று! நெறிமுறை உதட்டில்தானே!

03. ஏட்டினை அழித்தீர்! வைத்த இருப்பினை அழித்தீர்! போட்ட
வீட்டினை அழித்தீர்! காணி விளைபொருள் அழித்தீர்! எங்கள்
நாட்டினை அழித்தீர்! காக்கும் நம்மவர், இளைஞர் எல்லாம்
கூட்டுடன் அழித்தீர்! ஆமாம், குறைந்ததா வெறிப்பேயாட்டம்?

04. என்னவோ ஆளைவிட்டீர்! இருந்திடுமட்டும் மூளை
கன்னி எந்தமிழிற் சொல்லிக் காட்டுவேன், கவிதை யாப்பேன்!
சொன்னதைச் சிதைத்தீர்! மேலும் சொல்லவே வைத்தும் விட்டீர்!
இன்னுமென்கோலும் தாளும் இணைந்திடவைத்தீர்- வாழ்க!

## 03. நாடே

*(04-10-1990)*

01. வேலிகள் பயிரைமேயும்! வீதிகள் வெடிகிளம்பும்!
வாலிலா விலங்குக் கூட்டம் வந்தெலாம் சாம்பலாக்கும்!
தோலெலாம் வெளியிருக்கச் சுளையெலாம் பறந்து போகும்!
காலிலார் அதிகரிக்கும் காடுறை இலங்கை நாடே!

02. உதடுகள் தேனைப் பெய்யும் உள்ளங்கள் நஞ்சு தேக்கும்!
பதட்டத்தில் வதந்தி ஏறிப் பறந்திடும் கொடிபிடித்தே!
கதவுகள் மூடும் நீதி! கடும்புளுகுலவும் முன்றில்!
உதவுவார் உதைக்க எண்ணும் உயர்விலா இலங்கை நாடே!

03. ஒருபுறம் விடுதலைத்தீ! ஒருபுறம் சீறும் காற்று!
ஒருபுறம் உரிமை வேட்கை! ஒருபுறம் கேலிப்பாட்டு!
ஒருபுறம் சுதந்திரப்போர்! ஒருபுறம் பொழியும் குண்டு!
இருபெரும் பேதம் காட்டும் ஈழமாம் இலங்கை நாடே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. நாளெலாம் பெருமுழக்கம்! நடைபெறும் கோயிற்பூசை!
ஆளெலாம் மனத்தின் நோய்கள் அதிகரிப்புற்றே மாள்வர்!
பாழெலாம் பாழே! பண்பில் பக்குவம் கொண்டாரின்றிக்
கீழெனக் கீழேயாகிக் கிடந்திடும் இலங்கை நாடே!

## 04. "கிளப்பன் பேக்"

*(04.10.1990)*

01. இருமலை தொடராய்ப் போகும்! இடையிலே வெளி இருக்கும்!
எருமலை ஆகினாலும் எழில் மரச்சோலையாகும்!
தருமலை விறகும், கம்பும்! தாண்டொணா மலையுமாகும்!
திருமலைக்கழகைச் சேர்க்கும் சிறப்பிடம் 'கிளப்பன் பேக்; காம்!

02. துறைமுகக் கடல்களுண்டு! தொடர்புகொள் படகுமுண்டு!
குறைவிலா மழையுமுண்டு! கொடுவெயில் வெப்பமுண்டு!
நிறைந்திடும் அகதியுண்டு! நீருக்கே தட்டுப்பாடு?
முறையுலாக்காவலுண்டு! முன்னணிக் 'கிளப்பன் பேக்; காம்!

03. வெள்ளையர் காலத்தாக்க விடுதிகள் - களஞ்சியத்தாள்
உள்ள மண்டபங்களுண்டு! உறங்கிட வசதியுண்டு!
பிள்ளைகள் கல்விகற்கப் பிஞ்சுகள் பால்குடிக்கப்
பள்ளிபோல் இடமுமுண்டு பயன்தரு 'கிளப்பன்பேக்; காம்!

04. அடைக்கலம் தந்தே காக்கும் அழகிய 'கிளப்பன் பேக்'கே,
விடைபெறுமட்டும், பின்னர் - வீடுசென்றிட்டநாளும்,
உடையவாழ்நாட்களெல்லாம் உன்னையாம் மறக்க மாட்டோம்
இடைவிடாதுதவுதாய் போல் இருந்திடு 'கிளப்பே; வாழ்க!

## 05. சிரிப்பு

*(07.10.1990)*

1. இடுக்கண்ணில் நகுக; என்றார், இன்குறட் பெரியார்! அஃதை
அடுத்தூர்வதுண்மையாக அஃதொப்பதில்லை என்றார்!
அடுக்கடுக்காக வந்தே ஆளினைப் பாயில் போட்டால்
இடுக்கண்ணில் நகுவார் யாரே? இன்புற்று மகிழ்வார் யாரே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சிரித்திட முயற்சிக்கின்றேன்! சிந்தனைத்துயரம் பற்றி
எரித்திடின் என்ன செய்வேன்? எவ்விதம் வெற்றி கொள்வேன்?
சிரிப்பவரொடு கூடிச் சிரிக்கின்றேன் சில நேரத்தில்!
சரிப்படாதந்தோ, பின்னர் தனித்துயர் வாட்டந்தானே?

3. எத்தனை நூல்கள் ஆய்வின் எழுத்துக்கள், இலக்கியங்கள்?
எத்தனை புகைப்படங்கள், என்னென்ன நறுக்குத்துண்டு?
அத்தனையும் இன்றெங்கே? அழகுநூலகம் என்வீடே!
பித்தரே சாம்பல் ஆக்கிப் பின்னுமா உயிரோடுள்ளீர்!

4. சொத்தலோ எந்தன் சொத்து! சுவைத்தமிழ் - அதுவே சொத்து!
இத்தரைமீதில் மீண்டும் எவ்விதம் பெறுவேன் யானே?
செத்தவன் எழும்புவானா? திரும்பவும் உயிர்வாழ்வானா?
பத்திரப்படுத்தினேனே, பதர்களே - சிரித்திடட்டா?

## 06. உணவு

*(17.10.1990)*

1. உழைத்தெடுத்துண்பதைத்தான் உணவெனச் சொல்லியுள்ளார்!
அழைத்தெவர் எது தந்தாலும் அதை உணவாக உண்டு
பிழைப்பதோர் பிழைப்புமல்ல - பிறவியின் நோக்குமல்ல!
உழைத்ததை உண்பதேதான் உண்மையில் உரிமை வாழ்வாம்!

2. வேலைகள் எவையுமின்றி, வியர்வையும் களைப்புமின்றி,
மூலையில் இருந்து கொள்ள முக்கனியோடு சேர்த்துப்
பாலையும் தரயாம் வாங்கிப் பருகினும் பசிதீராதே!
வேலையே வாழ்வாம், தாளால் விளைவதே சாப்பாடாகும்!

3. கையினைக் காலை ஆட்டிக் கழனியில் பயிரை நட்டால்
மெய்யினில் வியர்வை சிந்த விளைந்திடும் பயிரும் முற்றித்
தையினில் அறுத்தெடுத்தால் தரமான கதிரின் பொங்கல்!
வையத்தில் இதுதான் ஊணாம்! வாழ்வென்றால் இதுதான் வாழ்வு!

4. அகதி என்கின்ற பேரில் அவர்களுக்களிப்பதான
சகலமும் இரவல் ஊணே! சரிவரப் பசியுந்தீரா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக இழிவான வாழ்க்கை விரைவினில் மாறி, வேலை
பகலிரவாகச் செய்தே பாரினில் உண்டு - வாழ்க!

## 07. வேண்டும்

1. ஊருக்குத் திரும்ப வேண்டும்! உடனடித் தீர்வு வேண்டும்!
பேருக்குக் கிடைத்திடாமல் பிறந்தமண் உரிமை வேண்டும்!
சீருக்கு வரவே வேண்டும்! திரிந்து நாம் வாழ வேண்டும்!
ஆருக்கும் தீங்கு செய்யா தஞ்சாமல் வாழ வேண்டும்!

2. வீடிலாதிருக்குமாயின் வெளியிலே கிடக்க வேண்டும்!
காடுறைந்திருக்குமாயின் கத்திகள் தேட வேண்டும்!
ஏடிலாதிருக்குமாயின் எழுதிடவேண்டுமெல்லாம்!
பாடுகள் படுதல் வேண்டும், பழையவை பெறுதல் வேண்டும்!

3. கோயிலைப் பார்க்க வேண்டும்! கும்பிடப்போதல் வேண்டும்!
தாயினும் மேலாய் உள்ள தலைவனைக் கேட்க வேண்டும்!
வாயிலாற் பள்ளி சென்று வளர்கலை ஆய வேண்டும்!
நோயெலாம் தீர வேண்டும், நூறெனை வாழ வேண்டும்!

4. நம்மை நாம் நம்பி வாழும் நல்ல நாள் வருதல் வேண்டும்!
நிம்மதி ஒன்றே வேண்டும், நிறைந்திடுமகிழ்வே வேண்டும்!
எம்மையாம் ஆள வேண்டும், இல்லையேல் மாள வேண்டும்!
தும்மினும் அஞ்சி வாழும் சூழலை மாற்ற வேண்டும்!

## 08. மொழி

1. தமிழர்கள் மொழியும் போதில் தமிழ்மொழி மொழியக்காணோம்!
தமிழ்மொழி மொழியொணாத தமிழரே தற்போதுள்ளார்!
தமிழ்மொழி தன்னைவிட்டுத் தமிழர்கள் தொலைவில் உள்ளார்!
தமிழுடன் இணையும் நாளே தமிழரின் திருநாளாகும்!

2. தமிழரின் தெய்வத்தோடு தமிழினிற் பேசக் காணோம்!
தமிழரசூழியர்கள் தமிழொப்பமிடுதல் காணோம்!
தமிழ் எழுத்தாளரெலாம் தமிழினில் எழுதக் காணோம்!
தமிழர்கள் தம்பிள்ளைக்குத் தமிழ்ப்பெயர் இடுதல் காணோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பலமொழிக்காரர் வந்து பழகிவாழ்ந்திட்டாலும்
பலவெளிக்கருவி சாமன் பாவித்த முறையினாலும்,
பலர் அவசரமாய் வாழ்ந்து பழகிய தன்மையாலும்,
நலமுயர் தமிழுக்கின்று நலிவுவந்திடலாயிற்றே!

4. தமிழெது - தமிழல்லாத சகமொழி எதுவென்றாய்ந்து
தமிழினில் இருந்தாற் சொல்லித் தமிழிலாச் சொல்லை நீக்கி
தமிழினிற் பற்று வைத்தே தமிழுடன் நெருங்கி வந்து
தமிழ்மொழி மொழிந்தே உண்மைத் தமிழராய் வாழுவோமா?

## 09. கிட்டுமா?

1. கட்டலாம் வீடு! மீண்டும் காணலாம் வளவு - வேலி!
வெட்டலாம் கம்பு - மட்டை! வேண்டலாம் சாமான் சட்டு!
கொட்டலாம் கோடிக்காசு! கூடலாம் பிரிந்தோரெல்லாம்!
கிட்டுமா கவிதை ஏடு, கிடைக்குமா தமிழின் ஆக்கம்?

2. உடுக்கலாம் உடையை மீண்டும் உண்ணலாம் சுவைகள் ஆறும்!
கொடுக்கலாம் வறியர் ஆயின்! கொள்ளலாம் வழியில் வந்தால்!
படுக்கலாம் மெத்தை மீது பார்க்கலாம் விரும்புங்காட்சி!
எடுக்கலாமா நம் ஆக்கம்? ஏடெலாம் காணலாமா?

3. செய்யலாம் தொழில்கள்! காசு சேர்க்கலாம் வேண்டுமட்டும்!
உய்யலாம், அதனால் மற்றோர்க் குதவலாம் முடியுமென்றால்
பையநாம் உலகம் சுற்றிப் பார்க்கலாம் பலவும்! ஆனால்
கையினில் வருமா ஏட்டின் கவித்தமிழ் ஆக்கம் யாவும்?

4. எதனையும் பெறலாம், கையில் இருந்திடின்! ஆனால் ஆக்கம்
அதனையும் பெறலாம்? அச்சிலே வாராமுன்னம்
பொதுவாக ஆளும் போக்கி, பொன் தமிழ் ஏடும் போக்கும்
இதுதானா செங்கோற்காவல்? இனி ஏதும் மிஞ்சும் தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. அகதி

1. ஒரு சிலர் படுத்திருப்பார்! ஒரு சிலர் உறங்குவார்கள்!
ஒரு சிலர் கதைத்திருப்பார்! ஒரு சிலர் பாடுவார்கள்!
ஒரு சிலர் பார்த்திருப்பார்! ஒரு சிலர் ஆடுவார்கள்!
ஒரு சிலர் நடந்து போவார்! உரைக்கவா அகதி என்றே!

2. ஒரு சிலர் குளிப்பதுண்டு! ஒரு சிலர் கழிப்பதுண்டு!
ஒரு சிலர் வழிப்பதுண்டு! ஒரு சிலர் சமைப்பதுண்டு!
ஒரு சிலர் கொடுப்பதுண்டு! ஒரு சிலர் எடுப்பதுண்டு!
ஒரு சிலர் அடிப்பதுண்டு! உரைக்கவா அகதி என்றே!

3. சிலரிடம் உடைகள் உண்டு! சிலரிடம் அரிசி உண்டு!
சிலரிடம் பொருட்கள் உண்டு! சிலரிடம் பணமும் உண்டு!
சிலரிடம் எல்லாம் உண்டு! சிலரிடம் ஒன்றும் இல்லை!
சிலரிடம் துயரே உண்டு! செப்பவா அகதி என்றே!

4. உள்ளார்க்குப் போக ஆசை! ஒரு சிலர்க்கிருக்க ஆசை!
இல்லார்க்கு எல்லாம் ஒன்றே! இளைஞர்க்கே கவலைகூட!
எல்லார்க்கும் ஒன்றில் ஆசை! இணையிலாத்தீர்வின் மீதே!
கொள்ளாத அகதியெல்லாம் கொண்டதெம் 'கிளப்பன் பேக்' கே!

# III. இலிங்கப்பா

## 1. விதி

*(07.11.1990)*

1. வந்தோம் இலிங்கநகர்! வடிவாக்கிக் காணிகளைத்
தந்தோம் அடிமைத் தமிழர் யாம்! - நொந்திப்போ
போகின்றோம் காப்பாளர் போவென்று சொல்லியதால்,
வேகின்றோம் எதுவோ விதி?

2. வெட்டி வெளியாக்கி விழுந்து முறிந்தநமைக்
கட்டென்று சொன்னார் கருணையிலார்! - வெட்டுகிற
வேளையிலே தடையை விதித்திருந்தால் அந்த
நாளையே சென்றிருப்போம் நாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வீடென்ன, வளவென்ன? வேலியொடு மரமென்ன?
பாடென்ன, கிணறு -பயிரென்ன? - நாடெங்கள்
சொந்தமென நம்பியே துணிவாய்ச் செயற்பட்டோம்!
இந்த நிலை வந்ததிங்கேன்?

4. இறையற்ற, அரசற்ற, எவர்துணையுமேயற்ற,
உறை இல்லம் - உண்டி - உடையற்ற - சிறையாளர்
போவதுபோலெங்கேயோ போகின்றோம், இனியிங்கே
ஆவதையும் பார்த்திடுவோம் ஆம்?

## 2. யார்?

*(28.08.1996)*

(ம) 1. எங்கள் நாட்டில் நாங்கள் வந்து குடியிருக்கிறோம்!
இதனைக் கேட்க எங்கிருந்து யாவர் வருகிறார்?
உங்கள் நாட்டுப்பக்கம் நாங்கள் உலவவில்லையே?
உதறியென்ன, பதறியென்ன ஒன்றுமில்லையே?

(ப) 2. எந்த மண்ணும் எங்கள் ஆட்சிக்குரியதல்லவா?
எவரிடத்தில் அனுமதியை எடுத்து வந்தீர்கள்?
இந்த வேலை பகை வளர்க்கும் இன்னும் கூடவே!
இதனை விட்டுப் போவதுதான் எவர்க்கும் நல்லதே!

(ம) 3. ஊர் இழந்து, வீடிழந்து ஓடச் செய்ததார்?
ஒன்றுமற்ற அகதியாக்கி ஒடுங்கச் செய்ததார்?
தீர்வும் சொல்லிப் போர்விடாமல் செய்யவைப்பதார்?
திரும்பிப்போக வழியில்லாமல் திரண்டிருக்கிறோம்?

(ப) 4. எதுவும் சொல்லத்தேவையில்லை எழும்பித்தீருங்கள்!
இல்லையாயின் சட்டம் போட்டு எழும்பித் தீருவோம்!
உதைகள் தேவையாயின் இங்கு உலவி வாருங்கள்!
ஓடுவோர்கள் நேரத்தோடு ஓடித்தப்புங்கள்!

(ம) 5. காடுவெட்டி வேர்பிடுங்கிக் கல்லுகள் தோண்டிக்
கனமுயற்சி செய்ததோடு காசும் கொடுத்து
வீடு கட்டிப் பயிர்கள் நாட்டி வேலியும் போட்டால்
விட்டுவிடச் சொல்லுவதா - விட்டிடலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப) 6. அகதியெண்டா முகாமில போய் அடுப்பை மூட்டுக!
அங்க தாற நிவாரணத்தை ஆக்கித் தின்னுங்க!
சுகமடையப் போயிருங்க சொந்த ஊரில!
சொல்லச் சொல்ல இருந்திங்கண்டா துயர்படுவீங்க!

(ம) 7. இந்த ஊரும் எங்களுக்கே சொந்த ஊருதான்!
இலிங்கநகர் - கோணமலை எல்லாமொண்டுதான்!
சொந்த மண்ணை விட்டு நீங்கள் துரத்தலாகுமோ,
சுட்டுவிட்டாச் செத்து விட்டாத் தொல்லை தீருமே!

(ப) 8. அரசாங்கக் காணிகளில் அத்துமீறினால்
அப்படியும் செய்துவிடும் அரசபீடமே!
வரலாற்றில் ஓர் இலங்கை வாழுமல்லாமல்
வடகிழக்கோ - தமிழ்நிலமோ வாழ்ந்திடாதுகாண்!

## 3. வேண்டும் *(16.07.1996)*

1. இலிங்கமலை தேயிலையின் மலையாக வேண்டும்!
எங்கெங்கும் எம்மகளிர் கொழுந்தாய வேண்டும்!
கலிங்கத்து மறவர் நாம் அது காண வேண்டும்!
கண்டிக்குப் போகாமல் கவிபாட வேண்டும்!

2. கார்மேகம் மலையுச்சிதனை மூட வேண்டும்!
கரைந்துமே குளிரான காற்றூத வேண்டும்!
நீர்வீழ்ச்சி ஆறாகி நிலம் ஓட வேண்டும்!
நித்தமும் 'பீலி' யில் தலை மூழ்க வேண்டும்!

3. பழமரம் நாட்டாமல் பயனீய வேண்டும்!
பார்க்கின்ற இடமெங்கும் பூப்பூக்க வேண்டும்!
கழனிக்கு நீரோடும் கால்வாய்கள் வேண்டும்!
காடெங்கும் பல புட்கள் கவிபாட வேண்டும்!

4. வெயிலென்று வீழ்ந்தாலும் வேகாமை வேண்டும்!
வெளிப்போக முடியாத வெண்மூடல் வேண்டும்!
துயில் நேரம் போர்வைகள் துணையாக வேண்டும்!
சொல்கின்ற கனவெல்லாம் நனவாக வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04.ஒன்றே

*(02.07.1996)*

1. எல்லாமிருக்குதையா! இவ்விடம் ஒன்றே இல்லை!
நல்லாயிருப்போமையா - அதனை நாங்களும் பெற்றோமென்றால்!

2. தண்ணிதான் தண்ணி ஐயா! தாகம் தணிந்ததில்லை!
மண்ணும் குளிர்ந்ததில்லை - அதனால் மதிப்புங் குறைந்ததையா!

3.தண்ணியடித்தால் வானம் தரை வெறி கொள்ளுமையா!
மண்ணின் மரங்களெல்லாம் - வளர்ந்தே மதம் பிடித்தாடுமையா!

4. வானம் வரண்டிருக்கும்! வான்கதிர் தீப்பிடிக்கும்!
ஏனென்று கேட்பதற்கும் - எழுந்தே எவரும் வரார்கள் ஐயா!

5. எங்குமே தண்ணியுண்டு, எடுக்க முடியாத்தண்ணி!
பொங்கும் கடல் நீரினால் - எவர்க்கும் புண்ணியம் இல்லை ஐயா!

6. ஐயா சிவனே உந்தன் ஆற்றைத் திசைதிருப்பி
மெய்யான லிங்கநகர் - மலையின் மேலிருந்தோடவையாய்!

7. குறிஞ்சிக் குமரன் கூடக் குடியிருக்கின்றானென்றே
அறிஞ்சபிறகுஞ்சும்மா - கைலை அமர்தல் அழகோ ஐயா!

8. நம்பியிருப்போமின்னும் நாலுகிழமை போனால்
எம்பிரானே உன்னிடம் - வருவோம், எல்லோருமே திரண்டே!

## 5. நகர்

*(04.07.1998)*

1. படுக்கையிலே செங்கதிரைப் பார்த்து வணங்குநகர்!
மிடுக்கான மாந்தர் மிகுந்த நகர்!- கொடுக்கின்ற
கையர்களும் கூடவரும் காலர்களுமுள்ள நகர்!
நையாதலிங்கநகர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கடலும், மலைகளுமாய்க் கலந்து கிடக்கு நகர்!
திடலும் சரிவுகளும் சேர்ந்த நகர்! - அடலேறுப்
படையினரும், மக்களுமாய்ப் பார்த்துப் பழகுநகர்!
நடைகாட்டும் லிங்க நகர்!

3. தண்ணீர் மதிப்பதனைத் தாரணிக்குக் காட்டுநகர்!
விண்ணீர் வரவை விரும்புநகர்! - கண்ணீரைக்
காட்டாமலே பயிரைக் காட்டிப் பொருளைநிலை
நாட்டுநகர் லிங்கநகர்!

4. ஏறி இறங்குநகர்! இருளில் ஒளிரு நகர்!
ஆறி இராது தொழில் ஆற்றுநகர்! - ஊறியே
சமயம் பிடித்த நகர்! சண்டைபிடி யாதநகர்!
நமதான லிங்கநகர்!

5. மலையின் அருகுநகர்! மலையாத சிங்க நகர்!
கலையின் மதிப்பினையும் காட்டுநகர்!- அலையாக
மாந்தர் அணிதிரளும் மாவீரதீரநகர்!
நாந்தேடு லிங்கநகர்!

6. நீளம் மிகுந்த நகர்! நெடுஞ்சாலை கொண்ட நகர்!
ஆழக் கடலோடணைந்த நகர்! பாளங்கள்
வெட்டிப்பிளந்து பயிர் விளைக்கின்ற தங்கநகர்!
நட்டமிலாலிங்கநகர்!

7. கோயில் நிறைந்த நகர்! குமரன் பிறந்த நகர்!
வாயில் திறந்தே வணங்கு நகர்! தாயில்லாப்
பிள்ளைகளாம் எங்கட்கும் பேரம்மன் தாயான
நல்லநகர் லிங்கநகர்!

8. இருந்த இருப்பினிலே எல்லாமே காட்டு நகர்!
பொருந்தி வருமோர் புனிதநகர்! - திருந்தியே
பகரப் பலபேரும் பார்க்குநகர், தீயவழி
நகராத லிங்கநகர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. இயற்கை

*(21.06.1996)*

1. கல்வினில் இருப்பேன்! குற்றிக் கட்டையில் உட்கார்வேன்யான்!
புல்லினில் இருப்பேன்! குப்பைப் புழுதியில் உட்கார்வேன் யான்!
நல்லிராப் பகலில் மக்கள் நடத்திடும் வழியில் நிற்பேன்!
எல்லாமே இலிங்கக் காட்சி இயற்கையைக் காண்பதற்கே!

2. ஏறுவேன் உச்சிப்பாறை! இறங்குவேன் கடலோரத்தில்!
ஆறுவேன் மரத்தைக் கண்டால்! அமருவேன் ஆளைக் கண்டால்!
கூறுவோர் எது சொன்னாலும் கொள்ளையாய்க் காட்சி காண்பேன்!
வேறுயான் எதனைச் செய்ய? வேண்டுதல் இயற்றைத் தாயே!

3. கண்ணுக்கோர் பசுமை! கேட்கும், காதுக்கோர் இனிமை! உச்ச
விண்ணுக்கும் முடிவே இல்லை! வெள்ளிமேல் வெள்ளிக்கும்பம்!
பண்ணோடும் பாடல் ஓடும் - பசியோடும் - தூக்கமோடும்!
பெண்ணோடி வருமாப்போலும் பேரழகோடுந்தானே!

4. குறிஞ்சியில் முல்லை! அஃதும் கொண்டிடும் நெய்தல்! யாமும்
அறிஞ்செலாம் ஆயும் போதில் அதனுளும் மருதம் காண்போம்!
எறிஞ்சகண் பார்வை ஏகின் இவ்விடம் மீண்டும் வாரா!
உறிஞ்சிய வணமே எங்கும் உலாவரும் இலிங்க மிஃதே

## 7. தம்பி

*(20.06.1996)*

1. எங்கள் நகர் இலிங்க நகர் என்று சொல்லடா - தம்பி
ஏற்றமுண்டு காற்றுமுண்டு ஏறிச்செல்லடா!
தங்க நகர் சிங்க நகர் தமிழர் ஆமடா - தம்பி
தாரணியில் மூப்படைந்த சாதி நாமடா!

2. எங்குங் கடல் பொங்குங்கடல் இல்லையாமெனில் - தம்பி
இயற்கை வளம் கண்டிடவே நல்லதாகுமோ?
வங்மதும் கடலுறவை வைக்குதாமெனில் - தம்பி
வையகத்தில் யாம் மகிழ்தல் தக்கதேயடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காலையிலே கதிரெழும்பும் காட்சியோடுதான் - தம்பி
கண்விழிப்பாய், வானிலவன் ஆட்சிதானடா!
மாலையிலே மின்னொளிக்கும் மகிமை தானடா - தம்பி
மலைமுழுவதும் மின்மினியாய்த் திகழுமேயடா!

4. ஓசைகட்கும் ஒலிகளுக்கும் ஒழிச்சல் இல்லடா - தம்பி
ஒன்று போக ஒன்று வானில் ஊர்திதானடா!
ஆசையடா அவற்றையெலாம் காணக்காணவே - தம்பி
அவசரக்கால் நடையினிலே அமைதிபேணடா!

## 8. ஏற்றம் *(14.03.1996)*

1. ஏற்றமையா ஏற்றம், இலிங்கநகர் ஏற்றம்!
போற்றுவதற்கான புதிய குடியேற்றம்!

2. காடு பெருங்காடு, கல்லுமலைக்காடு!
பாடு பெரும் பாடு, பட்டுவிட்டால் வீடு!

3. ஏழைமக்களுக்கே ஏற்ற குடியேற்றம்!
வாழை, மரவள்ளி வளர்வதும் முன்னேற்றம்!

4. ஏறிவருவோர்கள் இறங்குவதும் வேண்டும்!
வீறிலாதபேர்கள் வீழ்ந்தெழும்ப வேண்டும்!

5. ஆழ்கிணறும் இல்லை! ஆறு கீறும் இல்லை!
நீள் குழாய்கள் கையை நீட்டினாலே தண்ணீர்!

6. திரும்புமிடம் எங்கும் தெரிபடுமாம் காட்சி!
விரும்புவோரும் உண்டு பெறுத்தபேரும் உண்டு!

7. பலதரத்து மாந்தர் பாடுபட்டு வாழ்வார்!
நலமுடன் அன்னாரை நம்மவர்கள் பார்ப்பார்!

8. அம்மன் அருள் ஒன்றே அனைவரையும் காக்கும்
எம்மலைமா வட்டம் எமது சொந்தம் அன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. மண்காப்பு (14.03.1996)

1. கட்டிலில் கிடக்கும் காலம்! கால்நடை தளர்ந்த வேளை!
பெட்டியா - பாடைதானா? பிறிதெதென் றேங்கும் நேரம்!
வட்டியும் கணக்குப் பார்த்து வருமதிகுறிக்கும் போழ்து!
எட்டியான் ஏறுகின்றேன் இருகையும் நீர்க்கேனோடு!

2. உச்சியில் அமர்த்தவர்க்கு ஓடுநீர் குழாயிலின்றேல்
கச்சை தன்னோடிறங்கிக் கடலோரக்கிணற்று நீரை
இச்சையோ டள்ளித் தூக்கி ஏறிடுங்காட்சி காண்போர்
இச்சுகம் தேவை தானா இறுதியில்? என்று கேட்பார்!

3. இத்தனை சிக்கலோடும் இலிங்கமா நகரைக் காக்கும்
அத்தனை பேர்களுந்தான் ஆழ்ந்த மண்பற்றுள்ளோர்கள்!
எத்தனை காலம் போயும் இதை அவர் பெற்றே தீர்வார்!
சத்திய நயினையம்மன் சாட்சியாய்த் தனித்தங் குள்ளாள்!

4. கால் பிடித் திறங்கியேறிக் கைபிடித்தூற்றி ஊற்றி
நால்வகைப் பயிரும் செய்து நாளாந்தம் செத்துச் செத்து
மேல்கீழாம் பேதமற்றே மேற்றிருமைலையாம் மண்ணைக்
கோல் பிடித்துலவும் நாளும் குமரனே காக்கின்றோமே!

## 10. வணக்கம் (13.11.1997)

1. இலிங்கமாநகரிலிருந்து இயற்கையை வணங்குகின்றேன்!
கலங்கிடும் நேரமெலாம் காட்சியில் மூழ்குகின்றேன்!
நலங்குறைவெனினுங்காலால் நடக்கிறேன், ஊர்தியில்லை!
துலங்குமென்னுள்ளம், வேறு தூசுகள் மண்டிடாவே!

2. மலையென்ன, கடல்களென்ன? மண்ணென்ன, மரங்களென்ன!
கலைமுகில், நிலவு, வானம், கதிர், மலை, விண்மீன் என்ன?
நிலைமரப் பறவையென்ன? நிழல் படுவிலங்கென்னென்ன?
இலை இவை எல்லாமென்றால் இயற்கையின் அழகென்னாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பயிர்களை வரவைக்கின்றேன்! பருகுநீர் ஊற்றுகின்றேன்!
உயிர் என நேசிக்கின்றேன், உயர்திரு வள்ளலார் போல்!
அயர்வுகள் தோன்றும் போதில் அகதியின் நிலைக்காளான
துயர்களை வரிசையாக்கிச் சொல்லத்தான் யாருமில்லை!

4. போர் மரம் போர் செய்யாது! புள் விலங்கொருநேரந்தான்!
பார்வரு மனிதன் தானே பகலிரவாகச் செய்வான்?
ஆர் அதைத் தடுப்பார் இங்கே, அவன்தானே படைப்பின் உச்சி
சீர் உலகியற்கையெல்லாம் சிதைக்கவோ ஆறு பெற்றான்?

## IV. இழப்பு வரிகள்

### 1. தீண்டாமை *(1963)*

1. காலையிலே மலந்தீண்டிக் கழுவுகின்றோம்!
கனமலத்தை எடுப்போரை ஒதுக்குகின்றோம்!
மூலையிலே அலகாலே முகம் வழிப்போம்!
முடிவெட்டி விடுவோரைக் கழித்து வைப்போம்!
சேலை சவர்க்காரம் போட்டலசு கின்றோம்!
சேர்த்தெல்லாம் தோய்ப்போரை விலக்குகின்றோம்!
தோலைக் கொண்டே மேளம் தட்டுகின்றோம்!
தொடர்மேளம் அடிப்போரை நீக்குகின்றோம்!

2. ...............................

### 2. நம்மவர் *(1964)*

1. சாவீட்டில் ஒரு புறமாக சவங்கிடக்கும்!
தமிழ்ப் பெண்கள் சாப்பிடுவார் தாம்பூலத்தை!
போவார்கள் ஆடவர்கள் குதத்தைத் தேடிப்
போட்டுவிட்டு வந்தாரேல் சிலபேர் செத்தார்
ஆவார்கள்! மீதிப்பேர் சவத்தைத் தூக்கி
அழகாகக் கழுவி உடை அணிந்து வைத்தே
தேவார இசை பாடிப் பாடைதூக்கிச்
சென்று இடுகாட்டினிலே புதைத்து மீள்வார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ..........................................

## 2. அறியாமை (1965)

1. கேட்டுக்கல், கிண்டிக்கல், கிளறிக்கல்!
அதனாலே கிடைக்கும் நன்மை!
ஆட்டாதே தலைதன்னை, ஆமாமாம்
போடாதே அதுதான் தீமை!
ஏட்டினிலேகண்டதெலாம் ஏனென்று
கேளாமல் ஏற்றதாலே
மாட்டுவால் போலன்றோ போகிறது
நம்மக்கள் மதியும் போக்கும்!

2. ..............................................

## 4. நீயே (1964)

1. நின்றவள் நீயே எந்தன் நெஞ்சினில்! அன்பால் அன்பை
வென்றவள் நீயே, உந்தன் விழியெனும் வேலால் குத்திக்
கொன்றவள் நீயே, ஆவி கொள்ளையிட்டெங்கோ ஓடிச்
சென்றவள் நீயே, எல்லாம் சிதைத்தவள் நீயேயன்றோ?

2. ..............................................

## 5. ஐயம் (1964)

1. அன்னையில் தந்தை ஐயம்! அப்பனில் பிள்ளை ஐயம்!
முன்னையோன் மீது நேற்று முளைத்தவன் ஐயம்! நாட்டு
மன்னனில் மக்கள் ஐயம்! மறவனில் தலைவன் ஐயம்!
என்னையார் நம்புவாரோ, எப்படி நம்பி வாழ்வோம்?

2. ..................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. வேண்டாம் (1964)

1. எழுத்தாளன் நான் என்றேன்! எதிரே வந்தாள்
எழுத்தாட்டி நான் என்றாள்! எனவே மீண்டும்
எழுத்தாளர் நாம் என்றேன் - ஆமாம் என்றாள்!
இருவருமே ஓரினமாய் இருப்பதாலே
அழுத்திடுவோம் நம் கருத்தை ஒன்றாய் என்றேன்!
அதுவரையில் சரி என்றாள்! காதல் வாழ்வில்
விழுத்திடுவோம் நமை என்றேன்! நின்றாள் - பார்த்தாள்!
வேண்டாமே அதுமட்டும் என்றாள் - சென்றாள்!

2. ..................................................

## 7. கனவுலகு (1963)

1. ஞாயிறு நாள் நல்லெண்ணெய் முழுக்கொன்றிட்டு
நண்டுடனே பிட்டுண்டு தாம்பூலத்தை
வாயினிலே மென்றபடி வளர்ந்த மாக்கீழ்
வண்ணப்பாய் கட்டிலின் மேல் இட்டுச் சாய்ந்தேன்!
காயொன்று வீழ்ந்திடவே பார்த்தேன், மேலே
கத்தியதோர் காகம் அதைக் கலைத்துவிட்டு
நாயிரண்டு சண்டையிட அதையும் நீக்கி
நல்லமை தித்துயில் கொண்டேன், எங்கோ சென்றேன்!

2. ......................................................

## 8. ஆவி (1964)

1. அன்னைத் தமிழ் எங்கள் ஆவியடி, அதற்
காதியும் அந்தமும் இல்லையடி!
பொன்னை நிகர்த்திடும் பூவையரே அதைப்
போற்றிப் புகழ்ந்திட வாருங்கடி! (கும்மி)
அறம் புகலும் குறளினை ஆக்கிய
அற்புத வள்ளுவப் பேரறிஞன்
திறம் தெரிந்து வியப்போமே, அதைச்
செயற்படுத்தி மகிழ்வோம்! (கோலாட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ..............................................

## 9. வேறு

*(1967)*

1. ஆரிய வாழ்க்கை வேறு! அருந்தமிழ் வாழ்வு வேறு!
சேருமாம் ஐந்தோடொன்று! சிறக்குமாம் மூன்றோடொன்று!
வேருடன் தமிழ் வீழ்ந்தாலும் விற்குமோ மனையை - நாட்டை?
ஆரிதை அறிந்துளாரோ? அர் தமிழ் நெறியில் வாழ்வார்!

2. ..............................................

## 10. மாற்றம்

*(1967)*

1. ஆடவர் தோய்த்தாலென்ன? அழகுறச் சமைத்தாலென்ன?
கூடவே வயலிற் பெண்கள் கொள்கதிர் அறுத்தாலென்ன?
பாடது பட்டாலென்ன? பயன்களைச் சேர்த்தாலென்ன?
நாடது திருத்த வேண்டில் நாம்பணி மாற்ற வேண்டும்!

2. ..............................................

# V. நாட்டோசை

## 1. ஊஞ்சல்

*(11.11.1994)*

1. பொந்துப் புளியை யடி - மச்சாள், பூத்திருக்கும் புளியையடி!
கந்துப் புளியையடி - மச்சாள், காச்சிருக்கும் புளியையடி!

2. ஆத்திப் பட்டு நாரெடுத்து -மச்சாள், அதைத் திரிச்சுக் கயிறெடுத்து
பூத்திருக்கும் புளியையிலே - மச்சாள், போட்டிருக்கோம் ஊஞ்சலடி!

3. கொப்புக்குள்ள போய்வருமே - மச்சாள், கொத்துக் கொத்தாய்ப் பூவிழுமே!
அப்பர் போட்ட ஊஞ்சலடி - மச்சாள், அண்ணர் வந்தாப் போச்சுதடி!

4. வாடிவாடி ஆடிடுவோம் - மச்சாள், வாய் நிறையப் பாட்டெடுத்தே!
ஆடி ஆடிச் சொல்லிடுவோம் - மச்சாள், ஆச்சி சொன்ன கதை முழுவதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கோலாட்டம் (11.11.1994)

1. காச்ச முதிரையில் ஏறு மச்சான் - அதன்
கம்பினைக் கத்தியால் வெட்டு மச்சான்!
மாச்சல் படாமல் இறங்கு மச்சான் -அதை
மட்டமாய்ப் பட்டையைச் சீவு மச்சான்!

2. வெய்யிலில் காயவே போடு மச்சான் - அதன்
வெள்ளையினில் மயங்காத மச்சான்!
பையவே தட்டி நீ பாரு மச்சான்! - அதன்
பண்ணது கேட்டுக் கண்மூடு மச்சான்!

3. கோயில் திருவிழா வந்ததுமே- இந்தக்
கோலுடன் ஆட்டத்தைப் போடு மச்சான்!
வாயிலைத் தேடியே வந்திடுந்தோழரை
வாழ்த்தியே சேத்துமே ஆடு மச்சான்!

4. பாட்டுடன் ஆட்டமும் சேர்த்து விட்டால் - மச்சான்
பார்க்கவும், கேக்கவும் வேணுமாடா?
காட்டு முதிரையும் காதுக்கிசை தரும்
கானம் பாடும் வானம் பாடியுமே!

## 3. காலைக்கும்மி (11.11.1994)

1. கோழி கலையுது, கொப்பும் அசையுது,
குள்ள நரி தான் பதுங்கியதோ?
நாழிகையாச்சுது, நாமுங் கலைவமே,
நல்ல கிழக்கும் வெளுக்கிறதே!

2. காகம் கலையுது, கத்திப் பறக்குது,
கட்டும் இருளும் கலைகிறதே!
மோகம் பிறக்குது, மூளும் சுடரிலே
முத்தத்தில் வெய்யில் விழுகிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மந்தி கலையுது, மரஞ்சாமி ஆடுது,
மண்ணில் பழுப்பு விழுகிறதே!
குந்தியிருந்துமே காய்கள் கொதுப்புது!
கொப்பு மா பாரங் குறைகிறதே!

4. வானம் முழங்குது, மத்தளங் கொட்டுது,
வந்து பொழிந்திடும் காத்து மழை!
கானல் பறந்திடும், கண்ணும் குளிர்ந்திடும்
காலைப் பணிகளை யாம் மறவோம்!

## 4. ஊர்க்காதல் (13.11.1994)

1. கொள்ளிக்குப் போறியாடி? கூட வரட்டுமாடி?
அள்ளித் தலையில் வைப்பேன். அழகாய் நடந்துவாடி!

2. அம்மா வருவா அத்தான், அவசரப்பட்டிராத?
சும்மா கிடக்குங்சங்க ஊதிக் கெடுத்திராத?

3. தண்ணிக்குப் போறியாடி? சந்திப்பமாடி அங்க?
மண்துரவுக்குள்ள அள்ளி வைப்பன் இடுப்பில் வாடி!

4. தங்கச்சி வாறாள் அத்தான், சரியான சண்டைக்காறி!
எங்கும் பறையடிப்பாள், எல்லாம் குழப்புவாளே!

5. இப்படிக் காலம் போனா என்னடி, உன்முடிவு?
எப்படிச் சேருதல் நாம் எங்கேனும் போவமாடி?

6. சும்மா கிடங்க அத்தான், சுகமொண்டிருந்தாவரும்!
நம்ம எழுத்தின் வாறே நடப்பதைக் காணுவமே!

## 5. சாப்பாடல் (13.11.1994)

1. தவத்தே கிடந்துமல்லோ - சுமை, தாங்காதே பெற்றெடுத்தேன்!
அவமாகிப் பேனதுமேன்? - உன்னை, அவனாய்ப் பறிச்சதுமேன்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அல்லும் பகலுமல்லோ - உன்னை, ஆட்டி வளர்த்தெடுத்தேன்
எல்லாச் சுகங்களையும் - அவன், இன்றோடே போக்கியதேன்?

3. வேப்பமரத்தடிக்கே - நீ, விளையாடப் போறதல்லோ?
சாப்பை பிடுங்கியதில்- நான், தடுக்கிழைச்சுத்தந்ததல்லோ?

4. பாலும் பழமுமல்லோ - நீ, பலநாளும் உண்டதெல்லாம்?
ஆலும் அறுகுமிடும் - வேர், அத்தனையும் போனதென்ன?

## 6. குலச்சாமி

*(15.11.1994)*

1. ஆறுமுகச்சாமி! அழகான சின்னச்சாமி!
ஏறுமயிற் சாமியே - முருகா, எங்கள் குலச்சாமியே!

2. வள்ளி தெய் வானைச் சாமி! வானோர் வணங்குஞ்சாமி!
புள்ளி மயிற் சாமியே - முருகா, போற்றும் குலச்சாமியே!

3. சூரசங்காரச்சாமி! சோலைக்குறிஞ்சிச்சாமி!
வீரத்து வேற் சாமியே - முருகா, வெற்றிக் குலச்சாமியே!

4. சரவணப்பொய்கைச் சாமி! சக்தி நெருப்புச் சாமி!
பரமன் குருவே சாமி - முருகா, பழைய குலச்சாமியே!

## 7. தாலாட்டு

*(15.11.1994)*

ஆராரோ - ஆரிவரோ! ஆரிவரோ - ஆராரோ!

1. அன்பின் அழகமுதே, அற்புதமே கற்பனையே!
இன்பக் கனிச்சாறே, என்னுயிரே கண்ணுறங்கு!

2. அழுவதுமேன் கண்மணியே, ஆர்தான் அடிச்சாரோ?
பழுதுனக்கு நேரு மெண்டால் பார்த்துமோ நானிருப்பேன்!

3. அப்பா அடிச்சாரோ, அஞ்சுவிரல் கையாலே?
இப்போதேன் நீ அழுதாய், இனிப்போதும் கண்ணுறங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அக்கா அடிச்சாளோ, அரவணைக்கும் கையாலே!
துக்கம் அதனாலோ? தூங்கிடுவாய் கண்மணியே!

5. மாமி அடிச்சாவோ மாரடிக்கும் கையாலே?
நாமோ கலங்குவது? நாடகமே நீ தூங்கு!

6. பேயோ - பிசாசுகளின் பேரரவம் கேட்டதுவோ?
நாயோ? - நரிப்படையோ, நானிருக்கேன், நீ தூங்கு!

## 8. மீனவப் பாடல்

*(15.03.1994)*

1. வானும் முழங்கவில்லை! வாடையும் வீசவில்லை
மீனும் ஒளிக்கவில்லை - அதனால் மிக்க மகிழ்ச்சியடி!

2. கடலும் இரையவில்லை! கரையும் நனையவில்லை
குடலும் நடுங்கவில்லை - அதனால் கொஞ்சம் திருப்தியடி!

3. வெள்ளி மறையவில்லை! வெளியும் கறுக்கவில்லை
உள்ளங் கலங்கவில்லை - அதனால் உவகை பெருகுதடி!

4. தாக்கங்கள் ஏதுமில்லை! தடைகளும் ஒன்றுமில்லை
ஏக்கம் வரவுமில்லை - அதனால் இன்பம் வளருதடி!

5. படகின் துணையுடனே பயணம் புரிந்தவர்கள்
விடிய வருவாரடி - மீன்கள் விற்பனை செய்வாரடி!

6. விற்ற பணத்தினிலே வேண்டும் பொருளையெல்லாம்
பெற்று மகிழ்வோமாடி - எமக்கே பெருநாள் இதுதானடி! (வா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. பழனப்பாடல்

1. வாருங்கள் தோழர்களே வயல் வேலை செய்திடுவோம்!
பாருங்கள் வானமதில் பறவையெலாம் பறந்திடுதே பாடி-
நாம் பாடிடுவோம் வரம்பினிலே ஓடி!

2. காளையினைப் பூட்டிடுவோம், கலப்பையினால் உழுதிடுவோம்!
நாளைக்கே விதைத்திடுவோம் நல்ல சம்பாதேடிடுவோம் நாமே -
இனும் நாளெடுத்தால் ஈரமெலாம் போமே!

3. நாற்றை பிடுற்கிடுவோம் நடுமிடத்தே நாட்டிடுவோம்!
சேற்றைக் கழுவிடுவோம், சிறுபுளியின் நிழலிருப்போம் ஆறி -
நாம் சிறுபொழுதில் வேலை செய்வோம் மாறி!

4. பானைத் தயிரதும் பார்! பழஞ்சோற்று வாசமும் பார்!
மீனைப் பழித்தவிழி மெல்லிடையார் கொண்டு வருவாரே! -
அனல் மிஞ்சி பசி ஆறத்தருவாரே! (வாருங்)

## 10. ஊற்று

1. பாலையூற்று ஊற்றடா! பசுமைச் சோலைக் காற்றடா!
காலை மாலை காட்சிதான்! கண்விரும்பும் மாட்சிதான்!

2. ஒரு புறத்தில் கடல் அலை! ஒரு புறத்தில் உயர்மலை!
பெருமிரைச்சல் இல்லையேல் பேரமைதியாமடா!

3. வேலிபோட்ட வீடுகள்! வீதி எங்கும் போகலாம்!
நாலுவேதம் ஓதுவார், நல்ல மூன்று மொழியிலே!

4. பறவை உச்சி பாடிடும்! படுவிலங்கு நடமிடும்!
மறவரோடு மங்கையர் மகிழ்ச்சியோடும் வாழ்வரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விருந்து

04

*04 - 07- 91*

## 1. இறை உணர்வு

இயற்கை யாவும் நோக்குவோம்!
இறை உணர்வு கொள்ளுவோம்!
மயக்கந்தீர வாழுவோம்!
மனதிற் சாந்தி காணுவோம்!

மண்ணளந்து செல்லுவோம்!
மானிடத்தை வாழ்த்துவோம்!
விண்ணளந்து போவமா?
வெளியை முற்றும் ஆய்வமா?

அண்டமெங்கும் கதிர்களாம்!
அவைகளுக்கும் கோள்களாம்!
கொண்ட ஆயுள் போதுமோ?
கோடி யாண்டு வேண்டுமே!

யாமிருக்கும் பிஞ்சிலே
யாமறிந்த தென்னவோ?
ஆமிவற்றை எண்ணினால்
அமைதி தோன்றும் நெஞ்சிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருக்குறள்

அன்று தந்த திருக்குறள்!
அருமையான திருக்குறள்!
இன்றும் உள்ள திருக்குறள்!
இணையில்லாத திருக்குறள்!

பயிலப் பயிலப் பொருளுடன்
பாடமாகும் திருக்குறள்!
அயலவர்கள் போற்றியே
அனுபவிக்கும் திருக்குறள்!

ஆயிரத்து முந்நூறும்
அவைகளோடு முப்பதும்
வாயினிக்கப் பயின்றுமே
வாழுவோருக்கென்குறை?

கற்க வேண்டும் கசடறக்
கற்பவற்றைத் தேடியே!
நிற்க வேண்டும் கற்றபின்
நீடுவாழ்க வள்ளுவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 - 02 - 91

## 3. நகரம்

பட்டணத்தைப் பார்க்கிறேன்!
பளபளப்பைக் காண்கிறேன்!
பெட்டி முற்றும் காசெனில்
பிரியம் போல வாழலாம்!

தெருவில் எங்கும் ஊர்திகள்!
செல்ல வேண்டும் கவனமாய்!
அருமையான துறைமுகம்!
அழகுக் கோட்டை மறுபுறம்!

வெந்நீர் ஊற்றுக் கன்னியா,
வேண்டு மட்டும் குளிக்கலாம்!
நன்னீர் உள்ள கிணறுகள்!
நடுவில் முற்றப் புல்வெளி!

பள்ளி கோயில் எங்குமே!
பயிலப் பாட நல்லதே!
நள்ளிராவும் திருமலை
நகரம் ஓசை நகரமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*19 - 03 - 91*

# 4. வேந்தன்

*பாரதியின் தாசன்!*
*பாவினிலே வேந்தன்!*
*ஊரதுவோ சேரி!*
*உரைத்ததெலாம் தேனே!*

*இளைஞர் நமக்கென்றே*
*இலக்கியமும் தந்தார்!*
*பழமையையும் பேணி*
*பாப் புதுமை செய்தார்!*

*அருந்தமிழின் பேரை*
*அமுதமென்று சொன்னார்!*
*விருந்தெலாம் படைத்தார்!*
*வேண்டியதை உண்போம்!*

*தாசனாரைப் போன்றே*
*தமிழ்ப் பணிகள் செய்வோம்!*
*தாசன் நாமம் வாழ்க!*
*தண்டமிழும் வாழ்க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*09 - 03 - 91*

## 5. ஈயர்

கழிவில் மேயும் ஈயரே,
கறியில் வந்து மொய்ப்பதேன்?
அழிவு செய்யும் நோக்கமோ?
அழிய வேண்டி நேருமே!

நாடும் நகரும் ஒன்றுதான்!
நானும் ஈசன் படைப்பதே!
ஓடும் பொன்னும் ஒன்றுதான்!
உயர்ந்த ஞானி நானடா!

நன்றும் தீதும் உள்ளதால்
நாமும் பார்க்க வேண்டுமே!
ஒன்றும் நன்மை இல்லையே,
ஊத்தை காவும் ஈயரே!

உடலும் நோயும் இல்லையால்
உன்னை ஈசன் படைத்தனன்!
கெட நினைக்கும் உன்னை நாம்
கெடுக்கு முன்னம் ஓடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*12 - 06 - 91*

## 6. கடலோரம்

போடா தம்பி
புறப்படடா நீ!
வாடா போவோம்
வளைகடலோரம்!
பார் பார் நண்டை
பதுங்குது வளையுள்!
போர் போர் என்றே
புறப்படும் அலைபார்

அடம்புகள், மீசை
அழகினைப் பார் பார்!
நடந்திரை தேடும்
நாகணவாய் பார்!

வெறும் மணலாலே
வீடமைப்போமா?
பொறுத்திருப் பாரா?
புறப்படும் அலையார்?

நடுக்கடல் போகும்
நாவாய் அது பார்!
நடக்குது பொழுதும்
நாம் புறப்படுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*02 - 07 - 91*

## 7. ஒன்றுக்கொன்று

பூத்திருந்த மல்லிகை
புழுவினாலே கெட்டதே!
காத்திருந்தம் பூவினைக்
காணுகின்ற ஆசையால்!

குளவியொன்று வந்தது!
குடியிருந்த புழுவெலாம்
விழவிடாமல் தூக்கியே
வீடுகொண்டு சென்றது!

கடவுள் வேலை என்பதா?
கருணையில்லை என்பதா?
கெடுதி செய்யப் போனதால்
கேடு வந்ததென்பதா?

ஒன்றுக்கொன்று என்பதாய்
உலகு முற்றும் உள்ளதா?
நன்று, இந்த உலகிலே
நாமும் வாழ்ந்து பார்ப்பமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 8. முப்பது

உயிர்கள் பன்னி ரண்டடா!
உடல்கள் பதினெட்டடா!
உயிரில் நெடில் ஏழடா!
உள்ள குறில் ஐந்தடா!

வல்லினங்கள் ஆறடா!
வரும் இடைகள் ஆறடா!
மெல்லினங்கள் ஆறடா!
மிகுந்த வினா ஐந்தடா!

சுட்டெழுத்து மூன்றடா!
தொடரும் ஆய்தம் ஒன்றடா!
திட்டமூலம் முப்பதே!
சேர்ந்த மீதி பெருக்கமே!

ஆங்கிலத்தைப் பார்க்கிலும்
ஆக நான்கு கூடவே!
தீங்கிலாத தமிழை நாம்
செவ்வை யாகப் பயிலுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 9. பலவான்

சிங்கம் கொன்று கொன்றுமே
தின்று தின்று வந்ததால்
பங்கமுற்ற விலங்குகள்
பலவும் ஒன்று கூடின!

நாளும் உணவு தருகிறோம்!
நம்மில் ஒருவர் வருகிறோம்!
கேளும் என்று சொல்லவே
கேட்டதந்தச் சிங்கமே!

முயலும் பிந்திச் செல்லவே
முறைத்துச் சிங்கம் கேட்கவே
அயலும் உம்மைப் போன்றவர்,
ஆதலால்தான் - என்றதும்,

'காட்டு' என்னக் கிணற்றினைக்
காட்டவே தன் நிழலிலே
மோட்டுச் சிங்கம் வீழ்ந்துமே
மூழ்க, யாவும் வாழ்ந்தன!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 10. இல்லை

பள்ளத்தில் நான் இருந்தேனே!
பள்ளன் என்றே சொன்னாரே!
பறையைத் தட்டிப் பார்த்தேனே!
பறையன் என்றே சொன்னாரே!

கரையில் போய் யான் இருந்தேனே!!
கரையான் என்றே சொன்னாரே!
கருப்பைப் பூசிப் பார்த்தேனே!
கருப்பன் என்றே சொன்னாரே!

தட்டம் தட்டிப் பார்த்தேனே!
தட்டான் என்றே சொன்னாரே!
சலவை செய்தேன் துணிதன்னை!
சலவைக்காரன் என்றாரே!

வேளாண்மைகள் செய்தேனே!
வேளாளன்தான் என்றாரே!
பாழாய்ப்போன சாதிகளே
பாரில் தொழிலால் இல்லையடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 11. என்ன?

காகா என்பது என்னம்மா?
காகம் மகளே காகந்தான்!
கோகோ என்பது என்னம்மா?
கோழிச்சேவல் தான் மகளே!

கீ கீ என்பது என்னம்மா?
கிளிதான் மகளே கிளியேதான்!
கூ கூ என்பது என்னம்மா?
குயில்தான் மகளே குயிலேதான்!

மா மா என்பது என்னம்மா?
மாடாம் மகளே மாடாமே?
ஆ ஆ என்பது என்னம்மா?
ஆடாம் மகளே ஆடாமே!

வா வா என்பது என்னம்மா?
வாத்தாம் மகளே வாத்தாமே!
போபோ மகளே போதுமினி!
பொருளாந்தமிழைப் பயில்வாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பாட்டி

அருமையான பாட்டி!
அவ்வை என்னும் பாட்டி!
பெருமையான நூலால்
பேரெடுத்த பாட்டி!

ஆத்திசூடி மூலம்
அறிவுரைத்த பாட்டி!
நேர்த்தியான பாட்டால்
நீடுவாழும் பாட்டி!

கொன்றைவேந்தனாலே
குறைகள் தீர்த்த பாட்டி!
இன்று முள்ள பாட்டி
எங்கள் அவ்வைப் பாட்டி!

நல்வழியில் சென்றால்
நல்ல வாக்குமுண்டாம்!
நல்ல மூது ரைகள்
நாளும் வாழ்க வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*22 - 08 - 91*

# 13. பொருள்

*தொட்டாற் சுருங்குவது யாது? - அது*
*தொட்டாற் சுருங்கியதுதானே!*
*கொட்டுகின்ற ஆவிபெயர் என்ன? - அது*
*கொட்டாவி கொட்டாவிதானே!*

*மண்ணதனை வெட்டுவது யாது? - அது*
*மண்வெட்டி மண்வெட்டிதானே!*
*கண்முன்னே ஆடுவது யாது? - அது*
*கண்ணாடி கண்ணாடிதானே!*

*நிலையாகவே நிற்ப தென்ன? - அது*
*நிலைதானே கதவு நிலைதானே!*
*மலைத்திட வேசெய்வ தென்ன? - அது*
*மலைதானே கல்லுமலை தானே!*

*முருகுள்ளவன் பெயர் யாது? - அவன்*
*முருகனவன் முருகனவன் தானே!*
*பொருளோடு தமிழ் கற்க வேண்டும் - ஆம்*
*பொருளற்ற சொல் சொல்ல வேண்டாம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*22 - 08 - 91*

# 14. வாழ்வு

அகமும் புறமும் வாழ்வாகும்!
அன்பும் துணிவும் வாழ்வாகும்!
அகத்தைக்கூறும் நானூறே!
அதுபோல் புறமும் நானூறே!

எட்டுத்தொகையும் இதுபோலே
இருக்கும் வரையும் குறையேது?
பத்துப் பாட்டும் இவ்வாறே!
பதினெண் கணக்கு மிவ்விதமே!

முப்பத்தாறும் கற்றிடவே
முடியாவிட்டால் பொய்யாத
முப்பா நூலைக் கற்றேனும்
முடிப்போம் சங்கத் தமிழெல்லாம்!

காப்பியம் ஐந்தும் கற்றிடுவோம்!
கற்றார் சொல்லக் கேட்டிடுவோம்!
பாப்புனைந்திடுவோம் பாடிடுவோம்!
பைந்தமிழ் வாழ்வே வாழ்ந்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 15. கசடு அறு

*கல்கண்டேதான் கற்கண்டு!*
*கல் தீதேதான் கற்றீது!*
*கல் தரை தானே கற்றரையாம்!*
*கண்பொறிதானே கட்பொறியாம்!*

*வாள்தடங்கண்ணே வாட்டடங்கண்!*
*வாழ்நாள் தானே வாணாளாம்!*
*தாள்தொழுதான்தான் தாடொழுதான்!*
*தாள்தலைதானே தாடலையாம்!*

*முள்தாள் தாமரை என்பதுவே*
*முட்டாட்டாமரை எனவாகும்!*
*முள்தைக்கும் காடதுதானே*
*முட்டைக்குங்காடது வாகும்!*

*கல்க் கண்டென்பது பிழையாகும்!*
*கற்போம் தமிழைக் கசடறவே!*
*கல்த் தரை என்றோர் சொல்லில்லை!*
*கற்றது போன்றே நிற்போமே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*22 - 08 - 91*

## 16. யார்?

*(மகள்)* நான் யார் அம்மா?
நானிலம் இதிலே
ஏன் நான் வந்தேன்?
எவ்விதம் வந்தேன்?

*(தாய்)* கேள் நீ மகளே,
கிடைத்ததெம் பலனே!
வாழ்ந்து காட்டிடவே
வந்தனை அம்மா!

*(மகள்)* இத்துயர் உலகில்
எப்படி வாழ்வேன்?
செத்த பின்பே தான்
சிறப்புறும் வாழ்வு!

*(தாய்)* இன்ப துன் பங்கள்
இராப் பகல் மகளே!
துன்பம் சகித்தால்
சுடர் விடும் பொன்னே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 17. ஆமை

ஆமை வேண்டும் நல்லாமை!
அழுக்காறாமை, வெஃகாமை,
தீமையாகும் கல்லாமை
தெளிவோம் வாழ்வின் நிலையாமை,

புறங்கூறாமை, சொல்லாமை, (பயனில)
பொச்சாவாமை, வெகுளாமை,
அறங்கொல்லாமை, கள்ளாமை,
அவையஞ்சாமை, பிழையாமை,

கள்ளுண்ணாமை, சேராமை (சிற்றினம்)
கண்டே இணை செய்யாமை
கொள்ளும் இடுக்கணழியாமை
குறளார் காட்டும் ஆமைகளே!

மதியார் முத்தம் மிதியாமை,
மானம் அழிந்தால் வாழாமை,
எதிலும் நாக்கே கோடாமை
எல்லாம் நல்ல ஆமைகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*22 - 08 - 91*

# 18. மூன்று

அப்பாவும் மூன்றே!
அம்மாவும் மூன்றே!
தப்பாத தம்பி,
தங்கையும் மூன்றே!

அக்காவும் மூன்றே!
அண்ணாவும் மூன்றே!
மிக்கான வயிறே,
மிஞ்சு மனம் மூன்றே!

நமது தமிழ் மூன்றே!
நாடுகளும் மூன்றே!
நமதரசர் மூன்றே!
நங்குறளும் மூன்றே!

எங்களது வாழ்வில்
எவ்விடமும் மூன்றே
சங்கமதும் மூன்றாய்
தாரணியில் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 19. உடைமை

அன்போருடைமை, அருளுடைமை,
அடக்கமுடைமை, அறிவுடைமை,
பண்போருடைமை, நாணுடைமை,
பாரில் ஒழுக்கம், உயர்வுடைமை

ஊக்கமுடைமை பொறையுடைமை,
உயர்த்தும் ஆள்வினையும் உடைமை,
காக்கும் இங்கிவ் வுடைமை யெலாம்
கைக்கொண்டாலே நமை நன்றாய்!

கேடில் செல்வம் கல்வி யலால்
கிடையாதென்றார் நம்குறளார்
மாடல்லவாம் மற்றயவை
மறையாதோதும் மறைதந்தார்!

பொன்னும் பொருளும் தேடுகிறோம்!
போதாதென்றே அள்ளுகிறோம்!
இன்னும் ஆசை தீரவில்லை!
இவற்றை உடைமை என்றவரார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

# 20. குறள் எண்

(குறிப்பு)
05. இல்வாழ்வு
06. வாழ்க்கைத்துணை
07. மக்கட்பேறு
08. அன்பு
09. விருந்தோம்பல்
10. இனியவை கூறல்
11. செய்நன்றியறிதல்
12. நடுவுநிலைமை
21. தீவினையச்சம்
22. ஒப்புரவறிதல்
23. ஈகை
24. புகழ்
40. கல்வி
43. அறிவுடைமை
46. சிற்றினம்சேராமை
47. தெரிந்து செயல்வகை
100. பண்புடைமை
102. நாணுடைமை
103. குடிசெயல்வகை
104. உழவு
106. நல்குரவு

அஞ்சுதானே வாழ்வு!
ஆறுதேவை தானே!
எஞ்சும் ஏழு காக்க
எட்டிருக்க வேண்டும்!

ஒன்பதோடு தேவை
உயரிய பத்தாகும்!
என்றும் பதினொன்றே
இருக்கும் பனிரண்டாய்!

இருபத்தொன்று பேணி
இருபத்திரண்டாய்ந்து
இருபத்துமூன்றோடும்
இருபத்து நாலேற்போம்!

நாற்பதனைத்தேடி நாற்பத்துமூன்றாகி
நாற்பத்தாறு காத்து நாற்பத்தேழாய் வாழ்வோம்!

நூற்றிரண்டு நூறால் நூற்று மூன்றுக்காக
நூற்று நான்கு செய்தால் நூற்றிஐந்து போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*22 - 08 - 91*

# 21. சிறுசோறு

*வெள்ளை மணல் சோறு!*
*வெறு முருங்கைச் சுண்டல்!*
*கொள்ளியெலாம் சுள்ளி!*
*கொட்டிடும் பூ ஆணம்!*

*செங்கட்டிக் குழம்பு!*
*சிறிய காவிளாக் காய்*
*பொங்கெருக்கிலை மோர்!*
*போடும் பனங்கோது!*

*சிப்பி யடுப்பாலே*
*சிரட்டைக்கறி ஆக்கி*
*சப்பிடுமாப் போலே*
*சாப்பிடுவோம் தானே!*

*குஞ்சுக் கறி சோற்றால்*
*கூடிமகிழ்ந்தே நாம்*
*அஞ்சுமணி மட்டும்*
*ஆல் நிழலில் வாழ்வோம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. கற்பகம்

என்னைக் கொஞ்சம் பாருங்கள்
என்ன வேண்டும் சொல்லுங்கள்!
பொன்னை அள்ளித் தருபவள்
பூமி மீது வேறு யார்?

சின்னக் கட்டுப் பெட்டியா?
தெளித்தெடுக்கும் சுளகதா?
பின்னும் வண்ணப் பாய்களா?
பிள்ளைக் கேற்ற விசிறியா?

வீட்டுக்கான மரங்களா?
விறகுக்கான துண்டமா?
ஏட்டுக்கான ஓலையா?
இனிமைக்கண்டு கட்டியா?

குடிக்க நல்ல பாணியா?
கொதுப்பிடும் பனாட்டு - மா
கடித்திடும் கிழங்குமா?
கற்பகத்தில் ஏதிலை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 23. அறம்

*வையத்திலே நான்*
*வாழ்வாங்கு வாழ்வேன்!*
*தெய்வத்தில் சேர்வேன்!*
*திருக்குறள் காப்பேன்!*

*மனத்தினிலே யான்*
*மாசிலன் ஆவேன்!*
*அனைத் தறம் ஆனால்*
*ஆர வா ரிப் பேன்?*

*சொல்லுதல் எளிதாம்!*
*சொல்லாமல் ஏதும்*
*நல்லது செய்வேன்!*
*நாட்டினை மறவேன்!*

*செய்வாரே பெரியார்!*
*செய்யாதோர் சிறியார்!*
*ஐயங்கள் தீர்ப்பேன்*
*அறிவோடு வாழ்வேன்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 08 - 91

## 24. உணவு

ஓடு மகள் ஓடு!
ஒலியெழுப்பும் யாழைத்
தேடு மகள் தேடு!
தேடிக்கொண்டு வாவா!

நாடு மகள் நாடு!
நல்ல தமிழ்ப் பாட்டைப்
பாடு மகள் பாடு!
பண்ணிசையில் பாடு!

முல்லையிலே பாடு!
முழுக் குறிஞ்சி பாடு!
நல்ல நெய்தல் - பாலை
நடு மருதம் பாடு!

செவியுணவு முற்றாய்த்
தேவையில்லாப் போதே
அவியுணவு தேவை!
ஆதலினாற் பாடாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 - 05 - 92

## 25. ஊற்று

பாலை ஊற்று ஊற்றடா!
பசுமைச் சோலைக் காற்றடா!
காலை மாலை காட்சிதான்!
கண் விரும்பும் மாட்சிதான்!

ஒரு புறத்தில் கடல் அலை!
ஒரு புறத்தில் உயர்மலை!
பெருமிரைச்சல் இல்லையேல்
பேரமைதி யாமடா!

வேலி போட்ட வீடுகள்!
வீதி எங்கும் போகலாம்!
நாலு வேதம் ஓதுவார்,
நல்ல மூன்று மொழியிலே!

பறவை உச்சி பாடிடும்!
படுவிலங்கு நடமிடும்!
மறவரோடு மங்கையர்
மகிழ்ச்சியோடும் வாழ்வரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. இயற்கை

குருவி ஒன்று வந்தது!
கூடு கட்டி வாழ்ந்தது!
அருகிருந்த மரத்திலே
ஐந்து முட்டை இட்டது!

நாலு குஞ்சு வந்தன!
நல்ல தீனை உண்டன!
வாலும் சிறகும் தோன்றவே
வானம் போகப் பார்த்தன!

வல்லூ றொன்று வந்ததே!
வாயில் ஒன்று - சென்றதே!
இல்லை மூன்றும் தப்பின!
இன்ப துன்பம் இயற்கையே!

இரவி போயின் மதி வரும்!
இரவு போயின பகல் வரும்!
அரவம் போயின் அமைதிதான்!
அது நமக்குத் தேவைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 02 - 2002

## 27. தமிழே!

*தமிழே, தாயே!*
*தமிழர்க்குயிரே!*
*அமுதே, அழகே!*
*அன்பே, அருளே!*

*வா வா, உன்னை*
*வாழ்த்திடுவோமே!*
*காவாய் எம்மை!*
*காப்போம் உன்னை!*

*முன்னால் வந்தாய்!*
*மூன்றாய் நின்றாய்!*
*பின்னால் போனால்*
*பிழையாகிடுவாய்!*

*நாக்கும் நீயே!*
*நம் வாய் நீயே!*
*நோக்கும் நீயே!*
*நூறா யிரமே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 02 - 2002

## 28. நாடு

நாடு தன்னை நாடு!
நமது ஈழம் நாடு!
பாடு மண்ணைப் பாடு!
பசி பறக்கும் பாடும்!

வட கிழக்கைப் பாடு!
வாழ்த்தியே நீ பாடு!
உடல் இருக்கும் மட்டும்
ஊர் இருக்கப் பாடு!

முந்தியோரும் வாழ்ந்தார்!
முடிவில் நாமும் வாழ்வோம்!
பிந்தியோரும் வாழ்வார்!
பேச்சும் மூச்சும் நாடே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*22 - 08 - 91*

## 29. நன்றி

*அன்னைக் கொரு நன்றி!*
*அப்பருக்கோர் நன்றி!*
*அண்ணருக்கும் நன்றி!*
*அக்காளுக்கும் நன்றி!*

*எழுத்தை அறிவித்த*
*இறைவருக்கும் நன்றி!*
*பழுத்தவர்க்கும் நன்றி!*
*பண்புள்ளார்க்கும் நன்றி!*

*தம்பிக்கொரு நன்றி!*
*தங்கைக்கொரு நன்றி!*
*நம்புந் துணை யாட்கும்*
*நல்லதொரு நன்றி!*

*மக்களுக்கோர் நன்றி!*
*மறைந்து விட்டபேரில்*
*தக்கவர்க்கும் நன்றி!*
*தமிழ்க் கவிதை நன்றி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.10.2004

05

# ஐந்தொகை (வினாவிளக்கம்)

## 1. எதைக்கடவுள் என்கின்றார்?

அம்மைக்கொரு வணக்கம் அப்பருக்கும் இன்னொன்று,
எம்மை உருவாக்கி இவ்வுலகில் விட்டதனால்!
வந்தோம் - வளர்ந்திட்டோம், வளர்கல்விதான்பயின்றோம்!
சொந்தம் பல கண்டோம், தொழிலால் பணமுழைத்தோம்!
வாழ்ந்து முடித்தோமோ, வறுமை - பிணிகளிலே
வீழ்ந்து தொலைத்தோமோ? வெற்றியோ - தோல்விகளோ?
எல்லாமே நம்மால்தான் - எவர்மேலும் குற்றமில்லை!
பல்லோர் பலவுரைப்பார், பட்டறிவே வாழ்வியலாம்!
நானும் முதியானே, நல்லிளமை தீர்ந்தவனே!

தானும் தன் பாடுமெனத் தளர்ந்த நிலையிலுளேன்!
இந்த நிலையினிலே எந்தன் தமிழ் மகளே!
ஐந்து வினா தொடுத்தாய்- அவற்றை விளக்கிடவே!
ஐந்தை விளக்குகின்றேன், அறிவு செலும் வரையில்!
**ஐந்தொகை ஆகிடட்டும்** அறுமூன்று நூல் வடிவில்!
உய்யும்படி நினைத்தே உண்மை உரைக்கின்றேன்!
பொய்கள் கலவாத புதிய புராணமடி!
புகழேந்தி அந்நாளில் புகழ்கின்ற தமிழ் நடையில்
பாவேந்தர் தம் புரட்சிப் பாடல் நடையினிலே

நாவேந்து நல்ல தமிழ் நானெடுத்துப் பாடுகிறேன்!
நல்ல அகவலடி! நல்லிசையில் பாடிடம்மா!
வல்லதமிழ் மொழியை வாழ்த்தி வணங்கிடம்மா!
என்றுமே உள்ளத்தில் இருத்தி வணங்கிடம்மா!
வென்றுமே காட்டிடுவாய் வீரப்பழம் வாழ்வை!
**எதைக் கடவுள் என்கின்றார்?** என்றாய் முதல் வினாவில்!
அதைச் சற்றுரைத்திடவா, ஆதியிருந்தின்று வரை?
அதிர்வு வெடிப் பறப்பால் அண்டத்துடுப் படலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்க்குடும்ப மாகியதாம் -   கதிர் சுற்றுமாம் கோள்கள்!
நமது கதிர் ஈர்ப்பால்   நம்புவியும் மூன்றாக

அமைந்து சுழல்வதுமோர்   ஆச்சரியம் தானேடி!
சூடு குளிர்ந்ததுவோ?   தொடர்வேர்வை ஆனதுவோ?
நீடித்த ஆவிமழை   நிலமீது கொட்டியதோ?
நீராலே பள்ளங்கள்   நிரம்பிக் கடலாச்சோ?
பேரான மாமலைகள்   பின்தோன்றி வந்தனவோ?
காற்றோடி வந்ததுவோ!   கடல்மேல் அலையாச்சோ!
நேற்றல்ல என்மகளே,   நெடுநாளின் முன்பாமே!
கடல்நுண் உயிராகிக்   கன கூர்ப்பால் மீன் ஆகி
கடல்பாசி ஆகி, அவை   கரை ஒதுங்கிப் புல்பூண்டாய்
செடி கொடிகள் மரமாகி,   செறிந்த இருட் காடாச்சோ?

படிமீது பல்லுயிரும்   பரவிப்படர் கதையை
வடிவாய் விளக்கியுள்ளார்,   வரலாற்று டார்வினவர்!
படித்தால் அறிந்திடலாம்!   படியாரை என் செயலாம்?
பல்லி உடும் பரணை   பாம்போந்தி முதலை அழுங்(கு)
எல்லாம் குடும்பமலோ?   இவ்வாறே தருவினமும்!
மீன்தவளை ஆகுவதும்,   மேல் தேவாங் கேறுவதும்,
கூன் குரங்கு வாலற்றே   கொறில்லா வாய் மாறுவதும்
இயற்கையின் விந்தையடி,   இன்றுமுண்டாம் ஆராயின்!
தயங்கிடுவார் சிலர் நம்ப!   'சாமி' சொன்னால் நம்பிடுவார்!
வாலற்ற மா விலங்கால்   வந்தமுதல் மனிதன்

காலெடுத்து நடமாடி   கைவீசி வருநாளில்
பென்னம்- பெருமுழக்கம்-   பெருவெள்ளம் - சீறுபுயல்
மின்னல் - இடிமுழக்கம்-   மிக்கநில நடுக்கம்
கண்டஞ்சித் தெளிவின்றிக்   கைதூக்கிக் கால்மடக்கி
மண்டியிட்ட காலத்தே   வந்ததுதான் கற்பனையின்
உச்சக்கடவுள்! அது   உள்ளதுதான் இன்றுவரை!
மெச்சுகிறார் பயனுற்றோர்,   மெலிகின்றார் மற்றவர்கள்!
இல்லையென்றார், உண்டென்றார்   ஏத்துங்கள் அதனாலே!
அல்லல்போம் என்றுரைத்தார்   அல்லல் இன்றும் உள்ளதுவே!
இம்மை - மறுமை என்றார்,   ஏழ்பிறவி உண்டென்றார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மை யப்பன் 'மூலம்' என்றார், ஆறு- பத்து -நூறாச்சு!
அன்பே சிவம் என்றார்- அன்னை தந்தையாம் என்றார்!
தன் உள்ளம்தான் என்றார்- சகலதிலும் உண்டென்றார்!
பாலிலே நெய் என்றார்- படுவிறகில் தீ என்றார்!
வாலறிவு தான் என்றார்- வரும் 'உண்மை' யாம் என்றார்!
யாருமே கண்டதில்லை- யாவருக்கும் வாய்ச் சொல்லே!
பேருண்டு- அவ்வளவே! பெரு நன்மை யாதுமில்லை!
கல்லாலும், செம்பாலும், கனபூச்சின் சாந்தாலும்,
செல்வத்துப் பொன்னாலும் செய்துவைத்து உருவங்கள்
கோயிலென்றும், சிற்பமென்றும், கோபுரங்கள்- சுற்று மதில் -

வாயிலென்றும் உண்டாக்கி வரிகள் பல விதித்தே
பூசகர்கள்- காவலர்கள் பொதுப்பணத்தோடூடாட-
பாசமுள்ளோர் சென்றிறைஞ்சிப் பாடிவிட்டு வீடடைய
பல்லாயிரங் கொட்டிப் பல பேர் விழா நடத்த-
நல்லாயிருக்க சிலர், நாட்டார் நிலை யாதோ?
வீட்டுள் படத்தெய்வம்- வேம்படியில் முச்சூலம்
நாட்டில் பல கோயில்- நாலாறு தெய்வ வரி-
சைவம் - பல நோன்பு- தகுநோன்பு நாள் முடியப்
பையப் புலால்- மச்சம்! பசிவாட்டம் புசிப்பினிலே!
என்னமகள் இவைகள், இறைவன் வழிபாடா?

சின்னப்பின் மூளையினால் சிந்தித்துப்பார் மகளே!
எல்லாம் தெரிந்த அவன் இதை அறிய மாட்டானா?
வல்லவனாம் அவனுக்கும் வழிகாட்டவா வேண்டும்?
எங்கும் நிறைந்த அவன் இங்கிருக்க மாட்டானா?
இங்கே அவன்; இன்றி இவர் அசைய மாட்டாரே,
இன்றுலகம் போர்மயமே! இலங்கையிலும் அவ்வாறே!
நன்றோ இது- தீரக்கும் நாட்டம் அவற்கிலையோ?
புயல்வீச்- செரிமலைகள்- பொங்கும் பெருவெள்ளம்-
அயல் மண் சரிவெல்லாம் அவற்கோர் விளையாட்டோ?
படைத்தான்- மகிழ்கின்றோம் பாதுகாப்பவன் யாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் அழிப்பது வோ? இதயம் அவற்கிலையோ?
செவ்வாயில் நீருண்டேல் தெரிவிக்க மாட்டானோ?
அவ்வாறே திங்களிலும் ஆழியினை ஆக்கானோ?
என்ன செய்தான் இன்றுவரை? ஏன்செய்ய வில்லையடி?
சொன்னால் சினம் கொள்வார், தொந்திசரி ஆத்திகர்கள்!
அறிவே கடவுளடி! அன்றுரைத்தார் பாரதியார்!
அறிவை வளர் என்றார்! அக்கருத்தே பெரியார்க்கும்!
ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி (1022) என்றார் வள்ளுவனார்!
எது கடவுள்? என்பதறி! இன்னுமுண்டு, நூல் ஆய்வாய்!

அதனைத் தெளிந்து பிடி! அவ்வாறே வாழ்தாயே!

## 2. சமயமுண்டா வாழ்க்கையிலே?

அன்பின் மகளே நீ அடுத்து வினாவுகிறாய்,
என்பால் ஒரு கேள்வி, இரண்டாம் வினாவாக!
**சமயமுண்டா வாழ்க்கையிலே?** சரியான கேள்வியடி!
எமைவைத்துக் கேட்டாயோ? எவர்க்காகக் கேட்டோயோ?
சான்றோர்கள் மக்கட்காய்ச் சமைத்த சமையத்தை
ஆன்றோர்கள் நமக்காக ஆக்கிவைத்த நன்னெறியை
வாழ்க்கை தனைப்பார்த்தே வாய்திறந்து கேட்கின்றாய்!
கீழ்த்தரமாய்ப் போவதனால் கேட்கின்றாய், நல்லதடி!
ஆதி மனிதர்கள் அலைந்தார் உணவிற்காய்!

போதுமோ- போதாதோ, புசித்தார்கள் பச்சைகளை!
உடையேது- வீடேது? உறங்கல் மலைக்குகையே!
நடையில் திரிவார்கள் நாளும் கொலை நிகழும்
நெருப்பினைக் கண்டறிந்தார்! நீண்ட குளிர்போச்சு!
விருப்பாய்ச் சமைத்துண்டார்! வீடாய்க்குடில் போட்டார்!
கல்லும், எலும்புகளும் கையாள் கொலைக்கருவி!
வில்லும், விடும் அம்பும் வேட்டை நடத்தி வரும்!
தோல்கள் உடையாகும்! தோற்றமுறும் நாகரிகம்!
கால்நடையும் மேய்த்தார்கள்! கனபயிரும் செய்தார்கள்!
கூச்சல் திரிபடைந்து கூர்ப்புமொழி தோன்றியது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்ச்சல் ஒழிவின்றி      ஓடிவந்தார்-தேடிவந்தார்!
கூடிக்குழுக் குழுவாய்க்      கூத்தாடி நாள் கழித்தார்!
நாடிக் குழுத்தலைவர்      நலம்பேணி வரலானார்!
வலிவுக்குழு எதிரே      வாட்டிவதை நிகழ்வும்,
மெலிவுக்குழு அடங்கி      மீள்நிகழ்வும் சில உண்டு!
இயற்கைச்சதிபலவும்      ஏற்படுத்தும் அச்சத்தால்
முயற்சி சில சமயம்      முடங்கியும் போவதுண்டு!
ஏதோ ஒரு ஆற்றல்      எமக்குமேல் உள்ள தெனச்
சாதாரணர் நம்பித்      தலை குனிந்த வேளையிலே
கடவுள் தலையெடுத்தார்!      கருத்தோ சிறைக்கோட்டம்

மடமை தலைக்குள்ளே      மண்டிக்கிடையாச்சு!
மக்கள் ஒழுங்காக      மாக்களாய் மாளாமல்
தக்க விதம் வாழ்ந்தே      தலையாய பேறு பெற
தக்கவர்கள் தம்மாலே      சரிபார்க்கப்பட்டதுதான்
மிக்கநலமளிக்கும்      மேலாம்சமையமதாம்!
புதிதில் சிலர் அதனைப்      போற்றி நடந்தார்கள்!
அதனைத்தாம் பின்பற்றி      அவ்வாறும் வாழ்ந்தார்கள்!
நாளாக நாளாக      நற்பால் திரிந்ததெனப்
பாழாக்கிப் பாழாக்கிப்      பதம்கெடுத்து விட்டார்கள்!
எல்லாம் கலப்பாகி      இருமூன்று நான்காகிப்

பொல்லாச் செயல்கட்கும்      போர்வையாய் மாறியதே!
இந்தென்றும், சைவமென்றும்,      ஈர்மூன்று ஆறென்றும்,
முந்தியதாய்- அகவையிலே      மூப்பானதிதுவென்றும்,
திராவிடத்தோ- டாரியமும்      சேர்ந்துறுதியாமென்றும்,
வராதவனைக்கூட இது      வரவைத்தே உளதென்றும்,
அன்பே சிவம் என்றும்,      அச்சிவமே மூல மென்றும்,
எல்லோரும் இன்புற்று      இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றும்      அறியாதிதுவென்றும்
'சிந்துவே' இந்து வென-      சிறப்பான சைவமென

வந்துள்ள தெங்களது      வரமாகுமாமென்றும்,
தமிழை வளர்த்ததிலே      சைவமதும் ஒன்றென்றும்
அமுதத்திருமுறைகள்      அடங்கியுளதிது வென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னென்னவோ சொல்லி இனிப்பெல்லாம் தந்து விட்டு
என்னென்னவோ செய்வார், எல்லாம் பணவுழைப்பே!
மட்கட்பிரிப்பேதான் மதநோக்கமல்லாமல்

## 3. தமிழ் தனியாய் வாழ்ந்திடுமா?

அருமை மகளே நீ அடுத்து வினாவுகிறாய்,
பெருமைக்குரிய வினாப் பேறான மூன்றுதனை!
**தமிழ்தனியாய் வாழ்ந்திடுமா?** தனியான கேள்வியடி!
அமிழ்தம் இனித்திடுமா? அதுபோல உள்ளதடி!
உலக மொழிகளிலே உண்மையிலே மூத்தமொழி
நலமாம் தமிழ் என்றே நன்காய்ந்தோர் கூறுகிறார்!
பல மொழியும் கற்றாய்ந்த பாவாணர் சாற்றுகிறார்
உலகமொழிக்கெல்லாம் ஒருதாய் தமிழ் என்றே!
புலவர் குழந்தையவர் புகழ்வார் 'இராவண' த்தில்

உலகமே ஊமையாய் உள்ளபோதுள்ளதென!
இனிமை- பழமை என ஈரெட்டு 'மை' கொண்ட
தனிமை மொழி எங்கள் தமிழ் என்பார் பாவாணர்!
'மொழி ஞாயிறு' மவரின் 'முதற்றாய் மொழி' கற்றால்
அழியாத பற்றுறுதி அத்தமிழில் உண்டாகும்!
'ஆரியம்போல் உலகவழக் 'கழியாத' தமி ழென்று
சீரிளமைச் சுந்தரனார் செப்பியுளார் அப்பொழுதே!
'யாமறிந்த மொழிகளிலே யாண்டுமில்லை தமிழ்போலாம்'
தேமதுரப் பாரதியார் தீட்டிவைத்தார் ஏட்டினிலே!
'இனிமைத்தமிழ்ச்சுவைவே றெங்கேயும் காணோமாம்;

கனிச்சாற்றுப்பாவேந்தர் கழறியுளார் தம் பா வில்!
மறைமலையார் தனித்தமிழில் மாசற்ற நூலளித்தார்!
முறையாய்த் தமிழ் கற்றோர் முயன்றால் முடியுமது!
இன்று படிக்கின்றாய் எந்தன் திரு மகளே,
நன்றாய்த் தமிழ் கற்றால்! நற்றமிழ்க்குப் பஞ்சமிரா
தனித்தே தமிழ்வாழும் சங்கத்தே வாழ்ந்தததது
இனித்தமிழ் அதுவே எல்லாம் தமிழ் மயமே!
வந்தார்கள் ஆரியர்கள் - வடமொழியும் கூட்டாச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தநாள் மட்டுமது இருக்கவே செய்கிறது!
சிங்களமும் செந்தமிழும் சேரத்தான் செய்கிறது!

மங்காத்தமிழ், கலப்பால் மங்கத்தான் செய்கிறது!
போர்த்துக்கல் - ஒல்லாந்து- பொழுதுபடா இங்கிலாந்து
வார்த்தை பல கலந்து வளரத்தான் செய்கிறது!
ஆங்கிலந்தான் தனியாக அன்றிருந்த தின்றில்லை!
ஆங்கிலமோர் கூட்டுமொழி! அனைத்துலக நாட்டுமொழி!
இன்று தமிழுடனே ஏராளமாய்க் கலந்து
வென்றுதான் போகிறது! வேதனைதான் ஆகிறது!
மொழிகள் கலப்பதனால் முத்தமிழும் வாழ்வுபெறும்,
அழிவு நிகழாது- அஞ்சாதீர்; என்றுரைப்பார்!
இல்லாதார் பிச்சைதனை எடுப்பதிலே தப்பில்லை!

செல்வர் இரப்பதுதான் சிறப்பாய்த் தெரியவில்லை!
சொன்னச் சுரங்கம் கரந்திருக்க உன் மனையில்
இன்னொருவர் வீட்டில் இரந்துண்ணப் போவாயோ?
என்று வினாவுகிறார், எமது சுத்தானந்தர்!
அன்றே தமிழ் உணர்ச்சி; அளித்த கவியோகி!
ஆயும் அறிவியலை ஆங்கிலமாய்ச் சொல்வதுபோல்
தேயும் தமிழினிலே! செப்ப முடிந்திடுமோ?
மெல்லத் தமிழ்சாகும்! மேற்குமொழி ஓங்கிடுமே!
சொல்லவும் கூடுதிலை! சொல்லும்திறனில்லை!
என்கின்றார் பாரதியார், எந்தமிழ்த்தாய் சொல்வதுபோல்!

நன்குணர்ந்த நல்லறிஞர் நல்லவளம் சேர்க்கின்றார்!
தூங்கிக்கிடந்த தமிழ் துடித்தெழுந்து பாரதியால்
ஓங்கி வளர்கிறதே! உள்ளம் மகிழ்கிறதே!
அன்று தமிழ்ப்பெருமை அறியாத நாளையிலே
நன்று தமிழ் கற்றவெளி நாட்டார் சிலர் இங்கே
எம்மைப் பிடித்துசுப்பி எழுந்திருக்க வைத்தார்கள்!
நம்மை உணர்ந்தேபின் நம்மொழியை நாமறிந்தோம்!
கால்டுவெல்- போப் ஐயர்- காணரிய மாக்ஸ் முல்லர்-
பால் தேன் பா வீரமுனி- பழவின்ஸ்லோ- மற்றுமிவ்வூர்
தாவீது- பிரகாசர்- தனிநாயகம் - மற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாடு மெந்தமிழை நானிலத்தார் காணவைத்தார்!
'எங்கள் தமிழ்மொழியே எமது விழி' என்றிருந்தால்
பொங்கும் தமிழ் வாழும்- போராட்டம் வெற்றி பெறும்!
இயற்கை உருவாக்கி ஈய்ந்த கொடை இதுவால்
இயங்கும் தனித்தபடி- எத்துணையும் தேவையில்லை!
'கா' வாலே காக்கைவர- 'கல்லு' வதால் கல்வி வர-
'கூ'வால் குயில் கூவ- 'கூனா' லே குடைதோன்ற
'மா' வாலே மாடு வர- 'மரத்' தே மரம் ஆக-
'நா' வாலே நாய் குரைக்க- 'நகர்' வால் நகராக
இவ்வாறுருவான எந்தமிழ்க்கே எரிவார்கள்

எவ்வளவோ தீமை- இடர் செய்துபார்த்தார்கள்!
நீரால் நெருப்பாலும் நிலத்தடியின் 'செல்' லாலும்
போரால்- திணிப்பாலும்- போதா விழிப்பாலும்
தாழ்ந்து கிடந்த தமிழ் தழைத்து நிமிர்கிறது!
வீழ்ந்து விடாதினிமேல் வீழ்ந்தாது நாமிருந்தால்!
ஆமாம் தமிழ் மகளே, ஆர்வம்- மொழிப்பற்று-
ஏமாறா நல்விழிப்பு- இடையறா நல்முயற்சி
ஊக்கம்- கடும் உழைப்பு- உறுதி- பிடிவாதம்-
ஆக்கம் களையெடுப்பு- அணைப்பு- பிரியாமை
எல்லாம் இருக்குமெனில் எம்மொழியோர் செம்மொழியே!

வெல்லாதெதுவு மினி! வெற்றிநடைபோடுமிது!
நாம் தமிழராயிருந்தால்- நமதாம் தமிழென்றால்!
எமதாவியான தமிழ் இணையம் கணினி எலாம்
ஆட்சி செலுத்துவதால்- அறிவைப்பெருக்குவதால்!
காட்சியும் கேள்வியுமாய் கலைபெருகி நிலை உயரும்
'மொழி என்ப தூடாகமே! மொழிவைப் புரிந்திட்டால்
விழியென்ன- மூச்சென்ன? வெற்றுரையே; என்பவர்கள்
பற்றில் துறவிகளே! பசியில்லை- விடாயில்லை!

கற்றறியத்தேவையில்லை! கைபோதும்- வாய் வேண்டாம்!
'எங்கோ போய் நலமாக எப்படியோ வாழு தமிழ்
இங்கே வந்தெம்மிடத்தே இப்பாடு படுகிறது!
என்றாரே நம் அண்ணா! இதிலே பொருள் உண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றிருந்தே நாம் முயல்வோம்! எந்தமிழை யாம் வளர்ப்போம்!
'நாடு' என இருந்தால்- நமதாட்சி அங்கிருந்தால்
ஈடிணை அற்ற தமிழ் என்றும் கொலுவிருக்கும்!
இல்லாமை உண்டாயின் இரத்தல் தவறில்லை!
அல்லால் வடமொழியும் ஆங்கிலமும் உள் எதற்கு?
உலகிற்கு ஆங்கிலமும் உளத்தில் தனித்தமிழும்

நலமாய் இயங்கிவரின் நம்மகளே, போதாதோ?

## 4. ஆண்பெண் சரி சமமா?

நல்ல மகளே நீ நாலாம்வினாவாகப்
பொல்லாததாகவே போடுகிறாய், என்னவெனில்
**ஆண்பெண் சரிசமமா** அம்புவியில், என்கின்றாய்!
வீண் கேள்வி அல்ல இது- வெறுங்கேள்வியே அல்ல!
பார்த்துச் சலித்துள்ளம் பதைத்தே எழும் கேள்வி!
இன்றரை வாசி சரி- நேற்றோ பிழை மகளே!
அன்று கலவா நாள் அனைத்தும் சமம் மகளே!
ஆதி முதல் ஆண் பெண் ஆதாமாம், ஏவாளாம்?

பாதி தனைச் சிவனார் பார்வதிக்கே தந்தாராம்?
பிரமனோ நாக்கினிலாம்? பெருமாளோ மார்பினிலாம்?
வரலாறு அல்ல இது- வரைந்த பழங்கதைகள்!
'பெண்ணின் பெருமை; தனைப் பெரும் வி.க. தந்திட்டார்!
பெண்கட்டு தாலியையும் பெரியார் வெறுத்திட்டார்!
நள்ளிரவில் பெண் வெளியே நற்காப்புடன் சென்று

துள்ளியே வீடுவரின் 'சுதந்திரம்' தான் என்று
அண்ணலார் காந்தி மகான் அன்றே உரைத்திட்டார்!
பண்ணும் பரதமும் பாவைக்குரித்தன்றாம்!
ஆயகலைகள் எனும் அறுபத்து நாலுமுண்டாம்!
பேயராம் ஆண்கள் இனும் பேய்காட்ட முடியாதாம்!
பெண்ணமைப்பு இன்றெங்கும் பெருகி வளர்கிறது!
விண்ணூர்தி ஓட்டிவரும் வித்தைகளும் கற்றுள்ளார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சத்துப் பேரின்பம் உயர்பெண்ணே என்றுரைத்தார்,
கச்சணியும் மாதர்க்காய்க், கவிப்பேரரசரவர்!

தொட்டேகலையுரிந்தான், துரோபதைக்கு அக்காலம்,
கட்டாயம் சூடென்றார், கலைவாணர் இக்காலம்!
பெண்ணை நுகர்ந்து விட்டுப் பேயென்றுரைத்ததெலாம்!
மண்மூடிப்போனதினால் மாதர்தலையெடுத்தார்!
காலமும் மாறியதாம்- கனபேர் வெளிநாட்டில்!
கோலமிடுவதும், குப்பைகளைக் கூட்டுவதும்,
அடுப்பில் சமைப்பதுவும், அங்காடி செல்வதும்,
படிப்பாச்சு ஆண்கட்கும்! பாதி ஆண் -பெண் மீதி!
குழந்தை பிறந்திடவும் குழாய் வந்து சேர்ந்தாச்சு!
பழகும் முறைகளிலும் பண்பாடு புதிதாச்சு!
நாண் மறைந்து போனாலும், நற் 'கராத்தே' வந்தாலும்

ஆண் அடிமை என்ற நிலை ஆகாவிடில் சரியே!
இன்னும் சமமாக எவ்வளவோ உள்ளதடி!
தன்பெயரின் முன்னாலே தலைப்பெயரேன் ஆண் என்பார்!
எப்படியும் படிப்படியாய் இருபாலும் சமமாயின்
எப்படியாம் உடையாலே இருவரையும் காண்பதுவோ?
இல்லறங்கள் என்னாமோ? எனும் அச்சம் வந்திடினும்
நல்லறங்கள் எதிர்காலம் நாட்டில் வளருமடி!
ஏனென்றால் போர்க்களத்தில் இருபாலும் உண்டலவோ?
நானென்று மார்தட்டி நம் ஆண்கள் ஆளுவரோ!
அஞ்சாதே என் மகளே, ஆண்பெண் சரிசமமே!

துஞ்சி எழு- பணியைத் தொடர்வாய் விழிப்போடே!

## 5. முயன்றால் முடிந்திடுமா?

எந்தன் திருமகளே இறுதியிலே ஐந்தான
இந்தவினா தன்னை என்னிடத்தே கேட்கின்றாய்!
**முயன்றால் முடிந்திடுமா** முற்றுமே? என்கின்றாய்!
முயன்றே வினவுகிறாய் முயன்றே விளக்குகிறேன்!
முயலாமல் இங்கெந்த முன்னேற்றமும் கிடையா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி உயிர்க்கெல்லாம் மூலதனமாம் மகளே!
பறவை முயன்றாலே பார்ப்புக்கிரை கிடைக்கும்
கறவை முயன்றாலே கன்றுக்குப்பால் கிடைக்கும்
எறும்பு முயன்றாலே இனிப்பை இழுத்து வரும்!

வெறும்பானை பொங்கிடுமோ வேண்டும் அரிசியடி!
மனிதன் வரு முதலே மாமுயற்சி ஈண்டுளது!
தனியாக- கூட்டாக சாகும்வரை முயல்வே!
ஆதிமனிதரெலாம் அலைந்தார் உணவிற்காய்!
பாதிநாள் மந்தையுடன் பல இடமும் போனார்கள்!
கிண்டிப் பயிர் விளைத்தார் கிடங்கில் மரை பிடித்தார்!
கண்டு பிடித்தார் தீ, கல்லோடு கல் தேய்த்தே
சமைத்தார்- உடைகண்டார்! தங்கச் சிறு குச்சில்
அமைத்தே குடியிருந்தார்- அத்தனையுமே முயற்சி!
விலங்கின் கொழுப்பாலே விளக்கிற்கு நெய்வார்த்தார்!

கலங்காதிருக்க வழி கண்டார் 'கடும்' தெய்வம்!
கட்டு மரம் கட்டி கடந்தார்கள் ஆறுகளை
பட்டமரம் போட்டே பாலம் அமைத்தார்கள்!
அல்லாய்ப்பகலாய் அயராது உழைத்தார்கள்
எல்லாம் படிப்படியாய் இயற்றி வளர்ந்தார்கள்!
முயலாதிருந்திருந்தால் முன்னேற்றம் வந்திருக்கா!
வயலேது- நெல்லேது? வரகேது- தினையேது?
பாலேது- தயிரேது? பருகுதற்கு மோரேது?
வேலேது- அம்பேது? வில்லேது- வாளேது?
இல்லேது - மனையேது? ஏரி குளம் தானேது?

சொல்லேது ஒலியேது? சுவையானபாட்டேது?
மானிலத்து முன்னேற்றம் மனித முயற்சிகளே!
கானில் கிடந்தவனே கனமாடி வீட்டிலுளான்!
புவி தட்டையல்லவெனப் போணிக்கஸ்ஸார் கண்டார்!
புவி வானவூர்தி தனைப் போற்றும் றைட்ஸ் கண்டார்!
நீராவி வண்டி தனை நீளு ஜேம்ஸ் வாட் கண்டார்!
ஆராய்வு மின் விளக்கை ஆம் எடிசனார் கண்டார்!
நிலத்தின் இழுப்பதனை நியுட்டனார் கண்டறிந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வெடி மருத்தை    உயர் சீனர் கண்டறிந்தார்!
குருதியின் சுற்றோட்டம்    கூறினார் கார்வே யார்!

அரும்பென்சிலின் தன்னை    அறிவித்தார் பென்சமினார்!
விசர்நாய் மருந்துதனை    வெளியிட்டார் பாஸ்டரவர்!
அசல் போரின் ஏ.கே யை    ஐக்கின் அறிவித்தார்!
பெரும் சாரணர் தம்மை    பேடன் பவல் தந்தார்!
அருங்களத் தொண்டுதனை    ஆற்றினார் நைற்றிங்கேல்!
கொலம்பஸ் அமெரிக்கா!    குக்- லிவிங்ஸ் ஆபிரிக்கா!
நலமுடன் மகெலன்    நம்புவியைச் சுற்றிவந்தார்!
இன்னும் பலபேர்    எவ்வளவோ கண்டார்கள்!
இன்னல் முயற்சிகளால்    எவ்வளவோ முன்னேற்றம்!
சீனநெடுஞ்சுவரும்,    சிறப்பான பிரமிட்டும்,

ஆன சாய் கோபுரமும்,    ஆக்ரா மகா லதுவும்,
பபிலோனியா தொங்கும்,    பாரிசின் ஈப லதும்,
சுவெஸ்சும்- பனாமாவும்-    தொடர்மாடிப்பல அடுக்கும்
மக்களது ஆற்றலுக்கே    மகத்தான சான்றுகளாம்!
மிக்கவலு ஏதுமில்லை-    மேம்பாடு மானிடமே!
நாமென்ன கண்டறிந்தோம்?    நல்லுலகுக் கேதளித்தோம்?
போமவ்வுலகுதனைப்    புகலும் வடமொழியின்
கோயிலும்- ஓவியமும்-    கோபுரமும் சிற்பமதும்-
காயும் பல தெய்வக்    கற்சிலையும்-பண் கூத்தும்-
புரட்டும் பலநாலும்    புவியை முன்னேற்றினவா?

அரசெங்கே- நாடெங்கே?    அரியதமிழ்தானெங்கே?
ஏன் அவதிப்படுகின்றோம்,    ஏதிலிகளாயிங்கே?
வீண்முயற்சியாகினவே!    வெறும்பொழுது பேக்கினமே!
முயற்சி சிலவேளை    முழுத்தோல்வி கண்டிடலாம்?
அயர்வுதான் கூடாது-    அடுத்தும் முயற்சியதே!
'அருமை உடைத்தென்று    அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி    தரும்; (611) என்றார் எம்குறளார்!
முயற்சி திருவினை    ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி    விடும் என்றார்(616) இன்குறளார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றார் சிரித்திடுவார்- வெல்லாவிடில் அழுவார்!
ஒன்றா- பல சொல்வார், ஒன்றும் தெரியாதோர்!
ஊழ் என்பார் வினை என்பார்- ஒன்பதிலே சனி என்பார்
பாழ்தான் விதி என்பார் படைத்தோன் எழுத்தென்பார்!
ஏழ்செவ்வாய் என்றுரைப்பார்- இருப்பதொரே செவ்வாய்!
பாழ் ஆக்கும் வடவர்களின் பலநூல் கருத்துக்கள்!
தூக்கி எறி மகளே, தொடர்ந்தே வினையாற்று!
ஆக்கும் முயற்சி பயன்- ஆகாத தேது மிலை!
ஏன்தோற்ற - தெவ்வாறு? என்ன தவறுளது?
கூன் ஊமை நொண்டிமுடம் குருடு செவிடெல்லாம்
ஏன் வந்த- தெவர்செய்கை- இயற்கையாமரபுகளா?

நான் வந்ததாராலே - நமதப்பர்- அப்பப்பர்?
என்றெல்லாம் கேள்விவரின் எட்டும் விளக்கங்கள்
என்றென்றும் ஆய்வுகளால் எம் அறிவர் அறிவார்கள்!
எட்டா இடம் வந்தால் இடு கேள்வி அடையாளம்?!
திட்டம் இடு- செய்-செய்! செயலுக்கிடையூறு
வந்தால் தளராதே! வானமே எல்லையதாம்!
நொந்தால் உளம், உடலை நோகவேவைத்துவிடும்!
இன்று வந்த அமெரிக்கா எழிற்செவ்வாய் ஆய்கிறது!
அன்று வந்த நாமிங்கே 'அனவரதம் விரதம்!;
நோன்பினைக் கைவிட்டோம்- நுவலல் வடமொழியே!

ஏன் என்றால் வெட்கமில்லை- இன-மொழிப்பற்றுமில்லை!
நம்மை முதல் நாமுணரல் நமது முதல் கடமை!
இம்மையிலே களிப்புறுதல் இரண்டாம் கடமையடி!
மறுமை இருந்தாலும் மகளே அது வேண்டாம்!
பொறுமைக்கும் ஓரளவே! பொங்கு வரம்பழித்தால்!
'வில்லங்கம்- ஆனாலும், வேறுவழி இல்லை; என்றார்,
செல்வா! அதுபோன்றே திருவினை ஆக்குவதும்
மனித முயற்சிகளே- மக்கள் உழைப்புகளே!
புனிதம் அதுவேதான் போற்றாய் மனிதத்தை!
ஐ நிலம் போல் ஐங்கேள்வி அறிந்தவரை விளக்கம்!

பொய் உண்மை காணுவதுன் பொறுப்பாம்-தமிழ் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நாற்பது

## (துணை)

06

கார் நாற்பது போன்று களவழியும் ஆகிப்
போர்நாற்பதாயின் புதிதாமோ? - ஊர்எல்லாம்
இன்னாத நாற்பதினால் இனியவை போனவிதம்
சொன்ன தமிழ்த்தாயே துணை!

### 1. இயற்கைப்போர்

இயற்கையே போர்செய்து எம்மவரைத் தூண்டிவிடின்
செயற்கையாய் இங்கிவரும் செய்யாரா? வியப்பான
மின்னல் முழக்கம் மிக்கபுயல் பூகம்பம்
பொன்வெள்ளம் எல்லாமே போர்!

### 2. தீப்போர்

காட்டுத்தீ பற்றும், கருகும் மரமெல்லாம்!
நாட்டில் நுழைந்தும் நலந்தீய்க்கும்! - பாட்டிலே
படருமாம் நீர் கண்டால் பாயும் புகைசூழத்
திடமாகிப் போராடும் தீ!

### 3. நீர்ப்போர்

ஆற்றுநீர் அத்தனையும் அள்ளிவருமே, வானம்
ஊற்றுநீர் கூடின் உயர்வாகும்! - சேற்றினது
வயலும் விளைபயிரும் வரப்பும் கடலாக்கிப்
புயலாக நீர்ஆடும் போர்!

### 4. வளிப்போர்

தென்றல் வளியதுவும் சீறிப்புயலானால்
வென்றுவிடும், யாவும் வீழ்ந்து விடும்! - நின்றிங்கு
நீடித்தால் வெளியாக்கி நிலத்தோடும் போராடி
வாடிக்கை கேட்கும் வளி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. நிலப்போர்

மண்வாய் பிளக்கும், மனைகள் இடிந்துவிழும்!
தண்ணீர்க் கடலாய்த் தரைமாறும்! - மண்நீருள்
மாண்டும் மடிந்திடுவர், மக்கள் உயிரோடு?
நீண்டபோர் செய்யும் நிலம்!

## 6. வெளிப்போர்

கதிர்வீச்செரிக்கும், கற்கள் எரிந்துவிழும்!
எதிர்நீச்சல் போடுமே ஏவுகணை! - உதிருங்கல்
பட்டால் உயிர்வாழும் பந்தும் பிளந்திடலாம்?
வெட்டைப்போர் செய்யும் வெளி!

## 7. உயிர்ப்போர்

உலகத்துயிரெல்லாம் ஒவ்வொன்றும் போராடும்!
கலகம் அமைதியையும் காண்பிக்கும்! - சிலவேளை
வலிவு மெலிவுடைய வாழ்வை நசுக்குங்கால்
மெலிவு போர் ஆடுதலே மேல்!

## 8. பறவைப்போர்

பறவை இனத்துள்ளும் பலமேல் சிலகீழாம்!
உறவாடிக்காட்டினும் உள்ளன்பு - பறவாத
குஞ்சைப் பருந்து குறிவைப்பின் தாய்க்கோழி
அஞ்சாது போராடும் ஆம்!

## 9. விலங்குப்போர்

நாற்கால் விலங்குள்ளும் நல்லவையும் தீயசெயல்
மேற்கொள்ளல் தானே மிகுதுயரம்! ஏற்பாமல்
ஆண்பூனை குட்டிகளை அப்படியே உண்ணுமெனப்
பேண் முறையில் போராடும் பெண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. நுண்ணுயிர்ப்போர்

*கண்ணில் படாமல் கனநுண் உயிர்வாழும்,*
*மண் காற்று நீரில் மறைவாக! - புண்மாற்றப்*
*போராடி மாய்கின்ற புதுவெண் அணுக்கூடச்*
*சீராகச் செய்யும் செயல்!*

## 11. வாழ்க்கைப்போர்

*வாழ்வும் ஒரு போரே! வந்துமே போமட்டும்*
*தாழ்ந்துமே போவதெலாம் தம்பாடே! - வீழ்ந்தாலோ*
*எழுந்து விடுவதுவும் எழும்பாதிருப்பதுவும்*
*விழுந்தாரின் போரே விடு!*

## 12. கருப்போர்

*கருவொன்றமைந்திட்டால் காணாப்போர் உள்நிகழும்!*
*பெரும்பாடாம், தாய்க்கதுவும் பேரின்பம்! - உருவாகி*
*வெளியேறிவந்திட்டால் வெற்றிதான், வாராட்டால்*
*பழியாகும் போகூழ்ப் பயன்!*

## 13. குழவிப்போர்

*கால்கை அடித்தபடி கண்ணைச்சுழற்றி வரும்!*
*தால் ஆட்டி ஆதித்தமிழ்பேசும்! - பால்கேட்டு*
*வாய் நா சுவைத்தபடி வருந்தாய் வழிபார்க்கும்!*
*சேய்செய்யும் போரின் திறன்!*

## 14. பிள்ளைப்போர்

*ஓடிவிழுந்து வரும்! ஒவ்வோர் பொருளாகத்*
*தேடிக் கொணர்ந்து சிறைவைக்கும்! - கூடிப்போய்*
*மணலிற்கிடந்தாடும்! மறக்கும் பிறவெல்லாம்!*
*குணப்பிள்ளைபோரின் குறி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. இளமைப்போர்

'எல்லாம் முடித்திடுவன்' என்றே தலைநிமிரும்,
பொல்லாப் பருவத்துப் போர்க்காளை! - தொல்லையினைத்
துரசாய் மதித்துத் தொடர்ந்தே பயணிக்கும்
மாசாடா வெள்ளை மனம்!

## 16. காதற்போர்

கட்டைஉடைக்கும், கடலாய் மடைபாயும்,
சட்டம் தடையானால் சாவணைக்கும்! திட்டமிடும்
காதற்போர் கொஞ்சம் கடும்போரே, இங்கிதனால்
மோதலும் நேர்ந்துளவாம் முன்!

## 17. உணவுப்போர்

நிலங்குன்றி நீர்பெருகின் நிலமெல்லாம் ஆள்பெருகின்
நலங்கள் நிறைந்திடுமோ நாட்டார்க்கே? - கலங்கியே
ஓடி உழைக்கின்றார், உயர்விலையில் போராடித்
தேடித்திரிகின்றார் தீன்!

## 18. உடைப்போர்

புத்தாடை ஆடையெனப் போராடிப் பெற்றிடுவார்!
பத்திருக்க ஆடை பதினொன்றும், - முத்தோடு
தங்கம் வைரமெலாம்! தரமில்லார் கந்தலொடு
எங்குந் திரிவார் எதிர்!

## 19. இல்லப்போர்

இல்லங்கள் தோன்றியே இல்லாமலும் போகும்!
கல்லு மரம் 'சீற்' களவும்போம்! எல்லாமே
போராலே என்றிடுவார், போரின் அடிப்படைகள்
ஆரால்? கோல் வளைவான தால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. பள்ளிப்போர்

பள்ளியிலே ஆசிரியர் பற்றாமை, தளவாடம்
இல்லாமை, போட இடமின்மை, பிள்ளைகளை
ஊக்காமை, பெற்றோரும் உதவிசெய்ய முந்தாமை
பார்க்குங்கால் போரே பயன்!

## 21. கல்விப்போர்

கற்கும்நூல் தேடாமல் கசடறவே கல்லாமல்
நிற்காமல் உச்சம் நிலையாமோ? - தற்காலக்
கல்வித்திருத்தங்கள் கனபோரின் பின்பேதான்!
வெல்விக்கும் போராள் வினை!

## 22. மொழிப்போர்

வந்தோர் தமதுமொழி வளர்க்கும் முறையாலும்,
முந்தையோர் தேய்க்கும் முறையாலும் - நந்தமிழைப்
போராடிப் பெற்றேனும் புத்தாக்கம் காணோமேல்
வேராடும் - சரியும் - விழும்!

## 23. நெறிப்போர்

குறளே நெறியாகக் கொண்டுயாம் வாழ்ந்து வரின்
அறமே துணையாகும் அன்போடு! - பிறமாந்தர்
வாழாது விட்டாரேல் வாழவிடமாட்டாரேல்
பாழாகும் போர்காண் பயன்!

## 24. இனப்போர்

இனத்துக்கினம் போரால் எழும்பும் விழுந்துவிடும்!
சனத்தைப்பெருக்கிச் சனம்மாய்க்கும்! - கனத்தாலே
அச்சத்தை ஊட்டும், அடிமைப்படுத்தி விடும்!
மிச்சங்கள் போராட்டமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. ஆட்சிப்போர்

ஆளும் பெருகியது! ஆளப்படும் சிறிது!
மாளும் படிப்படியாய் மாறிவிடும்! - நீளப்போர்
ஆடிப்பிடிக்காமல் ஆட்பட்டிருப்போர்கள்
வாடிக்கிடந்தோடு வார்!

## 26. முயற்சிப்போர்

முயலுவதே மனிதம்! முயற்சிகள் தோல்வியெனில்
முயலல், முயலல், முயலல் தான்! - முயலும் போர்
நின்றிடவே கூடாது! நின்றாலோ வேறுவழி
ஒன்றுமே இல்லை அந்தோ!

## 27. உறக்கப்போர்

உறக்கம் உடல்தேவை! உறக்கத்தால் வாழ்வெல்லாம்
துறக்கும்நிலை கூடத்தோன்றிடலாம்! - மறக்காமல்
அளவாய் உறங்கிடுவோம், ஆமாம் விழித்திடுவோம்!
வளங்காண்பர் போராடுவார்!

## 28. பணப்போர்

பணத்தைப் பணம்நாடும், பசிப்போரை நாடாது!
பிணத்தை எழுப்பியும் பேசவிடும்! - குணத்தையும்
மாற்றி அமைத்து விடும், மறைக்கும் - பணத்தின்போர்
தோற்றதும் உண்டுமோ சொல்?

## 29. புகழ்ப்போர்

தேடின் கிடைக்காது, தேடாரைச் சென்றடையும்!
ஓடிப்பறப்பார் உலகெங்கும்! - கோடியாய்க்
காசால் பெறுவோர்கள் கண்மூட விட்டுப்போம்!
பேசாப்புகழ்ப் போர் பெறும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. எண்ணப்போர்

எண்ணங்கள் தோன்றும், எடுத்தோதும் வாய்ப்புவரும்!
திண்ணம்பயன்தான் செயலாயின்! - கண்காதால்
கண்டாலும் கேட்டாலும் கருத்துப்போர் ஆய்ந்தாலே
உண்டாக்கும் அறிவார் உளம்!

## 31. உரிமைப்போர்

உரிமை இழந்தாலோ ஒருபோதும் மீளாது!
பெருமை அதுபற்றிப் பேசுவதே! - ஒருமையிலே
நின்றாலே வென்றிடலாம் நீளும் உரிமைப்போர்
அன்றாடம் அழிவே அறி!

## 32. அழிப்புப்போர்

அழிப்புச்செயல் ஒன்றே ஆட்சிக்கலையானால்
விழிப்பு முதலிருந்து வேண்டிதே! - கழிப்பாரின்
கால்பற்றி வாழ்வதிலும் கடமைப்போர் ஆற்றுவதே
கோல்செம்மை கொள்வார் குணம்

## 33. ஆக்கப்போர்

ஆக்கப்போர் செய்கையிலே அழிவுப்போரும் செய்தால்
ஏக்கம் ஒருபால் இருக்குந்தான்! - நோக்கத்தை
வெளியாலே சொல்லாமல் வெந்துயரைக்கூட்டுவது
அழியாத வடுவாகு மாம்!

## 34. அறிவுப்போர்

அறிவோடி முன்னேறும், அறியாமை பின்னிழுக்கும்!
பறிபோகும் உள்ளப்பயன்பாடு! - செறிவோடும்
அறிவுப்போர் வெற்றி பெறின் அறியாமைப்பேய் ஓடும்
நெறிநிற்பர் மாந்தர் நிலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. அறியாமைப்போர்

அறியாமைப்போருக்கே அதிகம் பேர்சேர்கின்றார்!
அறிவு ஏன் - எப்படியென் றாராயும்! - அறிவாய்ந்து
சிந்திக்க முடியாதோர் செம்மறிபோ லாகின்றார்!
சந்தித்தல் சங்கடந் தான்!

## 36. குடிப்போர்

குடிமக்கள் பண்பினையே கொள்வார்கள் செல்வமென!
படிப்பின் அறிவெல்லாம் பண்பின்பின்! - குடிமைப்போர்ப்
பண்பாலே வள்ளுவரின் பழமைக்குடி தெரியும்!
நண்பாலே தெரியும் நடு!

## 37. நாட்டுப்போர்

நாடென்றால் தாய்நாடே, நாடாவளத்தனவே!
நாடின்றேல் வீடு நமக்கில்லை! - நாடழியின்
நாமழிவோம், இங்கிதனை நன்குணர்ந்தார் புரிவர்
போமளவுமே நாட்டுபோர்!

## 38. அறப்போர்

கரியும் கரியுமெனில் காலாளும் ஆளுந்தான்!
பரியும் பரியும் போர்ப் பண்பாடே! - வரிவானில்
குண்டூர்தி ஒருபக்கம், குடிமக்கள் மறுபக்கம்
சண்டை அறம் ஆகுமோ தான்?

## 39. மறப்போர்

அறப்போரே வீரப்போர், அறத்தின் எதிர்ப்போரே
மறப்போர் - கொலையாக மாறும்போர்! - இறப்போரை
எண்ணிக் கலங்காத இழிவுப்போரா மிதனைப்
பண்ணிடுமோ அஞ்சாப் படை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. இறுதிப்போர்

இறுதி முதுமைப்போர் எல்லோர்க்கு மாமெனினும்
உறுதி சிலருக்கே உண்டதிகம்! - அறுதியாய்க்
கண்டு கேட்டுண்டுயிர்த்த காலங்களை எண்ணித்
திண்டாடிச் செல்வார் சிலர்!

### (பயன்)

போர்ஆடி ஆடியே போகின்ற வாழ்விற்கே
போர் நாற்பது வெண்பா போதாதேல் - பார்மீதில்
கூட்டலாம் இன்றேல் குறைக்கலாம், ஆனாலும்
ஆட்டம் போர் ஆட்டமே ஆம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை

07

## 01. புத்தர் பெருமான்

சுத்தோதனரின் துணையாமே
தூய விகார மாதேவி!
சித்தாத்தர் அவர் மகனாமே!
சீரிய புத்தரும் இவர்தாமே!

அன்னார் மனைவி யாசோதரையாம்!
அவர்தம் புதல்வன் இராகுலனாம்!
அந்நாள் அரச குமாரன் அவர்!
ஆனால் அதிலே விருப்பமிலை!

ஒருநாள் வெளியே வந்தாராம்!
ஒருமூத்தாரை கண்டாராம்!
ஒரு நோயாளியும் கண்டாராம்!
ஒரு பிணமதையும் கண்டாராம்!

பாதிப்படைந்தார் யோசனையால்!
பாசம் யாவும் துறந்திட்டார்!
போதித்தாரே கபில வஸ்தில்!
புத்தம் பிறந்து பரந்ததுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. இயேசு நாதர்

பெத்தலகேம் தன்னில்
பிறந்த வராம் யேசு!
அத்தலத்தின் பெற்றார்
ஆம் மரியாள்... யோசேப்!

அப்பர் பெரும் தச்சர்!
ஆட்டை இவர் மேய்ப்பார்!
எப்பொழுதும் வாழ்ந்தார்
எளிமையோடு தானே!

நல்ல "பைபிள்" சொன்னார்!
நாட்டிளைஞர் கேட்டார்!
கொல்லத் திட்டம் போட்டே
கொடுமை செய்தான் மன்னன்!

சிலுவை மாட்டிக் கொன்ற
செயலையும் மன்னித்தார்!
உலகும் கிறீஸ் தவத் தால்
உயர் வடைந்த தாமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. நபிகள் நாயகம்

அப்துல்லாவுக் கேற்ற
ஆமினாவின் மைந்தர்!
எப்பொழுதும் தூய்மை
இணைந்த தோழமைகள்!

கதீஜா செல்வம் காக்க
கணவரான முகம்மத்!
குதூகலிக்கும் பாத்திமாக்
குழந்தையையும் கண்டார்!

புதிய போத னை யால்
புறப்பட்டார் மதீனா!
சதிபுரிந்த பேரைச்
சண்டையிட்டும் வென்றார்!

திருமறையின் தூதர்
திறமை கண்ட மக்கா
ஒரு மனதாய் ஓதி
உலகை ஈர்த்ததாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. காந்தி மகான்

காந்தி பிறந்தாரே - மகாத்மா
    காந்தி பிறந்தாரே!
சாந்த குணத்தோடே - மோகன
    தாசர் பிறந்தாரே!

இந்தியா போபந்தர் - குஜராத்
    ஏற்றம் பெறலாச்சே!
அந்த மா லண்டனிலே - படித்தே
    ஆனார் வழக்கறிஞர்!

தென்னா பிரிக்காவில் - சென்றுமே
    தேச நலம் புரிந்தார்!
அந்நாளில் வெள்ளையரை - எதிர்த்தே
    அகிம்சைப் போர் புரிந்தார்!

சத்திய சோதனையைத் - தந்துமே
    தந்தார் விடுதலையும்!
இத்தரையில் காந்தி - இறந்தும்
    இருந்து கொண்டிருப்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. இராமகிருஷ்ணர்

கற்றிடாமல் கற்றவர்!
கல்வி தன்னைப் பெற்றவர்!
பெற்ற கல்விப் பேற்றினைப்
பிறருக்காகத் தந்தவர்!

சாரதா வைக் கொண்டவர்!
'சக்தி'யாக கண்டவர்!
தீரமான சீடரைச்
செயலுக் காக்கித் தந்தவர்!

இராமரோடு கிருஷ்ணராய்
இந்தியா வங் கத்திலே
வராதிருந்து வந்தவர்!
வாழ்வு மோகம் தீர்த்தவர்!

இன்று கிருஷ்ண சங்கமே!
ஈழ மெங்கும் பள்ளியே!
நன்று வாழ வேண்டுமே
நல்லொழுக்கம் ஓங்கியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. விவேகானந்தர்

நல் விவேகம் கொண்டுமே
நரேந்திரராய் வந்தவர்!
கல்கத்தாவின் இராமரைக்
கண்டு தெய்வம் கண்டவர்!

வேகமும் விவேகமும்
வெற்றி தந்த தன்மையைப்
போக வைத்து மேற்கிலே
போற்றி நின்ற திந்தியா!

கூனி நின்ற இளைஞரின்
கூன் நிமிர்த்த வந்தவர்!
நானிலத்தில் 'இந்து'வின்
நலம் பரப்பி நின்றவர்!

எழுச்சி கொள்ளத் தூண்டிய
எம் விவேகானந்தரின்
அழுத்தமான வார்த்தைகள்
அலுப்பு மா மருந்து தான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. அன்னை திரேசா

உலகக் குழந்தைக் கொரு தாயே!
உண்மைத் தொண்டின் உயர்வடிவே!
கலகம் தெரியாக் கனி மனமே!
கண்டோர் பணியும் கலை உருவே!

எங்கோ பிறந்தாய் இங்குள்ளாய்!
இருப்பானாயே கல்கத்தா!
எங்கும் உன்பேர் எதிரொலியே!
இல்லார் பிள்ளைக் கிறை அருளே!

உள்ளம் வெள்ளை உடல் வெள்ளை!
உடையும் வெள்ளை ஊர் வெள்ளை!
அள்ளிப் பயிற்றும் நூல் வெள்ளை!
அனைத்தும் வெள்ளைக் கலை வாணி!

அன்னை திரேசா ஆனவளே!
அனாதை துயரம் தீர்ப்பவளே!
உன்னை என்றும் மறவோமே!
உயர்வாம் பணிகள் தொடர்வோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. அன்னை சாரதா

அன்னை யான சாரதா!
அன்பு மிக்க சாரதா!
தன்னை மாந்தர் உயரவே
தந்து நின்ற சாரதா!

பெண்மை காத்த பிறவியாம்
பெரிய இராம கிருஷ்ணரின்
உண்மையான பக்தியை
உயர்த்தி விட்ட சாரதா!

பெற்றிடாத மகனையும்
பெற்றளித்த சாரதா!
முற்றும் காளி அருளென
மூழ்கி நின்ற சாரதா!

இல்லறத்தில் துறவறம்
ஏற்று நின்ற பெண் இவள்
நல்லறத்தை நாடினால்
நாடும் வீடும் வாழுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. பெரியார் ஈ.வே.ரா.

செய்தற்கரிய செய்வாரே
திருவள்ளுவரின் பெரியாராம்!
'ஐயா ஈ.வே.ரா.' என்பார்
அறியா அறிவில் பெரியாரே!

இராம சாமி நாயக்கர்
ஈரோட்டுக்கு மட்டுமலர்
இராமர் தமக்கும் சாமி அவர்!
எதிர்ப்புக்கஞ்சா வீரர் அவர்!

தன்மானத்தின் தந்தை அவர்!
தமிழர் மரபின் காப்பாளர்!
முன்மாதிரியாய் வாழ்ந்தாரே!
மூடர்கொள்கை சாடினரே!

ஈவேரா வைப் பிடியாதார்
ஏற்கார் அவரைப் பெரியாராய்!
சாவே இல்லார் - எதிர் நாளெம்
சமூகம் வாழும் வரை வாழ்வார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. அறிஞர் அண்ணா

காஞ்சி நடராசன் - பங்காரு
கண்ட துரை மகனாய்
வாஞ்சையுடன் தமிழை - வளர்க்க
வந்துதித்தார், அவரை

கூடிப் பிறக்காமல் - நம்மையும்
கூறிடச் செய்த 'அண்ணா'!
நாடிட வைக்கும் அவர் - அறிஞர்,
நடிகர், நாடகத்தார்!

பேச்சினையும் ஆண்டார் - தமிழின்
பேரெழுத்தும் ஆண்டார்
மூச்சுக் கழகமதால் - தமிழக
முதல்வர் ஆகி நின்றார்!

தமிழின் - ஆங்கிலத்தின் - ஏட்டினால்
தாகம் தணித்து வந்தார்!
அமுதம் தந்த அவர் - இடையில்
அமரர் ஆகி விட்டார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. மக்கள் திலகம்

மூன்றெழுத்து மன்னராம்!
முழுப் புரட்சி நடிகராம்!
ஈன்ற தாயே தெய்வமாம்!
இனிய மக்கள் திலகமாம்!

ஈழமண்ணில் வந்தவர்!
எமது சேர நாட்டவர்!
வாழுமாறு அள்ளியே
வழங்கிவள்ளல் ஆனவர்!

பழமையற்ற புதுமைகள்
பாடல் மூலம் தந்தவர்!
இளைய சானகியுடன்
இணைந்து வாழ்ந்து வந்தவர்!

தானும் கட்சி கண்டவர்
தமிழகத்தை ஆண்டவர்
ஆனமட்டும் செய்தவர்
ஆயிரத்தில் ஒருவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பாரதியார்

பாட்டுக் கெனவே பிறந்தாராம்!
பாரதி எனும்பேர் பெற்றாராம்!
வேட்டுப் போன்றே விளங்கியதாம்!
விடுதலை காண உதவியதாம்!

தந்தை சின்னச் சாமியராம்!
தாயார் இலட்சுமி அம்மாளாம்!
வந்தார் எட்டயபுர ஊராம்!
வறுமைத் துயருள் வாழ்ந்தாராம்!

குழந்தைப் பாட்டும் பாடிடுவார்!
குயிலின் பாட்டும் கேட்டிடுவார்!
பழம் பாஞ்சாலியும் புதிதாவாள்!
பலவாய்க் கண்ணன் பார்த்திடுவான்!

பாட்டால் வையம் பாலித்தார்!
பலரும் பாடும் படிசெய்தார்!
கேட்டால் தலையோ கிறுகிறுக்கும்!
கேளாச் செவிகள் செவிடாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. பாரதிதாசர்

பாவுக்கொரு வேந்தராம்!
பாரதிக் கோர் தாசராம்!
நாவுக்கெலாம் தேன்துளி!
நல்ல காதில் இனிமை தான்!

கனக சபைத் தந்தையார்!
கண்டதாய் இலக்குமி!
மனமகிழ்ச்சிப் புதுவை யூர்!
மைந்தர் சுப்பு ரத்தினம்!

பாண்டியற்கும் பரிசுதான்!
பார் சிரிக்கும் அழகுதான்!
வேண்டுமோர் விளக்கவர்!
வேண்டா மிருள் வீட்டிலே!

தமிழ் இயங்கும் தனிமையாய்!
தரமிருக்கும் பாடலில்!
அமுதினிக்கும் இசைகளில்!
ஆர்படித்து மகிழுவார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. கண்ணதாசர்

திரையில் படமெடுத்தார் கண்ணதாசர்!
செந்தமிழில் பாட்டிசைத்தார் கண்ணதாசர்!
உரையை அழகு செய்தார் கண்ணதாசர்!
உளத்தை அளந்து கண்டார் கண்ணதாசர்!

முத்தையாப் பேர்படைத்தார் கண்ணதாசர்!
முத்தான நூலளித்தார் கண்ணதாசர்!
தத்துவமும் பாடிவந்தார் கண்ணதாசர்!
தட்டுப்பாடு அற்றதமிழ்க் கண்ணதாசர்!

மாற்றம் அவருடைய மனிதத்துவம்
மறதி அவரெடுக்கும் மாற்று மருந்து!
தேற்றம் அவர் பெருக்கும் சிந்தனைகளே!
சிறப்பை அளிக்கும் இந்துச் சீர்திருத்தமே!

முன்பிருந்தாரே பூவின் வடமுனையில்!
மூளவைத்தாரேசிறு தீப்பொறிகளை!
பின்பிருந்தாரே பூவின் தென்முனையில்!
பிறப்பெடுத்தார் சிறு கூடல் தன்னிலே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. கல்யாண சுந்தரர்

*பட்டுக்கோட்டைச் சுந்தரர்*
*பாடல் தீட்ட வந்தவர்!*
*வெட்டு துண்டு இரண்டு போல்*
*விரும்புமாறு தீட்டுவார்!*

*மூடநம்பிக் கைகளை*
*முறியடித்துப்பாடுவார்!*
*நாடவைத்து நம்மையும்*
*நல்வழிக்கு மாற்றுவார்!*

*நல்லதாயின் கொள்ளலாம்!*
*நடைமுறைக்கு நின்றிட*
*அல்லதாயின் தள்ளலாம்*
*அது திணிப்பதில்லையாம்!*

*எதனைச் சொல்ல வேண்டுமோ*
*இளமை தீரு முன்னமே*
*அதனைச் சொல்லிப் போனவர்*
*அவரை எண்ண மாட்டமோ?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. தேசிக விநாயகர்

தேசிக விநாயகம் பிள்ளை - அவர்
சிறுவர்கள் பாடல்கள் பாடிய பிள்ளை!
ஆசிகள் கூறிடுவோமே - அவர்
அழகான பாடலைப் பாடிடுவோமே!

மலர் என்ன - மாலைகள் என்ன - அதன்
மணமென்ன - வகையென்ன - மாண்புகள் என்ன?
நலமான சொல் ஆளும் பாட்டு - அதை
நன்றென்று சொல்லுவோம் நாம்செவி கேட்டு!

புத்தரும் போதனை செய்வார் - பாட்டில்
பொல்லாப் புலி கூட வாலை முறுக்கும்!
தத்துவம் உமர்கய்யாம் தந்தால் - மகள்
தாயாரிடம் காலம் காட்டியைக் கேட்பாள்!

இராமலிங்கம் பிள்ளை போலே - பாடல்
எமது விநாயகம் பிள்ளையும் தந்தார்!
தராமல் இருந்திருந்தாரேல் - பிள்ளைத்
தாலாட்டுப் பாடிட எங்கு செல்வோமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. சுத்தானந்தர்

சுத்தானந்த பாரதியார்
    தூய்மையான கவியோகி!
சித்தானந்தம் முதல் வேதாந்தம்
    தெரிந்தே வாழ்ந்த சிவவூரார்!

"பாரதசக்தி" காவியமாய்ப்
    பாடிப்படைத்த பழமரபார்!
பேரைப்புகழைப் பேசாதார்
    பித்தர் பிதற்றின் நகைசெய்வார்!

ஈழம் வந்தார் பலதடவை!
    எம் ' மில்க்வைற்'றார் இவர் அடியார்!
'ஏழைபடும்பா' டிவர்பெயர்ப்பு!
    இசைப்பாடல் பல இவர்பதிவே!

திருக்குறளுக்கும் உரைதந்தார்!
    திருப்புகழ் ஒன்றும் செய்திட்டார்!
'திருநூல்' குறிப்பாய்த் தீட்டியவர்!
    சிறுவர் பாடலும் சேர்ந்துளதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. வரதராசர்

ஈரெழுத்துக்காரர்
எத்தனையோ பேராம்!
பேரும் மூனா வானா!
பெரும் படிப்புக்காரர்!

தந்தை முனுசாமி
தரும் வரதராசர்!
செந்தமிழே தந்தார்
திரு வி.க. வைப்போல!

மொழியின் வரலாறா?
முழுமைக்குறள் தெளிவா?
பழமைச் சங்க நூலா?
பரவல் தொடர் கதையா?

நடு நிலைமை உள்ளோர்
நாட்டில் சில பேரே!
படு மனத்தர் நூல்கள்
பாழ் படுத்தும் தானே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. திரு.வி.க.வார்

*திருவாரூர்ச் சுந்தார்*
*தேச பக்திக்குரியவர்!*
*திரு.வி.க. ஆனவர்*
*செந்தமிழாய்ப் பொழிபவர்!*

*தொழிற் சங்க வாதியாய்த்*
*தொண்டு செய்து வந்தவர்!*
*அழிவிலாத நூல்களை*
*ஆக்கித் தந்த பெரியவர்!*

*பெண்ணின் பெருமை சொன்னவர்!*
*பெரிய மகான் காந்தியின்*
*கண்ணியத்தைக் கண்டவர்!*
*கடுமையாக உழைத்தவர்!*

*போற்றுபவை போற்றினார்!*
*புகழ்விருப்பம் அற்றவர்,*
*தூற்றுவன தூற்றினார்!*
*சொல்லைச் செய்து காட்டினார்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. தி.த.க.வார்

திருகோணமலைத் தமிழறிஞர்
தி.த.கனக சுந்தரனார்!
பெருக்கப் பணிகட் குதவியவர்
பேரும் புகளும் விரும்பாதார்!

பெருந்தமிழ் அறிஞர் பலருக்கே
பெருநூல் பலவும் தந்தாரே!
அருந்தமிழுக்கே அவர் தொண்டாம்
அறியார் பலபேர் அது குறையோ?

ஓடித்திரிந்தார் நூல் தேடி!
உ.வே.சா போல் பணிசெய்தார்!
நாடிச்சிலரொடு நட்பானார்!
நல்லுரை தந்தார் சிலநூற்கு!

தமிழகம் தன்னில் வாழ்ந்தாலும்,
தம்மகன் மார்கலை கற்றாலும்,
தமிழ் பிறவற்றால் தாழ்ந்தாலும்
தமிழ் உணர்வவோடும் வாழ்ந்தாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. ஆறுமுகநாவலர்

*ஆறுமுக நாவலர்*
*அரிய சைவக் காவலர்!*
*வேறு மதம் தீண்டவே*
*விட்டிடாது காத்தவர்!*

*கந்தர் சிவகாமியர்*
*காதல் மகன் ஆனவர்!*
*கந்தர் நல்லூர் வந்தவர்!*
*கல்விக் கிடம் தந்தவர்!*

*இலக்கணத்தில் வீழ்ந்தவர்!.*
*இலக்கியத்தில் ஆழந்தவர்!*
*பலப்பல புராணமும்*
*படித்துரைகள் செய்தவர்!*

*அச்சகமும் பதிப்புமே*
*அருந்தமிழ கத்திலும்!*
*மெச்ச வேண்டும் நாவலர்*
*மேன்மையான பணிகளை!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. சோம சுந்தரர்

சோமப்புலவர்தமை - நவாலியின்
சுந்தரப் பாவலரை
சேமமுறச் சிறுவர் - செந்தமிழ்
தீட்டி விடுத்தவரை

நாமும் படித்தறிந்தே - வணங்கி
நற்புகழ் எய்திடுவோம்!
ஆமதுவே அவர்க்கு - நாம்புரி
அற்புத நன்றிக்கடன்!

சொல்லைத் தெரிந்தெடுத்தே - படைத்தார்
தூய தமிழ்ப்பாடல்!
நல்ல இசையுடனே - படித்தால்
நம் உளத்தில் பதியும்!

சின்னஞ்சிறு கதையைப் பாடலால்
தெரியச் செய்யும் அவர்
பென்னம் பெரும் புலமை - தெரிந்தால்
பெரும் வியப்பலவோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. ஞானப்பிரகாசர்

ஞானப்பிரகாசர் - பலமொழி
நன்கு படித்தறிந்தார்!
ஞானத்து நல்லூரில் - பிறந்தே
நல்லகராதி தந்தார்

சொற் பிறப் பொப்பியலின் - ஆய்விலே
சோர்வின்றியே உழைத்தார்!
கற்பதும் உண்டாமோ - நன்றியாம்
கடனும் தீர்ந்திடுமோ?

வைத்தியலிங்கம் - ஞானமாய்
வந்து தமிழ்ப் பணிக்கே
வைத்தியம் பார்த்தும் - அதனை
வாழ்த்திடுவார் குறைவே!

பலமொழி அறிந்தோர் - உலகினில்
பற்பலரில் சிலரே!
நலம் பெறுவதெனில் - ஒப்பியல்
நாமும் அறிந்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. தாவீது அரசன்

*சிங்கராயர் தாவீதாய்*
*சிறந்த தும்பளை வந்தாராம்!*
*அங்கோர் சம்பத் கல்லூரி*
*அதிலே கற்றார் - கற்பித்தார்!*

*பலமொழி அறிவு - பலபட்டம்*
*பல கழகத்தினில் ஆராய்ச்சி!*
*சிலமொழி ஆழம் சிலராலே*
*தேர்வுகள் பல - பல தேயங்கள்!*

*சில ஒப்பியலை தாவீதும்*
*தேர்ந்தொவ்வொன்றாய் வெளியிட்டார்!*
*பல நூல் எண்பத்தொன்றினிலே*
*பாழாய்ப் போயின, போயினவே!*

*தமிழ் நூல் எரிந்த சேதியினால்*
*தாவீதடிகள் உயிர்விட்டார்!*
*தமிழுக்காய்த் தம் உயிர்நீத்த*
*தாவீதடிகள் வாழியவே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. தனிநாயக அடிகள்

செந்தமிழை பரப்பினார்
　　சேவியர் தனி நாயகம்!
எந்தநாளும் மனதிலே
　　இருந்து கொண்டிருப்பவர்!

கற்ற கல்வி கொஞ்சமா?
　　கழக வேலை கொஞ்சமா?
பெற்ற பட்டம் கொஞ்சமா?
　　பேசுதற்கும் முடியுமா?

தமிழை ஆய்ந்து நாடெலாம்
　　தந்த பண்பின் தூதுவர்!
அமுதை அள்ளி யாவரும்
　　அருந்தச் செய்த நாயகர்!

கணியன் - மூலர் வரிகளைக்
　　கருதிச் செய்த பெருமகன்
பணிகள் முற்றும் மறப்பதார்?
　　பாதகங்கள் புரிவதார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. விபுலாநந்த அடிகள்

காரை கொண்ட தீவகம்
கண்ட மயில் வாகனம்!
பேரை நோக்கும் போதிலே
பின் விபுலா நந்தராம்!

கண்ணம்மையும் சாமியும்
கண்டெடுத்த புதையலாம்!
மண்ணில் என்றும் இசையினை
மறந்திடாத யாழ் அதாம்!

கல்வி பட்டம் பதவிகள்
கண்ட போதும் ஆய்வினால்
நல்ல யாழும் ஆங்கிலர்
நாடகமும் வந்ததாம்!

தமிழ் வழங்கு மண்ணெலாம்
தகுந்த கல்வி ஓங்கவே
தமதுழைப்பை நல்கியே
தவம் புரிந்த வித்தகர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. பெரியதம்பிப்பிள்ளை

பெரியதம்பிப் பிள்ளையர்
பேரெடுத்த பண்டிதர்!
அரிய பாடல் யாத்தவர்
அழகுக்கீதை மீட்டவர்!

மண்டு மண்டும் ஊரவர்!
மதித்திருப்பர் கந்தரை!
பண்டை நூற் கலித்தொகைப்
பாக்கள் பாட வைத்தவர்!

உள்ளவற்றில் நல்லவை
உணர வைத்த புலவராம்!
அள்ளி மாணவர்க் கெலாம்
அமுதளித்த குருமணி!

நந்தருக்கு மாணவர்!
நலமளிக்கக் குயிலிடம்
நொந்த போதில் வேண்டினார்,
நுவன்ற பத்தும் வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. ஆத்மஜோதியார்

ஆத்மஜோதி முத்தையா,
அழகாய் வந்தார் ஏழாலை!
பார்த்தார் பள்ளி ஆசிரியர்!
பணியோ நாவல் பிட்டியிலே!

பொன்னுப்பிள்ளை - நாகமணிப்
புதல்வர் ஆகிப் புகழ்பெற்றார்!
புன்மைச் செயலால் பொருள் அழியப்
போனார் உலகப் புதியஉலா!

பேச்சை, எழுத்தை, பெருங்கதையை,
பெருயாத்திரையை, வழிபாட்டை
மூச்சாய்க் கொண்டே பலபெரியார்
முகதரிசனமும் பெற்றாரே!

கைதடி அவரின் கதைசொல்லும்!
கனடா இந்தும் கதைசொல்லும்!
பொய்யறியாத பெருந்தொண்டால்
புகழ்பெற்றாரைப் போற்றிடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. மகாகவியார்

உருத்திர மூர்த்தி!
ஒரு மா கவியார்!
பெருத்திடு தொழிலார்!
பேரெழுத்தாளர்!

தந்தையர் துரையார்!
தாயவர் பத்மா!
முந்தள வெட்டி!
முது யாழ்க் காரர்!

வள்ளி - சடங்கு!
வரளாக் கோடை!
பொல்லாக் கலட்டி!
புதுமைக் குறும்பா!

பல்வகை - பிஞ்சுப்
பாடல் - இசைப்பா!
எல்லாம் நன்னூல்
இவர் மா கவியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. நீலாவணர்

சின்னத் துரையார்!
திரு நீலாவணர்!
தண் நீலாவணைத்
தமிழூர் வந்தார்!

தந்தை கேசகரே!
தாய் தங்கம்மா!
நந்தமிழ் கற்றார்!
நல்லா சிரியர்!

வழி - வே ளாண்மை!
வளமார் ஒத்திகை!
மழைக்கை நாடகம்!
மதிப்புறு பலநூல்!

எழுத்தா ளர்கள்!
இன்புறு சங்கம்!
பழுத்திடு கவிதையைப்
பார் மறந்திடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. அண்ணலார்

கிண்ணியாவின் அண்ணலார்
    கிடைத்திடாத சொத்தவர்!
கண்ணியங்கள் காப்பவர்,
    கடமை - கட்டுப் பாடுளார்!

சாலிஹ் ஆன அண்ணலார்
    தமிழர் வேட்டி கட்டுவார்!
ஏலுமட்டும் பயின்றவர்,
    இலக்கியத்து வாத்தியார்!

கவியரங்கில் நின்றவர்!
    கனவிழாக்கள் கண்டவர்!
நபியின் வாழ்வைப் பிறை'யிலே
    நன்று தீட்டி வந்தவர்!

அகம், புறங்கள் கண்டவர்
    அகத்தில் பேரைப் பெற்றவர்!
முகத்தில் என்றும் புன்னகை
    முழுமை நட்புக்கொருவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. சில்லையூரார்

சில்லாலையில் வந்தவர்
    சிறந்த செல்வ ராசனார்!
சொல் வளத்தில் மிக்கவர்
    சுவைகளோடு சொல்பவர்

தானாகவும் தோன்றுவார்
    தமிழர் ஆன ஆங்கிலர்!
தேனாகவே தந்தவர்
    சேக்ஸ் பியர்தம் நாடகம்!

ஊரடங்கப் பாடுவார்
    உளந்திறந்த பாடகர்!
பேரடக்கம் கொண்டவர்
    பெரு நடிப்பும் கண்டவர்!

சூசைப்பிள்ளை - அன்னம்மா
    தொட்டளைந்த செல்வரை
ஆசையோடு பார்க்கலாம்
    அருமையான தோற்றமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கடவுளர்

பொய் என்பார், மெய்யாம் என்பார்,
பொதுவாகச் சொல்லப் போனால்
ஐயமே இல்லை நும்மை
ஆக்கினோர் அழகாய்க் காப்பார்!
கையினில் இல்லாப் போதும்
கடவுளர் படையல் உண்டாம்!
உய்யலாம் அச்சம் வேண்டாம்!
ஒரு குறைவாராதுண்மை!

ஒன்றென இருந்தீர், இப்போ
ஒருபத்து நூறென்றானீர்!
நன்றது பெருக்கம் நன்றே!
நலங்களும் பெருகுந்தானே?
இன்றெலாம் தலைகீழ் போன்று
இருப்பினும் நாளை நன்றாம்!
அன்றென்ன இன்றும் அச்சம்
அழிந்திடாதும்மைக் காக்கும்!

நம்புவார் உம்மை, நீவிர்
நம்பிட நடவார் சில்லோர்!
நம்பிக்கைப் போலி யாரில்
நாத்திகர் என்பார் மேலாம்!
உம்பெரும் பட்டாளத்தால்
உலகில் பல்தேவை உண்டு!
வெம்பிடும் நரரைக் காக்க
வேண்டினோம் கைவிடாதீர்!

அழைக்கின்றோம் உம்மை எந்தம்
அடிப்படை மொழியும் ஒன்றே!
விழைகுவீர் தமிழை எந்த
வேளையும் எங்கும் வாழ்த்த!
பிழையிலாத்தமிழே நுந்தம்
பிறந்தகத்துள்ளும் வேண்டும்!
பழையதைப் புதியதாக்கிப்
பற்றுதல் ஓங்கச் செய்வீர்!

குறிப்பு: நடைமுறையிலுள்ள அஃறிணைக்குரிய "கள்" விகுதி
உயர்திணையில் வராதபடி எழுதப்பட்ட நூல் அன்பழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தாயர்

தாய்தனைத் தெய்வம் என்பார்!
தரையில் முன்கண்ட தெய்வம்!
தாய்மையைப் போற்றார் இல்லை!
தாழ்வழித் தமிழைக் கூடத்
தாய்மொழி என்றே சொல்வார்!
தாய்ப்பாலுக்கொப்பே இல்லை!
தாய்மட்டோ, தமக்கை - தங்கை
தம்மனை எல்லாம் தாயே!

தாங்குதல், பெறுதல் - காத்தல்,
தமது செல்வங்களுக்கோர்
தீங்குமே வாரா வண்ணம்
செயற்படல், கல்வியால் மேல்
ஓங்கிடச் செய்தல், துன்பம்
உற்றிடின் நல் வாழ்வுக்காய்
ஏங்குதல் எல்லாம் தாயர்
இடையறாப் பணிகள் தாமே!

எல்லாமே செய்த போதும்,
இன்னுமுண்டெந்தாய் மாரே,
நல்ல தாலாட்டும் பாடி -
நல்லிசைத் தமிழும் காத்த
வல்லவர் உமக்கெல்லாம் நம்
வாழ்த்துக்கள், ஆனால் பிள்ளைச்
சொல்லெலாம் இப்போ தேனோ
தூய செந்தமிழாய்க் காணோம்!

தாயரே வாரீர், நுந்தம்
தமிழ்படும் பாட்டைப்பாரீர்!
தீயசொல் எல்லாம் கூட்டிச்
சேர்த்துமோர் பாணியாக்கி
வாயதன்மூலம் நாவால்
வடிக்கிறார் செவியில் - தேனாய்ப்
போயது நிறையு மாமோ?
பொறுத்தொரு வழி காணீரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தந்தையர்

தந்தையர் நாடென் பார்கள்!
தலைவராய்க் குடும்பந்தன்னை
முந்தையோர் வழியிற் பேணி
முறைப்படி தலைவியோடு
சிந்தித்து முன்னெ டுத்துத்
திருத்தமும் இடையிற் சேர்த்து
வந்திடும் நுமது ஆண்மை
வாழ்த்துதற் குரியதே தான்!

ஊழியம், தொண்டு, காசின்
உழைப்புகள் எல்லாம் இந்த
ஆழிசூழ் உலகில் சென்று
அச்சமில்லாமல் ஆற்றி
பாழிராப் பகலாய்ப் பாடு
பட்டுமே தீரா துள்ள
ஏழைமை தன்னை நீக்க
எடுதொழில் எல்லாம் நன்றே!

பெண்ணையும் ஆணாய் மாற்றி
பெண்ணென வீடும் பார்த்து
அண்மைய நாளில் ஆண் பெண்
அனைவரும் சமம் என்றாக்கி
கண்ணிரண்டொன்றே யென்றும்,
கையிரண்டொன்றே யென்றும்
எண்ணிடத் துணையாய் நின்றீர்!
இனிய நும் கொள்கை நன்றே!

தந்தையீர், இதையும் கேளீர்,
தாய்மொழி தந்தைக்கும் தான்!
முந்தைய - முதன்மையான
மூத்த நம் தமிழை நீக்கி
சிந்தையை வருத்தி ஏதோ
சேர்த்துமே சிதைப்பவர்தம்
விந்தையும் சற்றே பாரீர்!
விடுவிக்க வழியும் காணீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. தமையர்

குடும்பத்து மூத்தாருக்கே
குறைநிறை தெரிந்திருக்கும்!
விடும்போதில் தந்தை ஆவி
வீடதன் பொறுப்பும் ஏறும்!
இடும்பைகள் தாங்கி மூத்தார்
இயல்புகைப் பற்றி முன்னைக்
கடும் போக்கை நீக்கி நன்மைக்
காரராய் நிலைப்பீர் தானே?

கற்றிருப்பீராம், பெண்மை
கண்டிருப்பீராம், செல்வம்
பெற்றிருப்பீராம், ஓடிப்
பிழைத்திருப்பீராம், நோயும்
உற்றிருப்பீராம், தீமை
ஒழித்திருப்பீராம், காணா
மற்றுமிங்கேதோ வெல்லாம்
மறந்திடாதடைந்திருப்பீர்!

வீட்டொடு காணி பார்த்து
வேலையின் அழகு பார்த்து
நாட்டொடு நிலைமை பார்த்து
நாளெலாம் சேதியெல்லாம்
கேட்டதை ஆய்வு செய்து
'கிளறிக்கல்' என்றவாறு
போட்டெலாம் மண்டைக்குள்ளே
புதுப்பித்து வருவோர் நீவிர்!

தமையர் என்றானதாலே
தமிழையும் நோக்குமாறு
உமையுமே வேண்டுகின்றோம்!
ஒரு குறிக்கோளுமின்றி
நமைப்பிறர் அறியாவாறு
நாடுவார் எதையும் என்றும்!
அமைந்த நம் மொழியைப் பேணும்
அரும்பணி நமக்கும் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தமக்கையர்

தாய்போயின் தாய்போல் வாரே
தமக்கையர் அவர்க்கே உள்ள
நோய்நொடி புரியும், ஏற்ற
நோன்புகள் கண்டு தீர்ப்பார்!
வாய்நிறை நாவின் பேச்சு
வன்மைகள் உள்ளார், எந்தப்
பேய்களும் நுழைந்திடாமல்
பெருங்குடி காக்கவல்லார்!

துணைவனைப்போற்றி, மக்கள்
துயர்களை நீக்கி, என்றும்
இணை பிரியாமல் வாழ்ந்து
எதிர்ப்புகள் இல்லாதெல்லார்
அணைவொடும் குடும்பத்தேரை
அன்பினால் இழுத்துச்செல்லும்
திணை வழிகாட்டியான
திருமகளாரே மூத்தார்!

கழுவுதல், கூட்டல், ஓய்வில்
கலந்துரையாடல், நாளும்
பளுவெனக் கருதா மாற்றுப்
பக்குவச் சமையல் செய்தல்,
நழுவிடாதெதையும் தொட்டு
நம்பணி எனவே ஆற்றி
விழுதெனக் குடும்பம் தாங்கும்
வெறித்தன மற்றோராவார்!

தமக்கையர்க் குரியதான
தாய்மொழி வளர்ப்புமுண்டு!
நுமக்குமா - ஊராருக்கும்,
நுமதரும் பிள்ளையர்க்கும்,
எமக்குமாந் தமிழை மாய்த்து
எதனையோ தமிழென்றெண்ணிச்
சுமக்கும் இத் தொல்லை நீக்கித்
தூய்தமிழ் காக்க வாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. தம்பியர்

தம்பியர் செயலா லன்றோ
தாரணி வளர்ச்சி காணும்!
நம்பியே அவரின் பின்னால்
நடையிடத் தவறிடாது!
கும்பிடல் - மாற்றார் முன்னே
குனிந்திடல் - பல்லைக்காட்டல்
வெம்புதல் - தளர்தல் என்னும்
வேலைகள் அவர்பால் இல்லை!

பேச்சினைக்குறைத்தே செய்யும்
பெரும்பணி பார்ப்பார், நாட்டை
மூச்செனக்கொள்வார், மற்றும்
மொழி - நெறி - கலையும்கொள்வார்!
கூச்சமொன்றில்லார், ஏதும்
கூறுதல் நேரின் வாளின்
வீச்செனச் சொல்லி மீள்வார்,
வேட்கையோ உரிமை வாழ்வே!

காதலில் வீழவந்தால்
கண்டதும் வீழ்ந்திடாமல்
போதுகள் தோறும் உள்ளம்
புரிந்திடப்பழகி யாரும்
தீதுகள் செய்தால் அன்னார்
சிறுமை கண்டஞ்சிடாமல்
சாதலை நீக்கி வாழும்
தகுதியைப்பெற்றே தீர்வார்!

ஆயினும் தம்பியர்க் கோர்
அலுவலும் உண்டாம், எங்கள்
தாயினும் மேலாம் என்னும்
தமிழினைக் கலப்பால் தேய்த்து
நோயினில் வீழ்த்து வோர்க்கு
நோக்குநர் ஆகி அன்னார்
வாயினில் தூய சொற்கள்
வரவகை செய்தல் வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தங்கையர்

மங்கையர் ஆக நல்ல
மாதவம் தேவை என்றார்!
தங்கையர் ஆக மேலும்
தவம் செய வேண்டும் போலும்?
எங்கணும் புதுப் பூவாக
எழிலொடு மனமும் வீசும்
நங்கையர் இல்லா விட்டால்
நானிலம் என்னவாகும்?

பொட்டென்ன பூக்களென்ன?
புதுவகை அணிகளென்ன?
பட்டென்ன பழமை தீர்ந்த
படமென்ன பார்த்த கண்ணின்
வெட்டென்ன வீரமென்ன?
விண்ணெலாம் திரியும் சின்னச்
சிட்டன்ன தங்கை யாரின்
சேதிகள் சொல்லலாமோ?

கல்வியும் தொடர்வார் சில்லோர்
காதலும் தொடர்வார் அஃதில்
வெல்வதும் உண்டு தோற்றே
வீழ்வதும் கூட உண்டாம்!
நல்லுளம் கொண்டோர் என்றும்
நல்வழி தன்னில் சென்று
சொல்வதை ஆய்ந்து பார்த்து
துயரெனில் நகைப்பதுண்டு!

தங்கையர் நினைத்தால் எந்தம்
தமிழையும் வாழ வைப்பார்!
திங்களின் முகத்தார் காதல்
செய்வதும் தமிழாலன்றோ?
தங்களைக்காப்பதோடு
தமிழதன் தூய்மை காத்து
கங்குலைப் பகலாய்க் காட்டிக்
கலப்பது தவிர்ப்பார் கண்டீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. பாட்டர்

முன்னவர், முதியோர், ஆயுள்
　　மூத்தவர், பாட்டர் என்று
பின்னவர் கூறும் வண்ணம்
　　பிறந்து பல் ஆண்டாய் வாழ்ந்து
சொன்னதைச் செய்தீர், இன்றோ
　　சொல்கிறீர் செய்ததெல்லாம்
இன்னவர் நீவிர் என்றே
　　இருப்பதெம் பெருமையன்றோ?

அன்று நீர் செய்ததெல்லாம்
　　அடுக்கடுக்காகச் சொல்லி
இன்றெமக்கின்பமூட்டல்
　　ஏற்றதே! எமது வாழ்வை
நன்றெடுத்துயர்ந்து செல்ல
　　நாலுபேரோடு சேர
வென்றுமே உச்சமேற
　　வேண்டியதுங்கள் வாழ்வே!

குழவியாய் - பிள்ளையாக -
　　கூட்டிளம் பருவமாக -
வளர்ந்த மாப் பிள்ளையாக -
　　வாழ்வுயர் தந்தையாக -
தளர்ந்திடு முதியர் ஆக -
　　தள்ளாடு கிழவர் ஆக
பழம் அறி வெல்லாம் கொண்டு
　　பக்குவப் பட்டோர் நீரே!

அப்பழ நாளில் நீவிர்
　　அருந்தமிழ் விருந்தையுண்டீர்
இப்புது நாளில் ஏதும்
　　இனித்திடு தமிழ் கண்டீரோ?
தப்பிய தமிழைக் காத்துத்
　　தனித்தமிழோடு சேர்த்து
முப்பழம் போன்று தாரீர்,
　　முடியுமுன் வாழ்வுதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பாட்டியர்

பாட்டியர் - மூத்தோர் - முன்னோர் -
பழமையர்! பாடல் ஔவைப்
பாட்டியைப் போலும் நல்ல
பா வளப் பொருளுரைப்போர்!
கேட்டவர் தவத்தோர்! பல்லோர்
கேள் செவி மூடிக் கெட்டார்!
ஊட்டத்து உணவார்! அன்னார்
உற்ற பட்டறிவு பெற்றோர்!

கதை என்ன? பாடல் என்ன?
கண்டு கேட்டறிந்ததென்ன?
சிதைவுற்ற எண்ண மென்ன?
சீரான வாழ்க்கை யென்ன?
பதைப்புற்ற செய்தி என்ன?
பாடுகள் பட்ட தென்ன?
விதை தூவிப் பயிரைக் கண்டு
விளை பயன் அளித்த மேலார்!

அறிவறி மக்கள் தந்து,
அவர் மூலம் பேரர் தந்து,
பெறுமதிப் பேரர் மூலம்
பீட்டரைத் தந்து, மேலும்...
மறுமைக்கு முன்னர் இம்மை
மானில மேல் கண்டோரை
இறுதியில் வாழ வைத்தல்
எம் அருங் கடனா மன்றோ?

இத்தனை உடலும் காத்தெம்
இன்னுயிர்த் தமிழும் காத்தீர்!
முத்தமிழ், கலவை யாலே
முடங்கிய நிலைமை பாரீர்!
அத்தனை கலப்பும் நீக்கி
அருந்தமிழ் விருந்தை உண்ண
நத்துவீர், பழமைச் சொல்லால்
நல்லுரை நவில்வீர் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. பேரர்

பேரர்தாம் சிறியர் இன்று
பெரியவர் வருநாள், ஆமாம்
கூரறிவுடையார் நேராய்க்
கூறொணாக் கேள்வி கேட்பார்!
வீரமும், துணிவும் மிக்கார்!
வீழ்ந்தெழுந்தோடி வெல்வார்!
ஓரணி யாகி நிற்பார்!
ஓய்ந்திடா ஆட்டக்காரர்!

வீடெலாம் பொருட்களாக -
விளையாட்டு மயமதாக -
ஏடெலாம் கிறுக்கலாக -
இணையிலாப் படங்களாக -
"கேடெலாம்" என்போர் தம்மைக்
கிண்டல்கள் செய்வோராக -
நாடெலாம் திரிவார், நாளை
நாட்டினை ஆள்வோராவார்!

பெயர்ந்தவர் நம்மில் நின்று
பேரர் என்றாகி உள்ளார்!
அயர்வதே இல்லை, என்றும்
ஆர்வமும், விழிப்புமேதான்!
உயர்வடைவாரே கற்றால்?
ஒரு துயர் நெருங்கிடாதே!
புயலெனப் பாய்ந்து மீள்வார்!
பொறுமைதான் குறைபாடாகும்!

பாடலோ படிப்போ எல்லாம்
பைந்தமிழ் மொழியிலேயே!
தேடலே நுமது தேவை!
சிந்தனைச் செல்வம் பெற்றீர்!
கூடுவீர்-தமிழ்பால் உள்ள
குறை நிறை ஆய்வீர்-நீக்கி
நாடுவீர் வருநாள் மூச்சாய்
நற்றமிழ் தன்னைத் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. பேர்த்தியர்

பேரரை வெல்வார் சின்னப்
பேர்த்தியர்! ஆற்றோரத்து
நீரருகினிலே கூட்டும்
நிலமணல் வீடமைத்து -
சீருடைச் சமையல் செய்து
சிறுசோறு கறிகள் ஆக்கி -
கூரறிவதனைக் காட்டிக்
குளித்து வந் துண்டு செல்வார்!

நாணமும், இசையும், கூத்தும்
நடைமுறை விழிப்பும் கொண்டோர்
பேணுவார் உரிமை யாவும் -
பெற்றவர் தமையும் பார்ப்பார்!
ஆணுக்கு நிகராய் ஆகும்
அற்புதப் பெண்மை கொண்டார்,
வீணுக்கே பொழுதைப் போக்கார்!
வியத்தகும் அறிவைக் கொள்வார்!

கற்பதை முதலாய்க் கொண்டு
கலைகளில் ஆர்வம் காட்டி
நிற்பதை வாழ்வென் றாக்கி
நீடிக்கும் உரிமை நாட்டி
பற்பல பணியும் ஆற்றப்
பார்த்திருப்பார்க்குப் பின்னாள்
நற்புகழ் வரவே செய்யும்
நன்கு நீர் வளர்வீர், ஆனால்...

நும் அருந்தமிழைச் சற்றே
நோக்குவீர்! வருநாள் இங்கு
அம்மையின் மொழியா கும்மா?
ஆரயிர்த் தமிழாகும்மா
செம்மொழியாய் வாழும்மா?
திருந்துமா - தனியாகும்மா?
அம்மையின் இருப்பில் நாளை
அமருமுன் தமிழ் காப்பீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. ஆசிரியர்

ஆசிரிந்தோரே வாழ்க!
அருந்தமிழ் காப்போர் வாழ்க!
பேசுசெந் தமிழர் வாழ்க!
பிழைவிடா மொழியார் வாழ்க!
மாசிலாத் தமிழைக் கொண்டு
மற்றெலாக் கலையும் காட்டும்
ஓசை நாவுடையார் வாழ்க!
உச்சரிப் பாளர் வாழ்க!

எழுத்தறிவிப்போர் வாழ்க!
இறை எனப்படுவோர் வாழ்க!
வழுத்துதற் குரியோர் வாழ்க!
வண்டமிழ் படைப்போர் வாழ்க!
உழுத்தவை நீக்கி வாழ்விற்
குகந்தவை குறளாய்த் தேக்கி
அழுத்திடு கணக்காயர் தம்
அரும்பணி நிலையாய் வாழ்க!

தமிழ் அன்னை பெற்ற பிள்ளை!
தமிழ்க் கணக்காயர் நீவிர்!
தமிழ்ப்பள்ளி-தமிழ் நன்னூல்கள்!
தமிழ் ஊட்டல் நுமது வேலை!
தமிழ் இன்று தனியாய் இல்லை!
தலை மொழிக் கூட்டாயிற்று!
தமிழ் சலித்தெடுத்தல் நன்று!
தனித்தேனே - பாலே நன்று!

தனித்தமிழ் நூல்கள் கற்றால்
தமிழிற்சொல் பெறலாம்-பெற்றால்
இனித்திடும் பெயரைச் சொல்லி
எவரையும் ஈர்த்தல் சாலும்!
கனிப்பிழிவாகத் தந்தால்
கைத்திடு சுவையா நல்கும்?
குனிந்துள தமிழ்த்தாய் என்பின்
கூன் நிமிர்த்திடல் நும்பேறே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. ஆசிரியையர்

ஆசிரியர்க்குள் பெண்பால்
ஆசிரியை சேர்ந்தாலும்
ஆசிரியைமாரே நம்
அடிப்படைக் கல்விக்கானோர்!
பேசிடும் குரலும், தாய்மைப்
பேணலும், உடைப்பண்பாடும்,
மாசிலா உளமுங் கொண்டோர்
மறப்பிலாசிரியை மாரே!

அன்புடைத் தமிழாற் பேசி -
அரவணைத்தருகிருத்தி -
இன்பிசைப் பாடலாலும்,
இனித்திடும் கதைகளாலும்
பண்புறப் பாசம் சேரப்
பரிவுடன் உரைகளாடி
நண்புடன் உறவார் போன்ற
நடைமுறை நங்கைமார்க்கே!

தாய்த்தமிழ்க்குரிய நீவிர்
தமிழ்மொழி தரத்தைக்கண்டு
ஆய்ந்தயல் சொல்லை நீக்கி
அந்தமிழ்த் தூய்மை பேணி
வாய்வழி வரும்போதே சொல்
வகையினைக் கண்டு சேர்ப்பால்
தேய்த்துள தமிழை மீண்டும்
திருத்தல் நும் கடனாகும்மே!

இருந்திடும்போது சொற்கள்
இரவலாய்ப் பெறுதல் தீது!
வருந்திடச் செய்திடாமல்
வாழவைத்திடுதல் நன்று!
திருந்திடாதெம்மை நாமே
தேய்த்திடும் முறை நன்றாமோ?
அருந்திடும் பாலில் நீர்ச்சேர்த்
தருந்திடில் சுவைகுன்றாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. மாணவர்

கல்லுதல் கல்வியானால்
கல்லி நீர் கற்க வேண்டும்!
சொல்லுதல்-வரைதல் எல்லாம்
தூய் தமிழ் ஆதல் வேண்டும்!
வல்லுநர் ஆகி எல்லா
வழியிலும் அறிவைத்தேடி
வெல்லுதல் வேண்டும், இன்றேல்
விட்டிடல் நலம்போல் ஆகும்!

தாய்மொழிக் கல்வியேதான்
தக்கதாம் முதலில்! பின்பே
ஆய்மொழிக் கல்வி ஏதும்
அறிவதாம்! மொழிகள் மீது
காய்வதால் நன்மையில்லை!
கற்பதால் நன்மையுண்டு!
தேய்ந்திடும் அறிவு, கற்றே
தீட்டிடக் கூர்மையாகும்!

கலந்துள தமிழை நீவிர்
கற்றுமே தனிமை கண்டு
நலம்பெற வேண்டும், இன்றேல்
நமது பிற்காலம் பாழாம்!
பலமொழிச் சொல்லும் கூடிப்
பைந்தமிழ் சிதைதல் கண்டும்
சிலபுது மொழியார் போன்று
தேடிடாதிருக்கலாமோ?

மாணவர் நீவிர்! மிக்க
மாட்சிமை உடையோர் நீவிர்!
பேணுதல் உமது வேலை!
பெரும் புகழாளர் செய்யார்!
காணலாம் தமிழைத் தேனாய் -
கலவாத பாலாய் - சாறாய்!
வீணிலா நூல்கள் தேடி
விளங்கிடக் கற்றாய்வீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. மாணவியர்

மாணவர் ஆண் பெண்! ஆனால்
மாணவியர்க்கோர் தன்மை!
ஆணுடன் பெண்ணுமொன்றே!
ஆயினும் பெண்மை தாய்மை!
ஆணவம், அடங்காத்தன்மை
ஆயிரத்தொன்றென்றாலும்,
பேணுதல் - தாங்கல் - வேறு
பிறப்பித்தல் மாற்றமுண்டே!

கற்றலில், கற்றவற்றைக்
காட்டலில், கலையைச் சார்ந்தே
நிற்றலில், நீண்ட நாட்கள்
நிலைப்பதில், நேர்மை - உண்மை
முற்றிலும் சற்று வேறாய்
முடிவுகள் காணலாமேல்
பற்றினில் ஆழமாகிப்
பாசமும் நீளுமன்றோ?

அருந்தமிழ் விருந்தை உண்ணும்
அன்பு மாணவிகாள் கேளீர்!
இருந்திடின் வாங்கிடாதீர்!
இல்லையேல் பெறலாம், ஆனால்
பெருந்துயர் தமிழில் இன்று
பேசுவோர் - எழுதுவோரால்!
விருந்திலை, சுவையுமில்லை!
விருப்பிலா வெறுப்பாயிற்றே!

நற்றமிழ் கற்றீராயின்
நாவினில் சுவைத்தேன் ஊறும்!
பற்றுடன் பயில்வீராயின்
'பாலறாவாயர்' ஆவீர்!
பெற்றிடின் தனியாய் அஃதைப்
பெரும்பேறு பெற்றோர் ஆவீர்!
தொற்றமிழ் கழகநூலைத்
தொடுவிரேல் உச்சம்போவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. எழுத்தர்

எம்மொழி எழுத்தை யேனும்
எழுதியே தள்ளுகின்றீர்!
நம்மொழி தமிழிலும் தான்
நடத்துவீர் கிறுக்கல் - கீறல்!
நும்தொழில் எழுதல், அஃதும்
நொடியினில் நூற்றைத்தாண்டும்!
இம்முறை போவோர்க்குள் நல்
எழுத்தரும் உண்டாம் கண்டீர்!

பல தமிழ் எழுத்தர் நன்கு
பழகிய தமிழைக் கொண்டு
நலம் தரும் ஆக்கம் கூட
நல்குவார், நல்கலாலே
சிலர் எழுத்தாளர் ஆவார்!
சிறுகதை - கவிதை என்று
சலசலப் பருவி போலத்
தமிழ் மொழிந்திடவும் செய்வார்!

தமிழ் மொழியுடனே வேறு
தகு மொழிகளையும் கற்றோர்
அமிழ்தினிற் பயறு போல -
அதனுடன் ஏலம் போல
சமன்படக் கலத்தே அள்ளித்
தரத்தர உண்போர், சுற்றில்
எமதரும் உணவே நன்றாய்
இனிப்பதே எனவும் சொல்வார்!

எழுத்தராய் இருப்பீர், ஆனால்
எழுதுவீர் தமிழில் என்றும்!
அழுத்துவீர், ஆங்கிலத்தின்
அரும்பொருள் தமிழில் தாரீர்!
விழித்திடும் போக்கில் சென்று
வீண்பழி தேடிடாதீர்!
பழுத்த நம் தமிழே பிள்ளைப்
பல்பிணி மருந்தாம் காணீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. எழுத்தாளர்

தமிழ் எழுத் தாளு வோரே,
தமிழ் உந்தம் கையிலேதான்!
தமிழ் வளர்ந்திடுவதற்கும் -
தலை கீழாய் ஆவதற்கும்
உமதுயர் கோலும் தாளும்
உண்மையில் பொறுப்பாம்! நீவிர்
தமிழ் ஆய்ந்து எழுதி வந்தால்
தமிழ் அச்சம் யார்க்கும் வாரா!

மக்கள்தம் நடையாம் என்று
மக்கள் பின்போதல் தீதே!
மக்கள் முன்வழி காண்பித்து
மனிதத்தை இழுத்துச் செல்வீர்!
அக்கறை, உணர்வு, பற்று,
ஆர்வம் என்றெதுவும் இன்றி
சொக்க வைத் திடுதல் ஆகா!
தூய செந்தமிழும் வாரா!

கழக நூற் புலமை இன்றேல்
கனபொருள் ஒதுங்கிப்போகும்!
பழகு பின் நூற்க ளெல்லாம்
பழிமிகு வடகோட்பாடே!
விழிப்புணர் வில்லா விட்டால்
வீழ்ச்சிதான் - இருளே வாழ்வு!
கழித்தெலாம் குறளைக் கொண்டே
காட்டுவீர் திறமை, போதும்!

பழந்தமிழ் புதுக்கல் வேண்டும்!
பன்மொழிப் புலமை வேண்டும்!
இளந்தமிழ் ஆக்கம் வேண்டும்!
'எதுதமிழ்' ஆய்வும் வேண்டும்!
வளம்பெற வைத்தல் வேண்டும்!
வாழ் 'பொதுமொழி'யே போதும்!
உளம் நிறை தமிழ் - இனத்தார்
ஊடகவிழியாய்க் கொள்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. மருத்துவர்

மருத்துவத் தமிழ்நூல் உண்டு!
மறக்கொணாச் செய்யுள் உண்டு!
மருத்துவர் பல்லோர் வாழ்ந்து
மறைந்துளர்! மறைப்பினாலும்,
பெருத்த ஆய்வின்மை யாலும்
பிழையாகிப்போக - மேலோர்
பொருத்தமாய் வளர்ந்தார்! இன்றோ
போகிறோம் அவரைத்தேடி!

காற்று - நீர் - நெருப்பு மூன்றும்
கடுமையோ, குறைவோ நோயாம்!
நேற்று முன் சொன்னார், இன்றோ
நீண்ட ஆராய்வின் பின்னர்
ஏற்றுளார், நம்மவர் தாம்
ஏனோ பின்தங்கியுள்ளார்!
தோற்றுமே நூலோடுள்ளார்!
தொட்டதோ சனிக்கோளாறு?

நாடிகாண் மருத்துவர் தாம்
நற்றமிழ்ப் பெயர்கள் சொல்லித்
தேடிடும் சரக்கை யெல்லாம் -
செடி, கொடி, பூண்டையெல்லாம்
ஓடியே திரட்டி வந்து
உயர்புது முறையில் ஆய்ந்து
கூடியெம் மருத்துவத்தைக்
குறைவராதுயர்த்தி வாரீர்!

பாட்டியும் மருந்து சொல்வார்!
பலர் செவிவழி பின்பற்றி
வீட்டினில் நோய் தீர்த்துள்ளார்!
வென்றதும் தமிழாயிற்று!
கேட்டினைத் தமிழுக்கீந்து
கிடைப்பதற்கெதையோ சொல்லி
வாட்டிட விட்டி டாமல்
வளர்தமிழ் மருந்தாய்த்தாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. வணிகர்

வணிகமே பழையர் வேலை!
வளர்பொருள் ஈட்டல் - அஃதால்
வணிகரே என்றும் சொல்வார்!
வறுமையார் எட்டிப்பாரார்!
அணி மணி நாள் அங்காடி -
அரும்பொருள் அல் அங்காடி
கணித்துடன் கொள்வார் - செல்வார் -
கலத்தினில் மீள்வார் அந்நாள்!

கடல், தரை எங்கும் சென்று
கனபொருள் பண்டம் மாற்றி
உடல் உழைப் பதிக மாக்கி
உண்மையில் நேர்மை காத்து
திடல் புகார்த் தமிழகம் போல்
திசையெலாம் பரவச் செய்து
தடல் புடலாக வாழ்ந்தார்,
தமிழுடன் தமிழர் அந்நாள்!

பொருட்பெயர் தமிழாற் கூறிப்
புன்னகையோடு தந்து
அருளுளத் தோடு பெற்று
அனைத்தையும் சமச்சீர் கோலால்
ஒரு முடிவெடுத்து நாட்டை
ஒளிமயப்படுத்து நோக்கில்
பெருவணிகங்கள் செய்து
பேர்பெறு தமிழாய் வாழ்ந்தார்!

செல்வ மா வணிக மக்காள்,
செல்வமாய்த் தமிழும் கொண்டு
நல்ல செந்தமிழி னாலே
நால் வகைப் பொருளின் பேரும்
சொல்லியே கொடுத்தும் - கொண்டும்
சோர்விலா துழைப்பதோடு
வேல்லுமின் தமிழி னோடும்
விலைப்பொருள் நேர்மையாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. குருமார்

அம்மாவை முதலில் சொல்லி,
அப்பாவை அடுத்துச்சொல்லி,
சும்மாவா குரு என்றிட்டார்?
தொடர்ந்தாலே தெய்வம்சேர்வம்!
இம்மா நிலத்தில் மூன்றாம்
இடத்துள குருவார் தம்மை
எம் மானம் விட்டேபோற்றும்
இடத்திலே யாமிங்கில்லை!

கற்பிப்போர் குருவாம், உள்ளம்
கடந்துள இறைமை தன்னைக்
கற்பிக்கும் நிலை பெற்றோரும்
கட்டாயம் குருவே ஆவார்!
சொற்கொண்டு தூய்மை கொண்ட
தொழில் கொண்டு நெறிவிடாமல்
நிற்கின்ற குருவார் தம்மை
நெறிநின்று யாமும் காப்போம்!

அருந்தமிழ்க் கோயிலுக்குள்
ஆரியம் தன்னை ஓதிப்
பெருந்துயர் விளைத்து - வேதம்
பேசிடும் மனுநூற்சார்பார்,
திருத்தியே மரபால் மூத்த
திராவிடர் ஒழுக்கத்தோடும்
பொருந்தினால் மதிப்போம் - என்றும்
போற்றுவோம் - வணக்கம் செய்வோம்!

தமிழ்த்தெய்வத் தமிழ்க்கோயிற்குள்
தமிழ் வேண்டும், தமிழே வேண்டும்!
தமிழ் மக்கள் வரலா றெல்லாம்
சரியாகப் படித்தல் வேண்டும்!
தமிழ் வாழ்வே வாழல் வேண்டும்
தமிழ்க் குருமாரே வேண்டும்!
அமுதினைக் குருவார் தந்தெம்
ஆவியைக் காப்பாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. துறவியர்

அந்தணர் - அறவோ ரான
அருந்தமிழ்த்துறவியாரே,
செந்தமிழ்தருவீர் ஐயா!
தீந்தமிழ் இளங்கோ ஆவீர்!
எந்தையின் எந்தை காத்த
இளமையும், மூப்பும் ஆன
சிந்தையில் நிறைந்தே நிற்கும்
தெளிதமிழ் கலக்கிடாதீர்!

நாவலர், நந்தர், மற்றும்
நாயகர், சுத்தானந்தர்
ஆவலைத் துறந்தா ரேனும் -
ஆம் தனி வாழ்ந்தாரேனும்
பாவல தமிழின் பற்றும்,
பாசமும் விட்டாரல்லர்!
காவல ராகி ஆவி
காத்துளார், கற்றுள்ளோமே!

துறந்திடாத் துறவியாரே,
தூய செந்தமிழாய்த்தாரீர்!
மறந்திட முடியாத் தூய
மறைமலை - பாவாணர் போல்
இறந்திடாத்தமிழில் மாசாய்
இருந்திடும் கலப்பு நீக்கி
கறந்தபா லாக்கித் தந்தால்
கைப்பறப்பருகிச்சாவோம்!

ஓய்வுண்டு உரைக ளாற்ற!
ஊரவர் தொண்டி னோடு
காய்ந்திடா துவந்திடாமல்
கருக்குறள் நடுவாய் நின்று
பாய்ந்திடாவாறு மாற்றார்
பகருவீர் உண்மை, அச்சம்
தீய்ந்திடத் தமிழைத் தாங்கும்
திறமையோர் துறவிநீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. கோயிலார்

கோயிலார் தூய்மையான
கொள்கையார் ஆகினாற்றான் -
வாயினோ டுளத்தும் என்றும்
வணங்கிடு நிலைபெற்றால்தான்
தாயினும் மேலான் எண்ணம்
தரம் பெறும், இல்லையானால்
நோயுடன் முப்பத்தேழின்
நோன்புடன் முடிந்தும் போகும்!

பூவிடல் பொட்டின் முன்பே
பூச்சிடல், முறைஈர்ஆறும்
நாவிடல், சுடரினோடும் -
நல்மணம் பரப்பல், பாவைப்
பாவினைப் பெருக்கல், ஓசைப்
படுமணி - பூரம் - தேங்காய்...
கோவினுக்கிவற்றின் மேலாம்
கோவுளம்நம்ப வாழ்தல்!

பொய்யொடு, கள, வேமாற்று,
போலிநாடகங்கள், போர்வை,
மெய்யணி உடைகள், ஈர்க்கும்
மினுக்குகள், மெருகின்ஊர்தி...
ஐயகோ, இவையா லெல்லாம்
அவன் அசைந்திடுவானாமா?
உய்யலாம் ஒன்று பெற்றால் -
உள்ளமாம் - தூய உள்ளம்!

நால்வரின் நாளில் கோயில்
நடைமுறை தமிழே எங்கும்!
மேல்இல்லை - கீழும் இல்லை,
மேன்மைகொள் சைவர்நாளில்!
கோல் தேய்த்துக் குடிகள் தேய்த்துக்
கொடுமொழி நுழைந்ததுள்ளே!
கால் ஊன்றும் மொழியைத்தள்ளிக்
கல்கண்டு மொழியைக் கொள்வீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. அரசியலார்

சாக்கடை என்றார் - மற்றோர்
தரக்குடி அரசாம் என்றார்!
போக்கறுந்தாரின் தொங்கல்
புகலிடம் இதுவாம் என்றார்!
ஆக்குவார் - காப்பார் - ஆமாம்
அழிக்கவும் செய்வார், எல்லாம்
தேக்கியே வைத்து ஒன்றாய்ச்
செலுத்து வார் ஆட்சியாளர்!

ஒருவருக்கொருவர் சேற்றை
உவப்புடன் அள்ளிப் பூசிப்
பெரும் உளம் காட்டி நிற்பார்!
பிரிந்து பின் சேர்ந்தும் கொள்வார்!
விருப்புடன் உரிமை தந்து
வேட்பரைத் தேர்ந்து நம்மை
உருப்படவைக்க வேறு
உயர்வழி கிடைக்காதாமோ?

முன்னவர் பின்னால் நிற்றல் -
முறை மாற்றிப் பெருக்கிக்கூட்டிப்
பின்னவர் முன்னால் போதல் -
பெரியவர் பிரித்தொதுக்கச்
சின்னவர் கிளர்ச்சி முற்றாய்ச்
செய்திடல் - குடிகள் ஆட்சிப்
பின்னலில் அன்றோ சிக்கிப்
பெருந்தீர்வு நாடுகின்றார்!

அரசியலாரே, ஏதோ
ஆளுங்கள், ஆனால் ஒன்று!
தரமான தமிழும், மண்ணும்
தரணியில் எமது கண்கள்!
பரவலாய் எம்மை நாமே
பார்ப்பதற்கிடையூறானால்
மரப்பாவை யாகோம் - ஒன்றாய்
மாளுவோம் - ஆளுவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. கூத்தர்

இயல் - இசை - கூத்தாய் ஆன
எந்தமிழ் இப்போதாய்வாம்
அயல் அறிவியலால் நான்காய்
ஆனதால் வளர்ச்சிகூட!
இயலது பேச்சாம், பண்சேர்
இசையது பாட்டாம். கூத்தோ
நயமுடை மூன்றின் சேர்ப்பாம்!
நாடகம் என்றும் சொல்வார்!

முக்கனி என்றார் அண்ணா
முத்தமிழ்தன்னை! ஆமாம்
பக்குவ வாழை - தேமா -
பலாவெனக் கூட்டிப்பார்த்தார்!
தக்கதோர் கூத்தே கூளம்
தாண்டிய சுளையாம்! ஈற்றில்
சிக்கறுத் தெல்லாம்தாண்டித்
திரைப்படக்கலையாயிற்று!

கொட்டகை மேடை தன்னில்
கூத்தாடி இரவைப்போக்கி
கட்டிய அரங்கில் கூத்துக்
கலையினைத் தொடரவைத்து
மெட்டிசை உரைகள் யாவும்
மேன்மைகொள் தமிழாய்தந்து
விட்டுளார் பலபேர் இன்று -
விடாமலும் உள்ளார் சில்லோர்!

ஆரியக் கூத்தைப் போன்றும்
ஆடலால் மக்கள் தேய்ந்தார்!
போரியல் வாழ்வைத் தொட்டுப்
போவதும் தேவை இன்று!
பாரினர் தமிழர் வாழ்வைப்
பார்ப்பதுநலமே! கூத்தர்
பேரினில் தமிழும் எங்கும்
பெருகிட வழி தோன்றட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. இசைஞர்

இசைக் கிள காதார் இல்லை!
இசையினில் மயங்கார் இல்லை!
அசையுமாம் கருங்கல் கூட!
ஆடுமாம் கொடிய பாம்பும்!
தசையுடன் என்புங் கூடத்
தழல் மெழுகாகுமாயின்
இசைக்கலைப் பெருமை தன்னை
எவரெடுத்தியம்பலாகும்?

தமிழிசை ஏழும் செத்து
'சரிகமபதநி' ஆச்சு!
நமதுயர் குரல் - துத்தம் போய்
நாடு 'சங்கீதம்' ஆச்சு!
அமுதநூல் சிலம்பை ஆய்ந்தே
ஆனந்தர் யாழ்நூல் தந்தார்!
எமதெவை போனல் என்ன?
எவை இவண் வந்தால் என்ன?

பழம் இசைமீள வேண்டும்!
பண் இடம்பெறுதல் வேண்டும்!
வளம் பெற வேண்டும் ஓசை!
வாழ்ந்திடவேண்டும் பாவால்!
உள 'அனுபல்லவி' தான்
உடனெடுப் பாக வேண்டும்!
இளமிசை இரவல் என்றால்
இல்லை என்றிருக்க வேண்டும்!

'இசைக்கேது மொழி' என்பாரேல்
ஏற்கிறோம், எனினும் தீரா
வசைநிறை வாழ்வா வேண்டும்?
வருகைகீர்த் தனங்களோடா?
இசைபட வாழ்வீர், இன்றேல்
இயங்கொணாத் தமிழை நீக்கி
விசைப்புது மொழி கைக்கொண்டு
விரும்பியபடி போவீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. அச்சகர்

அச்சகம் தன்னில் கற்றோர்
ஆளுமை இருக்குமானால்
எச்சொலும் தமிழாய் ஆகும்!
எடுத்துரைத் திடலும் சாலும்!
இச்சை கா சொற்றே யானால்
எதுவுமே திருந்திடாது!
உச்சத்தில் தமிழைத் தூக்கி
உயர்த்திடும் எண்ணம் வேண்டும்!

கழியினில், செம்பில், கல்லில்,
கனமிலா ஓலை தன்னில்
எழுதிய நாளில் எல்லாம்
இத்தவறேதும் இல்லை!
வழுவழுப்பான தாளில்
வரைவுகள் வந்த போதே
பழுதுகள் காணு கின்றோம்!
பலகலப் பாக்கி யுள்ளோம்!

அச்சகம் சரியாய்ச் செய்தால்
அனைவரும் வந்தே தீர்வார்!
கொச்சையாய்க் குறையாய் இன்றிக்
கூட்டையும் தனிமை யாக்கி
மெச்சிடும் படியாய் - ஆய்வாய் -
மிகுந்த பற்றோடும் செய்தால்
உச்சத்தைத் தமிழும் சேரும்!
உள்ளத்தின் பிடிப்பும் கூடும்!

எழுத்தினை மேன்மை யாக்க
இன்தமிழ் நூலை யாக்க
அழுத்தகப் பங்களிப்பே
அதிகமாய்த் தேவையாகும்!
பழுத்தவர் ஆக்கம் கூடப்
பார்வைசெய் அச்சகத்தை
வழுத்துவோம் - நன்று செய்தால்
வாழ்த்துவோம் - போற்றுவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. ஓவியர்

ஓவியப் பழமை மக்கள்
ஊமையாய் உள்ள போதே
கூவியும், கூச்சல் இட்டும்
குச்சியால் கீறல் இட்டும் -
நாவினை அசைத்த வேளை
நல் உருப்பெறலாயிற்று!
ஓவிய வடிவே பின்னர்
உரைப்பொலி எழுத்தாம் என்பர்!

எதை எதைப் பார்த்த போதும் -
இதயத்துப் பதிவினோடும்
அதை அதை அதுவாய்த் தீட்டி
அற்புதம் செய்யும் ஓவம்
சுதைச்சுவர், குகைக்கல் எல்லாம்
துலங்கியே அசந்தா - வாசல்
சிதைந்திடா தின்னம் கண்ணில்
தெரிவதோர் சிறப்பாகாதோ?

எங்கெலாம் உள்ள போதும்
இத்தாலி 'டாவின்சி'யின்
மங்காத 'மோனலீசா'
மகிமையார் புகழாதாரே?
இங்கு நம் பழையோர் என்ன?
'இரவிவர் மா'தான் என்ன?
அங்கந்த வடவோருக்கும்
அழகளித்திடவா இல்லை?

கழக நாட் சாட்சி கூட -
கரிகால மன்னன் கூட
வழங்கு மா ஓவியத்தால்
வாழ்கிறான்! அவன்போல்வாரை
நிழற்படம் எடுக்க லாமா?
நீடிக்கும் தமிழ்த்தாய் கூட
அழகியே! ஓவியத் தார்
அற்புதம் தமிழ் ஆகட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. சிற்பியர்

அற்புதம் எதையும் தாண்டும்
அற்புதம் ஒன்றுண்டென்றால்
சிற்பமே! அதைத் தந்துள்ள
சிற்பியர் படைப்பின் ஆற்றல் -
நற்புகழ் எல்லாம் நம்மால்
நவிலவே முடியாதையா!
நிற்கு மாம் கற்கள் என்றால்
நிலைக்குமாம் சிற்பம்சாகா!

எட்டு மெய்ப்பாடும் தோன்ற
எடுப்பராம் சிற்பம் என்றால் -
தொட்டநம் கோயில் எல்லாம்
தோன்றுதாம் சிற்பம் என்றால் -
விட்டுமே அழிந்ததெல்லாம்
வீணாகிப் போன போதும்
ஒட்டுமா மொத்தமாய் நம்
உயர்கலை சிற்பம் ஐயா!

சிறந்தவர் தெய்வம் ஆனார்!
தெய்வங்கள் சிற்பம் ஆச்சு!
இறந்திடா மன்னர்கூட
இருக்கிறார் சிற்பக்கல்லில்!
பறந்திடும் தேரைக்கூடப்
பார்க்கலாம் கல்லில் என்றால்,
கறவை - மாகரி - எல்லோரா
கடற் 'புரம்' எல்லாம் கல்லா?

இலங்கையின் 'புரங்கள்' எல்லாம் -
இலங்கிடும் சிற்பம் எல்லாம்
கலங்கிடாத் திராவிடத்தார்
கண்டவை - விண்டவர் யார்?
துலங்கட்டும் தமிழர் வாழ்வு!
தோன்றட்டும் மேலும் சிற்பம்!
நலங்கூறும் மெழுகுச்சிற்பம்
நாலாண்டு நிலைக்குந்தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. இதழாளர்

ஆசிரி யர்நீர்! ஏடாள்
ஆசிரிந் தோர்நீர்! கல்வி -
மாசிலா நடுவர் உள்ளம் -
மறப்பிலா வரலாற்றாய்வு -
பேசுதல் - எழுத லோடும்
பிறர் வழி காட்டி நின்றால் -
கூசுதல் பொய்மை கண்டால்
கூறுதல் - உண்மை தேவை!

இவர் - அவர் என்றில்லாமல் -
இருட்டடிப்பென் றில்லாமல்
எவர் - எது வழங்கி னாலும்
ஏற்புடைத்தாயின் அஃதைத்
தவறாது மக்கள் பார்க்கத்
தந்திடல் இதழின் வேலை!
சிவன் போட்டுத் திருமால் நீக்கும்
சேதிகள் சரிவராதே!

போட்டதே போட்டுக் கண்ணைப்
பொத்திடச் செய்திடாமல் -
கேட்டதே கேட்டுக் காதைக்
கெடுத்திடப் பண்ணிடாமல்
பாட்டுக்கள் - கதைகள் - ஓவம்
பலதாளின் செய்திக் கூட்டு
நாட்டுள புதுமை யெல்லாம்
நாள் இடம்பெறுதல் நன்றே!

எதனையும் தமிழாய்த் தந்தால் -
எந்தமிழ் ஏடாய்க் கொண்டால்
இதழ்க்கொரு மதிப்புண்டாகும்!
இல்லையேல் இனிப்பாகாது!
புதுமையும் தமிழும் நீக்கிப்
பொருள் ஒன்றே குறியாய் வந்தால்
பொதுமையும் விலகும் - மக்கள்
போக்கதும் திருந்து மாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. பேச்சாளர்

சொல்லுதல் எளிதென்றாலும்,
சொல்லுதல் வல்லார்தம்மை
வெல்லுதல் அரிதாம்! மற்றோர்
வேட்பத்தாம் சொல்லல் நன்றாம்!
சொற் செல்வம் செவியின் செல்வம் -
தூய சிந்தனையின் செல்வம்!
நற்செல்வம் இவை என்பாரே!
நாம் பெற்றால் செல்வர் ஆவோம்!

பேச்சாண்டு பேசுவாரில்
பெரும்பாலோர் பின்பற்றாரே!
மூச்சென்பார் தமிழை, ஆனால்
முக்காலும் கலப்புச் சொல்லே!
பூச்சோடும் புளுகல் எல்லாம்
பொல்லாத வடவர் வாழ்வே!
கூச்சலைப் பேச்சாம் என்றால்
குறைந்திடும் செவியின் கூர்மை!

தமிழினை - தமிழர் வாழ்வைத் -
தமிழினைக் கெடுத்தோர் வாழ்வை -
தமிழ்க்கழகத்தை - என்றும்
சாகாத முப்பால் நூலை -
தமிழகம் தன்னை ஆண்ட
தமிழக மன்னர் தம்மை
தமிழ்ப்பெரியாரை எல்லாம்
தமிழினால் பேசலாமே!

தனித்துமே இயங்கும் என்றால்
தமிழ்நிறைமொழிதான்! அன்றி
தனித்தது இயங்கா தென்றால்
தமிழ்குறை - ஒப்பவேண்டும்!
கனி - கழை - பால் - தேன் எல்லாம்
கலப்பதே, என்பார் பேச்சும்
இனிக்கலாம்? ஏனென்றாலோ
ஏல்லாமே பழக்கந்தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. திரைப்படத்தார்

குதித்தது கூத்தாய் மாறி,
கூத்தது நடிப்பாய் மாறி,
புதிது செய் மேனாட்டாரின்
போக்கினால் படமாய்மாறி
அது பேசி, திரையில் நின்று,
அருந்தொலைக்காட்சியாகி
எதுவுமே நிகரில் லாமல்
இன்றுள தெல்லார் வீடும்!

வீட்டுக்குள் உலகைக் கண்டு -
வெளியாரின் திறனைக்கண்டு -
காட்டுத்தீ - மலைகள் வெள்ளம் -
கடலுயிர் - விலங்கு - புட்கள்...
போட்டுப் பார்த்தாலும் கண்கள்
போய்ப்பார்க்கத் திரையே தேடும்!
கேட்டுக் கேட்டலுத்தும் மீண்டும்
கேட்கத்தான் செவியும் நாடும்!

வரலாற்றுப் பெயரால் எல்லா
வடவர்கற்பனையும் பார்த்து -
இரவலை எல்லாம் ஆயா(து)
எமதென எண்ணிக்கொண்டு -
தரமான சிலவும் - காதல்
தமிழையும் தெரிந்த போதும்,
பரவவே இல்லை, இன்னும்
பைந்தமிழ் திரைப்படத்தால்!

திரைப்படம் சிறந்த ஒன்றாம்,
திருந்தியே மக்கள் வாழ!
அரைக்காலின் உடையும், மூன்றுள்
அடங்காத தமிழுமானால் -
இரை - மாடிஇல்லம் - ஊர்தி
எல்லாமே பண நோக்கானால்
விரைவாக மக்கள் இஃதை
வெறுத்தொதுக்கிடவுங்கூடும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. பெயரிடுவோர்

தமிழினால் தமிழர் வந்தார்!
தாய்மொழி தமிழே யார்க்கும்!
தமிழ் தெரியா திருந்தால்
தமிழராய் வாழ்தல் வெட்கம்!
தமிழ் தனித்தியங்கும், எல்லாம்
தமிழினால் முடியும் கேளீர்!
தமிழ்த் தாயில் பற்றில் லாமல்
தமிழராய் வாழ்தல் நன்றோ?

அமுதென்பார் தமிழை ஆய்ந்தோர்!
ஆம், அதை உயிர் முச்சென்பார்!
அமுதினில் 'இனிமை' போன்று
ஆம்'மை'கள் பதினாறுண்டு!
உமிழுவோம் அமுதில் வேறு
ஒட்டியே இருக்குமாயின்!
எமதுயர் தமிழிலும் வே
றிருந்திடின் நீக்குவோமே!

தமிழ்த்தாயின் தமிழ்ப்பிள்ளைக்குத்
தமிழ்ப்பெயர் இடுதல் வேண்டும்!
அமுதினை விடுத்தேன் நஞ்சை
ஆவலோடுண்ணுகின்றார்?
தமிழ்ஈழ அறிவிப்பெல்லாம்
தமிழ்ப்பெயர் ஆதல் வேண்டும்!
தமிழ் கேட்டுத் தமிழைக்கற்றுத்
தமிழராய்ச்சாதல் வேண்டும்!

மொழி ஊட கம் என்பாரேல்
மொழியலாம் எதையும் எங்கும்!
மொழி புரிந்திட்டால் போதும்,
போதுமே தமிழென்றொன்றேன்?
அழியட்டும் விடுவோம் - கற்போம்
அனைத்துலகாங்கிலத்தை!
விழித்தகண் குருடர் ஆவோம்!
வேறியல்ல - பற்றின் பேறே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லுப் பாட்டு

09



## குளம் - 1

*(வில்லுக்குளத்தோடு வீழ்தாமரை காணீர்,*
*நல்ல குறட்பாவி னால்!)*

*(வெல்லை)*

1. *நாருக்கு வெல்லை நன்றாய் வளரும் அதன்*
*வேருக்குள் மீனாய் விடும்!*

*(பன்)*

2. *பாய்க்குரிய தாகப் பன்புல் வளர்ந்தாலும்*
*வாய்க்காமல் வேரும் வரும்!*

*(வம்மி)*

3. *பந்துப்பூ வம்மி பகல்வெள்ளி காற்றோடு*
*வந்து விழும் மூக்கில் மணம்!*

*(மீன்)*

4. *கொட்டுந்தான் தூண்டில் களையுந்தான் மீனாயின்*
*வெட்டுந்தான் கறியாய் விடும்!*

*(கவறை)*

5. *கண்ட அழுக்குண்ணும் கவறையிடம் வீசின்*
*துண்டாகும் உரிமட்டை தூள்!*

*(கிடுகு)*

6. *ஓலை கிடுகாய் உலர்ந்துமே வீடேறும்*
*வேலையும் காசாய் விடும்!*

*(தென்றல்)*

7. *கச்சான் வரட்சியைக் காட்டத் திராய் மூடும்*
*உச்சம் சதையிட்டால் ஊண்!*

*(பட்டம்)*

8. *எண்கோணப்பட்டம் இசையோடு வானேறும்*
*மண்தில்லை வேரே மரம்!*

*(வெடிப்பு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சேறும் வெடிக்கும் சிறுகால் நுழைந்துவிடும்
ஏறு வெயிற் காலத்தி லே!

(யப்பான்)

10. சீனக்குடாக் குதத்தைத் தீய்த்ததே யப்பானின்
வானக்குண் டடியின் வலு!

## வெம்பு - 2



(மணல்)

11. கால் வைக்கக் கூசும் கழுவிப் பரப்பு மணல்
மேல் நடந்தோடுவோ மே!

(கனி)

12. வீட்டுக் கனியை விட மேலான தேன்கனிகள்
காட்டுக் கனிகளே காண்!

(சுள்ளி)

13. வீழ் சுள்ளிக்கட்டுக்கு விண்ணாங்கு நாரிட்டு
வாழ்மனை கொண்டு வரு வார்!

(கிழங்கு)

14. அல்லை கவலை எலாம் ஆழத்தே சென்றாலும்
நல்லதே தோண்டு வத னால்!

(உடும்பு)

15. உடும்பை விட முயலார் ஓடுவார் நாயாரோ
கடும் போக்கிலே கவ்வுவார்!

(கானாந்தி)

16. கானாந்திக் கீரையைக் கண்டாலே போதும் வே(று)
ஏனாமோ ஈடே இலை!

(குழை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. காயான் விராலியே கனவேலிக்கேற்ற குழை
நாயார் நுழைவார் நலம்!

(கார்த்திகை)

18. கார்த்திகை மேலேறிக் கைகாட்டிக் கூப்பிடவே
ஆர்த்தெழும் பற்றும் ஆசை!


(விளையாட்டு)

19. இரவில் 'அரிக்கன்' இருந்தால் நிலவொளியில்
வருவார் விளை யாடு வார்!

(கடன்)

20. காலைக் கடனைக் கழிக்கும் இடம் வெம்பின்
மேலைப் புறம் ஆகு மே!

## கடற்கரை - 3



(ஓசை)

21. வாடை இரவின் வரமே அலை ஓசை
கோடைச் செவிக்கே குறை!

(அடம்பு)

22. வெள்ளை மணல் மீது வீழும் அடம்பாலே
கொள்ளையிடா தென்றல் குவை!

(மீசை)

23. இராவணனார் மீசை எரித்தால் வெடி போடும்
வராதாம் எலி மேல் வளை!

(பன்னல்)

24. சித்திரையில் பன்னல் சிந்தும் அலை பெற்றால்
அத்தினமே பொரியல் ஆம்!

(நண்டு)

25. ஓடும் சிறு நண்டுக் கொருகாலே மண்வளையை
நாடும் உருட்டும் நலம்!

(மடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மட்டுநகர்ப் பேருந்து மடத்தடியில் நிற்பின்
குட்டி நிற்பார் தமது கை!

(அலை)

27. அலைமேல் அலைசுருண் டடிக்கும் நுரைகாய
வலை போட் டிழுப்பார் மடி!

(கொள்ளி)

28. வைகறையில் கொள்ளி வரமாய்க் கிடைக்குமது
கை கொண்டு தோள் காவு வார்!

(சிப்பி)

29. சிப்பி வகை சங்கோடு சில்லுக்கும் குறைவில்லை
எப்பக்கம் பார்த்தாலுமே!

(தோணா)

30. தொலைவில் வரும் போது தோணாவார் தோணாரே
இலை இன்று வில் எல்லை யே!

## வாணை - 4



(மாரி)

31. மாரியிலே வில்லு மழையால் நிரம்பி மீன்
வாரி நீர் ஓடு வா ணை!

(இறால்)

32. ஈச்சையங் கூட்டினால் இறாலைப் பிடிப்போர்
வாச்சகறியே நாளும் வாய்!

(கால்)

33. காலின் அழுக்கைக் கழுவியே சென்றிடுவார்
வாலெனலாம் வில்லுக்கு வால்!

(அழகு)

34. அழகின் சிரிப்பதுவே அரும்வாணை நீரோட்டம்
பழகக் கிடைத்ததே பார்!

(குளிர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. குளிருமாம் நல்வாடை கூட வருநாளில்
களிபேருவகையே காண்!

(நிழல்)

36. கதிரோன் ஒளி வீழாக் கனமாம் செடிகொடிகள்
கொதி ஆற்றி நிழல் கொடுக் கும்!

(கூர்)

37. கூருக்குள் மாடுகளைக் கொண்டுபோய் விட்டாலோ
ஆருக்கும் தெரியாதது!

(பனை)

38. படையின் பழம் எடுத்துப் பணியாரம் சுட்டாலோ
மனை யெங்கும் வீசும் மணம்!

(ஆட்டம்)

39. வாணை விளையாட்டை வாடிக்கையாய்க் கொள்ளின்
தோணுமோ வாணாள் துயர்!

(வரட்சி)

40. கோடை வெயில் காயின் குவியும் மணல் சுடுமாம்
தேடுவார் இல்லை தெளி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோப்பு - 5

(தென்னை)

41. தென்னை உள வரையில் தேங்கள்ளு முட்டியும்
என்னாளும் உண்டாம் இவண்!

(பனை)

42. பனையின் குருத்தாயின் பாய் பெட்டி சுளகாகும்
மனை தோறும் வந்தால் மழை!

(மா)

43. காயாத மா வினையும் கண்டோம் பழ ஊறில்
ஈயாரை நினை லூட்ட வே!

(முந்திரி)

44. முந்திரியின் சாற்றில் முயல்வார் வடிக்க மது
அந்த நாள் காட்டி வைத் தார்

(நாவல்)

45. உண்ணியாம் நாவற்கு ஓர்மதிப் பென்னவெனில்
கண்ணின் மணியளவே காண்!

(புளி)

46. காட்டுப்புளி வீழ்த்தின் கடியவிதைபோக்க
வீட்டுக்கே வந்து விடும்!

(பணிச்சை)

47. பனிச்சங்காய் வைத்தால் பழுக்கும் அது சூப்பின்
இனிக்கும் விதைதான் எலாம்!

(பலா)

48. ஈரத்தி லேவளரின் ஈரப்பலா ஆகும்
வேரினிலும் வரிக்கன் விழும்!

(ஈச்சை)

49. ஈச்சை சிவந்தால் இருக்கும் உவர்நீரில்
தோச்சால் கருமைச் சுவை!

(கொடி)

50. தோப்பூர் எனவில் சொலினும் மரமெங்கும்
காப்பாற்றும் கொடியேறிக் காய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீவு - 6

(அயல்)

51. வில்லின் அயலூரை விளைவிச்சந் தீ வென்றே
சொல்லுவார் பழமும் சுவை!

(தமிழ்)

52. வில்லின் தமிழேதான் வெட்கண்ணாத் தீவும் போய்
வெல்லும் தமிழாய் விடும்!

(கட்டை)

53. கட்டை நிறை ஆறு கடந்து போம் தீவு தனை
மட்டைக்கும் உண்டாம் மடு!

(ஓடை)

54. ஓடை பல சுற்றி ஓடும் திரும்பி வரும்
ஆடை போல் வேலி அதே!

(கண்டல்)

55. கண்டல் முருங்கை எனக் காய்க்கும் 'சுனாமி'யை
அண்ட விடாதென் றறி!

(வெட்கண்ணா)

56. கண்ணாவில் வெள்ளைக் கண்ணா முளை நீட்டும்
மண் வேலிக் கேற்ற மரம்!

(நண்டு)

57. பாழி தெரிந்தாரோ பார்ப்பார் பெறுநண்டு
வீழுமா வெள்ளம் வரின்!

(மட்டி)

58. கலக்குப் பெருகினால் கட்டாயம் மட்டிதான்
விலக்கில்லை விழுதும் விழும்!

(இறால்)

59. ஓலை இறால் தன்னை உடனே பிடித்து விடும்
சீலைக்குள் வீழ்ந்தால் சிறை!

(நஞ்சு)

60. கணனைக் கலக்கியே கனமீன் பிடிப்பாளர்கள்
மணலைக்கு நஞ்சோர் மணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காடு - 7

(கண்டல்)

61. பார்க்கும் இடமெங்கும் பசுங்கண்டல் சோலையேல்
வேர்க்காது வீழா வெயில்!

(குல்லா)

62. குஞ்சுச் சவளாலே குல்லா வலித்தோடின்
தஞ்சமே ஊர்த்தீவு தான்!

(களப்பு)

63. களப்பில் இறங்குவதும் கால்நண்டு பார்ப்பதுவும்
இளைப்பாறும் நோக்கமென் றெண்

(வயல்)

64. காட்டு வயல் அதுவே கண்டற் பெரிய வெளி
நீட்டு வரம் பெல்லாம் நெல்!

(திடல்)

65. திடல் மூடா வெள்ளம் சீராய் மழைபெய்தால்
படத்தேவை யில்லை யாம் பாடு!

(பயிர்)

66. கோடை எருக்கட்டிக் கொள்ளைப் பயிர்செய்தால்
வீடெல்லாம் மிளகாய் விழும்!

(சிங்கிலி)

67. சிங்கிலியில் தும்பை சீராய்ப்படருமெனில்
அங்கு காய் ஆய்வோம் அறும்!

(குடில்)

68. குடில் வைத் ததன்மேலே கொள்ளி எரிப்பதெலாம்
அடி பன்றிக் காவல் அதாம்!

(சூடு)

69. அருமையாம் சூடுகளை அடித்து நெல் காணுவது
எருமையால் உண்டாம் இசை

(வண்டி)

70. கொய்யாம் புளி தாண்டிக் கொணரும் நெல்வண்டியெனில்
ஐயம் இலாப் பாடே அது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிண்ணியா - 8

(நடை)

71. அன்ன நடைபோட்டு அழகுக்கடல் ஓரம்
கிண்ணியா போய் மீளு வார்!

(முனை)

72. நீரோட்டு முனைமீது நீள் வெள்ளைப் பீரங்கி
போராடும் யப்பான் பொய்ப் போர்!

(ஊற்றடி)

73. ஊற்றடியில் தமிழர் உயர்வாய் இருந்தகதை
நேற்றாச்சு இன்றோ நிழல்!

(மலை)

74. முன்னால் மலை தெரியும் முடியாக்கடல் தெரியும்
பின்னால் நிழல் வாகைப் பேர்!

(மாட்டின்)

75. மாட்டின் துறைபோவர் மக்கள் பெருங்கிணியா
வாட்டும் மருத்தின் மனை!

(மடுவம்)

76. கடலோரம் வெள்ளையர் கட்டும் ஒளிமடுவம்
விடவில்லை இன்று வரை வீண்!

(புங்கை)

77. புங்கை கடலரிப்பால் போனாலும் ஓரிரண்டு
அங்குண்டு காணலாம் ஆம்!

(புன்னை)

78. புன்னைக்காய் பார்க்கப் போய் வரலாம் கிண்ணியா
சின்னக் கழற்சியையும் சேர்!

(அரிப்பு)

79. அலையின் அரிப்பாலே ஆறாம் தெருவும் போய்
வலை இன்று ஏழாவ தே!

(பிறவுகள்)

80. தமிழரும் சோனகரும் தமையனும் தம்பியுமாய்
அமைவிடம் கிண்ணியா வாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பள்ளி - 9

(வேதம்)

81. வேதத்தார் பள்ளி வியப்பான கல்வியினைப்
போதித்தடையும் புகழ்!

(சட்டம்பி)

82. சட்டம்பிப்பூவின் தகுதி எலாம் கையில்
சட்டத்தைக் காப்பதில் தான்!

(சாப்பாடு)

83. உண்கலமும் நீரும் உவப்பாய்க் கொணருங்கால்
பண்பாடும் கோலாட்டப் பா!

(படம்)

84. ஊமைப்படங்காட்டி உடல் பேண் முறையாலே
நாமும் பெறுவோம் நலம்!

(புழு)

85. கொழுக்கிப் புழுவென்று கொடுக்கும் மருந்தாலே
அழுக்கும் அகன்று விடு மாம்!

(அரிவரி)

86. அரிவரியே முன்பள்ளி ஐந்தில் இருந்துளது
புரிய வைத்தாரே பொருள்!

(இருநேரம்)

87. இருநேரப்பள்ளி இடையிலே சாப்பாடு
வருநேரம் விளையாட லாம்!

(ஆனா)

88. மணலில் முதல் 'ஆனா மகத்தான 'ஆவன்னா'
கணமும் மறவாக் கலை!

(கற்பலகை)

89. அருங்கற்பலகையே ஐந்து வரை கல்வி
தருமாயின் பிறகென் தடை!


(தண்டம்)

90. நெற்றியின் செங்கல்லும் நெடுவளையின் தூக்கும்
கற்றிலார் தண்டமாம் காண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் - 10



*(பிள்ளையார்)*

91. பின்வந்த பிள்ளையார் பெரிதாம் வயிற்றுடன்
முன் காட்டி டுவார் முகம்!

*(பூசாரி)*

92. பூசாரி வந்துமே பூ ஆய்ந்து செல்வதைக்
கூசாமல் ஏற்றுமே கொள்!

*(சாமி)*

93. சாமியும் ஆடுவார், சாமிக்கு முன்னாலே
ஆமின்றும் ஆடுவா ராம்!

*(சிவம்)*

94. ஒன்று பலவாகி உரு மாறிப்போனாலும்
சென்று பார் 'அன்பே சிவம்!'

*(மந்திரம்)*

95. மந்திரத்தால் ஆட்டம் மறிப்பார்கள், ஆரியர்
தந்திரமே மதியார் தமிழ்!

*(பக்தி)*

96. 'பக்தி' தமிழாகா பற்றும் பிடிப்புந்தான்
இக்காலம் தேவை இவண்!

*(மணல்)*

97. வில்லும் மணலூரே, வெம்புண்டு வயலுண்டு
முல்லையுடனே மருத மும்!

*(பூவாடை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. தென்றலெனில் வம்மி சிந்தலாம் பூவாடை
இன்றெலாம் தீவான தே!

(பழவாடை)

99. பனையின் பழவாடை பறந்து வரமூக்கும்
கனக்கும் புகுவதால் காண்!

(மடை)

100. மடையால் கணபதியை மறவாது பார்கூலி
கிடையாது வியிர வர்க் கே!

(சுருக்கும் முறைதன்னைச் சொல்லி வழிகாட்டும்
கருக்குறளார் தமக்காம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (தமிழ் இன) வீழ்ச்சிக் கும்மி

## 10

*(எம்மொழி பிந்தினும் ஏற்றுளதால் அது*
*செம்மொழியாகி எழுந்திடுமேல்*
*கும்மி ஓர் நூறெனக் கூறி மகிழ்ந்திடக்*
*கோலு டன் தாள் இணை கொள்வோமே!)*

1. *ஆவி மழையினால் ஆறிய நம்புவி*
*ஆடித்திரிந்த உயிரினங்கள்*
*கூவியழைத்திடக் கூடினர் - பாடினர்*
*கூர்மை த்திராவிடர் கொள்கையுடன்!*

2. *நாற்பத்து ஒன்பது நாடுகள் பஃறுளி;*
*நல்லடுக்கு மலை சேர்குமரி*
*ஏற்பட்ட ஊழியினால் அறிவுற்றதை*
*இன்று மறப்பினும் 'கோ' மறவார்!*

3. *முதற் கழகம் வைத்து முத்தமிழ் காத்தவன்*
*முடத்திரு மாறன் என மொழிவார்!*
*அதற்குப் பிறகும் அவன் இருந்தானெனில்*
*ஆச்சரியம் தரும் செய்தியதாம்!*

4. *இமயம் தொட்டுக் குமரி வரையிலும்*
*இன் பத்தமிழ் வைத்துலகாண்டான்,*
*இமய வரம்பனின் எல்லையும் வேங்கடம்*
*என்றுகுறுகிச் சிறுத்ததடா!*

5. *மீதிக் குடியினர் மேற்குக் கிழக்கென*
*மெல்லப் பரந்து செறிந்தனரே!*
*ஆதித்திராவிட மாந்தரே எங்கணும்*
*அந்நாள் பரப்பினர் நாகரிகம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நாவலந்தீவெனும் நற்பெயர் வைத்துமே
நன்கு வளர்த்தனர் நாட்டினையே!
ஆவலுடன் பிறர் அங்கு வருகையில்
அன்பு விருந்துகள் ஊட்டினரே!

7. இமயம் தோன்றி வளர்ந்ததுவாம் - புகார்
இல்லா தழிந்ததாம் கொற்கையுடன்!
எமது பண்டைய நாகரிகம் எலாம்
இன்றும் கடலுள் இருக்கிறதாம்?

8. சின்னா சியாவினைச் சேர்ந்த நடுத்தரை
செம்மொழி கொண்டு விளங்கியதோ?
என்ன தான் கொண்டு விளங்கிய போதிலும்
ஏதிலி வாழ்வும் இருந்ததுவோ?

9. சிந்து வடக்கில் திரும்பினராம் சிலர்
திராவிட நாகரி கத்துடனே!
வந்து பரந்ததும், வாழ்ந்து செழித்ததும்,
வாடியதும் வரலாறுகளே!

10. இரண்டாம் கழகத்தை ஏற்பாடு செய்துமே
இன்பத்தமிழை வளர்த்தனராம்!
திரண்டு திரண்டுமே செந்தமிழாய் ந்தனர்,
சீர் கொண்டமைந்ததாம் செம்மொழியே!

11. 'அரப்பா' நகரினை அகழ்வாய்வு செய்துமே
அற்புதங்களை பல கண்டனராம்!
இரப்பவர் இல்லாத இன்ப நல்வாழ்வினை
என்றுமே வாழ்ந்து திளைத்தனராம்!

12. இரண்டாம் கடற்கோள் எழுந்ததுவாம் அதில்
எல்லாம் புதைந்து மறைந்தனவாம்!
மிரண்ட திராவிடர் மெல்ல நகர்ந்துமே
மீண்டும் பரந்தனர் மீதி இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆவொடும், நூலொடும், ஆட்டொடும், புல்லொடும்
ஆரியர் வந்தனர் 'கைப ரினால்!
தாவிப்பிடித்துமே 'வானவர்' ஆயினர்,
செந் தமிழர்வீரம் பிறந்ததுவே!

14. மந்திர வேள்வி மடக்கியதே புகழ்
மாண்டு மடிந்ததே கூர் அறிவு!
சிந்தனை அற்றுமே செம்மறி ஆயினர்
செந் தமிழ்த்தொன்மம் பிறந்ததுவே!

15. தெற்கில் ஒதுங்கினர் திரு இடத்தார் புகழ்த்
திராவிடமானது தென்னகமே!
முற்பிறப்புக் கலை உட்பட மூளையில்
மூண்டது மூடக்கருத்துக்களே!

16. மூவேந்தர் ஆண்டனர் ஆயினும் அன்னவர்
மூளையை ஆரியர் தின்றதினால்
நாவேந்தர் ஆயினர் ஆரியர் பற்பலர்
நல்மறை ஓதினர் நால்வகுப்பே!

17. மூன்றாம் கழகத்தை மூட்டினர் ஆயினும்
முன்னாலே நின்றது ஆரியமே!
ஈன்றவை ஆரியம் ஏற்றது நற்றமிழ்
இன்றும் படிப்பது பார் அதமே!

18. கன்னித்தமிழ்தனைக் காக்கத்தவறினோம்
கன்னடம் வந்து பிறந்ததுவே!
சின்னதுவாக திராவிட நன்னிலம்
தேய்ந்து சிறுத்ததே நாளடைவில்!

19. களிதெலுங்கும் பிறந்ததினால் முனம்
கண்ட திராவிடமாம் உலக்கை
உளிப்பிடியெனப் போனதை எண்ணியே
உள்ளம் வருத்த மடைந்ததவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கவின் மலையாளம் வந்த கதையினைக்
கண்டிருந்தால் இளங்கோவடிகள்
தவித்திருப்பரோ பதிற்றுப்பத்தரும்
தாங்கியிருப்பரோயாரறிவார்?

21. துளுவும் வந்து பிறந்ததுவாம் அட,
சொல்லு வதார் கொங்கின் செங்கரும்பை?
பளுக்குறைந்ததோ கூடியதோ இன்னும்
பைந்தமிழ் ஓடிப்பரந்திடுமோ?

22. ஆரியம் வென்றது, ஆடி மகிழ்ந்தது,
அழிக்கப்பார்த்தது செந்தமிழை!
பாரினில் நம்மவர் பற்றுக்கள் இன்றியே
பயன்படுத்தினர் ஆரியத்தை!

23. கழுதைத்திராவிடம் தேய்ந்து மெலிந்துமே
கட்டெறும்பாவதை யார் தடுப்பார்?
அழுது புலிம்பியே அண்ணாவும் கை விட்டார்,
ஆனால் கலைஞரோ அவ்விடமே?

24. நல்லறிவோடுமே வாழ்ந்த திராவிடர்
நாடிடும் ஆறையும் நீக்கி விட்டார்!
புல்லறிவோடுமே போக விரும்பினால்
போ க்கைத் தடுத்தல் இறை பொறுப்பே!

25. நம்பிக்கை வொழ்வெனில் நல்லதுவாம், மூட
நம்பிக்கைக் குட்டையில் மூழ்குவதேன்?
வெம்பி அழுவதை விட்டதில்லை, எலாம்
'விதி' யின் ஆட்சியை வெல்பவரார்?

26. சமயம் நன்னெறி ஆகவில்லை, இந்துச்
சடங்கும் கூத்துமே இன்றுளது!
அமையும் வள்ளுவம் ஆழப்பதிந்திடில்
அல்லது ஆரியக் கூறுகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. கோயில் அரண்மனை என்றிருந்தே பின்னர்
கும்பிடும் ஆலயம் ஆகியதாம்!
வாயிலில் தேவாரம், கருவறையினுள்
வாழுதாம் ஆரியம் ஆண்டவனே!

28. பேர் பெற்ற தெய்வங்கள் பிள்ளைகள் பெற்றுமே
பெருங்குடும்பமாய் ஆகியதால்
சீர் கெட்டு மூலரின் தேவனையும் மீறி
'சிறு' வழிபாடும் ஆனதுவே!

29. தொன்மப் புளுகுகள் தூய்மை யடைந்தன,
சொல்லும் தமிழும் மறுத்ததில்லை!
என்ன தான் சொல்லினும் நம்புகிறார், இன்றும்
எங்கும் பயின்றிடும் ஏடிவையே!

30. சிந்தனை செய்தவன், செம்மொழி காத்தவன்,
செல்வக் கொடைகள் வழங்கியவன்,
சிந்துகள் தந்தவன், செய்யுள் புனைந்தவன்
செம்மறியாகவேன் மாறினனோ?

31. நல் விருந்தோம்பினர் நம்மவர், ஆரியர்
நல்ல முறையில் பயன் எடுத்தார்!
செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்த
திருக்குறளும் வெறுக்கிறதே!

32. பொன் முடிச்சுக்களும், காணி நிலங்களும்
போதும் போது மெனவே கொடுத்தார்!
முன் ஏழு, இடை ஏழு, பின் ஏழெனச் சொல்லி
மூவெழு வள்ளல் இருந்தனராம்!

33. வேள்வியிலே பரி வெந்திடுமாம், அது
வேகு முன் சம்பவம் வெட்கமடா!
ஆள்வினை ஆரியர் கொள்கையன் - றிரவும்
அறத்தின் பாற்பட்டதல்ல வடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. கற்றோன்றி மட்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடியினர், வாள்
பற்றிய கையினில் பாழும் குசை பற்றிப்
பண்டைய வீரத்தை விட்டனரே.

35. சோமக்கொடிக்கள்ளைச் சுவைக்க வைத்ததும்,
தோளிலே பூணூல் சுமத்தியதும்
ஆமவை யாரென் றறியும் திறனின்றி
ஆடுகிறார், நூலும் போடுகிறார்!

36. கள்ளுக்கிறைச்சிக் கறிசமைக்காவிடில்
கடிக்க வேறு வழியிலையே!
வள்ளுவன் ஊனினை வாழ்த்தியதில்லையே,
வாழ்கிறோம் இன்றும் புலாலுடனே!

37. நல்ல மலை செறி நாடாம் குறிஞ்சியில்
நாளும் மயில்கள் நடமிடுமாம்!
கொல்லும் தொழில் புரியும் குடி நாடிடும்
குமரனே பழம் வேல் முருகன்!

38. காடு நிறைந்ததும், கால்நடை மேய்வதும்
கண்கவர் முல்லை நிலம் அதிலே
நாடிடும் முன்னவன் நற்றிரு மாலுடன்
நல்ல தயிரும் கிடைத்திடுமாம்!

39. நல்ல வயல் சூழ் மருத நிலத்தவர்
நாடிடும் வேந்தனும் இந்திரனே!
வல்ல பயிர்த்தொழில், நாகரிகம் எலாம்
வளரக் கண்டதே நம் பழனம்!

40. மீனுடன் உப்பும் மிகுந்து விளங்கிடும்
மேன்மை கொள் ஆழியனே வருணன்! (வாரணன்)
தீனுடன் வாணிகம் செய்யும் பரதவர்
தேடிக்குளித்திடுவார் பணிலம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. முல்லை - குறிஞ்சி முறையில் திரிந்துமே
முன்பா லை கண்டது கொற்றவையாம்!
அல்லல் தராதது நானிலமாம், இந்த
ஐந்தா வதில் கள்ளி தீய்ந்திடுமாம்!

42. ஓர் நிலம் தன்னையே உவரி பிரித்தது
ஒன்றிரண்டானது பொன் ஈழம்!
ஆர்பிரித்தாலும் அடாத செயல் இது
அதனை மறத்தல் எளிதாமோ?

43. ஈழ வடக்கில் தமிழ் நாகர் - கதிர்
எழும் கிழக்கில் தமிழ் இயக்கர்,
வாழுகையில் எந்த வன்செயலுமில்லை -
வந்த ஈன் வரத்தானும் இங்கிலையே!

44. ஈழத்துணவுகள் ஏற்றிக் கப்பலில்,
எல்லாப் பயிரும் விளைந்ததுவாம்!
காழகத் தாக்கமும் கண்டு தமிழகம்
கழிபேர் உவகை கொண்டதுவாம்!

45. வங்கத்தார் வாடையால் வந்தனராம், இவர்
வாழ்த்தி வணங்கி மகிழ்ந்தனராம்!
சிங்கத்தைக் கண்டுமே சீறவில்லை புலி
சேர்ந்து கிடந்ததாம் சின்னாட்கள்!

46. யாதும் ஊர் என்பதும் - யாவரும் கேளிரும்
யாவர்க்கும் ஏற்ற தோர் குன்றன் உரை!
தீதுமோ நன்றுமோ செய்தல் பிறரல்ல,
தேர்ந்திடல் வேண்டுமே இவ்வுரையும்!

47. வளர் பிறை என வந்தவர் தோற்றினர்,
வாழ்ந்தவர் தேய்பிறை ஆகினரே!
தளர்ச்சியுற்றுமே தமிழர் யானைபோல்
தாமே தலையில் மண் போட்டனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. கழுதை தேய் கதை - கட்டெறும்பின் கதை
கற்பனையல்லவே கண்டதுவே!
பழுது நேர்ந்த விதத்தினை ஆராய்ந்து
பார்த்திடில் கண்டு பிடித்திடலாம்!

49. வாணிகர் வந்தனர் - நின்றனர் - சேர்ந்தனர் -
வாழ்ந்தனர் போற்றலே தூற்றல் இல்லை!
பேணினர் தம் நெறி - பேசினர் நம்மொழி
பேதங்களற்றுக் கிடந்தனரே!

50. எந்த மக்களுக்கும் இன் முகம் காட்டியே
இன்சொல் உரைப்பவர் எம் தமிழர்!
சொந்தம் கொண்டாடுவர் - தூய்மை விளக்குவர்
சோறிந்திருந்தாலும் வழங்குவரே!

51. நற்றமிழ் மன்னர் இந் நாட்டினை ஆண்டனர்
நாற்பத்து நான் காண்டாம் எல்லாளர்!
முற்றும் மறந்தனர் மூடிமறைத்தனர்,
மூலம் பறந்தது - மெய்ப்புளுகே!

52. போர்த்துடன், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எனும்
பொல்லா மதத்தினர் ஆளவந்தார்!
வார்த்தை பழையவை வாயினில் வந்தன
வந்ததே இல்லை புது வரிகள்!

53. வில்லுடன் தீவுடன் விழுதின் காட்டுடன்
விளைவுயாவும் பறந்தனவாம்!
சொல்லுதற் கொன்றுமே இல்லை நகர் - கழி
சுருக்கம் மீண்டும் விரிவுறுமோ?

54. எந்த உரிமையும் இல்லை எனும் படி
எல்லாம் படிப்படியாய் மறையும்!
வந்தவர் யார் எனும் - வாழ்ந்தவர் யார் எனும்
வரலாற்று நூல்களும் வாய் திறவா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. நாலு பத்தெட்டிலாம் நாட்டுச்சுதந்திரம்
நம்மவரின் கரி நாள் அதுவாம்!
பாலும் பழமுமாம் பேரினத்தாருக்குப்
பழைய சோற்று நீர் நம்மவர்க்காம்!

56. பேரின மக்களைத் தமிழ் நிலங்களில்
பெருங்குடியேற்றம் செய்தனரே!
ஆரிடம் சொல்லியும் ஆகவில்லை ஏதும்
அறம் தழைக்க வழியுமில்லை!

57. நிலம் பறந்தது, மொழி சிதைந்தது!
நெஞ்சம் கவலையில் மூழ்கியதே!
குலம் கலைத்துமே கடல் கடந்தது
கொடுஞ் செயல்கள் தொடர்ந்தனவே!

58. என்ன நடப்பினும் எங்கு நிகழினும்
எந்த மிழர்கள் விழித்தறியார்!
சொன்னதைச் சொல்லியே காலம் கடத்துவர்,
தோல்வி மேல் தோல்வி தொடர்ந்திடுமே!

59. ஒற்றுமை என்பது ஓடியே போய் விடும்,
ஒன்றினை மற்றொன்று சாப்பிடுமே!
கற்றவர்க் கெல்லாம் பதவிகள் முக்கியம்,
'காசே கடவுள்' எனும் நிலை தான்!

60. தமிழைப் பேசுவோர் தமிழர் கட்சியைச்
சார்ந்து வென்றனர் வென்றதன் பின்
தமது போக்கினை ஆளுவோர் பக்கமாய்ச்
சாய்த்துக் கொண்டனராம் சில பேர்!

61. கூட்டினை நீக்கியே தனித்து நின்றுமே
கொள்கை வகுத்தனராம் சில பேர்!
மாட்டுப்படாமலும், மாற்றம் பெறாமலும்
மந்திரம் ஓதினர் ஓர் சில பேர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. தனித்த சிங்களச் சட்டமியற்றினர்,
தமிழை நீக்கினர் ஒன்றொலிக்கும்,
இனித்த யாவும் கசந்திடும், நாடதும்
இரண்டுதான் மொழி ஒன்றுவரின்!

63. பேசுவதெல்லாமே பேரினவாதமாம்
பேசாத நாளே கிடையாதாம்!
கூசுதல் சேர்த்துமே கொள்ளுதல் என்பன
கொஞ்சமுமே கிடையாதடடா!

64. தமிழர் வாழ்வினில் கொண்ட உரிமைகள்
சற்றும் நெருங்காதகன்றடா!
தமதலுவலில் கண்ணுங் கருத்துமாய்த்
தாமிருந்தார், பக்கச்சாயலடா!

65. தாங்கும் வரை தாங்கித் தாங்கொணா நம்மவர்
தாக்காத காந்திப்போர் தாங்கினரே!
ஏங்கி அடிபட்டும் இல் உணவின்றியும்
இன்னலில் காய்ந்து வெதும்பினரே!

66. பேச்சுக்கள் வார்த்தைகள் பெரிதாய் நடந்திடும்
பிறகங்கு பார்த்தால் பிசகிருக்கும்!
மூச்சும் வராமலே முன் வந்து பின் போகும்,
முற்றும் மறக்கும் சில நாளில்!

67. கையெழுத்தோடுமே ஒப்பந்தமாகிடும்,
கதை கிளம்பியே காதில் புகும்!
பையச்சிலர் அது பற்றி கிளத்திடப்
பறக்கும் காற்றினில் பற்பலவாய்!

68. இன ஒதுக்கல் இருந்திடவே செய்யும்
எப்போதும் ஐயத்தை ஏற்படுத்தும்!
சனநாயகத்தையே சாற்றிடும் வாய், அது
தப்பட்டும் சந்ததி சாகட்டுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. அடங்கும் போக்கு மிகுந்திருக்கும், சில
அடிவருடிகள் ஆட்டமிடும்!
கிடப்போம் என்றும் பல கிடக்கும், சில
கிளர் ச்சி செய்திடவும் நினைக்கும்!

70. எல்லா மறிந்த இளைஞர்கள் தம்முடன்
எடுத்து நின்றனர் கைக்கருவி!
பொல்லாத்துயர் நீக்கப் புனிதமாகிய
போரினில் நின்றனர், வெறுவழி...?

71. அங்கிங் கெனாமலே எங்கும் படைமயம்,
அச்சத்தில் மூழ்கும் வடகிழக்கே!
பொங்கும் உணர்வுகள் - புரட்சிப்பாடல்கள்
பொல் லாத போர், வெற்றி - தோல்விகளே!

72. பட்டவர் பாடு பெரும் பாடாம், அவர்
பற்பல தண்டனை பெற்றிடுவார்!
விட்டதுமுண்டு, விடாமல் அடைத்துமே
வேதனை செய்ததும் உண்டு கண்டீர்!

73. ஓர் கண்ணில் சுண்ணமும், ஓர் கண்ணில் வெண்ணெயும்
ஓர் தலைவர் பூசிப் பார்த்தல் பிழை!
ஆர் பார்த்த போதும் அது தவறென்று தான்
ஆய்வுகள் செய்பவர் சொல்லுவராம்!

74. நாசிசம், பாசிசம், கிட்லர் முசோலினி
நாடாண்ட காலத்தைப் போன்றிருக்கும்!
மோசமெனத் தெரித்தாலும் விடுகின்ற
மூச்சினைக் கூடக் குறைத்திடுவோம்!

75. அயலின் பாரதம் அனுப்பு மாபடை
அமைதி காத்ததோ ஆர்ப்பரிப்போ?
தயவு காட்டியே தாயகம் மீண்டது
சங்கடமோ சரியானதுவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. நேர்வே நடுமையை நோக்கிட வந்ததோ,
நூற்றுக்கு நூறு செயற்பாடோ,
ஆர்வமுடன் வீழ்த்தி அழித்த போழ்தினில்
அசைந்திடாமையும் தந்திரமோ?

77. இடம் பெயர்ந்தோர் பெயர்ந்தோரோ, அவர்
என்றுமே நாடற்றிருப்போரோ
வடம் பிடித்ததும், சாமி இழுத்ததும்
வாழ்வதற்கோ இல்லை, வீழ்வதற்கோ?

78. பல இயக்கங்கள் வந்தமை மக்களைப்
பாழ்படுத்தவோ - கூர்ப்பியலோ?
விலகி நின்றுமே ஒற்றுமை பேணியே
வெற் றியைக் கண்டு களிக்கலையே?

79. ஆளை ஆள தின்றதும், ஆட்டங்கள் போட்டதும்,
அருந்தலைகளைக் கொய்ததுவும்,
நாளை வருமென நம்பிட வைத்ததும்
நல்ல விளைவுகள் நல்கினவோ?

80. அயலைப் பகைத்ததும், அற்புதம் செய்ததும்,
ஆற்றலைத் தப்பாய்க் கணித்ததுவும்,
துயரை விளைத்ததோ, தொல்லை தவிர்த்ததோ,
துண்டிக்கப்பட்டதோ முன் உறவு?

81. போரை நிறுத்தியும், போயங்கு பேசியும்
போக்கும் வரத்துமே கண்ட பலன்!
ஆரைப் பழிப்பது, ஆருடன் சேர்வது
ஆருக்கும் ஓர் தெளி வன்றிலையே!

82. பேச்சுக்கள் நின்றன, வார்த்தை பறந்தது
பேரின வாதமே வென்றதெலாம்!
மூச்சுமில்லை சிறுபான்மைத் தமிழரின்
மொத்த உரிமைக்கும் முற்றுப் புள்ளி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. உடல் பெருத்திட்ட நாடுகளே சில
உதவி செய்ய முன் வந்தனவாம்!
கடமை என்றன - மக்களைத் தாக்கிடும்
கருவி வந்து குவிந்ததுவே!

84. பேர் பெறு போர்க் குழு மாய்ந்ததுடன், அதன்
பின்நின்ற மாந்தரும் மாய்ந்து விட்டார்!
ஆர் இது செய்தனரோ அவர் யாவரும்
ஆமாம் பயங்கரம் போச்சு தென்றார்!

85. ஆயிரம் ஆயிரம் அப்பாவி மக்களும்
ஆவி விட்டார், இழந்தல்லலுற்றார்!
தாயில்லை பெண்ணுக்கு, தந்தை மகற்கில்லை,
தனித்த வண்ணம் நினைத்தழுதார்!

86. எஞ்சிய மக்களோ முள்வேலிக் குள்ளேயே
இருந்தழுதபடி இருப்பார்!
கஞ்சி குடிப்பரோ, காயத்தைப் பார்ப்பரோ,
கடவுளர் அருள் வேண்டுவரோ?

87. எந்தெந்த நாடுகள் எவ்வாறு தவினும்
இருப்பதெல்லாம் முகாமலவோ?
வெந்த உளங்களில் வெந்நீரை ஊற்றியே
வேடிக்கை காட்டுவர் வீழ்த்தியவர்!

88. எங்கள் பழநிலம்எதிர் அணிக்கெனில்
எல்லா வரலாறும் பொய்யாமே!
தங்கள் பெரும்பான்மை தமிழ் இனத்தவர்
தந்தது கூடப்பழங்கதையே!

89. படைப் பெருக்கமும் வீண் செலவாம், எனின்
பழந்தமிழர் அடங்குவராம்!
நடை முறைக்கிது நன்றெனக்கண்டுமே
நல்ல டக்கத்தை மேற்கொண்டனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. உலகப் பேரவை ஐ.நா வுக்குக் கூட
ஒன்றுமே செய்யும் துணிவிலையே!
கலகநேரத்துச் சம்பவங்களைக் கூடக்
கண்டவர் சொல்லிடும் வாய்ப்பிலையே!

91. தீர்விணைக் கேட்கும் தலைமையர் யார், அதைச்
செய்து முடிக்கும் திறமையர் யார்?
ஆர்வமெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு
அடிமைச்சங்கிலி பூண்டிடுவோம்!

92. 'மீளா அடிமையாம் நாம் உமக்கே' என
மீண்டும் மீண்டும் உரைத்திடலாம்?
ஊழையும் உப்பக்கம் காணலாம் என்றினி
உஞற்றும் வாய்ப்புக்கிடமிலையே (620)

93. திட்டமிடப்பட்ட இனப்படுகொலை
செய்தி ட்ட கிட்லரை யாமறிவோம்!
விட்டு விட்டுச் செய்யும் ஆடல்களால் நாமும்
வீடடைதல் திட்டமானதுவே!

94. மூன்றாம் உலகத்துப் போரின் தளமிதாய்
முடிந்த போதும் வியப்பில்லையே?
சான்றோரும் இங்கில்லை - சான்றாண்மையும் இல்லை,
தப்பிழைக்குமோ இவ்விலங்கை?

95. நாடிரண்டும் நுழைந்தாய்வுகள் செய்வது
நன்மையோ தீமையோ யாரறிவார்?
பாடுகள் பட்டவர் பறி கொடுப்பதும்
பாரில் வழக்கமோ யாமறியோம்!

96. எல்லாப் பொருளுமே ஏறும் - இறங்காது,
என்பதுறுதி எதிர் காலம்!
இல்லாமையும் வரும், உள்ளது தப்பிடும்,
எல்லாமே கோனின் திறன்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. பொருண்மியம் உயர்தோங்குமோ - வீழுமோ
பொல்லாப்படிப்பினரே அறிவார்!
அருள் அகன்றிடும் - அன்பு மறைந்திடும்,
ஆளை ஆள் தின்றிடு நாளும் வரும்!

98. முடியாட்சிக் காலத்தில் முல்லைக்கும் தேர் உண்டு,
மூப்பு மயிலுக்கும் போர்வை உண்டு!
குடியாட்சிக் காலத்தில் கூழுக்கும் கஞ்சிக்கும்
குடிகள் படும் பாடு கொஞ்சமல்ல!

99. யாதும் ஊர் என்றதால் யாங்கள் பிறந்த ஊர்
யாவருக்கும் பொது ஆகுவதோ?
ஏதும் இலாமலே ஏதிலியாக நாம்
இருந்து மாள்வது நல்லதுவோ?

100.யாவும் பறிப்பினும் யாவரும் கேளிரோ,
யாரும் எதிரிகள் இன்றிலையோ?
சாவுலகுக் கெமைத் தள்ளிய பேர்கட்குத்
தங்கக் க ணையாழி போடுவதோ?

***

(கும்மியடிக்கவும், கூடிப்படிக்கவும்,
கூழைக்கருத்தை விழுத்திடவும்
செம்மொழி கொண்டொரு தேடல் புரிந்தனன்,
சிந்தைக் கெடாவிடில் வீழ்ந்திடுமே!)

I. (பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக் காண் என்று கும்மியடி!) (பாரதி)

II. (சேவற்கோழி யுண்டு, காகமுண்டு வானம்
செக்கச்சிவந்து தெரிவதுண்டு!
மேவுபொன்னே அதிகாலை தெரிந்திட
வேறுங்கடிகாரம் வேண்டுமோடி?) (தே.வி.பிள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. (பாடம் படித்து நிமிர்ந்த விழி, தனிற்
பட்டுத் தெறித்தது மானின் விழி!
ஆடைதிருத்தி நின்றாள் அவள் தான், இவன்
ஆயிரம் ஏடு திருப்புகிறான்!) (பா.தாசன்3)

தாமரைத்தீவான் (சோ. இராசேந்திரம் - ஈச்சந்தீவு - கிண்ணியா)

• • •



கொழும்புத் தமிழ்ச் சங்கம் கவிஞர் தாமரைத்தீவானுக்கு வழங்கிய "தமிழ் நிதி" விருதை [2017] கவிஞரின் மகன் நெடுஞ்செழியன் பெற்றுக் கொண்ட வேளையில்



2013 தமிழ் விழாவில் கவிஞர் கௌரவம் பெற்ற வேளை திருகோணமலை படைப்பாளிகள் மற்றும் விழாக்குழுவினர் கூடவே பேராசிரியர் சி.மௌனகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞரின் வெளிவந்த நூல்கள் ஆண்டு முறைப்படி

| நூல் | ஆண்டு | நூல் | ஆண்டு |
|---|---|---|---|
| 1. கீறல்கள் | 1992 | ஈற்றுப் பா | ? |
| 2. பிள்ளைமொழி | 1992 | 30. எட்டடியார் | 2016 |
| 3. கட்டுரைப்பத்து | 1997 | 31. நால்மொழி | 2016 |
| 4. போரும் பெயர்வும் | 1999 | 32. நுனிக்கொம்பர் | 2017 |
| 5. ஐம்பாலைம்பது | 2001 | 33. சின்னப்பா | 2017 |
| 6. வள்ளுவர் அந்தாதி | 2002 | 34. நறும்பா | 2017 |
| 7. முப்பத்திரண்டு | 2004 | 35. தமிழமுதம் | 2018 |
| 8. சிறுவிருந்து | 2004 | 36. சிற்றிலக்கியம் | 2018 |
| 9. சோமம் | 2005 | 37. இதழ்ப்பா [சு.ஒ] | 2018 |
| 10. என்பாநூறு | 2005 | 38. கடையேடு | 2018 |
| 11. ஐந்தொகை | 2005 | 39. அரும்பா | 2018 |
| 12. போர் நாற்பது | 2006 | 40. பாத்துளி | 2018 |
| 13. இணைப்பு | 2008 | 41. ஆறேழு | 2019 |
| 14. நீத்தார் பெருமை | 2008 | 42. குறுமைப்பா | 2019 |
| 15. அன்பழைப்பு | 2009 | 43. பா வாடை | 2019 |
| 16. பத்துப்பத்து | 2009 | 44. சொரியல் | 2019 |
| 17. வில்லுப்பாட்டு | 2010 | 45. நல்வரவு | 2019 |
| 18. சிட்டுப்பத்து | 2010 | 46. சில்லறை | 2019 |
| 19. மொழிநூறு | 2010 | 47. பஃறுளி | 2019 |
| 20. மும்மறை | 2010 | 48. அடுக்கம் | 2019 |
| 21. த.இ.வீ.கும்மி | 2010 | 49. பா[க்]கள் | 2019 |
| 22. இ.ஆ.சி.பாடல் | 2011 | 50. உவகை | 2019 |
| 23. சுதந்திரன் கவிதைகள் | 2011 | 51. பாவாரம் | 2020 |
| 24. கற்றதும்பெற்றதும் | 2012 | 52. மும்மொழி | 2020 |
| 25. பு.பாடல் I | 2013 | 53. தீந்தமிழ் | 2020 |
| 26. பு.பாடல் II | 2014 | 54. பாக்கூட்டு | 2020 |
| 27. நினைநிற் | 2016 | 55. பாக்குப்பை | 2020 |
| 28. பொன்னகம் மீட்போம் | 2016 | 56. ஊர்ப்பா | 2020 |
| 29. முரசுப் பா | 2016 | 57. உச்சம் | 2020 |

எட்டுத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. ஒன்றுதான் 2020
59. முருகியம் 2020

## கை எழுத்துப் பிரதியாக வெளியீட்டிற்கு காத்திருக்கும் கவிஞரின் படைப்புகள்

60. வரட்சி 2021
61. இன்பா 2020
62. நம் பா 2021
63. ஆக்கக்கலை 2021
64. நீக்கம் 2021
65. ஏக்கம் 2021
66. அண்ணன் 2021
67. எழிலி 2021
68. எற்பாடு 2021
69. இணர் 2021
70. ஏடெழுபது 2021
71. உள்ளல் 2022
72. ஊறல் 24.05.2022
73. கடைக்கண் 20.08.2022
74. தாளாண்மை 2022

• • •



*கவிஞரின் "முருகியம்" நூல் வெளியீட்டின் கவிஞர் அ.கௌரிதாசனுடன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் தனது குடும்பத்தாருடன்



கவிஞர். தாமரைத்தீவான் தனது துணைவியாருடன்
60வது திருமண ஆண்டு நினைவில்



கவிஞர் தாமரைத்தீவான் கவிஞர் கேணிப்பித்தன் ச.அருளானந்தத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவிஞரின் "முருகியம்" நூல் வெளியீட்டில் மகன் நெடுஞ்செழியன்,
மகுடம்.வி.மைக்கல்கொலினுடன்



கவிஞர் ஆளுநர் விருதுபெற்ற வேளை [2011] மகன்
நெடுஞ்செழியன் மற்றும் கவிஞர் ஈச்சையூர் தவாவுடன்



கவிஞரின் தீந்தமிழ் நூல் வெளியீட்டின் போது
கவிஞர். ஞானராசா மற்றும் பெறாமகன் முருகானந்தத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாலெட்டில் நான் வந்தேன்,
நன்னூல்கள் பல கற்றேன்!
பாலொத்த தமிழ் தந்தேன்,
பலநூலின் தேன் தந்தேன்!

எட்டென்றேன் அன்றொரு நாள்,
இப்பொழுதில் பத்தென்றேன்!
தொட்டெடுத்துப் பாருங்கள்,
சுவைப்பின் பருகுங்கள்!

செம்மொழியாம் நம் மொழியின்
திறனை எடை போடுங்கள்!
எம்மொழிக்கும் முன்மொழியாம்
எம்மொழியைப் போற்றுங்கள்!

தொண்பதிலே இருக்கும் நான்
தொடர்வேனோ விடுவேனோ?
என்பதனை ஆராய்ந்து
எடுங்களேன் ஓர் முடிவை?

- தாமரைத்தீவான்

ISBN: 978-624-5849-32-1
9 786245 849321
1500.00
மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org